# மோகினி திருக்கோலம்



ஸ்ரீவேணுகோபாலன்

# மோகினி திருக்கோலம்

(வரலாற்றுப் புதினம்)

## ஸ்ரீவேணுகோபாலன்

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்
848, 91-வது தெரு,
13-வது செக்டார்,
கே.கே.நகர்,
சென்னை 600 078.
போன் : 23723456

13611/1

## நூல் விவரம்

575121

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : மோகினி திருக்கோலம் |
| ஆசிரியர் | : ஸ்ரீவேணுகோபாலன் |
| மொழி | : தமிழ் |
| பொருள் | : வரலாற்றுப் புதினம் |
| பதிப்பு ஆண்டு | : முதற் பதிப்பு - டிசம்பர் 2003 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : டெமி 1 x 8 |
| அச்சு எழுத்து அளவு | : 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : 304 பக்கங்கள் |
| நூலின் விலை | : ரூ.95/- |
| அச்சிட்டோர் | : இளங்கோவன் பிரிண்டர்ஸ், சென்னை - 14. |
| வெளியிட்டோர் | : லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம், சென்னை 600 078. |

894.8113 SRI

அலுவலகம் 21 டிச 2004 பெறப்பட்டது சென்னை-600 008



சிறுவயதில் இருந்தே அளவிறந்த பாசத்தாலும் தியாகத்தாலும் என்னையும் என் தங்கை அம்புஜத்தையும் உருவாக்கியவர் என் தாயார்.

குழந்தைப் பருவத்தில் தந்தையை இழந்த எங்களை கண்ணின் மணிகளாகப் போஷித்து.

கஷ்டங்கள், நஷ்டங்கள் எல்லாவற்றையும் தனியாக நின்று பொறுமையோடு சகித்து. எங்களைக் கண் கலங்கவிடாமல் காத்தவள் என் அருமைத் தாயார்.

அவளது பரிபூரண ஆசியாலும். அருளாலும்தான் நான் "மோகினி திருக்கோலம்" எழுத முடிந்தது.

கதை ஆரம்பிக்கும் பொழுது அவள் இருந்தாள். முதல் வாரத்திலேயே அவள் மறைந்தாள் என்பதை கண்ணீர் மல்க நினைக்கிறேன்.

இந்த "மோகினி திருக்கோலம்" புதினத்தை ஆழ்ந்த அன்பும் பாசமும் நிறைந்த என் அருமைத் தாயாரின் பொன் அடிகளில் பக்தியுடனும், விநயத்துடனும், மறக்க முடியா நெஞ்சமுடனும் சமர்ப்பிக்கிறேன்.

-- ஸ்ரீவேணுகோபாலன்.

# என் உரை

'மோகினி திருக்கோலம்' எழுத ஆரம்பித்த நேரம் என் சோதனையான நேரம். கல்கியில் அந்தத் தலைப்பில் விளம்பரம் வந்து விட்டது.

"'மோகினி திருக்கோலம்' பார்த்திருக்கியாடா?" என்று என் தாயார் கேட்டார்கள். அப்போது யோசனையில் இருந்ததாலோ, படித்துக் கொண்டு இருந்ததாலோ (என்ன யோசனையோ, என்ன படிப்போ, இப்போது அவை வெறுமையாகத் தோன்றுகின்றன.) "ம்ம்ம்" என்று சொல்லி 'பார்த்திருக்கிறேன்' என்பதை உணர வைத்தேன்.

அவள் அதைத் தொடர்ந்து, "நான் ஸ்ரீரங்கத்திலே பார்த்திருக்கேன். ரொம்ப நல்லாயிருக்கும்!" என்றாள்.

அந்த 'ம்ம்ம்' மட்டும் போட்டு நான் என் பதிலை தெரிவித்ததற்கும், அவள் வார்த்தைகளைக் கேட்டு விட்டு மேலும் நான் அவளுடன் பேச்சை வளர்க்காததற்கும், இப்போது எவ்வளவு வருத்தப்படுகிறேன்! மனம் குமுறுகிறேன்! என்னையே மிகவும் நொந்து கொள்கிறேன்.

ஏனெனில் கல்கியில் 'மோகினி திருக்கோலம்' ஆரம்பித்த அதே வாரத்தில் என் தாயார் இவ்வுலகத்தை நீத்து விட்டார். (24-10-84) என் வாழ்க்கையின் பெரும் துக்கம் விழுந்து விட்ட அந்த நேரத்திலும் அந்தத் தொடரை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என் தாயார் மறைந்த மூன்றாவது நாளில் சூன்யமயமாய் நான் உட்கார்ந்து, வாழ்க்கையே சாரமற்றது என்று நினைத்துக் குமையும் வேளையில், என்னைத் தரை தட்ட வைத்த ஒரே காரியம், இந்தத் தொடர்கதை அத்தியாயத்தை எழுதுவதுதான்.

இதை எழுதி நான் அனுப்ப, திரு. கி. ராஜேந்திரன் ஆறுதலாக எனக்குக் கடிதம் எழுதி என்னை இதமாக்க முயன்றதை நான் மறக்க முடியாது. என் நீடித்த துயரத்திடையே எப்படியோ அத்தியாயங்களை எழுதி வந்தேன். எப்படி எழுதினேனோ, எப்படி முடித்தேனோ அந்தத் தொடர்கதை எந்த விதத்தில் அமைந்தது என்பதை இன்னமும் நான் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை. ஏனெனில் திரு. கி. ராஜேந்திரன் என்னை எழுதப் பணித்து நான் எழுதிய, "கடலுக்குள் ஜுலி"யும், "சுவர்ணமுகி"யும் ஓரளவு வெற்றி பெற்றவை.

இந்தத் தொடரை எழுதி முடித்த போது ஏதோ ஒரு வேள்வியை முடித்து வந்த மாதிரி இருந்தது. எத்தனையோ தொடர்கள் எழுதியும் "மோகினி திருக்கோலம்" மட்டும் ஒரு நிலைத்த வடுவாக மனத்தில் பதிந்து விட்டது.

நாவல், 'கல்கி'யில் வந்ததால் அது நிச்சயம் வெற்றி அடைந்திருக்கும் என்று நம்பிக்கைக் கொள்கிறேன். இதை எழுதத் தூண்டிய திரு. கி. ராஜேந்திரனுக்கு என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொடரில் எப்படி திருமலை வேங்கடாசலபதியே ஆங்கிலேயருக்கு உதவி செய்தார் என்பதையும், அதன் மூலம் எப்படி ஒரு இங்கிலீஷ் அரசாங்கம் நம்மை ஆள வந்தது என்பதையும் புரிந்து கொள்வோம். கற்பனை அல்ல! உண்மையும் அதுவே.

இந்த நாவலை என் திருத்தாயாரின் பொன் அடிகளில் என் நன்றிச் சமர்ப்பணமாக வைக்கிறேன்.

ஸ்ரீவேணுகோபாலன்.

## திரு. கோபுலு அவர்கள்

பிரபல ஓவியர் திரு. கோபுலு அவர்கள் எனது இனிய நண்பர். நான் எழுதிய சரித்திர காலத்துக் காதல் கதைகளுக்கு அவரே அருமையான படங்கள் வரைந்து என்னைக் கௌரவப்படுத்தினார்.

அவரது ஓவியம் தான் இங்கே திருமலைப் பெருமாள் அருகில் இருக்கும் அற்புத ஓவியம்!

அவருக்கு எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஸ்ரீவேணுகோபாலன்

மனதை உருக்கும் விதத்தில் ஏராளமான சிறுகதைகளும், நாவல்களும், வரலாற்றுப் புதினங்களும் எழுதி வரும் ஸ்ரீவேணுகோபாலன் (புஷ்பா தங்கதுரை) நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து எழுதி வருகிறார்.

இவருடைய பல கதைகள் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான "அமைச்சர் மதுரகவி"யைப் புகழ் பெற்ற டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்து இருக்கிறார்கள்.

இவரது "ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது", "நந்தா என் நிலா", "லீனா மீனா ரீனா" (அந்த ஜுன் 18) ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வந்துள்ளன. இவரது பல தொடர்கள் டிவி. தடங்களில் வந்துள்ளன.

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்
848, 91-வது தெரு,
13-வது செக்டார்,
கே.கே.நகர்,
சென்னை - 600 078.
Phone : 23723456
E-mail: spushpa@vsnl.com

# மோகினி திருக்கோலம்

## 1. ஊர் எங்கே போனது?

காற்றில் கரைந்து கொண்டிருந்தான் அந்த இளைஞன். இரு பக்கமும் தூள் பறந்தது. மரவர்க்கங்கள் வீச் வீச் என்று பின்னால் ஓடின. கிளைகளிலிருந்து பட்சி ஜாலங்கள் குபீர் என்று மேலே பறந்தன. உலகம் பூராவும் அவன் முன்னே திகும் திகும் என்று குதித்து வந்து கொண்டிருந்தது.

பின்னால் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். இன்னும் அந்தக் குதிரை ஆட்கள் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள்! கொள்ளைக்காரர்களா! அல்லது வழிப்பறிக்காரர்களா?

என்னமாக வாளைச் சுழற்றி விட்டு வந்தார்கள்.

நரி போன்று ஒரு ஊளை!

நினைத்தாலே குடல் சுருள்கிறது.

எப்படி அவர்கள் திடீரென்று தோன்றினார்கள்? எங்கே அவர்கள் ஒளிந்திருந்தார்கள்?

குதிரையை முடுக்கினான் அவன்.

ஏற்கெனவே அது சோர்ந்திருந்தது.

தலையைத் தூக்க இயலவில்லை.

கால்கள் சமயங்களில் பின்னின. இருந்தும், எஜமான விசுவாசம் அதை விடவில்லை.

கடைசித் திறன்களைக் கால்களில் பிரயோகித்துத் தரையை உதைத்து எகிறியது

வெய்யில் ஏறிக் கொண்டிருந்தது.

பூமி மூச்சுவிட ஆரம்பித்தது.

ஆவிகள் அங்கங்கு நர்த்தனங்களாக எழுந்தன.

கண்ணைச் சுருக்கிக் கொண்டு அவன் தொலை தூரம் வரை பார்த்தான்.

அதோ பசும் செழுமைக்கு இடையே தெரிகிறதே அதுதான் ஊரா?

சுற்றிவர ஏன் இப்படிப் பொட்டல் வெளியாக இருக்கிறது?

வயல்கள் எல்லாம் ஏன் தரிசையாகக் கிடக்கின்றன?

ஏதோ பஞ்சம் வந்தாற் போல், எல்லாம் சூன்யமாகத் தெரிகின்றனவே, ஏன்?

நினைப்பதற்கு அவனுக்கு இப்போது அதிகம் நேரமில்லை.

அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

அந்தக் கணவாய் அருகில் வந்ததும்தான் குதிரை களைத்து விட்டது தெரிந்தது.

வாயின் இரு புறமும் கள்ளைப் போல் நுரை தள்ளியது.

அதன் உடம்பில் கூட ஊமையான நடுக்கம் தெரிந்தது.

இனியும் அதனிடம் அதிகம் வேலை வாங்குவது கடினம்.

பயமும், கவலையும் மேலிட, திரும்பி ஒரு முறை பின்னால் நோக்கினான்.

ஆச்சரியம்.

அவர்களைக் காணவில்லை.

கணவாய் திரும்பியதும் அவர்கள் மறைந்து விட்டார்கள்.

அவன் ஆசுவாசமானான்.

இரண்டாம் முறையும் திரும்பிப் பார்த்து அவர்கள் யாரும் இல்லை என்று தெரிந்த பிறகு, குதிரை வேகத்தைத் தளர்த்தினான்.

இரண்டு பேருமே இளைத்தார்கள்.

இப்போது குதிரை மீது நிறைய பதற்றம் ஓடியது.



அதுவரை அவன் அனுபவித்தது எல்லாம் கனவோ என்று நினைத்தான். ஒரு தூரச் சொப்பனமோ!

அல்லது குடியிருப்பு வந்து விட்டது என்று அறிந்து கொள்ளையர்கள் அவனை விட்டு விட்டார்களோ?

வெய்யில் வறுத்தது.

அரை நாழிகையில் அந்த ஊரின் முனையை அடைந்தான்.

முதல் பார்வையில் அவன் கண்கள் கூசின.

சோமத்தலம் ஒரு சின்ன நகரம் என்று கூறியிருந்தார்கள்.

நகரம் என்றால் இப்படியா வெறிச்சென்று இருக்கும்? ஆட்களையே காணவில்லை.

ஆட்கள் மட்டுமில்லை, ஒரு மாடு! ஒரு ஆடு, ஒரு கோழி எதையும் காணவில்லையே!

தோப்பு வழியே சென்று ஊரின் பிரதான சாலையை அணுகினான்.

தேர் ஓடும் விஸ்தாரத்தில் இருந்தது சாலை.

இருபுறமும் பெரிய பெரிய காரை வீடுகள் வெவ்வேறு விதத் தாருத்தும் முகப்புகளோடு இருந்தன.

ஒன்றிரண்டு தென்னைகள் ஒதுங்கி இருந்தன.

ஒரு பழுதான வண்டி கீழே குடை சாய்ந்திருந்தது.

சாலை வெகு தூரம் நீண்டு ஒரு வெட்டுச் சாலையோடு இணைந்திருந்தது.

இவ்வளவு கம்பீரமான சாலையில் ஆச்சரியம், ஒரு மனிதப் பூண்டு இல்லை.

ஏதாவது கனவு காண்கிறானா?

சந்தேகக் கண்களுடன் சாலைக்குள் வந்தான்.

அவன் நினைத்தது சரிதான்!

அத்தனைக் கதவுகளும் மூடியிருந்தன. பலகணிகள் கூட சாத்தியிருந்தன.

ஒரு ஆத்துமாவைக் காணவில்லை.

மனத்தில் ஒரு விசித்திர திகில் தோன்ற சாலை நடுவே நின்றான். குதிரையை விட்டு இறங்கினான்.

அவன் இறங்குவதற்காகத்தான் காத்திருந்தது போல் குதிரை தொபீர் என்று கீழே சாய்ந்து கால்களை உதைத்தது. ஒரே ஆயாசம் அதற்கு!

கண்களை இமைகளைக் கொட்டி, கடைசி அந்தம் வரை நோக்கித் திரும்பின. வெறுமை! வெறும் வெறுமை! ஒரு ஜீவன் ஒரு ஜந்து காண முடியவில்லை. அத்தனை இடமும் துடைத்து விட்டாற்போல் துப்புரவாக இருந்தது.

கண்களை இடுக்கினான்.

இதென்ன! எல்லாம் மாயமாக இருக்கிறது!

ஏதாவது வேதாள உலகத்துக்கு வந்து விட்டானா?

ஜடங்களாக வீடுகள் மட்டும் நிற்கின்றன!

ஒரு ஆள், ஒரு உயிரைக் காணவில்லையே!

இது பெரிய ஊர் என்றார்களே!

எல்லோரும் திடீர் என்று எப்படி மாயமாய்ப் போனார்கள்!

நெற்றிச் சுருக்கமோடு பாதித் தெருவரை வந்தான்.

எல்லோரும் எங்கே போனார்கள்?

அசலூரில் திருவிழாவா?

அப்படி இருந்தாலும் எல்லோருமா போவார்கள்?

அவன் கண்கள் வாசல் தரையைப் பார்த்ததும் ஸ்தம்பித்தன.

வாசலில் பெரிய பெரிய கோலங்கள் தென்பட்டன.

நிச்சயம் அவை நேற்றோ அதற்கு முந்திய நாளோ போட்ட கோலங்களாக இருக்க வேண்டும். தரையைக் கூடச் சுத்தமாகப் பெருக்கி மண் குவியலை ஓரமாக ஒதுக்கி இருந்தார்கள்.

இரண்டு நாள் முன்பாக இருந்தவர்கள் எங்கே மாயமாய் மறைந்தார்கள்?

"ஹோய்" என்று கத்தினான்.

குதிரை தலையைத் தூ க்கிப் பார்த்தது.

"ஓஹோய்! எல்லோரும் ஏங்கே இருக்கீங்க?"

கத்தினான் அவன்.



சப்தம் வெகு தூரம் பரவி வெறுமையாகக் கரைந்தது. மறுமொழி வரவில்லை!

என்ன களைப்பு அவனுக்கு?

வியர்வை இன்னும் அடங்கிய பாடில்லை.

மேலே நடந்தான்.

பசியும், தாகமும் அவனை வாட்டின.

"ஐயா, இங்கே யாரேனும் இல்லையா? யாருமில்லையா?" என்று உரக்கக் கூவிக் கொண்டே போனான்.

முக்கால் தெரு தாண்டிய போது சடக்கென்று சத்தம் ஒலித்தது. திரும்பினான்.

ஒரு பழைமையான கதவு நொந்தவாறு திறந்தது.

ஒரு வயோதிகர் தள்ளாடிய நிலையில் நிலையைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

"டேய், முட்டாள்!" என்றார். தொண்டையில் ஒரு நரம்பு நாறாக இழுத்தது.

அவன் திரும்பினான். கண்கள் சிவந்தன.

"யாரை முட்டாள் என்று சொன்னீங்க?" என்று வாளை உறுவினான்.

சிரித்தார் கிழவர்.

"நீதான்" என்றார் கிழவர்.

"வாயை அடக்கிப் பேசும் பெரியவரே!"

"நீ முட்டாள் இல்லையென்றால் இந்த ஊரில் ஜனங்கள் யாருமில்லை என்று தெரிந்ததும் ஓடியிருக்க மாட்டாயா?" என்றார் கிழவர்.

"ஏன் ஓட வேண்டும்! ஜனங்கள் எங்கே போனார்கள்? அதைத்தான் நான் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

"தெள்ளத் தெளிந்த விஷயத்துக்கு ஆராய்ச்சி என்ன ஆராய்ச்சி! எல்லோரும் ஊரை விட்டு ஓடியிருக்கிறார்கள்!"

"ஏன்?"

"பெந்தராக்கள் வந்திருக்கிறார்கள்!"

"யார் அவர்கள்?"

"மராட்டிய வீரர்கள்!"

"அவர்களுக்கு இங்கு என்ன வேலை?"

கிழவர் மீண்டும் சிரித்தார். "அப்பா! உனக்கு நாட்டு நடப்புத் தெரியாது!"

"அது என்ன நடப்பு! சொல்லும் பெரியவரே!"

"மராட்டியர்கள் ஊருக்குள் வருவார்கள்!"

"வந்தால் என்ன?"

"கொள்ளை அடிப்பார்கள். சூறை ஆடுவார்கள். பெண்கள் அகப்பட்டால் மானபங்கம் செய்வார்கள்?"

"ஏன் அப்படிச் செய்கிறார்கள்?"

"உன்னிடம் பேச நேரமில்லை. எந்த நேரமும் அவர்கள் வருவார்கள். இங்கே நிற்காதே போ!"

என்று அவர் கதவடைக்கப் போக,

"பெரியவரே, நில்லும்!" என்று அவன் கத்தினான்.

அவர் நின்றார்.

"ஏன் பெரியவரே! உங்களிடம் ஆண் பிள்ளைகள் இல்லையா, அவர்களோடு சண்டை போடுவதற்கு?"

இந்த முறை கிழவர் பொக்கை வாய் அனைத்தோடும் சிரித்தார்.

"பைத்தியக்காரா! அது முடிகிற காரியமா?"

"ஏன் முடியாது?"

"உனக்கு எந்த ஊர்?"

"தென் பாண்டி!"

"மராட்டியரை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"யமகாதகர்கள் அவர்கள்! பயம் இல்லாத பலசாலிகள்! யாரும் அவர்களை அடக்கி விட முடியாது! நவாப் படைகள் படுகிற பாடு உனக்குத் தெரியாதா?"

உண்மையில் அவனுக்கு அதிகம் தெரியாது.

சற்றே சிந்தனையோடு நிற்க, கிழவர் தமது கதவைத் தொம் என்று சாத்தினார்.



"ஹூம்!" என்று ஒரு வீர மூச்சு விட்டான் அவன்.

தூரத்தில் குதிரை மீண்டும் எட்டிப் பார்த்தது.

உருவி இருந்த வாளை ஒரு சுழற்று சுழற்றினான்! நல்ல ஜனங்கள் இவர்கள்! தொடை நடுங்கிகள்! யாரோ கொள்ளையர்கள் வருகிறார்களாம்! இவர்கள் ஊரை விட்டு ஓடுகிறார்களாம். ஹூம்!

மேலே நடந்தான்.

சாலையின் கோடிக்கு வந்திருப்பான்.

அந்த நுட்பமான சப்தம் அவனை இழுத்தது. சற்று உன்னிப்பாகக் கேட்டான்.

ஒரு விசும்பல் சத்தம் கேட்டது. பெண் போலத் தோன்றியது. விசும்பல் வரும் வீட்டை அணுகினான்.

வாசலில் பெரிய பூட்டு தொங்கியது. வீடு ஒரு சாதாரண அந்தஸ்தில் இருந்தது. வாசலில் கூரை கொஞ்சம் சரிந்திருந்தது.

வீட்டின் விலாப் பக்கம் வழி இருந்தது.

அதற்குள் அவன் நுழைந்தான்.

வீட்டின் பின்புறம் நோக்கி அது சென்றது.

மெதுவாக நடந்தான்.

பின்கட்டுப் பகுதியில் வீட்டின் சுவர்கள் இடிந்திருந்தன. ஒரு பகுதி வெளி வாங்கி இருந்தது.

குரல் அதன் உட்புறத்திலிருந்து வருவது தெரிந்தது.

ஓசையில்லாமல் சென்று எட்டிப் பார்த்தான்.

ஒரு கணம் கண் சொடுக்கியது.

உள்ளே தெரிந்த நிழலான முற்றத்தில் ஒரு கர்ப்பமான பெண் சற்று அலங்கோல நிலையில் இருந்தாள்.

நெற்றியில் வியர்வை. முகம் எல்லாம் சோகம்.

கைகளை மாறி மாறித் துவைத்த வண்ணம் இருந்தாள். பிரசவ வேதனையில் இருக்கிறாள் என்பது புரிந்தது.

முனகிக் கொண்டே அவள், "நீங்க போங்க. இங்கே இருந்தா ஆபத்து! நான் என்னைக் கவனிச்சிக்கிறேன். கவலைப் படாதீங்க!" என்று கூறினாள்.

அவள் பேசிய இடத்தில் யாராவது பெரியவர்கள் நிற்பார்கள் என்று நினைக்கப் போக,

அங்கே ஒரு இளம் வயதுப் பெண் திகிலுடன் நிற்பது கண்டு அவன் ஆச்சரியப்பட்டான்.

அந்தக் கர்ப்பிணிப் பெண் வயதானவள் அவளா இந்த இளம் பெண்ணை! "நீங்க!" என்று அழைக்கிறாள்.

"ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று நினைத்தான்!

அந்த இளம்பெண் அதற்குள் இவனைப் பார்த்திருந்தாள்.

அவள் விழிகள் பெரிதாகின.

அவற்றில் தெரிந்தது ஆச்சரியமா, பயமா? திகைப்பா? எதுவும் புரியவில்லை.

அந்தச் சமயம் தபதப என்று ஏதோ விதக் குழப்பமான ஓசை கேட்கவே இரு பெண்களும் பரபரத்தார்கள்.

"வந்துட்டாங்க, சீக்கிரம்! சீக்கிரம்!" என்று பெண்மணி கூவ, அந்த இளம்பெண் காலை இங்கும் அங்கும் வைத்துப் பரிதவித்தாள்.

பிறகு பின்புறம் நோக்கி ஓடினாள்.

## 2. கையில் விழுந்த பதக்கம்!

அந்தப் பெண்ணின் கருவிழிகள் சஞ்சல ரேகையுடன் அவனை நோக்கின.

பயம் கொள்கிறாளா? அபயம் கேட்கிறாளா?

ஏதோ அவசர ஆபத்து! அவர்களது பரபரப்பு அதைத் தான் காட்டுகிறது.

சற்று முகத்தை வேறு திசையாகத் திருப்பி, அவர்களைப் பாராமல்,



"அம்மணிகளே! ஊரெல்லாம் யாருமில்லையே! துணையில்லாமல் இருக்கிறீர்களே? உதவி ஏதாவது வேண்டுமா?" என்றான்.

அதே நேரம் அந்த இளம் பெண் தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள். ஏதோ ஒரு கேள்வி அதில் இருப்பது போல் பட்டது அல்லது அவனை எடை போடுகிறாளா?

அவன் யோசிக்குமுன் அந்தக் கர்ப்பிணிப் பெண்மணி, "சிந்து நீங்க போங்க, நீங்க போங்க" என்று அவசரப்படுத்தினாள்.

சிந்து திரும்பினாள். "ஜாக்கிரதையாக இருப்பீங்களா அக்கா!" என்றாள்.

"கவலைப் படாதீங்க! கடவுள் இருக்கிறார்" என்றாள் பெண்மணி.

சிந்து கண்ணை விழித்தாள்.

இன்னும் ஒரு முறை 'நீ நல்லவனா? கெட்டவனா?' என்ற முறையில் அவனைப் பார்த்தாள்.

பிறகு கதவைத் திறந்து புறக்கடையில் மறைந்தாள்.

அவள் போன மறுவிநாடி, தடக் தடக் என்று குளம்பொலி கேட்க, அந்தப் பெண் குதிரையில் போகிறாள் என்பது தெளிவாயிற்று.

"நான் போய்த் தெருவிலே நிற்கிறேம்மா வேண்டுமானால் குரல் கொடு" என்று கூறி அவளிடம் மறுமொழி எதிர்பாராமல், தெருவுக்கு வந்தான் அவன்.

அதற்குள் அரவம் வலுவாகி விட்டது. கிழக்கே பார்த்தான். திமு திமு என்று ஒரு தூசிப் புகை கிளர்ந்து கொண்டிருந்தது.

சில விநாடிகளில் குதிரை வீரர்கள் அதிலிருந்து உற்பத்தியாகிக் கொண்டிருந்தார்கள்.

அட்டகாசமான இரைச்சலில் தெரு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

"யார் இவர்கள்? கிழவர் கூறிய மராட்டியர்களா?" என்று நினைத்தான் அவன்.

குதிரை வீரர்கள் சீக்கிரம் தெருவை அடைந்தார்கள்.

சிரமமோடு குதிரைகளை இழுத்து நிறுத்தி வியாபகமாக நின்றார்கள்.

அவர்கள் ஏதோ இரைவது கேட்டது. அடுத்து பல பேர் இறங்கி, வீட்டுக் கதவுகளைப் போய் உடைப்பது கேட்டது. உள்ளே போன சிலர் சில மூட்டைகளை வெளிக் கொணர்வதும் தெரிந்தது.

பல்லை இறுக்கினான் அவன்.

"பகல் கொள்ளையா?" என்று வாய் முணுமுணுத்தது.

கை வாளைப் பற்றியது.

குதிரை வீரர்கள் முன்னேறி முன்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் அந்த இளைஞனைப் பார்த்து விட்டான். 'ஹோய்' என்று கத்திக் குதிரையைச் செலுத்தி அவனிடம் வந்தான்.

"நீ யார்?" என்றான் மிரட்டலோடு.

"நான் ஒரு ஆள்!" என்றான் இளைஞன். "இந்த வீட்டுக்குக் காவல்!"

"காவலா? நீயா?" கடகடப்பாகச் சிரித்தான் அவன்.

"ஏன் சிரிப்பு?" என்றான் இளைஞன்.

"நீ ஒரு சோனி! நீயா இந்த வீட்டைக் காவல் காக்கிறாய்?"

இளைஞனுக்குக் கோபம் மூட்டியது.

"சோனியா? என் வாள் சோனி இல்லை" என்று சொல்லி, மூர்க்கமான அந்த வாளை உறுவினான். இழுத்த போதே காற்று முனகியது. பகல் வெளிச்சத்தில் அதன் நுனிகள் சீறிக் கொண்டு மின்னின.

குதிரை வீரன் அவனைக் கடுமையாகப் பார்த்தான்.

சிறிது பூனைத்தனம் கலந்த கண்! நீண்ட குறுகலான புருவம். கன்ன எலும்புகள் முண்டித் தெரிந்தன. கடுகடு என்று அதனால் ஒரு தோற்றம்.

குதிரையை மெல்லிதாக உந்தினான்.

அடுத்த விநாடி அது இளைஞனை நோக்கிப் பாய, 'வீஷ்' என்று ஒரு சத்தம்.



இளைஞன் வாள் இமைப்பதற்குள் எகிறியது.

அடுத்து மராட்டியன் கால் காற்றில் ஏறி, தொபீர் என்று இளைஞன் மார்பில் உதைத்தது.

இளைஞன் சுருண்டு விழுந்தான்.

அவமான உணர்ச்சி தாளவில்லை.

அவசர அவசரமாக எழுந்தான். தலைக்குள் பொறி பறந்தது.

தனது முஷ்டியை இறுக்கினான்! "டாய்!" என்ற வீரச் செறுமலுடன் சீறினான். ஒரு பாறை விழுவது போல் குதிரை வீரன் மீது சாய்ந்தான்.

குதிரை தள்ளாடி விழுந்தது.

வீரன் பாதிக் குட்டிக் கரணமிட்டான்.

அவன் எழுவதற்குள், அவனைப் பார்த்த சில வீரர்கள் ஓடி வந்தார்கள்.

இளைஞன் ஒரு தகிப்பான ஹுங்காரம் உதிர்த்தான்.

வருகிறவர்களை ஒரு உதாசீன எதிர்வோடு பார்த்தான். "கொள்ளைக்கார நாய்களா! வாருங்கள் பார்ப்போம்!" என்று கத்தினான்.

வீரர்களுக்குச் சூடு ஏறி இருக்க வேண்டும்.

"டேய் பீடை!" என்று ஒருவன் கத்த, எல்லோரும் அவனை நோக்கிப் பாய்ந்தார்கள்.

அதன் பிறகு தொடர்ந்து ஓசைகள் தான் கேட்டன.

இளைஞன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சக்கர வட்டமாக அவனைச் சுழற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மீண்டும் தங்கள் குதிரைகள் மீது ஏறிய போது,

இளைஞனது தொய்ந்து போன உடல் புழுதியில் கிடந்தது.

அந்தகாரங்கள் அடுக்கடுக்கா வந்தன.

அங்கங்கே சில வெளிச்ச மழுப்பல்கள் வந்து கண்களைக் குத்தின.

எங்கேயோ சூன்யவெளியில் நெடுந் தூரம் பிரயாணம் செய்வது போல் இருந்தது.

பிறகு சட்டென்று எங்கேயோ மோதி நிற்பது போல் இருந்தது.

கண்ணை விழித்தான்.

கரியதான கூரை மேலே தெரிந்தது. மூங்கில் விட்டங்கள் ஆதார எலும்புகளாக நீண்டிருந்தன. ஒரு பழைய ஓலைக் கூடை அதன் மேல் தொய்ந்து உட்கார்ந்திருந்தது.

திடுக்கிட்டுப் பார்வையைத் திருப்பினான். ஐம்பது வயது மதிக்கத் தகுந்த பெரியவர் ஒருவர் வாசல் முகப்பில் ஒரு களகைச் சோதித்துக் கொண்டிருந்தார்.

"ஐயா" என்று குரல் கொடுக்க, அது ஒரு மழுங்கல் ஓசையாகக் கேட்டது.

பெரியவர் திரும்பிப் பார்த்தார்.

களகை வைத்து விட்டு எழுந்து வந்தார்.

சிறிது வழுக்கைத் தலை அவருக்கு! ஆனால் வெட்டு மீசை! எடுப்பான நாசி! இறுகி வஜ்ஜிரமாகிப் போன முகம்.

எழுவதற்கு முயன்றான்.

இப்போது தான் உடம்பின் உபாதை தெரிந்தது. அங்கங்கே நெருப்புக்கள் பூத்தன. சில இடங்கள் நிரந்தரமாகக் காந்தின.

அத்தனையும் மெதுவாக ஒன்று சேர்ந்து கொண்டே வர, அவன் கோசம் முழுவதும் வலி மயமாவதை உணர்ந்தான்.

பெரியவர் அடுப்பங்கரைக்குச் சென்று பானையில் வெதுவெதுத்துக் கொண்டிருந்த பானகத்தைக் கொண்டு வந்தார்.

"தம்பி! ஏலம், கிராம்பு, கற்பூரம், மிளகுத் தூள் போட்ட சர்க்கரைப் பானம் இது! சாப்பிடு! வலியைக் கேட்கும், வலுவை உண்டாக்கும் இந்தா!"

என்று வெண்கலப் பாத்திரத்தை அவனிடம் கொடுத்தார்.

அவன் மெள்ள எழுந்து சாய்வாக அமர்ந்தான்.



ஒரு மடக்கு அருந்தினான். ருசித்தது. அத்தனையையும் அருந்தினான்.

"இதன் பேர் ப்ரபானகம் தம்பி! பீமசேனனே தயாரித்தது." என்றார் பெரியவர் முகப் பிரகாசமோடு.

"யார்? பஞ்ச பாண்டவ பீமனா?" என்றான் இளைஞன்.

"ஆமாம்! அவன் சமையலுக்கு ஈடு ஏது?" என்றார் பெரியவர்.

"லேசாகப் புளிப்பு இருக்கிறதே!" என்றான் அவன்.

"மாங்காய்ச் சாறும் சிறிது கலந்திருக்கிறது" என்றார் அவர்.

உண்மையில் உடம்பில் ஒரு தெம்பு எழுந்தது.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றார், பெரியவர்.

"தென் பாண்டி!" என்றான் அவன்.

"உன் பேர் என்ன?"

"மாறவர்மத் தேவர்!"

"இங்கே எங்கே போகிறாய்?"

"என் தந்தையாரைச் சந்திக்கப் போகிறேன்."

"அவர் எங்கே இருக்கிறார்?"

"புதுச்சேரிக் கோட்டைக் கிடங்கில் இருக்கிறார்!"

கோட்டைக் கிடங்கு என்பது சிறை வாசம் என்று பெரியவருக்குத் தெரியும்.

"அடப் பாவமே! அவரை ஏன் அங்கே போட்டார்கள்."

"அவர் ஒரு பாபமும் அறியாதவர். பரங்கிக்காரன் பண்ணிய அட்டூழியம் அது!"

"எத்தனை வருடமாகக் கிடங்கில் இருக்கிறார்?"

"பன்னிரண்டு வருடங்களாக!"

"அத்தனை வருடங்களா?"

"ஆமாம்! என்னைப் பார்த்தால் கூட அடையாளம் கண்டுபிடிப்பாரோ என்னவோ?"

"ஏன் போட்டார்கள்?"

"அவர் மடியில் உளவுச் சீட்டு இருந்தது."

"உளவு பார்க்கப் போனாரா?"

"இல்லை! வியாபாரம் செய்ய! ஆனால் யாரோ உளவுச் சீட்டை அவர் வசம் கொடுத்து விட்டார்கள். என் தந்தையார் வெகுளி! அதைப் பத்திரமாக வைத்திருக்கிறார். பரங்கியர்கள் அவரைப் பிடித்த போது அது உளவுச் சீட்டு என்று தெரிந்தது."

"அந்த உளவுச் சீட்டு யார் எழுதியது? யாருக்கு எழுதியது?"

"எதுவும் தெரியது பெரியவரே! அவர் கிடங்கில் இருக்கிறார் என்ற விஷயமே சில வருடங்கள் முன்னால் தான் தெரியும். இப்போது நான் அவரை மீட்கப் போகிறேன்."

"எப்படி மீட்பாய்?"

"எல்லா ஆயத்தங்களோடு வந்திருக்கிறேன்."

"அதற்காகத்தான் வழியில் மராட்டியர்களைச் சீண்டினாயா?"

"நான் சீண்டவில்லையே!"

"தெருவில் வந்து நின்றாயே, நான் பார்த்தேனே!"

பெரியவர் அப்படிச் சொன்னதுதான் தாமதம்!

மாறவர்மனிடம் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

"ஐயா, ஐயா! அவர்கள் எங்கே?"

"யார்?" என்றார் பெரியவர்.

"அந்தத் தெரு வாசலில் நின்றேனே அந்த வீட்டுக்காரர்."

பெரியவர் முகத்தைச் சுளித்தார்.

"வீடா அது? வெறும் பாழ் ஆயிற்றே!" என்றார்.

"பாழா?"

"ஆமாம்! சுவர் விழுந்து கிடப்பது தெரியவில்லையா?"

"தெரியும். ஆனால் உள்ளே ஆள் இருந்தார்களே?"

"என்ன தம்பி! தெற்கத்திச் சரக்கு எதையாவது அவிழ்க்கிறாயா? இந்த ஊரில் நான் எவ்வளவு காலமாக இருக்கிறேன், தெரியுமா?"



"இருக்கலாம், பெரியவரே, நான் சொல்வது உண்மை! பின் பகுதியில் இரண்டு பெண்கள் இருந்தார்கள்."

இருவருக்கும் சர்ச்சை ஏற்பட, வர்மன் விவரங்களைக் கூறினான்.

பெரியவருக்குச் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

"நான் பார்த்து வருகிறேன்!" என்று கிளம்ப, "நானும் வருகிறேன்" என்றான் வர்மன்.

அவனிடம் ஒரு புதுப் பலம் வந்திருந்தது.

அவன் தாங்கலாக நடக்க, பெரியவர் அவன் கையைப் பிடித்துக் கொள்ள, தெருவில் இறங்கினார்கள்.

தெருவைப் பார்த்ததும் பகீர் என்றது வர்மனுக்கு.

பொருட்களும், பாண்டங்களும், துணிகளும் விரயமாக அங்கே சிதறப்பட்டிருந்தன.

ஒரு நிர்மலமான தெரு இப்போது அலங்கோலமாக இருந்தது.

மனம் வெதும்பியவாறு அவன் நடந்து அந்த வீட்டைக் கண்டுபிடித்தான்.

அவனும் பெரியவரும் விலாப் பக்க இடைவெளி வழியே சென்றார்கள்.

மெல்லியதாகக் குழந்தை அழும் சத்தம் அவனைத் திடுக்கிட வைத்தது.

தட்டுத் தடுமாறிச் சுவர் ஏறி உள்ளே குதித்தான்.

அங்கே கண்ட காட்சி அவன் மனத்தை உலுக்கியது.

துணிகளுக்கு இடையே மூடிக் கிடந்தது குழந்தை.

அந்தப் பெண்மணியின் கண்கள் விறைத்தவாறு கிடந்தன.

"அம்மணி! அம்மணி!" என்றான்.

இரைந்து கூப்பிட்டதும், கண் சற்று நகர்ந்தது. அவன் மீது அதன் பார்வை விழுந்தது! விழுந்ததும் அப்படியே நின்றது!

அவள் கை மெள்ள நகர்ந்தது. ஏதோ செய்ய யத்தனித்தாள். முடியவில்லை.

குறிப்பை உணர்ந்து அவன் அவள் கையைப் பற்றினான்.

அவள் கை மூடியிருந்தது. அதை நீட்டுவது போல் பாவனை!

அந்தக் கையின் அடியில் அவன் தனது கையை வைத்ததும், அதன் விரல்கள் தாமாகத் திறந்தன. அவனது கையில் 'தொப்' என்று ஒரு பதக்கம் விழுந்தது.

அவள் வாய் மெள்ளத் திறந்தது.

ஏதோ சொல்ல நினைத்திருப்பாள்!

ஆனால் திறந்த வாய் திறந்த படிதான்! அவள் ஆவி பிரிந்து விட்டது. குழந்தை வீல் என்று அழுதது.

## 3. சுனை நீர் அருகே கணைகள்

அந்த வீட்டுப் புழக்கடைப் பாரிசத்து முற்றத்தில் நடக்கும் அத்தனை காட்சியையும் பெரியவர் அதிசயத்துப் பார்த்தார்.

வர்மன் கலங்கிக் கிடப்பதையும், குழந்தை 'குவா குவா' இறைப்பதையும், பெண்மணி மெள்ள மரணவாயில் அடங்குவதையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வர்மன் அப்போது சடக்கெனக் கீழே அமர்ந்தான்.

"பெரியவரே பாரும். இந்த அம்மணி யார்?" என்றான். களைப்பில் அவன் உடம்பு சுருண்டது.

பெரியவர் அந்த விரிசல் சுவரில் பதவாகமாகக் கால் வைத்து உள்ளே வந்தார். நாலாபக்கமும் பார்த்தார். "தம்பீ! இங்கு ஒரு குடித்தனமே நடந்திருக்கிறதே!" என்றார்.

அந்தப் பெண்மணியைக் குனிந்து நோக்கினார்.

அழகான முக விலாசத்துடன், சிற்ப அமைப்பில் இருந்தாள் அவள்!



கழுத்து கை எல்லாம் வெறுமை. சந்தனக் குழம்பு போன்ற மேனி!

கண்களின் வில் வளைந்த வளைவு அபிநயச் சமைவில் இருந்தது. கண்ணுக்குக் கீழ் அந்த வாட்டமும், உடம்பு எங்கும் பரந்த நலிவும் அவள் கஷ்டத்திலோ, நோயிலோ நொந்திருக்கிறாள் என்று தெரிவித்தது.

பெரியவர் கண்கள் அவள் பாதங்களில் விழுந்தன.

செந்தாமரை நிறத்தில் அபூர்வ வெண் சங்கு போல் வடிந்திருந்தது.

காலின் மேற்படத்தில் செம்பஞ்சு வரைந்த சித்திரங்கள்.

"தம்பீ! ஒரு உயர்குலப் பெண் போல் தோன்றுகிறாளே!" என்றார்.

"இவளைத் தெரியுமா?" என்றான் வர்மன்.

"தெரியாது. இவள் இங்கே எப்படி வந்தாள்? இவளை அழைத்து வந்தது யார்? இங்கே எத்தனை நாள் குடி இருந்தாள்? எதுவும் தெரியவில்லையே!" என்றார் பெரியவர்.

அதற்குள் குழந்தை 'குவா குவா' என்று இன்னும் பலமாக வீறியது.

பொங்கும் .கருணையுடன் நோக்கி, துணிச் சிக்கலிலிருந்து விலக்கி, கைகளில் புனிதப் பொருள் போலப் பத்திரமாகக் குழந்தையை ஏந்திக் கொண்டார் பெரியவர்.

குழந்தைக்கு நல்ல களை!

சுட்டிப் பார்க்கும் இருட்டு விழிகள். இரண்டு பதுமக் கன்னங்கள். கரும் சுருள்களாகத் தலைச் செழிப்பு.

"ஏதாவது அடையாளம் தெரிகிறதா?" என்றான் வர்மன்.

வெறுமனே சிரித்த பெரியவர், "குழந்தை பசியால் துடிக்கிறது. ஏதாவது, செய்ய வேண்டும்! உடனே வா!" என்று அவனை அழைத்து, சுவரின் ஓட்டை வழியே வெளியே போனார்.

வர்மன் அவர் பின்னால் போனான்.

தெருவுக்கு இருவரும் வந்தார்கள்.

வர்மன், இரு பக்கமும் பார்வையைச் செலுத்தினான். அவனது குதிரை எங்கே?

பெரியவர் வீடு வரைக்கும் நடப்பது கடினமாக இருந்தது. இன்னும் உடம்பின் உபாதை குறையவில்லை. அங்கங்கே வலிகள் விண்விண் என்று உதைத்தன. சற்றுத் தூ ரம் நடந்ததுதான் தாமதம், கண் முன்னால் சுழற்றிக் கொண்டு ஒரு இருட்டு ஓடி வர, நிற்க முடியாமல் தடால் என்று விழுந்தான்.

எத்தனை நாள் நினைவு வந்து போய்க் கொண்டிருந்தது, தெரியாது.

கான வெளிகளில் சுற்றுவது போலிருந்தது. பிரகாசமான பிம்பங்கள் வந்து போயின. சமயத்தில்

நிசப்தமான இருட்டில் மூழ்கிக் கிடப்பது போலவும் இருந்தது.

நினைவு திரும்பிய போது, தூ க்கத்திலிருந்து விழிப்பது போல் இருந்தது.

எத்தனை நாழி தூ ங்கி விட்டோம் என்று தான் நினைத்தான்.

இருக்குமிடத்தை உணகித்து விட்டு, பார்வையைத் திருப்பிப் பார்த்த போது,

பெரியவர் தாழ்வார அம்மியில் சிறுக்குச் சிறுக்கு என்று எதையோ அரைத்துக் கொண்டிருந்தார்.

அவர் புஜங்களின் தசைகள் பந்து போல் வீங்கின. விலாப் பக்கம் அவர் உடம்பின் வஜ்ஜிரம் ஜொலித்தது.

"க்கும்" என்று கனைத்தான் அவன்.

அவர் திரும்பினார்! அதிசயத்தோடு எழுந்து, கையில் அரைத்த மாவை உருட்டிக் கொண்டே வந்தார்.

அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

"தம்பி, பிழைத்து விட்டாயா? நாலு நாளாகக் கவலை தந்து விட்டாயே!" என்றார்.

"என்ன? நாலு நாள் ஆகிவிட்டதா?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் அவன்.

"ஆமாம், தம்பி! நான்கு நாட்களாக உனக்கு நினைவு இல்லை! மராட்டியர் உன்னைச் செம்மையாக உதைத்திருக்கிறார்கள்!" என்றார்.



"ஆமாம், பெரியவரே!" என்று சொல்லிப் பார்வையைத் தாழ்த்தினான் அவன். அவனுக்கு அவமானமாக இருந்தது.

பெரியவர் அம்மிக்கு ஓடினார். குழவியை விரட்டி ஓட்டி சீக்கிரம் விழுதுகளை வழித்து எடுத்தார். பாத்திரத்தில் வைத்து மூடிவிட்டு உள்ளே அடுப்பங்கரைக்கு ஓடினார். நொடிப் பொழுதில் ஏதோ காஷாயம் செய்து சற்றுச் சூடான நிலையில் அவன் முன்னால் வைத்தார்.

"ஒரு வாய் குடி. தம்பி! தெம்பு வரும்" என்றார்.

திடீரென்று நினைத்தவன் போல், "ஆமாம், அந்தக் குழந்தை என்னாயிற்று?" என்று கேட்டான்.

பெரியவர் வரிகளோடு புன்னகை செய்தார்.

"தகுதியான இடத்தில் சேர்ப்பித்து விட்டேன்"

"எங்கே?"

"ஒரு பெண்ணிடம்!"

"ஊரில் தான் யாருமில்லையே!"

"ஊரில் இல்லை! ஆனால் எங்கே அவர்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்!"

"அந்த இறந்த பெண்மணி?"

"அவளைப் புதைத்திருக்கிறேன்."

"நீங்கள் ஒருவராகவா?"

"ஆமாம்! ஊரில் திடகாத்திரர் யாரும் கிடையாது. என்னைப் போல் வயதானவர்கள் இருந்தால் உண்டு! தம்பி, குடி! ஆறிவிடப் போகிறது!"

வர்மன் ஒரு மடக்கை ஊற்றினான். முகம் பட்டென்று சுருக்கமிட்டது. கசக்கு உக்கிரமாக இருந்தது. சர்க்கரை அதைத் துவட்டினாற் போல் இருந்தது. வயிற்றுக்குள் ஒரு உத்வேகம் பிறந்தது.

பின்னும் பெரியவர் அவனை ஆதுரத்துடன் கவனிப்பதைப் பார்த்து,

"பெரியவரே! தாங்கள் யார்?" என்றான்.

"நான் ஒரு சாதாரண மனிதன்! என்னை ஆசான் ருத்ரபதி என்று அழைப்பார்கள்!"

"ஓகோ ஆசானோ! வித்தை கற்றுக் கொடுப்பீரோ?"

"தெரிந்ததைக் கற்றுக் கொடுப்பேன்"

"தங்களுக்கு என்ன தெரியும்?"

"சமையல் தெரியும்."

சிரித்தான் வர்மன். "எனக்கு அது தெரிய வேண்டாம்."

"அப்படிச் சொல்லாதே தம்பி! எது தெரிந்தாலும் நல்லதுதான்."

"வேறு என்ன தெரியும்?"

"வைத்தியம்!"

"அப்புறம்?"

"அவ்வளவுதான்!"

"உங்கள் உடம்பைப் பார்த்தால் வைரம் பாய்ந்த மாதிரி இருக்கிறதே! அப்பியசங்கள் பண்ணுவீரோ?"

சிரித்தார் ஆசான். "தம்பி! எனக்கு மல், வில், சிலம்பு, வகையறாக்கள் எல்லாம் தெரியும்."

"சொல்லவில்லையே! நானும் கொஞ்சம் கற்றிருக்கிறேன், பெரியவரே!"

"அரைகுறையாகக் கற்றிருக்கிறாய்!"

"இல்லை."

"முழுதாகக் கற்றிருந்தால் உன் முதுகு இப்படி வீங்கி இருக்காது!"

மீண்டும் அவமானம் ஏற்பட்டது.

ஆசான் தொடர்ந்தார். "கவலைப்படாதே! உன்னை முழுதாக்கி விடலாம். கொஞ்சம் சீர் செய்தால் போதும் தம்பி! சண்டையில் வலுவைவிட உத்திதான் உயர்வானது. கையைச் செலவழிப்பதைவிட மூளையை நிறையச் செலவழிக்க வேண்டும்"

வர்மன் பேசவில்லை. ஆசான் பேசியது எங்கேயோ தொடுவது போல் இருந்தது.

"என்ன தம்பி?"

"நாம் மட்டும் என்ன செய்ய முடியும் பெரியவரே!"



"அப்படிச் சொல்லாதே, நீங்கள் பல பேர் சேர்த்தால் வெள்ளமாகி விடுவீர்கள். நாட்டை ஒரு குடை கீழ் கொண்டு வரலாம். இப்போது எத்தனை குடைகள் பார்த்தாயா?" என்றார் பெரியவர்.

"பார்த்தேன், நாட்டில் யார், யார் எங்கெங்கே பரிபாலனம் பண்ணுகிறார்கள் தெரியவில்லையே!" என்றான் வர்மன்.

"உண்மை தம்பி! அர்ச்சுனன் பெண்டாட்டிகளையாவது எண்ணி விடலாம்! இங்கே உள்ள ராஜ்யங்களை எண்ண முடியாது. தஞ்சை ராஜ்யம், திருச்சிராப்பள்ளி ராஜ்யம், சேதுபதி ராஜ்யம், மறவர் ராஜ்யம், கள்ளர் ராஜ்யம், நவாபு ராஜ்யம், இதெல்லாம் போதாதற்கு பரங்கிக்காரன் வேறு வந்திருக்கிறான். அட்டகாசம் பண்ணிக் கொண்டு! நாடு குழம்புகிறதே தம்பி, ஜனங்கள் அல்லாடுகிறார்களே! என்றைக்கு விடிவு காலம் வருமோ, தெரியவில்லையே!" என்று இழுத்துப் பெருமூச்சு விட்டார் பெரியவர்.

வர்மன் பேசவில்லை.

பிறகு பெரியவர் எதையோ நினைத்தது பேல் எழுந்து முற்றத்திற்கு ஓடினார். அங்கு உலர்ந்து கொண்டிருந்த சுளகுகளை ஒதுக்கி வைத்தார்.

பிறகு அடுப்பங்கரைக்குச் சென்று பல சுறுசுறுப்பு வேலைகளைச் செய்து விட்டு மீண்டும் கூடத்திற்கு வந்தார். வர்மன் இன்னும் யோசித்தவாறே அமர்ந்திருந்தான். படுக்கவில்லை.

"என்ன தம்பி?" என்றார்.

"இந்த ஊர் ஜனங்கள் எங்கே போயிருக்கிறார்கள்?" என்றான் வர்மன்.

"அதுதானே சொன்னேனே! பைரவிக் காட்டுக்குள் இருக்கிறார்கள். உனக்கு ஏன் தம்பி?"

"என்னை அழைத்துப் போவீர்களா, பெரியவரே!"

"உன்னையா?" சிரித்தார் பெரியவர். "நீ இருக்கும் நிலையில் இன்னும் இரண்டு வாரம் ஆகும் பூரண குணம் அடைய!"

"அவ்வளவு நாட்களா?"

"ஆமாம், அதுமட்டுமில்லை. அதன் பிறகு உன்னை அரைகுறை வீரனாகவும் அனுப்ப எனக்கு விருப்பமில்லை. உன்னுடன் பழகிய தோஷத்தால் உன்னை முழு வீரனாக்க என் ஆசை!"

வர்மனின் கண்கள் பளிச்சிட்டன.

"ஆக்கி விடுவீர்களா, பெரியவரே!"

"நிச்சயம். மூன்று மாத அவகாசம் கொடு போதும்."

வர்மன் யோசித்தான்.

"யோசிக்காதே! நீ முழுமை ஆகாவிட்டால் உன்னால் வாழ முடியாது. உன் தந்தையையும் பார்க்க முடியாது. நீ இங்கே பட்ட அவஸ்தையை மனத்தில் வை!"

வர்மன் கலங்கினான். தந்தை என்றதுமே எப்போதோ பார்த்த அவரது முகம் மனத்தில் சில்லிட்டு மறைந்தது. அதே நேரம் தாயார் அவனிடம் வீரவாக்குச் சொல்லிக் கண்ணீரோடு அனுப்பியதும் நினைவுக்கு வந்தது.

ஒரு நீண்ட மூச்சு விட்டு, "உங்கள் விருப்பப்படி, பெரியவரே!" என்று கூறினான்.

* * *

மோகனமான காலை ஒளியில் குதிரையில் அந்த கம்பீர புருடன் புறப்பட்டான்.

அவன் பார்வையில் ஒரு மிடுக்கும் அமர்ந்த நிலையில் ஒரு துடுக்கும் இருந்தது. அவன் அருகில் கீழே ருத்ரபதி ஆசான் நின்று கொண்டிருந்தார்.

"ஏறும் குருவே! என் குதிரை தாங்கும்!" என்றான் வர்மன்.

ஆசான் ஒரு எம்பில் குதிரை முதுகில் அமர்ந்து கொண்டார். ஒரு நாழிகையில் அவர்கள் பைரவிக் காட்டை அடைந்தார்கள்.

காட்டுக்குள் ஆசான் வழி காட்டிக் கொண்டு போக, குதிரை இளைப்பு வாங்கியது.

அப்போது தான் குதிரைக்குத் தண்ணீர் காட்டவில்லை என்பதை உணர்ந்த வர்மன், "இங்கே அருகில் தண்ணீர் கிடைக்குமா?" என்றான்.



"கிடைக்கும். இடது பக்கம் நேராகப் போ! பாறை தென்படும். சுற்றிப் போனால் சுனை தெரியும்! நீயே போ! இல்லாவிடில் குதிரைக்குக் கஷ்டம்! நான் இங்கே நிற்கிறேன்!" என்று இறங்கினார் ஆசான்.

வர்மன் குதிரையைச் செலுத்திச் சென்றான். மர நெருக்கம் அதிகமாக இருக்க, கீழே குறுக்கும் நெடுக்குமாகப் போன வேர்க் கிளைகளைப் பார்த்துக் காலை பத்திரமாக வைத்துச் செல்லக் குதிரை சிரமப்பட்டது.

நெடிய பாறை வந்ததும், அதை வலமாகச் சுற்றிப் போக, திடீரென்று அங்கே தோன்றிய காட்சி அவனை மலைக்க வைத்தது.

ஸ்படிக நீர் கண்ணாடியாகத் தெரிய அந்தச் சுனை ஒரு குளம் போல வியாபித்திருந்தது.

அதன் கரை எங்கும் பசுமையான மரங்கள்!

காலை வெயில் அவைகளில் பட்டு ஒரு பொன் நிறத்தை உதிர்த்து விட்டிருந்தது.

காற்று அங்கே குளிர்ச்சியாக உதிர்ந்திருந்தது.

அந்த இயற்கை நேர்த்தியை அவன் பார்த்துக் கொண்டே வர, சற்று வலப்புற எட்டத்தில் அவன் பார்வை போன போது ஸ்தம்பித்து நின்றது.

அங்கே ஒரு மரத்தில் குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

அதன் அருகே, அப்போதுதான் குளித்துவிட்டுப் புதிது உடுத்திக் கொண்ட அந்த அழகி நின்று கொண்டிருந்தாள்.

சேமந்தலத்தில் அவன் பார்த்த பெண்தான்! சிந்து!

கண்கள் இரண்டும் காந்தக் கற்களாக அவன் மீது விழ,

பார்வை ஒரு ஆகாய தாரகை போல அசைவில்லாமல் அப்படியே நின்றது.

அந்த விநாடி அவன் மனம் அவனை விட்டுக் கீழே விழுந்து ஒரு மீனைப் போல் தத்தளித்தது!

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண், திடீரென்று 'வீல்' என்று அலற,

அவனும் திடுக்கிட,

ஒரு வேகமான அம்பு அவன் காதோரமாக வீச் என்று சப்தித்து ஓடியது.

மயிரிழையில் அவனைத் தவிர்த்த அந்த அம்பு பக்கத்து மஞ்சாடி மரத்தில் கம்பீரமாகப் புதைந்து நின்றது.

## 4. அரண் நடுவில் வஞ்சம்

அம்பு ஒன்று தலையை உரசி, மரத்தின் அடித் தூறில் தரித்து நிற்க,

வர்மனின் அத்தனை உணர்வுகளும் எழுந்து நின்றன.

சடக்கெனத் தலையைக் குனிந்தான். குதிரையைத் தட்டினான். பறந்தான். ஆசான் இருக்கும் இடத்தை அடைய வேண்டும் என்று துடிப்பு.

அதற்குள் அம்புகள் காற்றில் சுழிந்து கொண்டு ஓடின. தோள் ஓரமும் கழுத்து ஓரமும் ஓடின. அதன் சப்த அலைகள் அவனை மோதித் தள்ளின.

மராட்டியர்களின் போர் முறையை ஆசான் சொல்லியிருந்தார். சொற்ப அம்புகளே அவர்கள் வைத்திருப்பார்கள்! அதையும் மிகச் சிலரே உபயோகிப்பார்கள். வாளும் கேடயமும்தான் அவர்களின் முக்கிய ஆயுதங்கள். திடீர்த் தாக்குதல் ஒன்றே அவர்களது பிரதான கலை!

வர்மன் மரங்களூடே பின்னினான். எதிர்பாரா இடங்களில் குதிரையைத் திருப்பினான். ஓடும் வேகத்தில் அவன் உருவம் ஒரு தீசலாகத் தெரிந்தது.

சிறிது நேரம் பிரயாணித்ததும் ஒரு மேட்டுப் பாங்குள்ள மண் எழுச்சியைப் பார்த்த போது, கண்கள் தயங்கி நின்றன.



இருபுறங்களிலும் இரு மராட்டியர் உற்பத்தி ஆகி இருந்தார்கள். வர்மன் போகும் திசையை அவர்கள் இரு ஓரங்களிலிருந்தும் மூடுவதற்கு வந்தார்கள்.

சட்டென்று யோசித்து நாலா பக்கமும் பார்த்தான் வர்மன். இருவரைத் தவிர யாரும் மறைந்து கிடப்பதாகத் தெரியவில்லை. ஆத்திரம் ஒன்று தலைக்குள் சிவப்பாகக் கொதித்தது. இதுவரை யாரையும் அவன் தாக்கவில்லை. இனியும் அப்படி இருக்க விருப்பமில்லை.

குதிரையைத் தைரியமுடன் செலுத்தினான். மிக உற்சாகமுடன் அது மேடு ஏறியது. அவன் எதிர்பார்த்து போல் ஒருவன் அதற்குள் குறுக்கிட்டு விட்டான். நெருங்கும் வரை சும்மா இருந்து விட்டுப் பிறகு வாளைச் சரீராக உருவிக் குதிரையினின்று எம்பித் தாவினான்.

மூர்க்கமான தாக்கு அது! மராட்டி அதைச் சாமார்த்தியமாகச் சமாளிக்க, ஒரு துவந்தப் போர் அங்கே நிகழ்ந்தது.

இரண்டாமவன் அதற்குள் வந்திருந்தான். மற்ற இருவரும் சுழன்று போரிடுவதைக் கண்டு எப்போது பாயலாம் என்று வசம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வர்மன் தனது சீற்றத்தின் நெருப்பு அனைத்தையும் வீசிக் கொட்ட, அவன் வாள் மின்னும் ஒலியே மின் கீறல்களாக விளையாடியது.

குதிரை பலவிதக் கட்டளைகளுக்குத் தத்தளித்தது.

மராட்டியன் சீக்கிரம் திணறுவது தெரிந்தது. ஒவ்வொரு அடியாகப் பின்னேறுவதைப்' பார்த்ததும் வர்மனுக்கு உற்சாகம் பிறந்தது. கடைசியில் உக்கிரமாக ஒரு பிரயோகம் செய்ய, மராட்டியனது தோளில் உக்கிரமாக விழ, அந்தப் பகைவனின் உடல் தொபீரென்று கீழே சரிந்தது.

அவன் துணைக்கு வந்து கொண்டிருந்த மற்ற மராட்டியன் உடனே குதிரை மடக்கிக் காட்டுக்குள் புகுந்து ஓட ஆரம்பித்தான்.

அவ்வளவில் தனது முதல் வெற்றியைக் கண்டு அக மகிழ்ந்த வர்மன், ஆசானே, வணக்கம் என்று வாளை மேலே தூக்கிப் போட்டுக் கையில் பிடித்து, ரத்தம் தோய்ந்த அதன் கூர்மையை முத்தமிட்டான்.

பிறகு இழைக்கும் குதிரையுடன் மேடு ஏறி ஆசான் நின்ற இடத்தைத் தேடிப் போக ஆரம்பித்தான். வெகு நேரம் தேடியும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஆசான், ஆசான்!" என்று பல முறை அழைத்தான் அவன்.

குதிரையைச் செலுத்தி சற்றுக் கவலையுடன் நகர்ந்து போனான்.

அந்தக் காட்டு வழி அவனுக்குத் தெரியாது. அவன் போகும் தடமும் சரியல்ல என்று அவனுக்குத் தெரியும்.

சிறிது தூரம் அலைந்த பிறகு, ஒரு படர்வான மரத்தடியில் கீழே இறங்கி அமர்ந்து கொண்டான்.

குதிரை ஒரு முறை அவனை அன்போடு பார்த்தது.

ஆசான் எங்கே போயிருப்பார்? அவர் நின்ற இடம் இது தானா? என்று பல யோசனைகள் மனத்தில் ஓட,

அந்தப் பெண் பயத்தில் அலறிய காட்சியும் நினைவுக்கு வந்தது.

அவள் அலறாவிட்டால் அவன் குனிந்திருக்க முடியாது.

கடவுள்போல காப்பாற்றினாள்.

யார் அவள்?

சுனைக் கரையில் அவள் நின்ற திருக்கோலம் தெரிந்தது!

சில்பமான வடிவம்! ஒரு கொடியின் சாயல்! அவள் கண்களை மறக்க முடியாது. கறுகலான கார் கால ஆகாயம் போல இருந்தது.

மனத்தில் அது என்ன விதமான சலனம் உண்டாக்கியது?

இதுவரை அனுபவியாத நூதன உணர்வை உண்டாக்கி விட்டது.

என்ன பரவசமாக இருந்தது!

சிந்து! என்ன அழகான பெயர்!

அவனது திருநெல்வேலிச் சீமையில் தாமிரவருணிக்குச் சிந்து என்று மற்றொரு பெயர் உண்டு.

அதனால் தான் அங்குள்ள துறையை, 'சிந்து புகும் துறை' என்று அழைக்கிறார்கள்.



அந்தத் துறையில் பாயும் நதியின் அழகும், அமைதியும் போல இந்தச் சிந்து விளங்குகிறாள்.

இவள் யார்?

குதிரையில் செல்கிறாளே!

அரச குலப் பெண்ணா?

வர்மன் தனது அங்கியின் பைக்குள் கையை விட்டான்.

அங்கே கனமாக இருந்த அந்தப் பதக்கத்தை வெளியே எடுத்தான்.

வட்ட வடிவமான பதக்கம்.

சற்றுக் களிம்பு ஏறி இருந்தது.

மற்றபடி கனமான தங்கம்!

அதன் முகப்பில் நிறைய வேலைப்பாடுகளுடன் பூ வேலை இருந்தது.

பார்ப்பதற்கு மனோகர அழகு.

இந்தப் பதக்கத்தில் ஏதாவது விசேஷம் உண்டா?

அந்தப் பெண்மணி இதை ஏன் தன்னிடம் கொடுத்தாள்?

வர்மன் திரும்ப, அதைத் தனது பைக்குள் போடவில்லை.

அதற்கு மாறாக, தனது இடுப்பு உத்தரியத்தின் உள் பக்கம் வைத்து மடித்து இறுக்கிக் கொண்டான்.

சிந்தனை வசத்தில் சிறிது நீந்தி விட்டு மெள்ள அவன் நிமிர்ந்த போது, புருவம் நெரிந்து மேலே சென்றது.

சுற்றி வளர்ந்த மரத்து அடர்வுகளில் மர்மமாக ஓர் இயக்கம் இருப்பது புலப்பட்டது.

திடுக்கிட்டு எழுந்தான்.

குதிரை மீது தாவி, ஒரு கையை வாளில் வைத்தான். பிறகு உன்னிப்புடன் திசைகளைப் பார்க்க, அதன் சூன்யம் உண்மையில் ஒரு சூன்யமல்ல என்று தோன்றியது.

மனத்தில் ஒரு கவுளி அடித்தது.

குதிரையைச் சற்றுமுன் செலுத்தி, "யார் அங்கே?" என்று கேட்டான்.

மௌனமான அரண்யம் அதை ஒரு முறை பிரதிபலித்தது.

கண்கள் துடிப்புடன் ஜாக்கிரதையாகி விட, "யார் அங்கே? தைரியமுண்டானால் எதிரில் வா!" என்று பிளிறிக் கொண்டு குதிரையை முன்னால் நடத்தினான்.

இருபதடி தொலைவு சென்றதும், திடும் என்று அவன் மீது ஒரு பாம்புச் சுருள் விழுந்தது.

உடனே அண்ணாந்து பார்த்தான்.

மேலே இருந்து ஒரு கயிறு அவன் மீது மாலையாக விழுந்திருந்தது.

யோசிப்பதற்குள் அது இறுக ஆரம்பித்தது.

வாளை மேலே தூக்கிக் கயிற்றை வெட்ட முயல, அதற்குள் அவனது உடல் சுருக்கோடு மேலே தூக்கப் பட்டது.

அடுத்த விநாடியே கீழே எறியப்பட்டது.

கோபத்துடன் எழுந்திருக்க முயல, உருவங்களாக முளைத்த மராட்டியர் அவனைச் சூழ்ந்து கொள்வது தெரிந்தது.

அரண்யத்தின் நடுவே வகிர்ந்து சென்ற அந்தப் பாதையின் முடிவில், ஒரு சிறிய நீர்நிலையை அடுத்து அமைந்திருந்தது அந்த மராட்டியர் இருப்பிடம்.

கூடாரங்கள் ஏதும் அங்கில்லை. வெறும் திறந்த வெளி தான்! அமர்வதற்கோ, நீட்டுவதற்கோ சுற்றி வர மணல் குவியல்கள் இருந்தன.

அவனை ஒரு மரத்தின் தூறுடன் கட்டியிருந்தார்கள்.

வர்மன் ஒரு பொறியில் அகப்பட்டவன் போல அங்குமிங்கும் பார்வையை வீசிக் கொண்டிருந்தான்.

அந்த மாலை நேரத்தில் அந்த மராட்டிய வீரர்கள் விருப்பப்படி சாராயத்தைக் குடித்து விட்டு மிக மோசமான முறையில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் வடக்கத்தி ராகத்தில் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர் குரல் அந்தப் பாட்டில் சற்று எடுப்பாகக் கேட்க, வர்மன் திடுக்கிட்டு அந்தக் கும்பலை விசேஷமுடன் நோக்கினான்.



அவன் பல் அரைபட்டது.

அங்கே, அந்தச் சேவகர்களுடன் சேர்ந்து ருத்ரபதி ஆசான் குடித்துக் கொண்டிருந்தார். அவரது குரல் தான் தனித்துவமாகத் தெரிந்தது.

வர்மன் அவரையே கவனித்துக் கொண்டிருக்க, ஆசான் ஓர் எதேச்சையில் முகத்தைத் திருப்பி அவன் பக்கம் பார்த்துவிட்டார்.

மறுகணம் முகத்தைத் திருப்பிக் கொண்டு வேறுபுறம் நழுவுவது தெரிந்தது. ஆத்திரம் மீறி வர, 'துரோகி' என்ற வார்த்தை கட்டைத் தொனியாக உதட்டில் சிறியது.

ஆசான் மீதே பார்வையை வைத்திருக்க, அருகில் வந்த மராட்டியனை அவன் கவனிக்கவில்லை. மிக அருகில் வந்ததும் திடுக்கிட்டுப் பார்க்க,

"தம்பி! உனக்கு விடுதலை வேண்டுமா? வீர மோட்சம் வேண்டுமா?" என்று கேட்டான்.

"ஏன் கேட்பதற்கு நீ யார்?" என்று கோபத்துடன் வர்மன் கேட்க,

"தம்பி! நீ எங்களுக்காக ஒரு காரியம் செய்தால் உன்னை விடுதலை செய்வோம். இல்லாவிட்டால் வெறி நாயை வேட்டை ஆடுவது போல் ஆடி உன்னைக் கொன்று விடுவோம்" என்று கூறினான் மராட்டியன்.

வார்த்தைகள் சாராயம் தோய்ந்து வந்தன.

## 5. திருப்பதிப் பெருமாளே சரண்

மார்க்கச் செட்டியார் சத்திரத்தில் அந்தி கருங்கும் நேரத்தில் விட்டோபா என்ற அந்தத் தன வணிகர் விஸ்தாரமாக அமர்ந்திருந்தார்.

அவர் பக்கத்தில் இரண்டு மூட்டைகள் கிடக்க, திண்டு ஒன்றில் அவர் முதுகு சாய்ந்திருக்க, தார்ப்பாய்ச்சிய வேட்டியிலிருந்து அவரது இரண்டு கால்களும் செக்கச் செவேல் என்று வெளி நீட்டியிருந்தன.

முன்னே தாம்பூலத் தட்டு ஒன்று பல பரிமள கந்த திரவியங்களோடு மங்களமாக வியாபித்திருந்தது. திறந்த கரண்டானில் சின்ன நிலா போல் சுண்ணாம்பு விகசித்தது.

பாண்டுரங்காவின் வாயெல்லாம் சிவந்து கறை படிய, அடிக்கொரு தரம் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார் அவர்.

நல்ல திடகாத்தர மேனி! தலையில் பிரிபிரியாகக் கட்டிய மராட்டியப் பாகை. மேலே மெல்லிய வெள்ளை நிற அங்கி! கழுத்தில் மணி தாழ்வடங்கள்! காதிலே வயிரக் கடுக்கன் கையிலே இடியாகக் கங்கணங்கள். விரலுக்கு மூணு மோதிரங்கள்.

அவருக்கு அருகே சற்று ஒடுங்கி பயபக்தியோடு ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள்.

எட்டத்தில் ஒரு கணக்கன் பெட்டகத்தைத் திறந்து உள்ளே தீவிரத்தோடு சோதித்துக் கொண்டிருந்தான்.

"இவன் தான் அந்த இளைஞன்" என்று மராட்டிக் காவலர் ஒருவர் சொல்ல, "ஹி, ஹி, ஹி" என்று அவனைப் பார்த்து இளித்தார் விட்டோபா பாண்டுரங்கா.

பிறகு, "தம்பி! என்ன சொல்லுகிறாய், சொல்லு. நாங்கள் சொன்னதை ஒத்துக் கொள்கிறாயா? நேரம் கடத்தாதே!" என்று கேட்டார்.

அங்கே வந்ததிலிருந்து உணர்ச்சிவசமாக மாறியிருந்தான் வர்மன். இப்படி ஒரு சூழ்நிலை வரும் என்று லவலேசமும் எதிர்பார்க்கவில்லை. பிடிக்காத வேலையைக் கொடுத்தால் அதை மறுக்க வேண்டும் என்று கூட நினைத்திருந்தான்.

ஆனால் இங்கே சத்திரத்து அறையுள்ளே அந்தப் பெண்ணைப் பார்த்ததும், பிரமித்தது மட்டுமல்ல, மனம் இளகிக் கூழாகிவிட்டது.

இப்போது தான் அவளைச் சற்று நெடுவிழியாய்ப் பார்க்கிறான். வட்டமான முக விலாசமும் வரி விட்டு ஓடிய



கயல் விழிகளும் அவன் மனத்துள் இன்பமாய் நிறைந்தன. ஒரு மின்னல் துணுக்கு போல் நின்றாள் அவள். நின்ற இடம்கூட ஓர் ஒளிக் கூடமாக ஒளிர்ந்தது.

ஒரே ஒரு முறை தான் அவளைப் பார்த்தான். அவன் நா தேனாக 'சிந்து' என்று அழைத்தது. மனத்தின் அத்தனை தாபங்கள் கூடி எழுந்தன. நீண்டதாக ஒரு பெருமூச்சு விட்டு, கண்களைத் தாழ்த்திக்

கொண்டான். உள்ளத்தில் எழுந்த ஆயிரம் எண்ணங்களும் ஆயிரம் இழை கீதமாக வழிந்தன.

"ஐயாப் பிரபுவே! நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்?" என்றான் அவன்.

விட்டோபா சிரித்தார். "தம்பி, உனது அசகாய சூரத் தனங்களைக் கேள்விப் பட்டேன். மிகவும் மகிழ்ந்தேன். உன்னைப் போல ஒரு இளைஞன் தான் எனக்குத் தேவைப்படுகிறான். சொல்லு, ஒரு ஆபத்தான காரியத்தைச் செய்வாயா நீ!" என்று கேட்டார் அவர்.

வர்மனுக்கு இளக்காரமான கோபம் வந்தது. "ஐயா! நீங்கள் கட்டளையிட்டதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது என்று நிபந்தனை போட்டு விட்டீர்கள். இப்போது ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" என்றான் சற்று படபடப்போடு.

உடனே பாண்டுரங்கா கோபமாகச் சுற்றிலும் பார்த்து யாரிடமோ சொல்லுவது போல், "என்ன இது? யார் இப்படிச் சொன்னார்கள். இளைஞன் நல்லவனாக இருக்கிறானே! மிரட்டலாமா? யார் சொன்னது இது? ஏன் சொன்னார்கள்?" என்று கடும் தொனியோடு கேட்டார்.

யாரிடமிருந்தும் மறுமொழி வரவில்லை.

பிறகு வர்மனைப் பார்த்து, "தம்பி எதுவும் கவலைப்படாதே! நீ எனக்கு இந்தக் காரியம் செய்! உனக்கு நிறைய திரவிய சகாயம் செய்கிறேன். பெரும் பணக்காரன் ஆவாய்!" என்று கூறினார்.

"ஐயா! எனக்குத் திரவியம் தேவை இல்லை. நான் வடக்கே செல்லும் காரணம் அவசரமானது! என்னைத் தங்கள் சேவகர்கள் மறித்து....." என்று அவன் சொல்ல,

குறுக்கே புகுந்த விட்டோபா, "வடக்கேயா? எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

"புதுச்சேரிக்கு."

புதுச்சேரி என்று சொன்னதும் விட்டோபாவின் கண்களில் ஓர் ஒளி பாய்ந்தது. "புதுச்சேரியா! அங்கே உனக்கு ஆக வேண்டியது என்ன?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"என் தந்தையை அங்கே கிடங்கில் போட்டிருக்கிறார்கள்!" என்றான் வர்மன்.

"யார் உன் தந்தை?" என்றார் விட்டோபா.

"நெல்கட்டுஞ் செவல் பாளையத்தின் தளபதி" என்றான்.

"யார்! வீர குலசேகரரா?"

வர்மன் உடனே துள்ளினான்.

"அவர் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான் ஆத்திரத்துடன்.

"தெரியுமாவா? அவரிடம் நேரில் வியாபாரம் செய்தவனாயிற்றே! எப்படி நான் அவரை மறக்க முடியும்?அந்தத் தாமிரவருணிப் பாசனத்தில் நெய் வயல் சூழ்ந்த நகரத்தில் நிகரில்லாத பாளையக்காரராக வீற்றிருந்தாரே! மறக்க முடியுமா? தம்பீ அவர் இப்போது எங்கே இருக்கிறார்?" என்றார் விட்டோபா சங்கேதமாக.

"புதுச்சேரிக் கோட்டைக் கிடங்கில்..." என்று மனம் வெதும்பச் சொன்னான் வர்மன்.

உடனே விட்டோபா பல்லைக் கடித்தவாறு, "யார்! அந்தப் பிரரெஞ்சுக்காரத் துரோகிகளா?" என்று சினத்தோடு கேட்டார்.

"ஆமாம்! அந்த மிலேச்சப் பரங்கிகள்தான்" என்றான் வர்மன்.

விட்டோபா தமது தலைப்பாகை மேல் ஒரு கையை வைத்துத் தீவிரமாக யோசித்துப் பிறகு கையை இறக்கி, கண்ணைத் திறந்து, "தம்பி! உனக்கு உன் தந்தையின் விடுதலை தானே வேண்டும்?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றான் வர்மன்.



"அதற்கான எல்லா முயற்சியும் செய்கிறேன். இது சத்தியம். திருப்பதி சாமி பிரசன்னமாகக் கூறுகிறேன். நிச்சயம் அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பேன்" என்று சொல்லி, கீழே வைத்திருந்த தமது பையை எடுத்து அதிலிருந்து வெங்கடேசரின் மரப் பொம்மை ஒன்றை எடுத்து, அதன் பாதங்களைத் தொட்டு 'சத்தியம்' என்று சொல்லிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

வர்மனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

விட்டோபா, அவனது தந்தையை அறிந்ததும் மட்டுமில்லாமல் அவரை விடுவிக்கவும் வழி செய்கிறேன் என்று துணிந்து கூறுகிறார். இதுவரையில் யாரும் அப்படிச் சொன்னதில்லை.

"ஐயா!" என்றான் மகிழ்ச்சியோடு!

"என் தந்தையின் விடுதலைக்காக நான் எதுவும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க!" என்றான்.

"அப்பா தம்பி. நான் சொல்வதைக் கேள்! சந்தா சாகிப் தெரியுமல்லவா? ஆற்காடு நவாபு?" என்று அவர் தொடங்க,

"ஐயா அவர்தான் நவாபா அல்லது ..." என்றான் வர்மன்.

"தம்பி நல்ல கேள்வி கேட்டாய்! இப்போது இருக்கும் நிலையில் யார் தான் நவாபு என்று கூறுவது மிகவும் சிரமம்! அப்படிப் போட்டி, பூசல். எனக்கு இந்த சந்தா சாகிபு நெருங்கிய நண்பர்! அவர் கொடுத்த தர்மத்தில் வாழ்கிறவன், நான். அவர் தயவில் வியாபாரமே செய்கிறவன்! இப்போது அவர் திருச்சிராப்பள்ளி கோட்டைக்குள் மாட்டிக்கொண்டு இருக்கிறார்!"

"பெரிய சூரர் என்று அவரைச் சொல்லுவார்கள்!" என்றான் வர்மன்.

"சொல்லுவார்கள்! சூரர்கள் அறிவைச் செலவழிக்க வேண்டும். அப்படிச் செய்தாரா என்று தெரியவில்லை. கோட்டையைப் பிடிக்கிறேன் என்று கோட்டைக்குள் போனவர் செவ்வையாக மாட்டிக் கொண்டார். கோட்டைக்கு வெளியே பகைவர்கள் சூழ்ந்து விட்டார்கள். முற்றுகை இடுபவர்களில் கும்பினியர்களும் (ஆங்கிலேயர்)

உண்டு. இவர்களிடமிருந்து அவர் எப்படி தப்பி வரப் போகிறாரோ தெரியவில்லை..."

குறுக்கே மறித்தான் வர்மன். "நான் போய் அவரை மீட்டுக் கொண்டு வர வேண்டுமா?" என்று வெகுளியாகக் கேட்டான்.

"தம்பி! பெரிய பொறுப்பு அது! உன்னால் செய்ய முடிந்தால் நலமே! எனினும் என் நண்பரை மீட்கும் பொறுப்பை வேறு யாராவது பெரிய மனிதர்கள் செய்யட்டும். உனக்கு அது வேண்டாம். நீ செய்ய வேண்டியது எல்லாம் அவருக்குத் திரவிய உதவி பண்ணிக் கொடுக்க வேண்டியதுதான்."

"ஏன் ஐயா! அவருக்குக் கூட பொருள் தேவையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் வர்மன்.

"ஆமாம் தம்பி! பொருள் இருந்தால் தானே யுத்தம் நடக்கும். நான் கேள்விப்பட்டதில் பல மாதங்களாக படைச் சேவகர்களுக்கு அவர் சம்பளம் கொடுக்கவில்லை. பணத்துக்காகத் திண்டாடுகிறார்! என் மனம் கேட்கவில்லை தம்பி! அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்!" என்று சந்தாசாகிபு படுவதைத் தாமே படுவதுபோல் துடிப்பைக் காட்டினார் விட்டோபா.

"நீங்கள் கொடுக்கும் பணத்தைக் கோட்டைக்குள் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்! அவ்வளவுதானே! கொடுங்கள் பணத்தை!" என்றான் வர்மன்.

சிரித்தார் விட்டோபா. "பணமா நான் கொடுக்கவா? நான் ஒரு அன்றாடங் காய்ச்சி வியாபாரி தம்பி! என்னிடம் ஏது அவ்வளவு பணம்? ஒரு யுத்தத்தை நடத்தும் அளவுக்குப் பணம் கொடுக்கிறவர் வேறு ஒரு பெரிய மனிதர் இருக்கிறார் தம்பி! அவரிடம் நீ போக வேண்டும்."

"யார் அவர்? எந்த நாட்டு அரசர்?" என்றான் வர்மன்.

"இந்தப் பரத நாட்டுக்கே அரசர்! பேரரசர்!" என்றார் விட்டோபா.

"யார்! டில்லி பாதுஷாவைக் கூறுகிறீரோ?" என்றான் வர்மன்.

"இல்லை! அந்த டில்லி அரசருக்கும் மேம்பட்ட அரசர்! மா மன்னர்!"



"யார் கூறுங்கள், ஐயா!"

"திருப்பதிப் பெருமாள் வெங்கடேசுவரர் இருக்கிறாரே அவரேதான்!"

"என்ன?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் வர்மன்.

"வெங்கடாசலபதிக் கடவுளா?"

"ஆமாம்! அவரேதான்!"

வர்மனுக்குச் சிரிப்பு வந்தது. விட்டோபா கூறியதில் பல விஷயங்கள் அவனுக்கு அவர் மீது சந்தேகத்தைத் தந்தது. அவருக்குச் சித்த பிரமையாக இருக்குமோ என்று நினைத்தான்.

இந்தக் கடைசி வார்த்தைகள் அந்த நினைப்பைப் பூரணமாக ஊர்ஜிதம் செய்தன.

"கடவுளிடம் போய்க் கேட்க வேண்டுமா?" என்றான் வர்மன், சற்று இளக்காரமாக.

"ஆமாம்! அவர் தான் பெரும் தனவந்தர். அவருக்கு வருடாவருடம் வரும் பணத்தில் ஒரு யுத்தம் அல்ல! பல யுத்தங்கள் நடத்தலாம்!"

உடன் வர்மன் பாதி சிரித்துக் கொண்டே, "சரி, கடிதம் எழுதிக் கொடுங்கள். அவரிடமே போய்க் கேட்கிறேன்" என்றான்.

"அப்படிச் சொல் தம்பி! நீ தான் வீரகுலசேகரனுக்குப் பிள்ளையாக இருக்கத் தகுதி!" என்று கூறி, தமது துணிப் பைக்குள் கையைச் செலுத்தி ஒரு துணி உறை போட்ட கடிதத்தை எடுத்து அவன் கையில் விநயமாகக் கொடுத்தார்.

அதை வாங்கிய வர்மன், "இதென்ன, மகா ராஜராஜஸ்ரீ

ஜமீந்தார் சமூகம்

பொம்மராசு பாளையம்

என்று எழுதியிருக்கிறதே." என்றான்.

சிரித்தார் விட்டோபா. "தம்பி! அவர் தான் வெங்கடாசலபதியின் பிரதிநிதி! திருமலை வெங்கடாசலபதியின் வரும்படிகளை நிர்வாகம் பண்ணுகிறவர். அவருக்குத் தான் எழுதியிருக்கிறேன்!" என்றார் விட்டோபா.

"சரி ஐயா! நீங்கள் எழுதினால் அவர் கொடுப்பாரா?" என்றான் வர்மன்.

விட்டோபா நகைத்துக் கொண்டே, "நான் சாதாரண வியாபாரி! நான் எழுதினால் கொடுப்பாரா? அதனால் ஒரு பெரிய பிரமுகரிடமிருந்து கடிதத்தை வாங்கி இதில் வைத்திருக்கிறேன். இந்தக் கடித்த்தைக் காட்டினால் நிச்சயம் கொடுப்பார். வழித்துணைக்கு ஆட்களையும் அனுப்புவார். இப்போது நான் உன்னை ஐந்து பேரோடு அனுப்புகிறேன். ஜமீந்தாருக்குச் சில பரிசில்களையும் அனுப்புகிறேன்! வா இப்படி!" என்றார் விட்டோபா.

வர்மன் அவர் அருகில் போனான். விட்டோபாவும் எழுந்து பரிசில்களை வரிசையாகக் காண்பித்தார். "கவனித்துக் கொள்,

ஒரு பெட்டி கற்கண்டு,

ஆறு பன்னீர் சீசா,

ஒரு முத்துப் பதக்கம்,

ஒரு இரட்டை குண்டு ஓடுகிற துப்பாக்கி (Double Barrelled Gun)

ஒரு பெண்.

'பெண்' என்று சொல்லிச் சிந்துவைக் காட்டியதும் வர்மன் நிமிர்ந்தான்.

அந்தப் பெண் உணர்ச்சி இல்லாத பார்வை ஒன்று பார்த்தாள். வேதனையாக இருந்தது.

விட்டோபாவைப் பார்த்துத் திரும்பி, "ஐயா! பெண்ணைப் பரிசிலாகக் கொடுப்பார்களா?" என்றான் அருவருப்புடன்.

"அதில் என்ன தப்பு தம்பி? நாட்டு வழக்கம் ஆயிற்றே! 'திருமணவெள்ளாட்டி' என்று கேள்விப்பட்டதில்லையோ! கல்யாணப் பெண்ணுக்குத் தாதிகளையும் சீதனமாக அனுப்புவார்களே! இவளை ஜமீந்தார் அந்தரப்புரத்துப் பணிக்காக அனுப்புகிறோம். அதில் தவறு ஒன்றும் இல்லையே!" என்றார் அவர்.

வர்மன் குனிந்தவாறு நடந்து மறுபுறம் வந்தான்.



"ஐயா!" என்றான் கண் கலங்க, "நான் இந்தக் காரியம் செய்யப் போவதில்லை. என்னைப் பொறுத்தருளுங்கள்" என்றான்.

விட்டோபா சடக்கெனத் திரும்பினார்.

அவருக்கு அவ்வளவு கோபம் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

## 6. பரங்கியரை நம்புவது மோசம்

விட்டோபா எழுந்து வந்தபோது, வர்மன் மனம் தளரவில்லை. நிதானமாக ஒரு பார்வையைச் செலுத்தினான். அதில் அனைத்துக் காட்சியும் விழுந்தாலும், அந்தப் பெண் சிறிது பிரத்தியேகமாக விழுந்தாள்.

என்ன வசீகரம் அவள்!

இளமையின் அத்தனை பூக்களும் அவள் மீது பூத்திருந்தன. விழிகள் இரண்டும் இரு உணர்ச்சிச் சுழிகள்.

நிற்கும் நிலையில் சிற்பங்கள் நாணிவிடும்.

உறுத்தாத ஒரு மிருதுவான வனப்பில் இருந்தாள் அவள்.

நீண்ட மூச்சு ஒன்று வந்தது.

விட்டோபா அதற்குள் அவனை நெருங்கி இருந்தார்.

"என்ன சொன்னாய்!" என்று அவன் தோளைப் பலாத்காரமாக உலுக்கினார். அவரிடம் அப்படி ஒரு இரும்புத் தன்மை இருந்ததா? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஐயா!" என்றான் வினயமாக. "தாங்கள் சொன்னதை அவசியம் செய்கிறேன். ஆனால் இந்தப் பரிசிலை மட்டும் அனுப்பாதீர்கள்" என்று பெண்ணைக் குறிப்பிட்டுக் கூறினான்.

"இதில் என்ன குற்றம்?" என்றார் அவர்.

"ஒரு பெண்ணை அடிமையாக்கி அந்தப்புரத்துக்கு அனுப்புவது எனக்குப் பிடிக்கவில்லை."

"அஹ்ஹா" என்று ஏளனத்துடன் சிரித்தார் விட்டோபா! "நீயும் அடிமை! அவளும் அடிமை! அடிமைக்கு அடிமை என்ன கரிசனம் வேண்டிக் கிடக்கிறது. நான் சொன்னதை நீ செய்யத்தான் வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்று சீறினார் அவர்.

வர்மன் அவரை நிதானமாகப் பார்த்தான். அவன் பார்வை மெள்ள இறுகியது.

"ஐயா! இதை நான் செய்வதற்கில்லை! பொறுத்தருளுங்கள்!" என்றான்.

விட்டோபாவின் கோபம் உச்சியைக் கடந்தது. மீசையின் கணுக்கள் துடித்தன. "இதன் முடிவு என்ன தெரியுமா?" என்று கர்ஜித்தார் அவர்.

"தெரியும், சிரச்சேதம்தானே!"

"அதுதான்! இந்தா விஸ்வா!"

விஸ்வா என்ற மராட்டிய உபதளபதி முன்னால் வந்தான்.

"செய்ய வேண்டியதைச் செய்" என்றார் விட்டோபா.

அறைக்கு வெளியே தாழ்வாரம்.

தாழ்வாரத்தை அடுத்துச் சதுரமான முற்றம்.

வெயில் அதில் உக்கிரமிட்டுக் கொண்டிருந்தது.

கல் பாவிய தரை! ஏற்கெனவே சினந்து வெந்து கொண்டிருந்தது. வர்மனது கால் கைகளைக் கட்டி அங்கே கொண்டு போய் நிறுத்தினார்கள்.

"இஷ்ட தெய்வத்தைக் கும்பிட்டுக் கொள்!" என்றான் சேவகன்.

மராட்டியரின் குணம் அவனுக்குத் தெரியும்! ஆசான் சொல்லி இருந்தார். இரக்கமற்றவர்கள், தயை அற்றவர்கள், கொலை, கற்பழிப்பு, கொள்ளை எல்லாம் சர்வ சாதாரணம். அவன் ஒரு இளைஞன். வீரன், நியாயத்துக்காக வாழ்பவன் என்பதெல்லாம் அவர்களுக்கு அர்த்தமற்ற விவகாரங்கள்.



"ஆத்தாளே!" என்றான் அவன். கண் முன்னால் அவனது ஊர் முப்பிடாரித் தெய்வத்தின் முகம் வந்தது. "என் அம்மாவிடம் சொல்! நல்லதுக்குத் தான் நான் உயிர் துறக்கிறேன். அவளைக் காப்பாற்று" என்றான். கண்கள் கலங்கின.

ஒரு கணம் அவன் பார்வை அந்தப் பெண் மீது விழுந்தது.

அவள் கண்கள் இன்னும் அஃறிணை போல் நின்றன. சலனமில்லை. ஜீவன் இல்லை. இந்த உலக நினைப்பே இல்லாதவள் போல் நின்றாள்.

"குனி"

குனிந்தான்.

வாள் ஒன்று காற்றைச் சலனப்படுத்தி மேலே எழுந்தது.

இனி அவன் கதி...

விநாடிதான்.

கீச்சாக வந்த அந்தக் குரல் அவனை உலுக்கியது. அந்தச் சத்திரத்தையே துடிக்க வைத்தது.

அந்தப் பெண்ணின் குரல் அது!

அது தந்த அதிர்ச்சியில் சேவகன் வாளை இறக்கினான்.

எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

விட்டோபா கனத்த அடி வைத்து அவள் அருகே வந்தார். "இந்தா ஏன் கத்தினாய்? என்ன வேணும் உனக்கு?" என்றார் கடுமையாக.

"ஐயா! நான் தாசி குலம்! ஏற்கெனவே அடிமை! இந்த அடிமை ஒரு கிராமத்துப் பிரபுவிடம் வாழ்ந்தால் என்ன, அல்லது ஒரு அந்தப்புரத்து ஜமீனிடம் வாழ்ந்தால் என்ன? இவர் ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறார்" என்றாள் துணிச்சலோடு.

விட்டோபாவின் கடுகடுப்பைக் கீறி மெல்லிய புன்னகை உதயமிட்டது.

"கேட்டுக் கொள்! அதிகப்பிரசங்கி! இப்போதாவது நான் சொன்னதைச் செய்வாயா?" என்றார் விட்டோபா, வர்மனை நோக்கி.

வர்மன் நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பெண்ணின் பார்வையைச் சந்திக்க விருப்பமில்லை. இருப்பினும் அவனை மீறிப் பார்வை அதில் விழுந்தது. இந்த முறை அவளது மிருதுவான கண்ணுள் துணுக்குச் சுடர் மினுக்கியது. அவள் முகத்தில் ஒரு துடுக்கும் அலட்சியமும் பின்னி இருந்தன. அவன் மனம் சற்று வெதும்பியது. கண்களை இழுத்துத் தாழ்வாக இறக்கினான். முற்றத்தின் பாவு கற்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ஹூம் என்று சொல்லித் தலையை அசைக்க விட்டோபா,

"என்ன தம்பி ஒத்துக் கொள்கிறாயா?" என்று கேட்டார்.

சிறிது தயங்கினான் அவன். "ஒரே ஒரு கேள்வி ஐயா!" என்றான்.

"கேள்."

"உங்களிடம் தான் எத்தனையோ வீரர்கள் இருக்கிறார்களே என்னை ஏன் இதைச் செய்யச் சொல்கிறீர்கள்?"

"தம்பி!" என்று புன்னகை விரியப் பேசினார் விட்டோபா! "நீ ஒரு தமிழ் இளைஞன்! தமிழ் நன்றாகப் பேசுவாய்! இந்த வீரர்கள் தமிழ் பேசினாலும் மராட்டிய வாடை அடிக்கிறது! யாரும் இவர்களைச் சந்தேகித்து விடுவார்கள். நீ போகும் இடமெல்லாம் இங்கிலீஷ் கும்பினியார் செல்வாக்கு இருக்கிறது. இந்த வீரர்களை இனம் கண்டு விட்டால் பிடித்துக் கொள்வார்கள். அதனால் சுத்தத் தமிழ் பேசுபவனாகவும், சுத்த வீரனாகவும் உள்ள உன்னைத் தேர்ந்தெடுத்தேன். கவலை எதுவும் படாதே! கலங்காதே! இதை உன் சொந்த வீட்டுக் காரியம் போல் செய்! உன் தந்தை வீரகுலசேகரரின் விடுதலைக்கு நான் உத்தரவாதம், புறப்படு!" என்றார் அவர்.

வர்மன் தலையை மெள்ள அசைத்தான்.

* * *

திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குக் கிழக்கே இரண்டு நாழிகை தூரத்தில் உள்ள தளவாய்ச் சத்திரத்தில் சந்தா சாகிப் தண்டு இறங்கி இருந்தார். வெளியே மேற்கு நோக்கி வெகு தூரம் வரை அவரது படை மனிதர்கள் வியாபித்திருந்தார்கள்.



அங்கங்கே சிறு தளபதிகளுக்கான கூடாரங்கள் கனத்த துணியினால் வேயப்பட்டு இருந்தது.

சுற்றிலும் தென்னஞ்சோலைகளும், மாந்தோப்புகளும் நிரம்பியிருக்க, அருகில் வடக்குப்புறம் காவேரி கோடை நாள் காரணமாக மெலிந்து ஓடிக் கொண்டிருந்தது.

தளவாய்ச் சத்திரம் சற்றுப் பெரிய சத்திரம். கிணறு, தோட்டம், தொழுவம், விறகுக் கிடங்கு எல்லா வசதிகளும் சம்பிரமமாக இருந்தன. காறையினால் கட்டப்பட்ட பெரும் சுவர்கள், முகப்பில் வெகு நீளமான தாழ்வாரமும் திண்ணையும்.

விசாலமான நடையைக் கடந்தால் ஐநூறு பேர் இருக்கத்தக்க கூடம்!

கூடத்தின் கிழக்கு மேற்கு பாரிசங்களில் மும்மூன்று பெரிய அறைகள்.

இந்த இரண்டு கட்டுக் கட்டடத்தில் தினம் நூறு இலைக்கு விருந்து அளிக்கும் விஸ்தாரத்தில் ஆற்காட்டு நவாபு சந்தாசாகிப் கவலையுடன் அமர்ந்திருந்தார்.

திண்டு போட்ட மெத்தை ஆசனம்! நுனிகளின் ஜரிகை வேலைப்பாடுகள். இருபுறமும் இருவர் விசிறிக் கொண்டிருந்தார்கள்.

பொன்மயமான 'கிலட்' அணிந்து, தலைப்பாகைசூடி இடுப்பில் அரைப்பட்டை அணிந்திருந்தார் சந்தாசாகிப்.

அத்தனையிலும் முத்து அணிகள் சுடர்களாகத் தெறித்தன.

கழுத்தில் இரண்டு ஜோடி முத்துத் தாழ்வடங்கள் ஒளித்தோரணமாக இலங்கின. பாகையில் வெண்சிறகு கம்பீரமாகச் சிகரமிட்டது. பாகை விளிம்புகளில் வயிர அணிகள் கோவையாக மின்னின.

கை புஜங்களில் கூட பொன்பூண்கள் கம்பீரமாக ஜொலித்தன.

செக்கச் செவேல் என்று உடம்பு!

அதில் அவரது நீல நயனங்கள் நேர்த்தியாகச் சோபை அளித்தன.

மத்திய வயது இருக்கும் அவருக்கு. தாடியில் அங்கங்கே நரைகள் வெள்ளிக்கம்பிகளாக மின்னிக் கொண்டிருந்தன.

வரிசையாகப் பிரமுகர்கள், படைத் தலைமைகளும், அதிகாரிகளும் அமர்ந்திருந்தனர். தளபதி சேஷராவ் சற்றுக் கவலையோடு நவாப் அருகில் அமர்ந்திருந்தார்.

"ஹுஸுர்! திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் அகப்பட்டிருந்தாலும் தப்பிக்க வழி பண்ணலாம்! திருச்சிராப்பள்ளி சீமையில் அகப்பட்டது அதைவிட மோசமாக இருக்கிறதே!" என்றார்.

"நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் சேஷராவ்?" என்றார் நவாப்.

"நாம் நினைத்தபடி பிரெஞ்சுக்காரர் நமக்குப் பூரண உதவி அளிக்க வரவில்லை."

"முசியே தொத்தேல் (Monsieur d` Auteuil) ஒரு துடை நடுங்கி! அவனைப் பற்றிப் புதுச்சேரிக்கு எழுதுகிறேன்" என்றார் நவாப்.

"இங்கிலீஷ் கும்பினியார் ரகசியமாக ஏதோ செய்கிறார்கள் என்று கேள்வி! தேவனாம்பட்டணத்தில் இருந்து (Fort St David Cuddalor) படைகள் புறப்படுகின்றனவாம். திடீர்த் தாக்குதல் நம்மீது நடத்தினால் நாம் தப்பிக்க வழியில்லை. மைசூர் ராஜா, தஞ்சாவூர் ராஜா, புதுக்கோட்டைத் தொண்டைமான் எல்லோருமே எதிரி பங்கில் இருக்கிறார்கள். எல்லோரது படைகளும் குவிந்து கொண்டிருக்கின்றன. இந்த வேளையில் எல்லோருமாகச் சேர்ந்து நம்மைச் சூழ்ந்தாலும் சூழ்வார்கள். தப்பிக்க வழியில்லாமல் போய்விடும்."

நவாப் தமது கரங்களை உயர்த்தினார்.

"அவ்வளவு மோசமாகும் வரை தூப்ளே காத்திருப்பாரா? அவர் நம் பங்கில் இருக்கும் வரை கவலை வேண்டாம். ஏதாவது செய்து படை கொண்டு வந்து விடுவார். தூப்ளே துபாஷி ஆனந்தரங்கம் பிள்ளைக்கு ஏற்கெனவே கடிதாசி எழுதிவிட்டேன். நமக்கு ஆத்ம நண்பர் அவர் ஆயிற்றே!"

நவாப் அடைந்த சமாதானங்களை சேஷராவ் அடைய முடியவில்லை. மேலே தொடர்ந்தார்.



"நேற்று இரவு ஐம்பது சிப்பாய்கள் ஓடிவிட்டார்கள்!"

நவாப் சுருக்கென்ற உணர்வோடு நிமிர்ந்தார். "ஏன்? சம்பளம் பாக்கியா?" என்றார் சற்று கரகரக்கும் குரலுடன்.

"ஒரு வருஷத்துக்கும் மேல் பாக்கி!"

"பத்திரம் எழுதிக் கொடுத்தோமில்லையா?"

"அது வெறும் காகிதந்தான்! எப்போது செல்லுபடியாகும் என்று கேட்கிறார்கள்."

சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் பின்னர் தருவதாக வாக்களித்துப் பத்திரங்கள் எழுதிச் சிப்பாய்களுக்குக் கொடுத்திருந்தார் நவாப். அதை இப்போது நினைவு கூர்ந்தார்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டதற்கு முகம் கொஞ்சம் கறுத்தது. மேலே அவர் பேச முடியாமல் தவித்தது சபையில் பெரிய நிசப்தத்தை உண்டு பண்ணியது. நவாப் நிதானமாக சேஷராவைப் பார்த்தார். "சேஷராவ்! இன்னும் நிறைய சிப்பாய்கள் ஓடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"அது தான் எனக்குப் பயமாக இருக்கிறது!"

நவாப் தமது இடுப்பில் கட்டியிருந்த பட்டையை வருடினார். விரல்கள் தத்தளித்து அவர் சஞ்சலத்தைக் காட்டியது.

"ஹுஸுர்!" என்றார் ஒரு துணைத் தளபதி. "உதவிக்கு மற்றவர் படை வந்தாலாவது சிப்பாய்கள் தெம்பு அடைவார்கள். யாரும் வராத நிலையில், பிரெஞ்சுக் காரரும் நழுவி விடும் நிலையில், பணம் ஒன்று தான் சிப்பாய்களைச் சமாதானப்படுத்தும்."

"பணத்திற்கு வழி என்ன?" என்று கேட்டார் நவாப். யாரும் மறுமொழி கூறவில்லை. அவரே மேலும் தொடர்ந்தார். "வாங்க வேண்டிய இடத்தில் எல்லாம் வாங்கியாகிவிட்டது. இன்னும் பலருக்கு எழுதவிருக்கிறேன். சீக்கிரம் வரும்!"

"துபாஷி ஆனந்தரங்கத்துக்கு எழுதினால் என்ன?"

"அதுவும் எழுதியாயிற்று! இந்தச் சண்டையில் ஜயித்தால் அவர் விரும்பிய கிராமங்களை அவருக்கு அளிப்பதாகக் கூறியிருக்கிறேன்"

"அவரிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லையே!"

"இல்லை! தூப்ளேயிடமிருந்தும் வரவில்லை!"

"ஹுஸுர்!" என்று எழுந்தார் துணைத் தளபதி. "பரங்கியரை நம்புவது மோசம். அது பிரெஞ்சுக்காரராக இருந்தாலும் சரி, இங்கிலீஷ்காரராக இருந்தாலும் சரி!"

"அதை நானும் ஆமோதிக்கிறேன். அவர்களுக்கு நம் நாட்டில் இடம் கொடுக்கக் கூடாது! நம்மையே துரத்திவிடுவார்கள்!" என்றார் மற்றொரு உபதளபதி!

"பொறுங்கள்!" என்றார் நவாப்! "தற்சமயம் நடக்க வேண்டியதைச் சொல்லுங்கள்! எதிர்காலத்தில் நடந்து கொள்ள வேண்டிய உத்திகளைப் பின்னர் கவனித்துக் கொள்ளலாம்! இப்போது நம் எதிரிக்கு இங்கிலீஷ் காரர் உதவும் போது, நாம் பிரெஞ்சுக்காரரைத் துணை கொள்வதில் தப்பிதம் எதுவுமில்லை. ஆனால்..."

குரலை உயர்த்தினார் நவாப்.

"இந்தத் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய எல்லாச் சீமைகளும் எம் கையில் வந்தால்... நிச்சயம் வரும், ஆண்டவன் அருள் கொடுப்பார்... இந்த வெள்ளைக்காரர் அத்தனை பேரையும் இந்த நாட்டைவிட்டே துரத்துவேன்! இது நிச்சயம்!" என்று கர்ஜித்தார் அவர்.

வாசலில் ஏதோ சலசலப்பு ஏற்பட ஒரு சேவகர் உள்ளே இழைப்புடன் ஓடி வந்தார். எல்லோரும் அவனை ஆவலோடு பார்த்தார்கள்.

## 7. பழிவாங்க வேண்டும்

உள்ளே வந்த சேவகன், "குமாரத் தேவர் வந்திருக்கிறார்!" என்று சொல்ல, "உடனே வரச் சொல்" என்று சந்தா சாகிப் மறுமொழி கூறிவிட்டு எழுந்தார்.



அவருடன் எல்லோரும் எழுந்தார்கள். குமாரத் தேவர் கம்பீர ஆகிருதியுடன் உள்ளே நுழைந்தார். நெடிய உயரமும், நெடிய மீசையும், இரும்புத் தோளுமாக இருந்தார் அந்த இளைஞர் சிங்கம்.

சந்தாசாகிப் இரண்டடி முன்னால் வைத்து இறுகத் தழுவிக் கொண்டார்.

எல்லோரும் அமர்ந்தார்கள்.

"நல்ல இக்கட்டான நேரத்தில் கைக் கொடுக்க வந்தீர், குமாரத் தேவரே! சேதுபதிகள் சவுக்கியமா?" என்றார்.

"ராமநாதர் அருளால் சவுக்கியம்!" என்றார் குமாரத்தேவர்.

குமாரத் தேவர் தெற்கே நெல்லைச் சீமையைச் சேர்ந்தவர். பாளையக்காரர்களிடம் வேலை பார்த்துப் படிப்படியாக உயர்ந்தவர். இப்போது இராமநாதபுரம் அரசர் விஜய ரகுநாத சேதுபதியிடம் முக்கிய தளகர்த்தர்களுள் ஒருவராக வேலை பார்ப்பவர்.

"கடிதம் கிடைத்ததும் சேதுபதிகள் அனுப்பித்தார்கள். வழியெல்லாம் ஆபத்துக்கள். நாடு ரொம்பக் கெட்டு விட்டது பிரபுவே!" என்று கூறினார் குமாரத் தேவர்.

"படை எவ்வளவு கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார் சந்தா சாகிப்.

"ஆயிரம் சிப்பாய்கள் வந்திருக்கிறார்கள்." என்றார் குமாரன்.

நவாபுக்கு முகம் மலரவில்லை. 575121

"இன்னும் அனுப்புவார் பிரபு! கவலை வேண்டாம்!" என்றார் குமாரன் தொடர்ந்து. 894.8113 SRI

"அனுப்பட்டும்! ஆண்டவன் கிருபை இருந்தால் வரட்டும்! என் கனவு கொஞ்சம் சிதைந்து வருகிறது குமாரதேவரே!" என்றார் சந்தா சாகிப் பெருமூச்சுடன்.

"ஏன் பிரபு?! என்றார் குமாரன்.

"திருச்சிராப்பள்ளியை முற்றுகை இட்டேன். முகம்மதலி இதற்குள் படிந்திருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டம்! என் நிலை மாறிவிட்டது."

CPL575121

"என்ன காரணம் பிரபு?"

"இங்கிலீஷ் கும்பினி படை அனுப்பி இருக்கிறது. தஞ்சை அரசரும், புதுக்கோட்டைத் தொண்டைமானும் படை அனுப்பியிருக்கிறார்கள். எல்லோருமே எதிரிக்கு உதவி! இவர்கள் மூவரும் எம்படையின் ஜீவாதாரத் தொடர்புகளை வெட்டி விடுவார்கள் போலிருந்தது. உணவுக்கோ கஷ்டம் வந்து விட்டது. முற்றுகையை விட்டு விட்டோம். இங்கே தங்கிக் கொண்டு பயம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் எத்தனை நாள் செல்லும் என்று தெரியவில்லை."

"உங்கள் உதவிக்கு வந்த பிரெஞ்சுக்காரர்கள் எங்கே?"

"அது ஒரு ஏமாற்றம் குமாரத் தேவா! பிரெஞ்சுத் தலைவன் எதிரிக்கு பலம் சேருவதைப் பார்த்துக் காவேரியைத் தாண்டி மறுகரை போய்விட்டான்!"

"ஏன் பயப்படுகிறான்?"

"விடு அவர்களுக்குத்தான் வெளிச்சம்! இதைப் பற்றி தூப்ளேவுக்குக் கடுமையான கடிதம் எழுதியிருக்கிறேன்."

குமாரதேவன் சற்று ஆக்ரோஷத்துடன் எழுந்தார்!

"நவாப் அவர்களே! தளபதிப் பெரியவர்களே! நான் சொல்வதை நீங்கள் எல்லோரும் செவி மடுத்துக் கேட்க வேண்டும். நாட்டில் இப்போது வந்துள்ள அபாயம் ஆர்க்காட்டு சுபாவுக்கு! நமது பிரபுதான் நவாபா, அல்லது முகம்மதலிதான் நவாபா என்பது பற்றி அல்ல. இந்த இரண்டு பேர் பூசலில் அத்தனை சிற்றரசர்களும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் சேர்வது கூட ஆபத்து அல்ல! நம்முடைய தேசத்து விஷயத்தில் வெள்ளைக்காரன் புகுவது தான் ஆபத்து! இதை நாம் உணர்ந்தால் தான் கதி மோட்சம்! என்னுடைய சொந்தமான எண்ணம்!" என்று உணர்ச்சித் தளதளப்புடன் முடித்தார்.

"தளபதி சொல்வது முற்றிலும் சரி. பரங்கிகள் துரோகிகள். விரும்பியபோது விரும்பிய இடங்களில் சேருகிறார்கள். தங்களுக்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்கிறார்கள். இப்படியே விட்டு வைத்தால் நம்மையே விழுங்கி விடுவார்கள் ஹுஸூர்!"



என்று கூறினார் ஆலம்கான்! சந்தாசாகிப்பின் தளகர்த்தர் அவர்.

நவாப் கை அமர்த்தினார். "நான் தான் சொல்லிவிட்டேனே! நம் ஆர்க்காடு சுபாவுக்குள் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நத்தம், மதுரை ஆகிய எல்லாச் சீமைகளும் வந்துவிட்டால் நிச்சயம் இந்தப் பரங்கியரை ஒரு ஆட்டு ஆட்டுவேன்!" என்றார் அவர்.

"அது சீக்கிரம் நடக்க வேண்டும்!" என்றார் ஒரு அமுல்தார்.

"அதற்குத் தான் இந்தத் திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க நினைக்கிறோம். இது விழுந்தால் மற்ற பொடி ராஜ்யங்கள் அத்தனையும் வீழ்ந்து விடும்!" என்றார் சந்தாசாகிப்.

"சரி! இப்போது நடப்பதைக் கவனிப்போம்!" என்றார் சேஷராவ்.

"குமாரதேவரே! இப்போதைக்கு உடனே ஒரே ஒரு உதவி செய்யுங்கள்!" என்றார் சந்தாசாகிப்!

"என்ன செய்ய வேண்டும்?" என்றார் குமாரதேவர்.

"எம் படையில் உள்ள சிப்பாய்கள் ஓட முற்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட காலம் சம்பளம் கொடுக்கவில்லை. அவர்களை உற்சாகப்படுத்த முடியுமா? நீங்கள் தான் அதற்குத் தகுதியானவர்!" என்றார் நவாப்.

"அவர்கள் ஒத்துழைத்தால் முற்றுகையைத் தொடரலாமா?" என்றார் குமாரதேவன்.

"நிச்சயமாக" என்றார் சந்தாசாகிப்.

* * *

தனவணிகர் விட்டோபா உற்சாக வார்த்தைகள் சொல்லி வழியனுப்ப, வர்மனது கோஷ்டி திருச்சிராப்பள்ளியைத் தவிர்த்து, மேற்கே நாலைந்து காதத்தில் காவிரியைக் கடந்து, அங்கங்கே வழியை விசாரித்துக் காஞ்சிபுரத்தைக் குறியாக வைத்துப் போய் கொண்டிருந்தது.

மராட்டியர்களில் ஒரு வீரன் மட்டும் சாதாரண உடையில் குதிரை மீது வெகு தூரம் முன்னால் போனான்.

ஆபத்து ஏற்பட்டால் உடனே அவன் பின்னால் வரும் கோஷ்டிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு.

இரண்டு பல்லக்குகளும், ஒரு உபரிப் பல்லக்கும், சாதாரண உடை அணிந்து மூன்று குதிரை வீரர்களும், ஒரு உபரிக் குதிரையும், ஊழியர்களும் சேர்ந்த கோஷ்டி அது.

அங்கங்கு சாலையை விட்டுத் தொலைவில் தங்கி உணவு சமைத்து உண்டு விட்டு, இளைப்பாறிப் பிறகு மீண்டும் பயணத்தில் புறப்பட்டார்கள்.

ஒவ்வொரு இடத்தில் தங்கும் போதும், ஒவ்வொரு சாலையில் போகும் போதும் புதுப்புது விஷயங்களைக் கற்றுக் கொண்டான் வர்மன்.

அவன் செய்யும் காரியம் சரியானதா என்று அவ்வப்போது மனம் நினைப்பது உண்டு.

தந்தையின் விடுதலை தேடித் தானே இந்தக் காரியம் செய்கிறோம். இதில் தப்பில்லை என்று அவன் மனம் சமாதானம் சொல்லிக் கொள்ளும்.

இருந்தாலும் அவன் உள் மனசில் மற்றொரு காரணமும் மறைமுகமாகச் சிலிர்த்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும்.

அந்த இளம்பெண் சிந்து தான் அந்தக் காரணம்.

அவள் மீது எப்படி இவ்வளவு பற்று ஏற்பட்டது என்று தெரியவில்லை.

அவளது ஒரு பார்வை மட்டும் ஏழு உலகத்தைக் கலைப்பதாய் இருந்தது.

என்ன தீட்சண்யம் அதில்! தீட்டிய கத்தி போல் திரும்பினால் கூட மின்னுகிறது.

குறுக்கில் வீசினால் காற்று துண்டாகிறது.

நேராக விறைத்தால் அத்தனை கடினங்களும் துளை ஆகிறது.

தேவதாசி என்றாள்.

மனத்தை அவள் வசம் செல்லாமல் இழுத்து வைத்தும் மசிய மாட்டேன் என்கிறது.



அதுவும் இந்த இரண்டு நாள் பயணத்தில் எத்தனை முறை ஆவலோடு அவள் பல்லக்கைப் பார்த்திருக்கிறான். அதன் திரை விலகுமா என்று எத்தனை தவம்.

ஆனால்...

திரை திறக்கவே இல்லை.

அது மட்டுமல்ல, தண்டு இறங்கினால் கூட அவள் அவனை எந்தக் காரணத்திற்கும் திரும்பிப் பார்த்ததில்லை. எது தேவையானாலும் தாதிப் பெண்ணிடம் தான் சொன்னாள்.

தன்னை அதிகம் வெளியில் காட்டிக் கொண்டதும் இல்லை.

நடந்தால் கூட சீக்கிரம் மறைந்து விடுவாள். ஒரு துளி கூட மேலே நிமிர்வதில்லை.

இந்தச் சூழ்நிலைகளில் அடிக்கடி அவன் பெருமூச்சு தான் விட வேண்டி வந்தது.

ஏற்கெனவே பார்த்த மூன்றே மூன்று பார்வைகளை மட்டும் வைத்து மனத்தில் பரவசக் கூடுகளைக் கட்ட வேண்டி வந்தது.

மூன்றாம் நாள் தான் அந்தக் குக்கிராமத்தைத் தாண்டியதும், மாலை ஒளி மேய்ந்த ஒரு தடாகமும், அருகில் பச்சென்று இளமை வீசிக் கொண்டிருந்த தோப்புகளும் அவர்களைக் கவர்ந்தன.

இரவு அங்கே தண்டு இறங்கலாம் என்று நினைத்துச் சோலைக்குள் போன போது, கிளை ஒன்று தட்டியதில் சிந்துவின் பல்லக்குக் குப்புறச் சாய்ந்தது.

'ஐயோ' என்று பலபேர் கூக்குரல் எழுப்ப, வர்மன் விருட்டென்று குதிரையைத் திருப்பி வந்த போது,

அந்தப் பெண் பல்லக்குத் தனுசுவின் சிக்கலிலிருந்து புடவையைச் சுழற்றிப் புழுதியைத் தட்டி மெல் நிமிர்ந்திருந்தாள்.

கண்கள் அவனைக் கணமே நோக்கின.

முகத்தில் ஒரு இறுக்கம் தோன்ற, பார்வையை உடனே கீழிறக்கினாள்.

"அடிபட்டதா?" என்று ஆதுரத்துடன் கேட்டான் அவன்.

"ஊஹூம்" என்றாள் அவள்.

பிறகு தன் தலைப்புகளை இழுத்து வாரி, அந்த இடத்திலிருந்து அகன்று விட்டாள்.

பல்லக்குத் தூக்கிகளைத் திட்டி விட்டு, வர்மன் தனியாக ஒரு மாமரத்தின் அடியில் போய் மனம் வெதும்பி அமர்ந்து கொண்டான்.

மனத்தில் எங்கேயோ ஊமை வலியாய் வலித்தது.

அவள் நடந்த விதத்தில் அவன் கற்பனை எல்லாம் சற்று அதிர்ச்சியுடன் குலுங்கி இருந்தது.

இரவு சமையல் செய்து அவனுக்கு வட்டில் வந்தாலும் அவன் உண்ணவில்லை.

சற்று ஒதுக்கத்தில் படுத்திருந்த போது மனம் நொந்து புண்ணாகியிருப்பது தெரிந்தது.

ஏன் அவளைச் சந்தித்தோம். ஏன் பற்றுதலை வளர்த்தோம் என்று தோன்றியது அவனுக்கு.

அநேகமாக எல்லோரும் சயனித்துவிட்ட நேரம். மெல்லிய இரவுக் காற்று மாந்தளிர் வாடையுடன் வீசியது.

தடாகத்தின் தூரத்து அலைவரிசைகள் பாதி நிலாவில் வெள்ளிச் செதில்கள் போல் மின்னின.

ஏதோ சப்தம் கேட்கத் திடீரென்று எழுந்தான் அவன்.

தாதிப் பெண் அவனை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள்.

அருகில் வந்ததும், "ஐயா வாருங்கள்! ஆபத்து!" என்றாள்.

துரிதமாய்ப் போன போது, சிந்து தங்கிய கூடாரத்துக்கு வெளிப்புறம் குழப்பம் நடந்து முடிந்திருப்பது தெரிந்தது.

தூசி கிளம்பிய நெடி எங்கும் வீசியது.

"என்ன?" என்று வினவி, அருகில் போனதும் அந்தப் பெண் சிந்து கலைந்து போய் அமர்ந்திருப்பது தெரிந்தது.

சற்று எட்டத்தில் ஒரு உடல் சலனமில்லாமல் கிடந்தது.

"இதென்ன?" என்று வினவினான் அவன் பரபரப்போடு.

சிந்து மேலே நிமிர்ந்தாள்.



"ஐயா! நாம் போவது எங்கே தெரியுமா? இங்கே ஒரு சதித் திட்டம் உருவாகி இருக்கிறது!" என்றாள் ஆத்திரத்துடன்.

அவள் கைகளில் ரத்தம் மெழுகி இருக்க, கீழே ஒரு கத்தி ரத்தத்தில் குளித்து விழுந்து கிடந்தது.

"நான் பழி வாங்க வேண்டும், பழி வாங்க வேண்டும்" என்று உன்மத்தமாகக் கூறினாள் அவள்.

வர்மன் திகைத்து நின்றான்.

## 8. இரகசிய உடன்படிக்கைக் குழு

வர்மன் அந்தத் துணிக் கூடாரத்துள் வந்ததிலிருந்து அடுத்த சில நாழிகைகளில் காரியம் யாவும் கண்கட்டு வித்தை போல் நடந்தன.

அவன் எப்படி இயங்கினான் என்பது ஆச்சரியமாக இருந்தது.

இது போன்ற ரத்தக் களறிகளில் அவன் இறங்கியதில்லை.

ஒரு பெண்ணும் இதில் சம பொறுப்போடு ஈடுபடுவாள் என்பது தெரியாது.

இருவரும் சேர்ந்து ஆறு பேர்களை மேல் உலகம் அனுப்பியது ஒரு விதத்தில் சங்கடமாகக் கூட இருந்தது.

ஐந்து வீரர்கள், ஒரு தாதிப் பெண் ஆகிய ஆறு சடலங்களைத் தடாகத்தில் ஓசைப் படாமல் நழுவ விட்ட பிறகு -

ஆசுவாசமாகி அவன் அந்த மேட்டில் அமர்ந்தான்.

நள்ளிரவு தாண்டியிருக்கும். எங்கும் சலனம் இல்லாத நிசப்தம் பனிபோல் படர்ந்திருந்தது. உலகம் அனைத்தும்

ஜடம் ஆகிவிட்ட தோற்றம். மூச்சை இழுத்துவிட்டு, வெற்றுப் பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"அரிய உதவி செய்தீர்கள்!" என்ற குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தான். சற்று அப்பால் உள்ள கல்லில் சிந்து இளைப்போடு அமர்ந்தாள்.

பின்னிரவுக்கு உண்டான ஒரு மினுமினுப்பு எங்கும் உதிர்ந்திருந்தது.

சொப்பனத்துக்குள் இருந்து பார்ப்பது போல் ஒரு பிரமை தட்டியது.

"ஏன் இதைச் செய்தீர்கள் அம்மணி! எனக்கு வேதனையாக இருக்கிறதே!" என்றான் வர்மன்.

"வீரரே! உங்களுக்கு உலக நடப்புத் தெரியுமா?" என்றாள் சிந்து அழுத்தமாக.

"நிச்சயம் தெரியாது. தெரிந்திருந்தால் இப்போது நடந்த காரியத்தில் இறங்கியிருக்க மாட்டேனோ என்னவோ!"

"இல்லை, நிறைய இறங்குவீர்கள்!"

"அப்படியா?"

"ஆமாம். தென்பாண்டி நீங்கள்! பாளையக்காரர்களின் கோட்டை! வடக்கில் உள்ள எங்களைப் போல யுத்தங்கள், கலவரங்கள், கொந்தளிப்புகள் அதிகம் பார்த்திருக்க மாட்டீர்கள்!"

"எங்களுக்கும் சண்டை பூசல் உண்டு!" என்றான் வர்மன் ஆத்திரத்தோடு. "ஆனால் இந்த மாதிரி அநியாயத்துக்கு..."

"அநியாயம் என்று எப்படித் தெரியும்?!

"நீங்கள் சொன்னீர்கள்! நான் கொன்றேன்."

"நான் சொன்னால் செய்யலாமா?"

"இல்லாவிட்டால் உங்களுக்கு ஆபத்து என்று எண்ணினேன்."

சிந்து வெறுமையாகப் பார்த்தாள். ஒரு முறுவலோ, புன்னகையோ முகத்தில் வரவில்லை.

"ஐயா வீரரே! நீங்கள் பாளையக்காரர்களாயிற்றே? யாருக்கு வரி கட்டுகிறீர்கள்?"



"ஏன், மதுரை நாயக்கர்களுக்கு?"

"நாயக்கர்கள் யாருக்குக் கப்பம் கட்டுகிறார்களா?"

அவனிடம் மறுமொழி இல்லை.

"கேட்டுக் கொள்ளுங்கள்! நாயக்கர்கள் ஆர்க்காட்டு நவாபுக்குக் கப்பம் கட்டுகிறார்கள்!" என்றாள் சிந்து.

"அப்படியா?"

"ஆமாம்! ஆர்க்காடு நவாபு நைஜாமுக்குக் கப்பம் கட்டுகிறார்!"

"நைஜாம்!"

"டில்லி முகலாய பாதுஷாவுக்கு!"

"ஓ!"

"நாம் எல்லோருமே டில்லி பாதுஷா ஆட்சிக்கு உட்பட்டவர்கள்!"

சிரித்தான் வர்மன்.

"நாங்கள் இல்லை" என்றான் அவசரமாக.

"நடைமுறையில் இல்லாமல் இருக்கலாம். ஒரு நாயக்கரோ, ஒரு நவாபோ ஒரு நைஜாமோ பலவீனம் காரணமாக உங்களை விட்டு வைத்திருக்கலாம். ஆனால் பூசல் என்று வந்தால் உங்களை ஒடுக்கி விடுவார்கள்!"

"நாங்கள் நாயக்கர்களுக்கு உடன்பட்டவர்கள். வேறு எந்த முஸ்லீம் அரசருக்கும் உடன் படோம்.!

"உன்னதப் பற்று! அதற்காகவே நாங்கள் பாளையக்காரர்களை மதிக்கிறோம். ஆனால் இப்போது நாயக்க வம்சத்தார் மதுரையை ஆளவில்லை தெரியுமா?"

"ஆளாவிட்டால் நாங்கள் கப்பம் செலுத்த மாட்டோமே!"

"பலரும் செலுத்துவதில்லை தெரியும்! ஆனால் நாயக்கர்கள் என்ன ஆனார்கள் தெரியுமா?"

"தெரியாது!"

"அதனால் தான் உங்களை வெகுளி என்றேன்!"

"ஓகோ! தெரிய வேண்டுமோ? மங்கம்மாவைத் தெரியும். மீனாட்சியைத் தெரியும்."

"இரண்டு பேருமே இறந்து விட்டார்கள்."

"தெரியும்."

"கடைசியாக மதுரையை ஆண்ட நாயக்க வம்சத்தவர் ராணி மீனாட்சிதான்."

"ஓ!"

"அவர் இறந்து பத்து வருஷம் ஆகிறது. நயவஞ்சகமாகச் சிறை வைத்துக் கொல்லப்பட்டாள் அவள்."

சிந்து ஆத்திரத்தோடு சொல்ல, அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"யார் சிறை வைத்தது."

"இந்த சந்தா சாகிப்."

"ஆர்க்காடு நவாபா?"

"ஆமாம்! ஒரு கோடி ரூபாய் மீனாட்சியிடமிருந்து வாங்கி, ராணிக்கு உதவி செய்கிறேன் என்று சொன்னார். சத்தியம் செய்தார். ஆனால் வஞ்சகமாக, மீனாட்சியின் படைகளையெல்லாம் தம் கைக்குக் கொண்டு வந்து விட்டு அவளைச் சிறையில் தள்ளி விட்டார்!"

"ஒரு பெண்மணியையா?"

"பெண்மணி மட்டுமல்ல! நாயக்க வம்சத்துக் குல விளக்கு அவள்! கணவர் இறந்தவுடன் ராஜ்யத்தை ஏற்று, பல சூழ்ச்சி, தந்திரங்களுக்குச் சவால் கொடுத்துச் சமாளித்து வந்திருக்கிறாள் அவள்! அந்த மகாராணியை சந்தா சாகிப் வஞ்சகமாகச் சிறையில் தள்ளிவிட்டார்!"

"அப்புறம் என்ன ஆயிற்று?"

"ராணிக்கு அது தரிக்குமா? வஞ்சிக்கப்பட்டோமே என்று மனம் நொந்தாள். விஷம் அருந்தி இறந்து விட்டாள்."

"வருத்தமாக இருக்கிறதே!"

"விஷம் அவராக அருந்தினாரா அல்லது வலுக் கட்டாயமாகக் கொடுக்கப்பட்டதா என்பது பெரிய கேள்வி. ஏனெனில் மீனாட்சி சிறையில் இருந்தால் நிச்சயம் உங்கள் பாளையக்காரர்களும், மறவர்களும் நத்தம் கள்ளர்களும் கொந்தளித்து எழுந்து மீனாட்சியை மீட்டு, திரும்பவும்



ராணியாக்கி விடுவீர்கள் என்று நவாப் நிச்சயம் பயப்பட்டிருப்பார். அதன் காரணமாக அவர் என்ன வேண்டுமானாலும்

செய்திருக்கலாம்."

"சரி! ஏதோ விதமாக விஷம் அருந்தும் நிலை அவளுக்கு ஏற்பட்டது. இறந்து விட்டாள்! இதை ஏன் இப்போது சொல்கிறீர்கள்?"

"அந்த மரணத்துக்குப் பழி வாங்க வேண்டும்."

வார்த்தைகளைக் கனமாக அழுத்திச் சொல்லிக் கொண்டு சிந்து எழுந்து நின்றாள்.

உடம்பு படபடக்க அருகில் நெருங்கிய மாமரக் கிளை ஒன்றைப் பற்றிக் கொண்டாள்.

"என்னது? பழியா? இப்போதா?"

"ஆமாம்! பழிக்குப் பழி!" என்று சீறினாள் சிந்து.

"என்ன செய்ய வேண்டும்?"

"சந்தா சாகிப்பைக் கொல்ல வேண்டும்."

வர்மன் நிமிர்ந்து பார்த்தான்.

"ஆமாம். அபலை மீனாட்சியைக் கொன்றவரை நாம் கொல்ல வேண்டும்."

சிந்துவைக் கவனித்ததில் வழக்கமாக அவள் தனது உணர்ச்சிகளை மறைக்கக் கூடியவள் என்று தெரிந்தது. ஆனால் இப்போது அவளையும் மீறி அந்த வார்த்தைகள் பருமனான கனத்தோடு வெளி வீழ்ந்தன.

கண்களில் உணர்ச்சி எழ, வர்மன் எழுந்து நின்றான்.

"அது தான் உங்கள் குறிக்கோளா?"

"அது மட்டுமல்ல! நாயக்கர் ஆட்சி மீண்டும் வர வேண்டும். இது என் குறிக்கோள் மட்டுமல்ல வீரரே! பெரிய பாளையக்காரர்கள், மறவர்கள், நத்தம் ஆட்சியாளர்கள் எல்லோருடைய விருப்பமும் இது. இதற்காக ஒரு ரகசிய உடன்படிக்கை குழு ஆரம்பித்திருக்கிறார்கள்."

"எல்லோரும் சேர்ந்தா?"

"ஆமாம். பாளையக்காரர்களில் ஐம்பத்திரண்டு பேர், மறவர், கள்ளர் குலத் தலைவர்கள் எல்லோருமே இதில் இருக்கிறார்கள். ரத்தத்தைச் சிந்திக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். திரும்பவும் நாயக்கர் ராஜ்யத்தைக் கொண்டு வருவது என்று!"

"நாயக்கர் வம்சத்தில் யாராவது இருக்கிறார்களா?"

"விஜயகுமாரன் இருக்கிறார்!"

"யார் அவர்?"

"மீனாட்சி ராணியின் சுவீகாரப் புத்திரர்!"

"எங்கே இருக்கிறார்?"

"சிவகங்கைக் காடுகளில்!"

"அப்படி ஒரு தலை எழுத்தா?"

"அந்த எழுத்தைத்தான் மாற்ற வேண்டும் பாளையக்காரரே!"

வர்மன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

அவள் முகம் வெண்கலமாக இறுகி, கண்களில் உக்கிரம் கூடியிருந்தது.

"அப்படியானால்...." என்று இழுத்தான் அவன். "தாங்கள் யார் அம்மணி?"

ஒரு கணம் தள்ளியே அவள் மறுமொழி வந்தது.

"நான் ஒரு தேவதாசி!" நிறுத்தினாள் அவள்.

வர்மன் அவளைக் கூர்மையாக நோக்கினான்.

"மீனாட்சியின் அந்தப்புரத்தில் என் தாயார் இருந்தாள். நானும் இருந்தேன்."

"உங்களுக்கு ஏன் இதில் ஆர்வம்?"

"எனக்கா? நான் ஒரு மானமுள்ள பிரஜை. சொந்த ராஜ்யத்தையும் சொந்த ராஜ குடும்பத்தையும் கண்ணாக மதிப்பவள். உடன்படிக்கைக் குழுவில் நானும் ஒரு கையெழுத்துக்காரி."

"நல்லது" என்றான் அவன். மேலே பேசவில்லை.

சிறிது நேரம் மௌனம்.



பிறகு சிந்து திரும்பி, "நீங்கள் நாயக்கர் வம்சத்தைத் தானே விரும்புகிறீர்கள்?" என்றாள்.

"நான் பாளையக்காரன்! என் விசுவாச ரத்தம் அப்படித்தான் நினைக்கும்!"

"அப்படியானால் சபதம் எடுப்பீர்களா?"

"என்ன சபதம்?"

"இந்தத் தென்னாடு முழுவதிலும் நாயக்கர் வம்சத்தார் ஆட்சி புரிய வேண்டும். அதற்காக நான் உயிருள்ள வரை போராடுவேன். எந்தத் தியாகம் வேண்டுமானாலும் செய்வேன்."

"இது தான் சபதமா?"

"ஆமாம்!"

வர்மன் அந்த வார்த்தைகளை நினைவில் பதித்தான்.

பிறகு மெதுவாக, ஒவ்வொரு வாக்கியமாகக் கூறி, "செந்திலாண்டவர் மீது சத்தியம்" என்று கூறிக் கையில் அடித்துக் கொண்டான்.

பிறகு நிமிர்ந்த போது அவள் கண்கள் சிறிது பனித்திருந்தன.

"சரி! இன்னும் அரை ஜாமத்தில் புறப்படுகிறோம்!" என்றாள்.

"எங்கே?"

"வடக்கே!"

"ஏன்?"

"நமக்கு உதவி வேண்டாமா?"

"திருப்பதிக்கா? பணம் பெறுவதற்கா?"

அவள் மறுமொழி கூறவில்லை. அதற்குள் அந்தப் பெரும் ஓசைகள் அங்கிருந்த நிசப்தத்தைக் கலைத்தன.

தாதி ஒருத்தி ஓடி வந்து கொண்டிருந்தாள்.

# 9. சொப்பனத்தில் இரு சுந்தரிகள்

தாதி ஏதோ படை ஒன்று சாலை வழியே அந்த ராத்திரியில் போகிறதென்று சொல்ல, சிந்து அரைக்கணமும் தங்காமல், வர்மனுக்கு சைகை காட்டி, மாமரத்து அடிவாரங்களின் வழியே தோப்பு எல்லை வரை சென்று அங்குள்ள மண் சுவரின் பதவலில் நின்று சாலையைக் கவனித்தாள்.

ஐநாறு போலும் சிப்பாய்கள், அந்த இருட்டு வேளையில் அதிவிரைவாகவும் சத்தம் இன்றியும் போவதைப் பார்த்து, "இது ஏதோ ரகசியத் தாக்குதலுக்குப் போகிறது, தொப்பிகளைப் பார்த்தால், இங்கிலீஷ்காரர்கள் என்று தோன்றுகிறது. இந்தப் பாட்டையில் போவதால் ஆர்க்காடு நோக்கிப் போகலாம்" என்று கூறினாள்.

பிறகு எல்லோரும் உறங்குவதற்காகத் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

விடிய ஒரு ஜாமம் இருக்கும் போது அந்தத் தங்குமிடம் மீண்டும் சுறுசுறுப்பை அடைந்தது. வேலைக்காரர்கள், சமையல்காரர்கள், துணி வெளுப்பவர், பல்லக்குத் தூக்குபவர், குதிரை பராமரிப்பவர், இன்னும் வகை வகை ஊழியர்களும் எழுந்து ஆயத்தமாக நிற்க,

சிந்து 'போகலாம்' என்று உத்தரவிட்டதும் நடக்கத் தொடங்கினார்கள்.

சிறிது தூரம் போன உடனே கோஷ்டியை நிறுத்தி, படை ஒன்று முன்னே சென்றிருப்பதால் அந்த மார்க்கம் சரியானதில்லை என்று சொல்லி,

"போளூர், வேலூர், சித்தூர் தடத்தில் போய், பொம்மராஜு பாளையத்தை அடைவதே சரி" என்று கூறினாள்.

கோஷ்டி வேலூர் தடத்தை எடுத்தது.

மூன்று நாளில் போளூர், வேலூர்களைக் கடந்து பாலாற்றையும் கடந்து நாகரிப்பேட்டை வழியே ஐந்தாம்



நாள் காலை சித்தூரை அடைந்தார்கள். பிறகு பொய்நி நதியைக் கடந்து அன்று பிற்பகலில் பொம்மராஜுபாளையத்தை அணுகினார்கள்.

எங்கும் மலை சூழ்ந்த ஒரு அழகில் ஊர் தட்பத்தோடு ஆரோக்கியமாக இருந்தது.

கார்வேட் ராஜா என்று அழைக்கப்படும் ஜமீன்தாரின் அரண்மனையை அடைந்ததுதான் தாமதம். ராஜாவே தமது பிரதானிகளுடன் எழுந்து வாசல் வரை வந்து சிந்துவையும் அவள் பரிவாரத்தையும் வரவேற்றார்.

கார்வேட் ராஜாவுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். ஜரிகைத் தலைப்பாகை கட்டி, மேலே பூ வேலை செய்த அங்கியை அணிந்து, இரண்டு முத்துத் தாழ்வடங்களோடு நடந்து வந்தார்.

"வாருங்கள்! வாருங்கள்! தன்யர்கள் ஆனோம்" என்று சொல்லி, அந்த இரண்டடுக்கு மாளிகையின் அத்தானி மண்டபத்துக்கு அழைத்துப் போய், சிறிது நேரம் உபசார வார்த்தைகள் பேசி இருந்து விட்டு,

பக்கத்திலிருந்த வெங்கடம்மா நிவாசம் என்ற விருந்தினர் மாளிகையில் அவர்களைக் கொண்டு விட்டு, சிரம பரிகாரம் செய்து கொள்ளும்படி கூறிச் சென்றார்.

மாலையில் தமது அந்தரங்க அறைக்குச் சிந்துவையும், வர்மனையும் அழைத்து வரச் சொல்லி,

"சிந்து தேவிகளே! இப்படி திடுதிப்பென்று முன் அறிவிப்பு இல்லாது வந்து விட்டீர்களே! அறிந்திருந்தால் ராஜ உபசாரம் அளித்திருப்போமே!" என்று கூறினார் ராஜா.

"பொறுக்க வேண்டும் பிரபு! இங்கே நான் வந்திருப்பது ரகசிய உடன்படிக்கை குழுவின் பிரதிநிதியாக அல்ல! வெறும் அடிமைப் பெண்ணாக!" என்றாள்.

"இதென்ன கூத்து?" என்று ராஜா பாதி நகைப்போடு கேட்க.

மராட்டியரிடம் சிந்து சிக்கிக் கொண்ட விதத்தை விவரமாகக் கூறினாள் அவள்.

"என்ன! முராரி ராவ் படையிடமா?" என்றார் ராஜா.

"இல்லை! விட்டோபா வைத்திருந்த படை!" என்றாள் சிந்து.

மராட்டியப் படையில் கீழ்மட்ட சரகத்தில் உள்ள வீரர்கள் தனிக் கும்பல்களாகப் பிரிந்து ஊர்களைச் சூறையாடினார்கள். அவர்களுக்குக் கையூட்டும், ஊதியமும் கொடுத்துத் தம்மிடம் வைத்துக் கொண்டவர்களும் உண்டு.

"விட்டோபா யார்?"

"ஒரு தனவணிகர்! வாசாலகர்! நிறைய செல்வாக்கு உள்ளவர்"

"ஓகோ! அவர் வேறு படை வைத்திருக்கிறாரா?"

"ஆமாம். இந்தச் சிறு படைகள் ஊர்களில் செய்யும் அநியாயம் சொல்லி முடியாது!"

"ஏன், முராரி ராவ் படையே விதி விலக்கா என்ன? திருவண்ணாமலையிலிருந்து சிதம்பரம் வரை ஜனங்களை நடுநடுங்க வைத்திருக்கிறார்களே! இதற்கெல்லாம் முடிவு காலம் எப்போது வரும்?"

"வரத்தானே வேண்டும்! பிரபு!" என்று அழுத்தமாகக் கூறினாள் சிந்து.

"சரி! விட்டோபாவிடம் சிக்கினீர்கள்! அப்புறம்?"

"என்னை இங்கே அனுப்பித்திருக்கிறார். அவர் தங்களுக்கு அனுப்பித்திருக்கும் பரிசில்களில் நானும் ஒருத்தி!"

சிரித்தார் கார்வேட் ராஜா!

"ஓகோ! எனக்கு அந்தப்புர அடிமையை அனுப்பியிருக்கிறாரோ! போகட்டும்!"

"எனக்கு அதில் ஆட்சேபணையில்லாமல் போய்விட்டது. தங்களைப் பார்த்துவிட்டுப் போவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா?"

"நீங்கள் வந்த நேரமும் நல்ல நேரம்தான். உங்களிடம் சொல்ல வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன."

"இதோ இவர் ஒரு பாளையக்காரர். நமது குழுவில் சேர்ந்திருக்கிறார். இவரிடம் தான் விட்டோபா கடிதாசு கொடுத்து அனுப்பியிருக்கிறார்."



உடனே வர்மன் தனது இடுப்புப் பையை அவிழ்த்து உறை போட்ட கடிதத்தை கார்வேட் ராஜாவிடம் நீட்டினான்.

ராஜா அதைத் திறந்து பார்த்தார். கண்கள் சற்று விசாலமாயின. தலையை ஆட்டிக் கொண்டே படித்தார். பிறகு தலையை நிமிர்த்தி, "இதை யார் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா?" என்று கேட்டார்.

"யார் பிரபு? யாரோ பிரமுகர் எழுதியது என்று விட்டோபா சொன்னார்."

"புதுச்சேரியிலிருந்து ஆனந்தரங்கப் பிள்ளை எழுதியிருக்கிறார்."

"ஓகோ! கவர்னர் தூப்ளேயின் துபாஷியா?"

"ஆமாம்"

"என்ன விஷயம்?"

"திருப்பதி பெருமாள் விஷயம்தான். வேறு என்னத்தை எழுதப் போகிறார்?"

"என்ன சொல்கிறார்?"

"திருப்பதி வருமானம் சந்தா சாகிப்புக்குத் தேவைப்படுகிறது. அவர் தான் முறையான ஆர்க்காடு நவாப். அவருக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும். அப்படி அதை அனுப்பி வைக்காத பட்சத்தில் முகம்மதலிக்கும் அனுப்பக் கூடாது!"

சிரித்தாள் சிந்து.

ராஜா தொடர்ந்தார். "இவர்கள் இருவரில் யார் நவாப் என்று தீர்மானம் ஆகும் வரை தொந்தரவுதான். முகம்மதலி வேறு கடிதாசி எழுதியிருக்கிறார்!"

"திருப்பதிப் பணத்தைக் கேட்டா?"

"ஆமாம்! எல்லா வரும்படியையும் சேர்த்து உடனே எமக்கு அனுப்பி வையுங்கள் என்று!"

"இருதலைக் கொள்ளி எறும்புதான்!" என்றாள் சிந்து.

"ஆமாம்! என்ன செய்வதென்று தெரியவில்லை. நானே திருப்பதிப் பெருமாளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்! அப்பா! வேங்கடப்பா! உன் வரும்படி

இப்படி எல்லோர் கண்ணிலும் பட்டு ஆசைகளை உண்டு பண்ணுகிறதே! இதற்கு ஒரு சரியான முடிவு உண்டாக்கக் கூடாதா என்று! சுவாமிகள்தான் கண்ணைத் திறக்க வேண்டும்."

"திறப்பார் பிரபு!"

ராஜா பெருமூச்சு எறிந்தார்.

"இந்த வருடம் வரும்படி எவ்வளவு பிரபு?" என்றாள் சிந்து.

"நாளை திவான் சம்பத் ராவ் இங்கே வருவதற்கு இருக்கிறார். அப்போது தெரியும். அவரிடம் நாம் சேர்ந்தே பேசலாம்!" என்றார் ராஜா.

வர்மன் விளக்கு வைத்த பிறகு தனது பெரிய கூடத்தில் உலாத்திக் கொண்டிருந்தான். கட்டுண்டது போல் ஏதோ ஓர் உணர்ச்சி அவனை ஆட்கொண்டிருந்தது.

சிந்துவின் ஒவ்வொரு செய்கையும் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது. சாதாரணப் பெண்ணாகத் தோன்றவில்லை. சாமர்த்தியசாலியாக விளங்கினாள். தேவதாசிகளில் நிறையப் பேர் மிகுந்த புத்திசாதுரியம் படைத்தவர்கள் என்று அவனுக்குத் தெரியும். பலருக்குச் சொந்தப் படைகள் கூட உண்டு என்று தெரியும். நாட்டு நடப்பில் சமயம் வந்தால் பங்கேற்கிறவர்கள் என்று தெரியும்.

ஆனால், சிந்து, அவன் பார்த்த, கேள்விப்பட்ட எல்லாப் பெண்களையும் தூக்கி அடிக்கும் திறமை பெற்றிருக்கிறாளே!

வாழ்க்கையில் முதன் முதல் அப்படிப்பட்டப் பெண்ணோடு ஏற்பட்ட நெருக்கம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. எத்தகைய சக்தி அதற்கு? எங்கோ செல்பவனை எங்கோ இழுத்து வந்து விட்டதே!

"வீரரே!" என்று குரல் கேட்டது.

திரும்பினான்.

கண்கள் திரிந்து நின்றன: வாயில் முகப்பில் சிந்து ஒரு சொப்பன சுந்தரியாக நின்றாள்.

மேலே நீல நிறப் பட்டில் கூறை! உடம்பு முழுதும் ஸ்வர்ணங்கள்! கண்களில் மெல்லிதாகத் தீட்டிய அஞ்சனம்,



காதுகளில் மின்னி ஆடும் லோலக்கு! புஜங்களில் நாகொத்து!

அகல் விளக்கின் வெளிச்சத்தில் அத்தனையும் ஒளிர ஒரு ஜொலிக்கும் சொரூபமாக இருந்தாள்.

நின்ற மூச்சு திரும்பி வரச் சற்று நேரமானது!

கனவில் நடப்பது போல் நடந்து அவள் பக்கம் வந்தான்!

"என்னை செஞ்சு லட்சுமி விடமாட்டேன்" என்கிறாள். இத்தனையும் போட்டு அணிவித்து..."

வாயில் அருகில் இப்போது செஞ்சு லட்சுமி பிரசன்னமானாள். பதினைந்து வயது இருக்கும். கண்களால் சுட்டியாகப் பார்த்தாள். உடம்பு சின்ன மின்னல் கொடி! இடுப்பை வளைத்து நின்றதே நாட்டியமாக இருந்தது.

"வாருங்கள் நடன சபைக்கு! அங்கே ஒரு விருந்து"

சபையைப் பார்த்துக் கண்கள் சொக்கின.

அத்தனை மின்மினிகள் சுடர் விட்டு ஒரு தங்க மயமான ஒளியை அங்கே நிரப்பிவிட்டன.

கண்ணாடிக் கூடுகளில் மெழுகுவர்த்திகள் ஜொலித்தன. அதன் ஓரங்களில் அகல்கள் எரிந்தன. அனைத்துத் தாரகைக்களும் அங்கு வந்தனவோ எனும்படி சுருக் சுருக்கென்று ஒளி தைத்தன.

மிருதுவான மலர் வாடை சபை வெளியில் உலாவியது.

கீழே பளிங்குத் தரையில் அத்தனை விளக்குகளும் பிரதிபிம்பங்கள் காட்டின.

மேடையின் பக்கம் கண் செல்ல மீண்டும் அவனுக்கு மூச்சு நின்றது.

"என்னைப் பார், உன்னைப் பார்" அழகில் அத்தனை பெண்கள் வர்ணத் துகில்களில் நின்றார்கள்.

இருந்தும் அவன் கண் அங்கிருந்து திரும்பி மூலையைத் தேட இரு ஜோடி விழிகள் அங்கே அவன் மீது லயித்திருந்தன.

மெய் சிலிர்த்தது.

## 10. நிஜமோ நாடகமோ?

அத்தனை ஜொலிப்பு, மினுப்புகளைப் பார்த்த வர்மனின் கண்கள் திக்பிரமையுடன் நிற்க அவன் மீது விழுந்த முதல் ஜோடிக் கண்கள் செஞ்சுலட்சுமியுடையவை.

அம்பு வீச்சுப் போல் அவன் விழிக்குள் விழுந்து உள்ளே புகுந்து சொல்லொணா இன்ப லாகிரியை எழுப்பிவிட்டு மனத்தின் ஏதோ ஒரு மறைவில் ஊமை வலியாய்த் தைத்துக் கொண்டது.

சிறுமி என்று நினைக்கப் போக, பருவக் கண்கள் அல்லவா அவளிடம் இருந்தன.

அடுத்தகணம் அன்னிய இடத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து தன் பார்வையைத் திரும்ப வாங்கிக் கொள்ள அடுத்த ஜோடிக் கண்கள் அவனை மிருதுவாக ஈர்த்தன.

ஆழம் இயலா சாகரத்தில் நழுவியது போல இருந்தது. எங்கும் அமிர்தக் கடல்திவலைகள் அவனை மூழ்க அடித்தன. முந்திய பார்வையில் அவனது 'தன்' நினைவு நிலைத்திருந்தது. இந்தப் பார்வையில் அது கரைந்து அமிர்தத்தோடு அமிர்தமாய்க் கலந்து விட்டது.

இந்த முறை பார்வையை முதலில் வாங்கிக் கொண்டவள் சிந்து.

அலட்சியமாய் அவள் முகத்தைத் திருப்ப, ஒரு துயர வலி அவன் நெஞ்சின் மீது இறங்கி அழுத்தியது.

சீக்கிரம் குறவஞ்சி நாடகம் ஆரம்பித்தது.

மிருதங்கம் இடி முழவங்கள் போல் அதிர, வீணைகள் மின்னல் இழைகளை இழைக்க கின்னரக் குரலுடன் இரு பெண்கள் கீதமிசைக்க, சொப்பனம் போல நால்வர் வந்து நடனமிட்டார்கள்.

வர்மனின் மனம் பறந்தது.

அந்தச் சூழலும், அதன் நேர்த்தியும் ரம்யமும் அவன் மனத்தை வெகுவாகத் தொட்டிருந்தன.



என்ன அழகான பெண்கள் இவர்கள். என்ன அழகாக நடம் இடுகிறார்கள்? இந்தக் கீதம் தான் மனத்தை எப்படி நிறைக்கிறது? சொந்த துக்கத்தைக் கூட மறப்பது போல் தோன்றியதே!

அனுபவம் தான் புத்தம் புதிதாய் என்ன சுகமாய்ப் பரவசப்படுத்துகிறது!

முதல் பாட்டு முடிந்ததும் கரகோஷ ஒலி எழுந்தது. வர்மனும் சேர்ந்து கொண்டான். அப்போது தான் ஆசனங்களில் நிறைய பேர் இருந்தது புலனாகியது.

பின்னர் குறத்தி வர நாடகம் ஆரம்பமாகியது. விருத்தம், காவடிச் சிந்து, நொண்டிச் சிந்துகளில் பரவசமான பாட்டுக்கள் கூடத்தில் குதித்து விளையாடின.

கதாநாயகி உருவத்தில் செஞ்சுலட்சுமி வந்த போது ஆச்சரியமாக இருந்தது.

செஞ்சுலட்சுமி காதல் வசமாதல் குறத்தி குறி சொல்லுதல் எல்லாம் வரிசை நிகழ்ச்சிகளாக வந்தன.

வர்மனின் கண் மாறவில்லை. செஞ்சுவோடு ஒன்றியிருந்தது. அவள் முகம், பாவனை, முத்திரை, அபிநயம் எல்லாம் வெகுவாக அவனைக் கவர்ந்தன. இமையை அசைக்கக் கூட விடவில்லை. மேடையில் அவன் போகுமிடமெலாம் கண்ணை இழுத்துக் கொண்டு போனான்.

ஆச்சரியம்! ஒருவித அதிசய பாவனை அவனுக்குத் தோன்றியிருந்தது.

மேடையில் அவளுக்குத் தோன்றும் உணர்ச்சி அவனுக்கும் தோன்றியிருந்தது. சோகமானாலும் சரி, மோகமானாலும் சரி, சுகமானலும் சரி. அந்த உணர்வுகள் அவனையும் உடனே ஆட்கொண்டன.

இனி கதாநாயகன் வரும் கட்டம்.

அப்போது கர்ஜனையான ஒலங்கள் எங்கும் கேட்க, பரங்கியர் வேடம் போட்ட இருவர் வந்து செஞ்சுவைக் கைப்பிடிக்கிறார்கள். இழுக்கிறார்கள். நவாபு வேடம் போட்ட இருவர் அவர்கள் பின்னால் வந்து சும்மா நிற்கிறார்கள்.

வர்மனுக்கு உட்கார முடியவில்லை. "ஐயோ! என்னைக் காப்பாற்றுங்களேன்! காப்பாற்றுங்களேன்!" என்று மனம் உருகக் கதறுகிறாள்.

சபையினர் முகம் எல்லாம் இறுக்கமாகிறது.

வர்மன் கொந்தளிக்கிறான்.

ஒரு பரங்கி வேடக்காரன் செஞ்சுவை முத்தமிடப் போய்விட்டான்.

"ஏய்! ஏய்!" என்று சபையில் கூக்குரல்.

வர்மன் துள்ளி எழுந்தான். கையில் கத்தி உறுவி வந்தது. மேடைக்கு ஒரு தாவலில் வந்தான். 'ஆ' என்று எங்கும் குரல்! அவன் பார்வை அந்தப் பரங்கியர் மீது விழ அந்த வேடதாரிகள் பாதம் வரை நடுங்கினார்கள்!

மறுதாவல்! அவன் பரங்கியர் பக்கம் மிதித்து நின்றான்.

கையை ஓங்கி இருப்பான். அதற்குள் சபையிலிருந்து வந்த இருவர் அவன் கையை இறுகப் பிடித்தார்கள்.

"இதென்ன வீரரே! இது வெறும் நாடகம் தானே! இதைப் போய் ஏன் தடுக்கிறீர்கள்?"

வலுவாக அவனைப் பிடித்து ஆசனத்துக்கு இழுத்தார்கள்.

வர்மன் அடங்கவில்லை. வாயால் கூச்சல் போட்டான். பலர் அடக்கியும் திமிறப் பார்த்தான். அவனை ஒரு வெறி ஆட்கொண்டிருந்தது.

இப்போது பல காவலர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். விடாப்பிடியாக அவனைக் கட்டிப் பிடித்து அவன் இருப்பிடத்தில் கொண்டு போய் விட்டார்கள்.

காலையில் எழுந்த போதும் அந்தக் கலக்கம் அவனிடம் அப்படியே இருந்தது.

செஞ்சு ஆடியது, பாடியது, காதலில் வாடியது எல்லாமே மனத்தில் அழிக்க இயலாத சித்திரங்களாக இருந்தன.

அந்தப் பரங்கியர் வந்ததும், அவள் தத்தளித்ததும் அறை கூவியதும் நினைவில் ஏதோ துர்ச்சம்பவம் போல் அமுங்கி இருந்தது.



இன்னும் கூட செஞ்சுவை நினைத்தால் மனத்தில் பதற்றம் ஏற்பட்டது.

யோசித்தான்! ஒரு நாடகமா அவனை இந்தப் பாடு படுத்துகிறது.

சப்தம் கேட்டதும் திரும்பினான். சிந்து அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவன் எழுந்ததும் அமரச் சொன்னாள்.

"ஏது வீரரே! இரவு ரொம்ப உணர்ச்சி வசம் ஆகிவிட்டீரே!" என்றாள் சிந்து.

"செஞ்சுலட்சுமி எப்படி இருக்கிறார்? சௌக்கியமாக இருக்கிறாரா? அவருக்குத் தீங்கு ஏதும் ஏற்படவில்லையே!" என்று ஆதுரமுடன் வினவினான் அவன்.

அவன் குரலில் கூட கலக்கம் இருந்தது.

"ஏன்! பயந்து விட்டீரோ!" என்றாள் சிந்து.

"ஆமாம் அம்மணி! மனத்தில் என்ன வேதனை ஏற்பட்டது. இன்னும் கூட அதன் வலி இருக்கிறது. நான் செஞ்சுவை மீண்டும் சகஜமான நிலையில் பார்த்தால் தவிர என் மனம் சமாதானமாகாது" என்றான் அவன்.

அவள் ஆச்சரியமுடன் அவனைப் பார்த்தாள்.

"ஏன்? அப்படி அவள் மீது லயித்து விட்டீரோ?"

வர்மன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் சலனமில்லாமல் இருந்தாள்.

"நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்! அவள் செஞ்சு என்பதைக் காட்டிலும் ஏதோ ஒரு தேசத்து ராஜகுமாரியாக எனக்குத் தோன்றினாள். செஞ்சு என்று பிரித்துப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. அவளது சோகம் எனது சோகமாகப் பட்டது! அவளது கஷ்டம் என் கஷ்டமாகப் பட்டது! அது நாடகந்தான் என்று தெரியும். இருந்தும் என் மனத்தில் ஏற்பட்ட கலகத்தை இன்னும் என்னால் மாற்ற முடியவில்லை."

கூறிய அவன், தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். அவன் கண்களில் ஈரம் பரவியிருந்தது. அதைச் சிந்துவிடம் காட்ட அவன் விருப்பப்படவில்லை.

பிறகு வேறு திசையைப் பார்த்துக் கொண்டே அவன் பேசினான். "நீங்கள் கவனித்திருக்கிறீர்களா அம்மணி! யாராவது ஒரு கதை சொல்வார்கள். அது நம் மனத்தை உருக்கி விடும்! யாராவது ஒரு சம்பவத்தைச் சொல்லுவார்கள்! அது நம் உள்ளத்தை உலுக்கி விடும்! பல நாட்கள் வரை அந்தக் கதையோ சம்பவமோ மனத்தை அழுத்திக் கொண்டே இருக்கும். ஒரு வேளை ஆயுசு வரை கூட அவை மனத்தில் ஒரு வடு போலவே தங்கி இருக்கும். நான் ஒரு உணர்ச்சிக்காரன்! ஊரில் என்னை எல்லோரும் அப்படித்தான் சொல்வார்கள்! பாவைக் கூடத்தில் மயானத்தில் சந்திரமதி புலம்புவதைப் பார்த்துவிட்டு ஊரில் ஒரு மாதம் அழுது கொண்டிருந்தேன் நான்! என்னால் அதைப் பொறுக்க முடியவில்லை. ஒரு பெண்ணுக்கு அப்படி ஒரு கதி நேர்ந்ததைச் சகிக்க முடியவில்லை. பின்னால் சுவாமி பிரத்தியட்சமாகி சந்திரமதியையும் அரிச்சந்திரனையும் சேர்த்து வைத்தால் கூட அது எனக்குச் சமாதானமாகவில்லை. அந்தப் பெண்மணிக்கு அப்படி ஒரு கஷ்டம் வந்ததே என்று அதை நினைத்துத் தான் மனம் அமைதி காணாமல் வெதும்பியது.

"கூடாது அம்மணி கூடாது! சந்திரமதிக்கு அந்தத் துக்கம் வந்திருக்கக் கூடாது? அது போல் செஞ்சுவுக்கும் அந்தத் துக்கம் வந்திருக்கக் கூடாது!

"அதை என் மனம் ஏற்கக் கஷ்டப்படுகிறது. என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை."

வார்த்தைகளில் வந்த வேகம் அவனது நெஞ்சின் படபடப்பை எடுத்துக் காட்டியது. சிந்து அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

"உங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது வீரரே! நீங்கள் ஒரு புத்தர்!" என்றாள்.

சட்டென்று திரும்பி, "அப்படித்தான் சமயத்தில் நான் நினைத்துக் கொள்வது வழக்கம்! நிச்சயம் அந்த மகானுக்கு நிகராக நான் இருக்க முடியாது. ஆனால் அவரது உணர்ச்சிகளின் ஏதோ ஒரு சிறு பகுதியான அம்சம் என்னிலும் இருப்பதாக நினைக்கிறேன். இல்லாவிடில் பிறர் கண்ணீரை நான் எனது கண்ணீராக ஏற்றுக் கொண்டிருக்க மாட்டேன்" என்றான் அவன் உணர்ச்சிப் பெருக்கோடு.



சிந்து சிறிது நேரம் பேசவில்லை. நிசப்தமாக அவனைப் பார்த்திருந்தாள். வர்மன் தனது உத்தரியத்தை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"வீரரே!" என்றாள் அவள். "வெறும் நிழலைப் பார்த்தே இப்படி அவதிப்படுகிறீர்! நிஜத்தைப் பார்த்தாலோ...?"

"இன்னும் அவதிப்படுவேன் அம்மணி! செஞ்சுவுக்கு நிஜம் எதுவும் நிகழக் கூடாது! நிழலோடு நின்று விட்டால் போதும்! இப்போது கூட அவளைத் திரும்பவும் பார்த்துச் சகஜமாக இருக்கிறாள் என்று தெரிந்தால் தான் சமாதானம் ஏற்படும்!" என்றான் அவன்.

வார்த்தைகள் தாபமாகக் கீழே இறங்கி நின்றன.

அங்கு தோன்றிய நிசப்தமே கடினமாக இருந்தது. சிந்து பெருமூச்சு விட்டாள்.

"வீரரே!" என்றாள். "செஞ்சுவைத்தானே பார்க்க வேண்டும்? பார்க்கலாம். புறப்படுங்கள்!"

"அம்மணி!" என்றான் வர்மன் திரும்பி, "என்னை ஏதாவது பிரமை பிடித்தவன் என்று நினைத்து விடாதீர்கள்!"

"இல்லை வீரரே! சில பிரமைகள் நமக்கே நன்மை தரும் பிரமைகள்!"

கார்வேட் ரா்ஜாவின் மாளிகை பெரிதாக இருந்தது. அதன் உய்யானவனமோ அதைவிடப் பெரிதாக இருந்தது.

சிந்து அவனை நீள அழைத்துப் போனாள்.

காலை வெய்யில் மெல்லிய தங்கத் தகடு போல் மின்னியது.

வனம் முழுவதும் புஷ்ப வனம்!

அரளி வகையிலிருந்து முல்லை, ஜாதி, அந்தி மந்தாரை, செம்பருத்தி, சங்கபுஷ்பம் என்று வர்ணக் கலவைகளாக எங்கும் பொழித்திருந்தன.

அருமையான பூம் பாதை இடையே அவர்கள் நடந்தார்கள்.

ஒரு பெரிய தடாகம் இடையே குறுக்கிட்டது. இதழ் வீசித் தாமரைகள் தீ விரித்தாற்போல் தகதகக்க, வண்டுகள் ரீங்கார இசையில் நீர்மேல் சக்கர வட்டமிட்டன.

ஒரு கணம் தயங்கி நின்று, "வீரரே!" என்றாள் சிந்து.

"என்ன?" என்று சொல்லி நின்றான் வர்மன்.

"செஞ்சுவுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும் காப்பாற்றுவீரா?"

அவள் புருவங்கள் மேலே வளைந்து கேட்டன.

"நிச்சயமாக! உங்களை நான் காப்பாற்றவில்லையா?"

சிந்து உடனே பேசவில்லை. வெறுமையாகத் தடாகத்தைப் பார்த்து நின்றாள். நீண்ட மூச்சு விட்டு விட்டு, "செஞ்சு என்பவள் ஒரு சின்னம்!" என்றாள்.

"சின்னம்?"

"ஆமாம்! நமது நாட்டின் சின்னம்! நாம் இருக்கும் நாட்டின் பிரதி பிம்பம்! நாட்டைத் தான் நடித்தாள் அவள்! வெறும் நிழலைக் காப்பாற்றி விட்டால் போதுமா வீரரே! நிஜத்தைக் காப்பாற்ற வேண்டாமா?"

மருட்சியுடன் பார்த்தான் அவன்.

"நிச்சயம் காப்பாற்ற வேண்டும் இளவரசி!"

"செஞ்சு அவதிப்பட்டால் நமது சொந்தக் காரியத்தைக் கூட விட்டு அவளைத் தானே காப்பாற்ற நினைப்போம் வீரரே!"

அவள் சொல்வதன் உட்பொருள் சற்றே தரிசனமாகத் திகைத்து நின்றான் அவன்.

## 11. திருப்பதி உண்டிக்குப் போட்டி

சிந்து அந்தக் குறவஞ்சி நாடகத்தை நாட்டுக்கு உவமையாகக் கூறிக் கொண்டு போக,

வர்மனின் மனத்தில் .சின்னச் சின்ன ஊற்றுகளாக உணர்ச்சிகள் கொந்தளித்தன.



அவனது அகக்கண் இன்னொரு கண் விழித்து, விசாலமான ஒரு பெரும் பரப்பைப் பார்த்தது.

சிந்துவின் குரல் காதில் ஒலித்தது.

"செஞ்சுகா (செஞ்சு லட்சுமி) பட்ட பாட்டை நாட்டின் பெண்கள் படுகிறார்கள்!"

என்ன அருமையான உதாரணம் அது! ஒரு கத்தி போல் மனத்தில் சொருகுகிறதே!

இதற்கு முன் இப்படி பரந்த நோக்குடன் பெண்களை ஒருங்கு நினைக்கு மனப்பான்மை வந்ததில்லையே!

அவன் ஊரும், பாளையமும் எவ்வளவு சொற்பங்களாகத் தோன்றின இப்போது?

ஒரு நாட்டையே மனத்தில் உருவகப்படுத்தும் ஆச்சரியமான புதிய ஞானம் உதித்துவிட்டதே! என்னே புதுமையான அனுபவம்!

அந்த அனுபவத்தில் கேவலம் செஞ்சு லட்சுமி மட்டும் அல்ல, நாட்டில் எல்லாப் பெண்கள் படுவதும் அவனைத் துன்புறுத்துவது போல் தோன்றியது.

செஞ்சுலட்சுமி ஒரு சின்னம்! அவ்வளவுதான்!

பெருமூச்சு விட்டான் அவன்.

சிந்து அவனைத் தடாகத்தின் அருகே அழைத்துப் போக, "எங்கே செஞ்சுலட்சுமி!" என்றான் சிறிது ஆத்திரமுடன்.

"செஞ்சுகாவா? வாருங்கள்! அழைத்துப் போகிறேன்!" என்றாள் அவள்.

தடாகத்தைத் தாண்டி, உய்யான வனம் ஒரு வனமாகவே மாறி இருந்தது. இருட்டைப் பிடித்து வைத்தாற் போல் நெருக்கமான மர அடர்வுகள்! சற்றைக்கு அப்பால் ஒரு சின்னக் குன்று.

வனத்தின் ஊடே அழைத்துப் போனாள்.

கிளைகள் தந்த நெருக்கங்களில் குனிந்தும் குறுகியும் போக வேண்டி வந்தது.

திடீரென்று அந்தி ஆகிவிட்டது போல் மந்தமும் சிள்ளிரைச்சலும் சூழ்ந்தன.

அதில் சில நிமிட நேரம் பிரயாணம் செய்த பிறகு சட்டென்று எதிர்ப்பட்ட திறந்தவெளியும் அதில் பழமையாக நின்றிருந்த மாளிகையும் ஆச்சரியமாக இருந்தது.

ஒரு அரண்யவாசம் போல இருந்தது. தூணும் தூம்பாய்களும் பாசி படர்ந்திருந்தன. மாடங்களும் சாளரங்களும் துருவேறினாற்போல் பழசாகி இருந்தன.

கல்படிகளில் இருவரும் ஏறினார்கள்.

உள்ளே அடுத்தடுத்து அறைகள் வழியாகச் சென்று, ஒரு பெரும் கூடத்துள் போய் நின்றாள் சிந்து.

முற்றத்தை அடுத்த அந்தக் கூடத்தில் பத்துப் பன்னிரண்டு திடகாத்திர மனிதர்கள் விறுவிறுப்பாக ஒரு சர்ச்சையில் ஈடுபட்டிருப்பதைக் கவனித்தான்.

சிந்துவும், இன்னொரு ஆளும் வருவதைப் பார்த்து அவர்கள் தங்கள் பேச்சை நிறுத்த, சுற்றும் முற்றும் பார்த்து சிந்து, "எங்கே செஞ்சுகா?" என்று கேட்டாள்.

''இதோ அக்கா!'' என்று ஒரு மூலையிலிருந்து செஞ்சுலட்சுமி துள்ளி வர...

வர்மனின் மனத்தில் ஒரு ஜீவன் துள்ளி வந்தது.

"இதோ பார் செஞ்சுகா! உன்னை நேரில் பார்த்தால் தான் அவர் மனம் சமாதானம் ஆகும் என்கிறார்!" என்றாள் சிந்து!

செஞ்சுகா அவன் முன்னால் வந்து ஒரு செம்பொன் விக்கிரமாக விகசிக்க வர்மனின் கண்கள் பனித்தன.

நீண்ட ஈர விழிகளோடு அவளைப் பார்த்தான்.

மனத்தில் புகையாகக் கவிந்த ஒரு வியாகூலம் மெதுவாகக் கரைந்து கொண்டிருந்தது.

நிச்சயம் முந்தின இரவு பார்த்தது நாடகந்தான்! நிஜமல்ல, இதோ அவன் முன்னால் செஞ்சு ஒரு துள்ளலும், விள்ளலுமாக நிற்கிறாளே, என்று நினைத்தான்.

இருந்தாலும், அவன் இரவு அடைந்த மானசீகச் சுமையின் துயரம் அவனுக்கு அளவிலா தாபத்தை ஏற்றியிருக்க மௌனமான தழதழப்புடன், "நல்லவேளை அம்மணி! உங்களை நேரில் பார்த்தேன்! இல்லாவிடில் ஒரு



துயரச் சுமை எனக்கு வாழ்நாள் முழுதும் இருந்திருக்கும்!" என்றான்.

அவனை மீறியும் கண்கள் நீர்க்கூடு கட்டின.

மார்புகள் ஏக்கத்தோடு ஏங்கி அமிழ்ந்தன.

''ஐயா, நான் நடித்தேன்! அவ்வளவே!'' என்று குழல்மிழலையாக அவள் சொல்ல,

அவன் மனம் அத்தனையிலும் பரவசம் விரவியது.

"நடிப்புத்தான் எவ்வளவு பாதித்து விடுகிறது. இரவு உறக்கம் வரவில்லை! கண்முன்னே யாரோ துன்பப்படும் போது நான் வாளாவிருப்பது போல இருந்தது. நான் துயர்ப்பட்டதை வர்ணிக்க இயலாது!" என்றான் அவன், தழதழப்பு குறையாமல்.

செஞ்சுகா மேலே பேசுவதறியாமல் குழைந்து நிற்க, "வீரரே!" என்று சிந்து கூறி அவனை அந்தக் கூட்டத்தின் பக்கம் அழைத்துப் போனாள்.

அங்கே திண்டு போட்ட மெத்தையில் நடு நாயகமாக வீற்றிருந்த சரம்பள்ளிப் பாளையம் அதிபதி வீரண்ணத் தேவரின் முன்பே கொண்டு விட்டாள்.

அவரும் அவனை ஆதரவுடன் பார்த்துக் குசலம் விசாரித்து, அவன் தந்தையை அறிந்திருப்பதாகவும் கூறி,

''அவர் என்னவோ பரங்கியரோடு வியாபாரம் செய்வதாகச் சொல்லிப் புறப்பட்டவர்தான் அப்புறம் ஊர் திரும்பவே இல்லை. நீ அவரைத் தேட, வந்திருப்பதாகச் சொன்னார்கள். அதையும் கவனிப்போம்! இப்போது நாடே குழப்பத்தில் இருக்கிறது. இதைச் சீர்திருத்தம் செய்யவேணும் என்று ஐம்பத்தாறு பாளையக்காரரும் ரத்த உடன்படிக்கைப் போட்டு இங்கே வந்திருக்கிறோம். நாட்டு நடப்பு தெரியுமில்லையா....?"

"ஓரளவு தெரியும்!"

''நவாபு பதவிக்கு இங்கே சந்தாசாகிப்புக்கும் முகம்மதலிக்கும் சண்டை! இவர்கள் பின்னே இருப்பவர்கள் பரங்கியர்கள்! சந்தாசாகிப் பக்கம் பிரெஞ்சுகாரன்! முகம்மதலி பக்கம் இங்கிலீஷ்காரன்! ஆக, மொத்தத்திலே கேவலம் பரங்கிக்காரனை அழைக்கும் துப்புக் கெட்ட

நாடாகப் போயிட்டது! இப்போ என்னடான்னா அவன் (பரங்கிக்காரன்) சட்டம் பேசறான். சட்டம் போடறான். கிஸ்தி வசூல் பண்ணறான். சனங்களை அடிக்கிறான். துன்பப்படுத்தறான். போன மாசம் இந்தப் பிரெஞ்சுக்காரங்க நாலு ஐயன் மாருங்களைத் தூக்கிலே போட்டிருக்கான்..."

"அது பெருத்த அநியாயம்!" என்று ஆத்திரமாக இடைமறித்தார் ஒரு பாளையக்காரர்.

"நீ தான் அவனுக்கு இடம் கொடுத்திட்டியே!" என்று அவரைப் பார்த்து உருவகமாகப் பேசினார் வீரண்ணத்தேவர்.

"இதை டில்லி பாதுஷா நாடுன்னே வை! அல்லது அவர் பிரதிநிதி ஆற்காட்டு நவாபு நாடுன்னே வை, இந்த மண்ணிலே கால் மிதிச்சு, அவனாக ஒரு சட்டம் வைத்துக்கிட்டு, அவனே விசாரிச்சு, நம்ப நாட்டுப் பிரஜையை இந்தப் பரங்கிக்காரன் தூக்கிலே போடலாமா? இதைக் கேட்கிறதுக்கு நாதி இல்லையே!"

"நவாபுக்குப் பலம் இருந்தால்தானே கேட்கிறதுக்கு?"

"ஆ!" என்று திரும்பினார் வீரண்ணத் தேவர், "அதைத்தான் நல்லாப் புரிஞ்சுக்கிட்டான் பரங்கிக்காரன். அதனாலே தானே எல்லா விஷயத்திலேயும் தலையிட ஆரம்பிச்சுட்டான். இப்படியே விட்டா கொஞ்ச நாளிலே நமக்கு ராஜாவா வந்துடுவான்."

"சத்தியமா வர மாட்டான்!"

"வரமாட்டான் சொல்லாதேயும்! வரக் கூடாது! அதுக்குத்தான் நாம எல்லாரும் சபை கூடி பிரதிக்ஞை பண்ணியிருக்கோம்! இந்தா தம்பி, சிந்தும்மா சொன்னாங்க, நீயும் எங்க உடன்படிக்கையிலே சேர்ந்திருக்கிறே என்று! நல்லது! இப்போது சொல்லு! நாட்டை முன்னாடி வைத்து எல்லாக் காரியமும் செய்வாயா?"

"செய்வேன் பெரியவரே!"

"நல்லது! இப்போ எங்க திட்டத்தைக் கேளு! முதல்லே சந்தாசாகிப்பை ஒழிக்கிறோம்! அப்புறம் அந்தப் பிரெஞ்சுக்காரன் தூப்ளே! அப்புறம் இங்கிலீஷ்கார குவர்னர்! இதிலே நீயும் தீவிரமாப் பங்கு எடுத்துக்க வேணும். சரியா, நான் சொல்லறது?"



"சரித்தான் பெரியவரே!"

"ரொம்ப சந்தோஷம்! இப்போ இந்த பொம்மராஜ பாளையத்திலே கூடியிருக்கிறதுக்கு காரணம் உண்டு. திருப்பதி பணத்தை எப்படியாவது நம்ம கைக்குள்ளே கொண்டு வரத்துக்குத்தான். நம்ம சாமி பணம் நமக்குத் தானே...! அன்னியனுக்குப் போகக் கூடாது! என்ன சொல்றே?"

"உண்மை தான் பெரியவரே!"

"இந்தப் பணம் நம்ம உடன்படிக்கைக்கு ரொம்பவும் தேவையாயிருக்கிறது. எத்தனையோ காரியம் நடக்க வேண்டியிருக்கிறதில்லே? வெறும் கையிலே முழம் போட முடியுமா? நல்லவேளை! கார்வேட் ராஜாவும், நம்ம பக்கம் இருக்கிறார். இந்தப் பணத்தின் பேரிலே யாரும் கை வைத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேணும்! அது தான் முதல் முக்கிய வேலை!"

"சரிங்க!"

"அதுக்குத்தான் சண்டை போடறோமோ தந்திரம் பண்ணறோமோ! நீயும் எங்ககூட இருக்கிறே! அதுக்கு அடுத்த வேலை சந்தாசாகிப்பை நீ கொல்லப் போகிறே! நிறைய பொறுப்பு இனிமே வந்து கொண்டே இருக்கும். தைரியமாக இரு!"

மறுநாள் காலையில் ஜமீன் அரண்மனை சுறுசுறுப்பாகியது. திருமலையிலிருந்து திவான் சம்பத்ராவ் வந்திருந்தார். பல்லக்குப் பரிவாரமும் கூட வந்திருந்தன.

திருமலைக் கோவில் நிர்வாகி சீனிவாசாச்சாரியும் வந்திருந்தார்.

கார்வேட் ராஜா அவர்களை உபசாரமாக வரவேற்று உள்ளே அழைத்துப் போய்ச் சிரமப் பரிகாரம் செய்வித்து,

"சுவாமிகளே! ஏதாவது அவசரமா?" என்று கேட்டார்.

"ஆமாம்! மன்னர் பிரானே! கோயில் வரும்படியை யாரிடம் கொடுப்பது? எல்லோரும் தலைக்கொரு பக்கம் இருக்கிறார்களே!" என்றார் கோவில் நிர்வாகி சீனிவாசாச்சாரியார்!

"ஏன்! பிரச்சினை முற்றிவிட்டதா?" என்றார் ராஜா.

"ஆமாம், பிரானே! இவரிடம் (சம்பத்ராவ்) கொடுக்கும்படி எனக்கு ஒரு கடிதாசி எழுதிவிட்டார்கள் இங்கிலீஷ் கம்பெனிக்காரர்கள்" என்றார் சீனிவாசாச்சாரி.

"தங்களுக்கா?" என்றார் ராஜா.

"ஆமாம்! பிரானே! தங்களுக்கு எழுதுவதுதானே முறை! தங்கள் ஊழியருக்கு எழுதுவது முறையல்லவே?" என்று சொல்லி சீனிவாசாச்சாரி தமது மடியை அவிழ்த்துப் பத்திரமாக உறையிட்டிருந்த கடிதாசி ஒன்றை ராஜாவிடம் நீட்டினார்.

இங்கிலீஷ் கம்பெனியார் எழுதிய கடிதம் அது. சென்னைப் பட்டணத்திலிருந்து எழுதியிருந்தார்கள். திருப்பதி வரும்படி அவ்வளவும் நவாப் முகம்மதலியைச் சேர்ந்தது! அதை வசூல் செய்யும் உரிமையை முகம்மதலியிடமிருந்து இங்கிலீஷ் கம்பெனியார் பெற்றிருப்பதால், இந்தக் கடிதம் கண்டதும், 'சகல பணத்தையும் திவான் சம்பத்ராவிடம் கொடுத்து கம்பெனியாருக்கு அனுப்ப வேண்டியது.

படித்ததும் கார்வேட் ராஜாவின் புருவங்கள் மேலே தூக்கின. ஒரு வெப்பமான மூச்சு வெளி வந்தது. சம்பத்ராவை நோக்கித் திரும்பி, "சம்பத்ராவ் என்ன கூறுகிறார்?" என்றார் ராஜா.

"பிரானே! தங்களது மனநிலை எனக்குத் தெரியும். நாட்டு நடப்பு நன்றாக இல்லை! கோயில் வரும்படியே ஏற்கெனவே நவாபுகளுக்குச் சேரும்படி கோட்டை விட்டோம்! இப்போது அவர்களைத் தாண்டி பரங்கியருக்கே கோட்டை விடுகிறோம். இருந்தாலும் நான் என்ன செய்வேன்? கம்பெனியார் என்னைப் பணம் பெறும்படி நியமித்திருக்கிறார்கள்! தாங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதையே நான் அவர்களிடம் சொல்லுவேன். தங்கள் வாக்கு தான் எனக்கு முக்கியம்! தங்களைப் புறக்கணிக்கவும் மாட்டேன்" என்றார் சம்பத்ராவ்!

ராஜாவின் முகம் கலங்கி இருந்தது. மேல் உத்திரியத்தை எடுத்து நீவினார்! "ஏது? நிலைமை மோசமாகி வருகிறதே! நாளைக்கு எனக்கு மதிப்பே இல்லாது போய் விடும் போல இருக்கிறதே! சீனிவாசாச்சாரியாரே! கோயில் வரும்படி இந்த முறை எவ்வளவு?"



"இரண்டு லட்சம் ரூபாய் பிரானே!"

ராஜாவின் புருவங்கள் மேலே உயர்ந்தன. "அவ்வளவா?"

"ஆமாம் பிரானே! கூடிக் கொண்டே போகிறது!"

"இவ்வளவு பணம் வந்தால் யார் கண்தான் அதன் மேல் விழாது? ஏன் சுவாமிகளே! இப்போது யார் கை ஓங்கி இருக்கிறது! முகம்மதலியா... சந்தாசாகிப்பா..?"

"நிலைமை நாளுக்கு நாள் மாறி வருகிறது" என்றார் சம்பத்ராவ்.

சீனிவாசாச்சாரி குறுக்கே புகுந்தார். "தற்சமயம் முகம்மதலி திருச்சிராப்பள்ளி கோட்டைக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறார். சந்தா சாகிப் தீவிரமாக முற்றுகை இட்டிருக்கிறார்."

"ஆனால், சந்தா சாகிப்புக்கு எதிர்பார்த்த பிரெஞ்சு பலம் கிடைக்கவில்லை. முகம்மதலிக்கு இங்கிலீஷ் பலம் தொடர்ந்து கிடைத்து வருகிறது!" என்றார் சம்பத்ராவ்.

"இதனால் நிலைமை சீக்கிரம் மாறும்!" என்றார் ராஜா.

"இப்போதே மாறுவதாகக் கேள்வி! சந்தா சாகிப்பு திருச்சிராப்பள்ளி கோட்டையை விட்டுத் தள்ளி காவேரிக் கரைக்குப் போய்விட்டதாகத் தகவல்! படைகளுக்குச் சம்பளம் கொடுக்கவில்லையாம்! முற்றுகை போட அவர்கள் மறுக்கிறார்களாம்!"

"சம்பளம் கொடுக்கவில்லையா? அதனால் தான் திருப்பதிப் பணத்தைக் கேட்கிறாரா?"

"ஆமாம். அவருக்கும் பணக்கஷ்டம். முகம்மதலிக்கு பணக்கஷ்டம்!"

"சரிதான்! பணக் கஷ்டத்தோடு சண்டையா? ஏன் இருவருக்கும் பிரெஞ்சுக்காரரும் இங்கிலீஷ்காரரும் கொடுத்து உதவட்டுமே!" என்றார் ராஜா.

"அவர்கள் என்ன வாழ்கிறார்கள்! அவர்களும் பணத்துக்குக் கஷ்டப்படுகிறார்கள்! இல்லாவிட்டால் திருப்பதி உண்டிக்காகக் காத்திருப்பார்களா?"

"இதனால்தான்!" என்று சீனிவாசாச்சாரி, இடை புகுந்தார்... "இந்த நவாபு பூசல்களில் யாராவது ஜெயித்து

வரட்டும்! அப்புறம் பணத்தை எங்கே கொடுப்பது என்று யோசிக்கலாம்!" என்றார்.

"அதற்கு இடம் கொடுக்க மாட்டேன் என்கிறார்களே! எல்லோரும் நம்மைப் போட்டுப் பிடுங்கறாங்களே" என்றார் ராஜா.

மற்றவர்கள் பேசவில்லை. ராஜா முகவாயில் கை வைத்து யோசித்தார். சிறிது நேரத்தில் தீர்மானமானது போல் திரும்பி, "யாருக்குமே கொடுக்க வேண்டாம். வசூலாகவில்லை என்று சொல்லிவிடுவோம்" என்றார் ராஜா.

"ஒத்துக் கொள்வார்களா? நஞ்சை புஞ்சை குத்தகைப் பணம் வரவில்லை என்று சொல்லலாம்! உண்டிப் பணம் என்ன ஆயிற்று என்று கேட்பார்களே?"

ராஜா விழிக்க! திடீரென்று வெளியே ஏற்பட்ட இரைச்சல் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது.

## 12. பணயம் கொடுங்கள்

வாயிலில் ஓசை விகாரங்கள் கேட்க ஆலோசனைக் கூடத்துள் சேவகன் ஓடி வந்து நிற்க, கார்வேட் ராஜா நிதானம் இழக்காமல் எச்சரிக்கை குறையாமல், "என்ன?" என்று கேட்டார்.

"ஆறு வெள்ளைக்காரர் வந்திருக்கிறார்கள். அவர்களோடு நம்ம வீரன் வீணாகச் சண்டை போடுகிறான்!" என்றான்.

ராஜா சட்டென்று எழுந்து சீனிவாசாச்சாரியை நோக்கி, "சுவாமி! ஆபத்து வந்திருக்கிறது! நீங்கள் ஒளிந்து கொள்ளுங்கள்! வனமாளிகைக்குப் போங்கள்!" என்று பரபரப்பாகக் கூறிவிட்டு,



அரைக் கணமும் தாமதியாமல் வாயிலுக்கு விரைந்தார்.

அங்கே பார்த்த காட்சி அவரை ஸ்தம்பிக்க வைத்தது.

யார் அவன்?

வர்மன் என்று அழைக்கப்பட்ட பாளையக்காரனா?

இந்திரன் போல் நிற்கிறானே! வஜ்ரம் போலக் கை வீசுகிறதே! வாள் நொடிக்கு ஒரு சிவு சிவுகிறதே! முகத்தில் வியர்வையோடு வீரம் வழிகிறதே! வைத்த அடி எல்லாம் பூமி அதிர்கிறதே

அருமையான வீரன்தான் இவன்.

ஆனால் யாருடன் சண்டை போடுகிறான்!

இங்கிலீஷ்காரர் கூடவா?

ராஜா திகைத்தார்.

வர்மன் சூறைக் காற்றாகச் சுழல இரண்டு இங்கிலீஷ்காரர்கள் அவனைக் கஷ்டத்துடன் சமாளித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் அஞ்சிப் பின்னால் நின்று கொண்டிருந்தார்கள்.

கார்வேட் ராஜா நிலைமை உணர்ந்து, "வர்மா போதும்! வர்மா போதும்!" என்று இரைந்தார்.

மறு திசையிலிருந்து வந்திருந்த சிந்து, "வீரரே போதும்! வீரரே போதும்!" என்று இரைந்தாள்.

சின்ன வாயைத் திறந்து நின்ற செஞ்சுகாவின் கால்கள் தரையை மிதித்து ஜதி செய்தன.

வர்மன் சட்டென்று வாளை மேலே நோக்கி, "ஹோ" என்று இரைந்து சண்டையை நிறுத்தினான்.

வீரத் தளும்பலுடன் ஒரு பார்வையைச் சிந்து மேல் எறிந்து அடக்கமுடன் படிகள் ஏறினான்.

"பிரபு! திருப்பதி சுவாமியின் பணம் கேட்க வந்தேன் என்றான் இந்த மிலேச்சன்!" என்று வேப்பங்கசப்பாக வார்த்தையைக் கொட்டிவிட்டு ராஜா அருகில் போய் நின்றான்.

"வர்மா! அவர்கள் நமது நவாபின் நண்பர்கள். நவாபுக்குச் சேர வேண்டியதை இவர்கள் வசூலிக்க வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி,

அந்த இங்கிலீஷ் கும்பலின் துபாஷியா இருந்த அச்சையா என்பவரை நோக்கி,

"ஐயா! வர வேண்டும்! வர வேண்டும்! தெரியாமல் இந்த இளைஞன் தங்களை மறித்து விட்டான்!" என்று கூறி இரு கைகளையும் விரித்து நீட்டினார்.

இங்கிலீஷ் சிப்பாய்கள் மிரட்சியுடன் தலை கலைந்து நிற்க, அவர்கள் தலைவன் ஜான் ஸாவேஜ் என்பவன் கார்வேட் ராஜாவுக்கு வணக்கம் தெரிவித்தான்.

"இந்தா வர்மா, நீ செய்தது தப்பிதம்! நம் நண்பர்களுக்கு இப்போது வணக்கம் தெரிவி!"

வர்மன் சற்று கூச்சம் மேவிட்டவனாகக் கையை எடுத்துக் கும்பிட்டான்.

பிறகு ஸாவேஜும் இதரர்களும் உள்ளே போக, அவர்களுடன் வந்த ஊழியர்கள், பல்லக்கு, குதிரை, பரிவாரங்களுடன் வாசல் ஓரங்களில் அமர்ந்துவிட்டார்கள்.

"வீரரே, என்ன தப்பிதம் செய்தீர்?" என்று அவனைத் தனியாக மறுபக்கம் அழைத்துப் போன சிந்து கேட்டாள்! "இந்த நேரத்தில் காரியத்தைக் கெடுத்திருப்பீர்களே! அவர்களை வழி மறிக்கலாமா? நம் உடன்படிக்கைக் குழு இங்கே தங்கி இருக்கிறது என்று தெரிந்தால் நமது ராஜாவுக்கு ஆபத்து ஆயிற்றே!" என்றாள்.

வர்மன் இடுப்பிலிருந்து வாள் கச்சத்தைக் கழற்றினான். அவனது புஜத்தையும் மார்பு வீதியையும் பார்த்தாள் செஞ்சுகா.

"ஏன் அக்கா! அவர் செய்தது சரிதானே?" என்றாள்.

வர்மன் தனது பார்வையைக் கம்பீரமாகத் திருப்பினான்.

அதை எதிர்பார்த்தே செஞ்சுகா தனது சிறுமை குழைத்த பார்வையைக் குறுக்கே நீட்ட, இரண்டும் வெட்டிக் கொண்டு நின்றன.

"வீரரே! இப்போது நமக்கு இருக்கும் பலத்தில் நவாபையோ, இங்கிலீஷ்காரரையோ, பிரெஞ்சுக் காரரையோ எதிர்த்து விட முடியாது. மெல்ல சதி செய்து தான் வெல்ல வேண்டும். அவசரப்படாதீர்கள்! காரியம் கெட்டுவிடப் போகிறது!" என்றாள்.



"நல்லது அம்மணி! ஏதோ உணர்ச்சி வசப்பட்டேன்! இருந்தாலும் சொல்லுங்கள். நிலத்தின் தீர்வையை வாங்கிப் போகலாம்! திருப்பதிப் பெருமாளின் பணத்தை வாங்கிப் போகலாமோ? அத்தனையும் காணிக்கை ஆயிற்றே?"

"பெருமாளின் வருமானம் எல்லாம் ஆர்க்காட்டு நவாபுக்குச் சொந்தம்! அவரது மேற்பார்வையில் தான் திருப்பதி இருக்கிறது!" என்றாள் சிந்து.

"இருந்தால் என்ன? கோயில் சொத்தை நவாப் கேட்கலாமா?"

"அந்த நியாயம் எல்லாம் இப்போது கேட்காதீர்கள்? திருப்பதியின் சொத்து எல்லா ராஜாக்கள் கண்களிலும் பட்டு விட்டது. பரங்கிக்காரன் கண்ணிலும் பட்டுவிட்டது. தலைக்குத் தலை பணத்தைப்
பிடுங்க முயல்கிறார்கள்."

"இந்த இங்கிலீஷ்காரன் ஏன் இங்கே வந்தான்?"

"அவர்களுக்கு நவாபு அங்கீகாரம் அளித்திருக்கிறார்!"

"ஏன் செய்தார்?"

"நவாபின் நண்பர்கள் அவர்கள்! கூட்டாளிகள், படை கொடுப்பவர்கள்!"

"ஆமாம்! உங்களுக்கு விஷயம் புரியத் தொடங்கிவிட்டதே!"

"ஹும்!" என்று பெருமூச்சு விட்டான் வர்மன். "இருந்தும் என் மனம் கேட்கவில்லை. ஏழை பக்தர்கள் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதை அரசர்கள் எடுத்துக் கொள்வதா?"

சிந்து அதற்கு மேல் பேசவில்லை! அதுவரை கையைப் பிசைந்தும், காலை மாற்றியும், தலையைத் திருகியும் ஏதாவது சிருங்கார நயம் பண்ணிக் கொண்டிருந்த செஞ்சுகாவைப் பார்த்து,

"வா செஞ்சுகா போகலாம்!" என்றான்.

"இது அக்கா! இவருக்கு என் கிளிகளைக் காட்ட வேண்டாமா?" என்று மாடங்கள் பக்கம் தொங்கிக் கொண்டிருந்த கூண்டுகளைக் காட்ட,

"ஓகோ, இவர்கள் முகம்மதலியின் ஆட்களா?"

"அதற்கு இப்போதா நேரம்? உள்ளே என்ன பேச்சு நடக்கிறதோ, எதில் போய் முடியுமோ, நேரம் சரியில்லை வா!" என்றாள்.

பிறகு அவளே செஞ்சுகாவின் கைகளைப் பிடித்து இழுத்துப் போக,

கீழே பளிங்கான தரையில் இருவரும் சித்திர மயமான பிம்பங்களைத் தவழ விட்டுக் கொண்டே சென்றார்கள்.

தூரத்தில் திரும்பும் இடத்தில் சென்ற செஞ்சுகா,

ஒரே ஒரு பார்வையைத் திருப்பி அவன் மீது வீச, வர்மனின் மனம் அடிபட்டது போல் கருண்டது.

பின்புறத்து வாயிலை நோக்கி, சற்று ஆனந்த நடையில் அவன் சென்ற போது, "சிந்து! உன்னையும் மறக்க மாட்டேன்!" என்று மனத்துள் கூறினான்.

"உன்னையும் என்று 'உம்' போடுகிறாயே! அப்போது வேறு ஒருத்தரும் இருக்கிறாரா?" என்று மனம் கேட்டதற்கு அவனிடம் பதில் இல்லை.

உள்ளே ஆலோசனை மண்டபத்தில் தீப்பறந்து கொண்டிருந்தது.

"என்ன பணயம் கேட்கிறாரா, குவர்னர்?" என்று சீற்றமுடன் கேட்டார் கார்வேட் ராஜா.

"ஆமாம்! உங்களை நம்புவதற்கில்லை என்று எங்கள் கவுன்ஸில் முடிவெடுத்திருக்கிறது!" என்றார் ஸாவேஜ்!

கொச்சைத் தமிழில் ஸாவேஜ் பேசினார். அவசியம் நேர்ந்த போது அதைத் தமிழ்ப் படுத்திச் சொன்னார் அச்சையா.

"ஏன்! இதுவரை ஒழுங்காகத்தானே அனுப்பி வந்திருக்கிறோம்!" என்றார் அவர்.

"இப்போது கணக்கம் வந்துவிட்டதே!"

"ஐயா, ஸாவேஜ் துரையே! வெளிப்படையாகச் சொல்லவா?"

"சொல்லுங்கள்!"

"இப்போது ஆர்க்காடு சுபாவுக்கு யார் நவாப்?



முகம்மதலியா? சந்தாசாகிப்பா?"

"முகம்மதலிதான்!"

"நீங்கள் சொல்கிறீர்கள்! சந்தாசாகிப் எனக்குத்தான் பணம் சொந்தம் என்ற அவர் வேறு ஆள் அனுப்பியிருக்கிறாரே, என்னை மிரட்டியிருக்கிறாரே! நாங்கள் யாருக்குக் கொடுப்பது?"

"நீங்கள் எங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். முகம்மதலிதான் நவாப்! இடையே தோன்றிவிட்ட சந்தாசாகிப் ஒரு ஏமாற்றுக்காரர்!"

"சரி! கொடுத்து விடுகிறோம்! உங்கள் திவான் தான் இங்கே இருக்கிறாரே! கவலைப்பட வேண்டாம்!"

"சம்பத்ராவ்!" என்று அவரை அழைத்தார் ஸாவேஜ்! அதில் கடுமை சிறிது இருந்தது.

"நீங்கள் பணம் சரிவரக் கிடைக்கவில்லை என்று தானே குவர்னருக்கு எழுதியிருக்கிறீர்கள்?"

"ஆமாம் துரையே! சீனிவாசாச்சாரி என் கண்ணில் படுவதே இல்லை!" என்றார் சம்பத்ராவ்.

"இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்றார் ஸாவேஜ் ராஜாவைப் பார்த்து!

"அவரும் யாருக்குக் கொடுப்பது என்று தெரியாமல் பயப்படுகிறார் போலும்!"

"பயப்படுகிறாரா! ஆள் தென்படுவதே இல்லையாமே! எங்கே அமுல்தார்?" என்றார் ஸாவேஜ்.

அவர்களது சிப்பந்தி ஒருவன் வாசலுக்கு ஓடிப் போய்த் திருப்பதி அமுல்தார் வாசுதேவாச்சாரியை அழைத்து வந்தான்.

"பிரபு! சீனிவாசாச்சாரி தலைமறைவாகவே இருக்கிறார்!" என்றார் அவர்.

"சரி, இப்போது தான் எனக்குப் புரிய வருகிறது. இனி கவனிக்கிறேன்." என்றார் கார்வேட் ராஜா.

"உங்கள் பேச்சை நம்புவதற்கில்லை! பணத்திற்கு ஈடாகப் பணயத்தைத் தாருங்கள்! பணம் கொடுத்த பிறகு மீட்டுப் போங்கள்!"

"நான் எதைப் பணயம் கொடுப்பேன்!"

"உங்கள் பெண் செஞ்சுகாவைக் கொடுங்கள்!"

"என்ன?" என்று அதிர்ச்சியில் கேட்டார் ராஜா! "என் பெண்ணையா கேட்கிறீர்கள்?"

"ஆமாம். அவளே தான் வேண்டும். அவளுக்கு எந்தத் தீங்கும் வராமல் உத்தரவாதம் அளிக்கிறோம்."

ராஜாவின் கண்களில் நீர் வந்தது.

"ஐயா, பணயம் கேட்காதீர்கள். ஒரு வாரத்தில் அரை லட்சம் ரூபாய் அனுப்புகிறேன். மீதியைச் சீக்கிரம் அனுப்பி வைக்கிறேன்!" என்றார் உருக்கமாக.

"இல்லை. நம்புவதற்கில்லை. பணயம் கொடுங்கள். பணம் கொடுத்த பின் அழைத்துச் செல்லுங்கள்!"

"துரையே, இது நியாயமில்லை..."

ஸாவேஜ் சட்டென்று எழுந்தார்.

"இதை ஒத்துக் கொள்ளுங்கள்! இல்லாவிடில் நவாப் தங்கள் ஜமீனை வேறு ஒருவருக்குக் கொடுப்பதாக இருக்கிறார். மாலையில் புறப்படுகிறோம். அதற்குள் பதில் வேண்டும்."

ஸாவேஜ் நிற்காமலேயே சொல்லிவிட்டுப் போனார்.

சிறிது நேரத்தில் அரண்மனை அமளிதுமளி ஆகியது.

## 13 செஞ்சு பணயமாவதா?

பொம்மை ராஜுப்பாளையம் அரண்மனை ஸ்தம்பித்து விட்டது கார்வேட் ராஜாவின் குடும்பத்தார் கண்ணீரில் மிதந்தார்கள்.

மாளிகை எங்கும் கனமான சோகம் பரவியது.



மாலை வரை கார்வேட் ராஜா அல்லாடிக் கொண்டிருந்தார். பெரியவர்களிடமும் நண்பர்களிடமும் பேசினார். ஸாவேஜிடம் இருமுறை பேசினார்.

பண விஷயத்தில் ஸாவேஜ் இளகவே இல்லை.

இதுவரை வசூலான திருப்பதிப் பணத்தை ராஜா உடனே கொடுத்துவிட வேண்டும். இனி வசூலாவதை முறையே பிரம்மோற்சவம், முக்கோடி, ஆனிவரை ஆஸ்தானம் ஆகிய காலங்களில் ஒழுங்காக அனுப்பிவிட வேண்டும்.

நடைமுறையில் இது நடந்தால்தான் பணயம் திருப்பி அனுப்பப்படும்.

இதற்கு உடன்படவில்லை என்றால் ஜமீன் பறி போய்விடும்.

ராஜா இதற்கு மாற்றாக எத்தனையோ வழிகள் சொல்லியும் ஸாவேஜ் கேட்கவில்லை.

ராஜா வெகுநேரம் பலரோடு ஆலோசனை செய்தார்.

* * *

இரவு கார்வேட் ராஜா உறங்கவில்லை.

எப்படி உறங்குவார்?

மனத்தில் தீ மூண்டது போலிருந்தது.

ஸாவேஜிடம் பணயம் அனுப்ப பல மாற்று நபர்களைச் சொல்லிப் பார்த்தார். தானே பணயத்திற்கு வருவதாகவும் கூறினார்.

ஸாவேஜ் ஒத்துக் கொள்ளவில்லை.

இனி என்ன செய்ய?

தன் ஒரே மகள் செஞ்சுகாவை பணயம் அனுப்புவதா? கேவலம்! நிச்சயம் அவளை அனுப்ப முடியாது.

அதற்குப் பதில் தனது ஜமீனை இழந்தாலும் இழக்கலாம்! அதுதான் உத்தமம்!

அப்போது ஒரு நிழலாட்டம் தெரியவே, திரும்பினார்.

"அப்பா!" என்றாள் செஞ்சுகா.

"நான் பணயமாகப் போகிறேன் அப்பா. என்னைத் தைரியமாக அனுப்புங்கள்!" என்று தொடர்ந்தாள் செஞ்சுகா.

திடுக்கிட்டார் கார்வேட் ராஜா.

"என்னம்மா சொல்கிறாய்! நீ பணயம் போகிறாயா? அதற்குப் பதில் நான் ஜமீனை இழக்கிறேன்" என்றார் அவர்.

"அப்பா! ஜமீனை இழப்பது பெரியது. ஜமீனில் வாழும் மக்கள் உங்களை இழந்தால் உயிர் தரிப்பார்களா? தங்கள் ஆளுகைக்கு உட்பட்டு, நேர்மையும், நீதியையும் அனுபவிக்கும்போது, ஜமீன் கைமாறுவதை ஒப்புக் கொள்வார்களா? யோசியுங்கள்!"

"அது சரிதான் செஞ்சுகா..."

"நீங்கள் என்ன சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும்! 'ஒரு மகளை ஒருவன் பணயமாக வைக்கலாமா?' என்பீர்கள். ஏன் கூடாது? இங்கே எத்தனையோ விதத்தில் பணயம் எடுத்திருக்கிறார்கள்! அதற்கு நம்மை விதிவிலக்காகக் கொள்ளுதல் நல்லது. அப்பா, நான் போகிறேன். என்னை ஒரு அந்தப்புரத்தில் தனியாக வைத்து கௌரவமாக நடத்துவார்கள். இதில் என்ன பயம் வேண்டும். தயவு செய்து எதுவும் சொல்லாதீர்கள். அப்பா, நான் பணயமாகப் போகிறேன்!" என்றாள் செஞ்சுகா.

"இல்லை, வேண்டாம் செஞ்சுகா!"

"தயவு செய்து மறுக்காதீர்கள்! திருமலை ஆண்டவன் நமக்கு உதவி புரிவார்! என்னைச் சீக்கிரமே அவர் பணயத்திலிருந்து மீள வைப்பார்! ஏன் கவலைப்பட வேண்டும். அவர் மீது பாரத்தைப் போடுங்கள். நமது ஜமீனுக்காக என்னை இந்தத் தியாகம் செய்ய சம்மதியுங்கள்!" என்றாள் செஞ்சுகா.

* * *

போது விடிந்தது.

நகரமே ஒரு சோகத்தோடு எழுந்தது. தெருக்கள் வெறிச்சோடி நிற்க, திண்ணையெல்லாம் ஆர்வமான முகங்கள் ஏறிக் கொண்டு நின்றன.

நகரவாசிகள் எல்லோருமே தங்கள் அன்றாட வாழ்க்கையை மறந்து விட்டார்கள்.



சூரியன் உதித்து நான்கு நாழிகையில் அரண்மனை வாசலில் மூடு பல்லக்கு வந்து நின்றது.

பரிவாரங்களும் ஊழியர்களும் இரு பக்கமும் சேர்ந்து கொண்டார்கள்.

பத்துப் பொதி மாடுகளும் கூட்டத்தில் கலந்து நின்றன.

செஞ்சுகா வழியும் கண்ணீரோடு வெளியே வந்தாள்.

உள்ளே தாயார் சீதாதேவியின் பெரிய புலம்பல் நெஞ்சைக் கீறவல்லதாகக் கேட்டது.

வாசல்படிக்கு வந்த செஞ்சுகாவின் முகத்தில் உலர்ந்த முறுவல் ஒன்று வந்தது.

தந்தையின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். பிறகு வெளியே அலை பாய்ந்த ஜனங்களை நோக்கிக் கும்பிட்டாள்.

"இளவரசி வாழ்க" என்று எங்கும் ஒலிகள் எழுந்தன.

படிகளில் சாவதானத்துடன் இறங்கி மூடு பல்லக்கின் அருகில் வந்து நின்றாள்.

பிறகு அரண்மனையை நோக்கி ஒரு முறை கும்பிட்டுவிட்டுப் பல்லக்கில் ஏறிக் கொண்டாள்.

திடீரென்று முழங்கிய எக்காளங்கள், விம்மல்களை மறைத்து விட்டன.

பலர் மூர்ச்சை ஆகியிருந்தார்கள்.

பல்லக்கு சிலிர்த்துக் கொண்டு முன் செல்ல, ஊழியப் பரிவாரங்கள் பின் தொடர்ந்தன.

ஒரு ராட்சதப் பாம்பு வளைவது போல் மதில் வாயில் வழியே அது ஊர்ந்து போயிற்று.

தெருவில் சென்று அது மறையும் வரை கார்வேட் ராஜா ஆவலாக நின்று கொண்டிருந்தார்.

பிறகு முகத்தை உத்தரியத்தால் மூடிக் கொண்டு உள்ளே போனார்.

வர்மனை எல்லோரும் பிடித்து அழுத்தி வைத்திருந்தார்கள்.

அவன் நெற்றியிலும், உடம்பிலும் ஏற்கெனவே காயங்கள் உண்டாகி இருந்தன.

கண்களில் திவலைகளாகக் கண்ணீர் கொதித்துக் கொதித்து வந்தது.

"ஒரு அபலை போகிறாள். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே? விடுங்கள், என்னை!" என்று கர்ஜித்தான் வர்மன்.

அவனைப் பிடித்து அழுத்துவது கடினமாக இருந்தது.

நாலைந்து பாளையக்காரர்கள் தங்கள் முழு பலத்தையும் பிரயோகிக்க வேண்டி வந்தது. அப்படியும் அவனுடைய உதறலுக்கு ஒன்று இரண்டு பேராவது உதிர்ந்த கொண்டிருந்தார்கள். உக்கிரமானவனாக இருந்தான் அவன்.

நீண்ட தடியை உன்றிக் கொண்டு உள்ளே பத்திரமான அடி வைத்து வந்தார் வீரண்ணத் தேவர்.

அவர் முகம் கலங்கி இருக்க, அவரது பழுத்த மீசையில் இரு கண்ணீர்த் துணுக்குகள் வைரங்களாகச் சிமிட்டின.

"தம்பீ!" என்றார் தழுதழுத்த குரலில். "பதறாதே. சில சமயம் நாணலாகவும் இருக்கணும். எப்போதும் தேக்கு போல இருக்க முடியாது!" என்றார்.

வர்மன் பல்லைப் பல்லைக் கடித்து நிமிர்ந்து பார்த்தான். "பெரியவரே நன்றாகச் சொன்னீர்! பயந்தாங்கொள்ளித் தனத்திற்கு இப்படி ஒரு விளக்கம் தருகிறீரோ? தாங்கள் உண்மையில் ஒரு பாளையக்காரரா? எங்கே போயிற்று உங்கள் வீரம்? ஒரு இளம் பெண்ணைப் பணயமாகத் தூக்கிச் செல்கிறார்கள். அதுவும் நம்மவர்கள் அல்ல. பரங்கி நாய்கள்! உடனே எழுந்து அவர்களைச் சின்னாபின்னமாக்குவதை விட்டு எதிர் காலத்தைப் பார்க்க வேண்டுமாம்! ஒரு பேச்சா இது? தூ!" என்று சீறினான் அவன்.

பெரியவர் வீரண்ணத்தேவர் சலனமாகவில்லை. அதே நிதானப் பார்வையுடன் அவனைப் பார்த்தார்.

"தம்பி! உன்னைப் போல ஆத்திரமாக இருந்தவன் தான் நான்! எங்கள் ஆத்திரத்திலோ ஆர்வத்திலோ குறை காணாதே! வீரியம் பேசறதிலே காரியம் கெட்டு விடக் கூடாது! இப்போ பரங்கிக்காரனை எதிர்த்தால் என்ன நடக்கும்?"



"ஒருத்தன் திரும்பிப் போக மாட்டான்!" பளார் என்று கன்னத்தில் அறைந்தார் போல் அவன் பதில் பேசினான்.

"போகமாட்டான் உண்மை! அப்புறம் நவாபும் கம்பெனியாரும் சும்மா இருப்பார்களா?"

"வரட்டுமே சண்டைக்கு!"

மெள்ள நகைத்தார் வீரண்ணன்.

"தம்பி! சண்டை என்றால் தெருச் சண்டையா! சமுத்திரமாக வருவார்கள்! அவர்கள் பலத்தில் நாம் வெறும் தூசுகள்! நூற்றில் ஒரு பங்கு கூட இல்லை. புல்பூண்டு இல்லாமல் மறைவோம்" என்றார்.

"அதற்காகச் சும்மா இருக்கச் சொல்கிறீர்களா?"

"சும்மா இருப்பது ஒரு வெளிக் காட்சி! ஆனால் உள்ளே வேலை செய்து கொண்டிருப்போம்."

"என்ன செய்வீர்கள், சொல்லுங்கள், பார்க்கலாம்"

"ஒரு நாட்டை எழுப்பிக் கொண்டு வருவது என்பது சாதாரண காரியமல்ல. மக்களின் உணர்ச்சிக்குச் சோறு போட வேண்டும். அதற்கு இந்தப் பணயம் கொடுத்தது ஒரு சரியான விருந்து."

வெறுப்பில் ஒரு சிரிப்புச் சிரித்தான் வர்மன்.

"ஓகோ! ஒரு அபலைப் பெண்ணைப் பணயமாகக் கொடுத்தது ஒரு விருந்துக்குச் சமானமா?"

"ஒரு தத்துவத்திற்காகச் சொன்னேன். தம்பி! உண்மையில் இதைவிட மோசமானதெல்லாம் நடந்திருக்கிறதே, யாரால் என்ன செய்ய முடிந்தது? ஒரு மீனாட்சியைச் சிறையில் சாக 'வைத்தோமே! அதைவிட மோசமா இது?"

"இதற்குப் பரிகாரம் எப்போது தான் செய்யப் போகிறீர்கள்?"

"பொறு! நேரம் வரும்! இப்போது நடந்தது ஒன்றும் பெரிதல்ல! திருப்பதி வருமானத்தை அனுப்பிவிட்டால் பெண்ணை விடுதலை செய்து விடுவார்கள்! சீக்கிரம் அனுப்பி விடுவார்கள். அதுவரை பொறு!"

"பொறுக்கவா? ஒரு நிமிடம் கூடப் பொறுக்கமாட்டேன்! பணயம் போயிருப்பது ஒரு ஆண் அல்ல! பெண்! அதுவும்

இளம் பெண்! அவளைப் பணயம் அனுப்பிவிட்டு, எப்படி நாம் மானிகளாக வாழ முடியும்! பெரியவரே, நான் கேட்கிறேன், நாம் எல்லோரும் மானமுள்ளவர்கள்தானா?"

வீரண்ணர் ஒரு கணம் தயங்கினார்.

"உன்னைவிட்டால் நீ என்ன செய்வாய்?"

"போவேன்! போர் இடுவேன்!"

"ஒருத்தனாகவா?"

"ஆமாம்."

"பெண்ணை மீட்டு விடுவாயா?"

"முடியும்! எனக்கு நம்பிக்கை இருக்கிறது!"

சிரித்தார் வீரண்ணர். "உன்னைக் கொன்று போட்டு விடுவார்கள்?"

"கொல்லட்டும். அது வீர சொர்க்கம்! இப்படிப் பேடியாக இருப்பதைவிட..."

வீரண்ணர் மேலே பேசவில்லை. "இந்தா!" என்று ஒரு பாளையக்காரரை அழைத்தார்.

காதோடு காதாக, "இவனை விட்டால் பாளையக்காரர்கள் இங்கே கூடியிருப்பது அம்பலமாகிவிடும். உள்ளே போட்டு வையுங்கள்!" என்றார்.

* * *

இரவில் அந்த சிறிய அறையில் வர்மன் கோபமாக உலாவினான்.

அரை நிமிடம் கீழே உட்காரவில்லை.

அங்குமிங்கும் உலாவிக் கொண்டே இருந்தான்.

நொடிக்கு ஒரு முறை அந்தப் பலகணியில் இரும்புக் கழியைப் பலமாக இழுக்க முயன்றான்.

முகத்தில் ஒரு வெறி தோன்றியிருந்தது.

தன்னைச் சிறை செய்து விட்டார்கள் பார்த்தாயா, என்று ஒரு ஆக்ரோஷம்!

அடைபட்ட வேட்டை மிருகம் போல் துறுதுறு என்று அலைந்தான்.



நாழிகைகள் ஓட, திடீரென்று வெளிப்புறத்தில் இருட்டு சற்று சாம்பல் நிறமாவது தெரிந்தது.

ஏதோ விளக்கு வருகிறது என்று தோன்றியது.

இருட்டு சீக்கிரம் கரைந்தது.

அவனது அறையின் பலகணி முன் ஒரு கைவிளக்கு நின்றது.

அதை ஏந்திய கைகள் பூந்தளிர்களாகத் தெரிய, மேல் நிமிர்ந்ததும் திடுக்கிட்டான்.

சிந்து நின்று கொண்டிருந்தாள்.

அகலின் வெளிச்சம் அவள் முகம் மேல் பட்டாகப் படிந்தது.

கண்ணில் பட்டு சுடர்களாகத் தெரிந்தன.

இரு விழிகளையும் தளர்த்திச் சீராக ஒரு பார்வை பார்க்க, அவன் தத்தளித்து நின்றான்.

"வீரரே!" என்றாள் அவள்.

குரல் கரகரத்து இருந்தது.

அவன் பேசவில்லை.

"நீங்கள் பட்டதை எல்லாம் பார்த்தேன். கேட்டேன்! எனக்கும் மனம் தாளவில்லை!" என்றாள் அவள்.

"அம்மணி!" என்று தணிந்த குரலில் அழைத்தான் அவன்! "இது அநியாயமில்லையா? ஒரு பெண்ணை அனுப்புவது எவ்வளவு கொடுமை! அதை நீங்களும் எப்படிச் சம்மதித்தீர்கள்?" என்றான்.

"நிச்சயம் நான் சம்மதிக்கவில்லை!"

"எப்படியாகிலும் அந்தப் பரங்கிக்காரர்களை நாம் எதிர்த்திருக்க வேண்டாமா?"

"செய்திருக்க வேண்டும். நானும் அதையே விரும்புகிறேன்."

அவனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. சிந்து அவன் 'கா'ட்சியில் இருப்பது எவ்வளவு இன்பமாக இருந்தது.

"இவர்கள் என்னை இப்படிச் செய்து விட்டார்களே! கதவைத் திறவுங்கள் அம்மணி. நான் சீக்கிரமே போய்

அவர்களைச் சந்தித்து..."

"வீரரே! நீங்கள் ஒருத்தராக என்ன செய்வீர்கள்! ஆபத்து ஆயிற்றே!"

"ஏதாவது செய்வேன்! இங்கே பேடியாக இருப்பதை விட... ஐயோ! அம்மணி நீங்கள் எல்லோரும் எப்படி செஞ்சுகாவை மறந்தீர்கள்! அந்த இளம்தளிரை எப்படிப் புறக்கணித்தீர்கள்?"

"இல்லை, வீரரே! புறக்கணிக்கவில்லை!"

"எல்லோரும் சும்மா இருக்கிறீர்களே! தயவு செய்து அம்மணி என்னைத் திறந்து விடுங்கள். நான் போகிறேன். என்னால் இதைப் பொறுக்க முடியாது!"

அவள் சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள்.

பிறகு, "ஐயா, அப்புறம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டீரே?" என்றாள்.

"மாட்டேன்."

"இங்குள்ள பாளையக்காரரையும் காட்டிக் கொடுக்க மாட்டீரே?"

"மாட்டேன்!"

"ஒரே ஒரு வேண்டுகோள்! முரட்டுத்தனமாக உங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடாது. எனக்கு சத்தியம் செய்யுங்கள்."

"இப்படி ஒரு நிபந்தனையா?"

"ஆமாம். உயிருக்கு ஆபத்து என்று வரும் வேளையில் நீங்கள் வளைந்து கொடுக்க வேண்டும். சம்மதமா..."

"சம்மதம், திறவுங்கள்!"

"சத்தியம் செய்யுங்கள்!"

அவள் கதவைத் திறந்தாள். வர்மன் பீறிக் கொண்டு வெளியே பாய்ந்தான்.

"வருகிறேன் அம்மணி!" என்று கூறிக் கொண்டே விரைவாக இருளில் மறைந்து போனான்.

## 14. வந்தார் ராபர்ட் கிளைவ்!

பதினெட்டாம் நூற்றாண்டின் அந்த மத்திய காலங்களில் ராஜரீகம் என்பது அழுக்குத் துணியை விட அழுக்காகவும், கந்தல் துணியை விட சர்வ கந்தலாகவும் இருந்தது.

டில்லியில் பலவீனமான மொகலாய அரசு, மத்தியில் அவர்கள் பிரதிநிதியாக மற்றொரு பலவீன நிஜாம் அரசு.

தெற்கே அவர்கள் பிரதிநிதியாக இருக்க ஆர்க்காடு சுபாவின் நவாப் அரசு!

இந்த நவாப் அரசுக்கு உட்பட்டவர்கள் தான் தமிழ் பேசும் நாட்டில் உள்ள சிற்றரசர்கள் எல்லாம்.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சி, தென் சீமைப்பாளையங்கள்,
ஆகிய எல்லாமே குட்டிக் குட்டி அரசுகள்.

இவர்களாவது சச்சரவின்றி இருக்கிறார்களா என்று பார்த்தால் இவர்களும் இல்லை. இவர்களிடையே போட்டி, பொறாமை. மற்றவனது இடங்களை அபகரிக்க விரும்பும் மண் ஆசை!

தட்டிக் கேட்க ஒரு பெரிய கோல் இல்லாததால் நிஜாமிலிருந்து, கீழே சிற்றரசுகள் வரை அநேகமாகப் பாதி, முக்கால் சுதந்திரர்களாகவோ, அல்லது முழுச் சுதந்திரர்களாகவோ இருந்தார்கள்.

ஆர்க்காட்டு சுபாவுக்கான பதவிச் சண்டை தான் தென்னகத்தை அப்போது வெகுவாகப் பீடித்திருந்தது. சந்தா சாகிப்பும் முகம்மதலியும்தான் அந்தச் சண்டைக்கு காரணங்களாக விளங்கினார்கள்.

முகம்மது அலி தனது தந்தைக்கு நேர் வாரிசு. சந்தாசாகிப்போ தந்தையின் ஆசை நாயகிக்குப் பிறந்த வாரிசு.

இவர்கள் ஒருவர்க்கொருவர் பதவிக்காகச் சண்டை போட்டார்கள்.

இதற்காக தங்கள் உதவிக்கு, வியாபாரிகளாக வந்த பிரெஞ்சு ஆங்கிலேயர்களை இழுக்கப் போக அவர்களும் தென்னக ராஜரீகத்தில் நுழைந்து விட,

நாடு புதிய அலை துடிப்புகளில் அல்லோலப்பட ஆரம்பித்தது.

* * *

இருபத்தாறு வயது இளைஞன் ராபர்ட் கிளைவ் அந்தச் சூறாவளியைக் கண்டு சிறிது அச்சப்பட்டான். கொம்பு சுற்றி கீழ் திசையிலிருந்து அடித்தது மழை மேகங்கள். ஏராளத்தில் சூழ்ந்திருந்தன.

ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன இந்தியா வந்து. இது போல சூறாவளியைப் பார்த்ததில்லை. மரங்களை மூட்டோடு பிடுங்கிக் கொண்டிருந்தன.

ஆட்கள் நிற்க முடியவில்லை! சுருட்டித் தூர எறிவது போல் இருந்தது.

சூறாவளி தணிவதாகவும் இல்லை! நிமிடத்திற்கு நிமிடம் கூடிக் கொண்டிருந்தது.

இவ்வளவும் ஆர்க்காட்டுக்கு ஒரு காதம் இருக்கும் போது தோன்றிவிட்டது. அதுதான் சோதனையாக இருந்தது.

ஜான் மோரிஸ் என்ற கேப்டன் கிளைவிடம் வந்தான். "ஸர்! இப்போது என்ன செய்ய? குதிரைகள் தள்ளாடுகின்றன. சிப்பாய்களும் தவிக்கிறார்கள். வழியெல்லாம் மரங்கள் விழுந்து கிடக்கின்றன. மழை வேறு வந்து கொண்டிருக்கிறது!" என்றான்.

கிளைவ் அவனைக் கூர்மையாகப் பார்த்தான். "நாம் போய்க் கொண்டிருக்கிறோம். நிறுத்தம் கிடையாது!" என்றான் கண்டிப்பாக.

"எஸ், ஸர்!" என்று ஒரு உத்தாரம் பெற்றவன் கூறி வணக்கம் கொடுத்து ஜரூராகத் திரும்பிப் போனான்.

கிளைவ் தனது குதிரையை இழுத்து பிடித்து, படை பூராவையும் பார்த்தான்.

சின்னஞ் சிறு பட்டாளம்!



பெறப்பட்டது
சென்னை-600 008

புயலின் உக்கிரம் அதை மோதிக் கொண்டிருக்க, குதிரைகள் தள்ளாடின. பொதி மாடுகள் தத்தளித்தன. ஊழியர்கள் சுமைகளோடு கீழே குனிந்தார்கள். அவ்வப்போது தூறல் விழ, அத்தனை சிப்பாய்கள் உடைகளும் நனைந்து ஒட்டிப் போயின.

பல்லக்குகளை மடித்து விட்டார்கள். புயலில் எதிர்த்துப் போக முடியவில்லை. வெறுமையான தனுகக் கொம்புடன், எலும்புக் கூடு போல் ஊர்ந்தன அவை.

கிளைவ் பல்லைக் கடித்துக் கொண்டான்.

அந்தப் படை பூராவையும் சரித்திரத்தில் புகழ் பெற்றதாகச் செய்ய முடியுமா?

அதைத்தான் விரும்பியிருந்தான் அவன்.

அந்தப் படை எடுப்பே அவனது யோசனைதான்.

திருச்சிக் கோட்டையில் முகம்மதலி இருக்க, அதை விடாமல் முற்றுகை போட்டுக் கொண்டிருந்தார் சந்தா சாகிப்!

அந்த முற்றுகையைத் தளர்த்துவதற்கு ராபர்ட் கிளைவ் ஒரு தந்திர யோசனையைக் கம்பெனியாருக்குத் தெரிவித்திருந்தார்.

பதிலுக்கு சந்தாசாகிப்பின் கோட்டையான ஆர்க்காட்டை அவர்கள் (இங்கிலீஷ்காரர்கள்) தாக்கினால், சந்தா சாகிப் பயந்து போய்த் தமது தலைநகரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி வருவார்! அதன் மூலம் திருச்சிராப்பள்ளி முற்றுகையைத் தளர்த்தி விடலாம் என்பது கிளைவ் யோசனை!

கம்பெனிக் கவுன்ஸிலர்களும் அதை ஒத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அல்பமான படைதான் கிளைவுக்குக் கிடைத்திருந்தது. இதை வைத்து ஒரு அசகாய காரியத்தைச் செய்ய முடியுமா?

இங்கிலீஷ் வியாபாரக் கம்பெனியின் குமாஸ்தாவாக இருந்தவன் கிளைவ். திடமான மனம்! உறுதியான நம்பிக்கை! இவை இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைப்பவன்.

இந்தப் புயலிலும் துணிந்து போக வேண்டும் என்று கூறிவிட்டான்.

படையும் அவன் உத்தரவுக்குக் கீழ்ப் படிந்தது. எந்தத் தயக்கமும் இல்லாமல் போக ஆரம்பித்தது.

சாலையெல்லாம் மரங்கள் விழுந்து கிடந்தன. போகும் வழி சகதிப்பாதையாக இருந்தது. அங்கங்கே நொடியும், பள்ளமும் சோதனை செய்தன.

இருப்பினும் கிளைவின் ஆணைப்படி கீழ்ப்படிந்து படை ஆர்க்காட்டை நோக்கிச் சென்றது.

ஆர்க்காட்டில் அப்போது நவாபின் சிறுபடை ஒன்று இருந்தது. 1100 பேர்கள் கொண்டது.

அவர்கள் தான் கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

நவாப் சந்தா சாகிப்பின் ஏனைய படைகள் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிடப் போயிருந்தன.

கிளைவின் படை வரும் செய்தி ஒற்றர்கள் மூலம் ஏற்கெனவே ஆர்க்காடுக்கு போய்விட்டது.

கோட்டைத் தளகர்த்தர் சிறிது திகைப்பு அடைந்தார். இதுபோன்ற ஒரு சூழ்நிலையை அவர் எதிர்பார்க்கவில்லை. அந்தப் படையில் வெள்ளையர்கள் 200 பேர் வந்தார்கள் என்ற செய்தி சற்றுக் கலவரப்படுத்தியது.

நன்றாகச் சண்டை செய்வார்கள் அவர்கள். சட்ட திட்டங்களுக்கு வணங்கி நடப்பவர்கள் அவர்கள். ஒரு ஆணைக்குக் கீழ்ப்படிந்து என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் என்று ஆர்க்காட்டு படைக்குத் தோன்றியது.

ஆனால் முதல் நாள் (ஆகஸ்டு 21, 1751) புயல் வந்ததால் வெள்ளையர் படை வராது என்று அவர்கள் நம்பினார்கள். படையை அந்தப் புயல் சின்னாபின்னம் ஆக்கிவிடும் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால் எல்லா எதிர்பார்ப்பையும் மீறி, புயலின் கடுமையையும் ஏற்றுக் கொண்டு வெள்ளையர் படை வருகிறது என்பது அவர்களைக் கலவரப்படுத்தியது.

குறிப்பாக புயல் வந்தால் யாரும் படையை நகர்த்த மாட்டார்கள்! அங்கேயே பாதுகாப்பாகத் தங்கிவிடுவார்கள்.



எனவே, வெள்ளையர் படை அந்த வழக்கத்தை மீறியும் நடை போட்டு வருகிறது என்று தெரிந்தது. அவர்களது அந்த மன உறுதியே ஆர்க்காட்டுத் தளகர்த்தரின் திட்டத்தைக் குலைத்து விட்டது.

ஆங்கிலேயரைத் தம்மால் எதிர்க்க முடியாது என்று நவாப் படையினரிடையே ஒரு கிலி வந்து விட்டது.

கோட்டைக்குள் இருந்தால் ஆபத்து என்று நினைத்தார் தளபதி. ஆட்சேதமும், பொருட் சேதமும் அதிகமாக ஏற்படும் என்று நம்பினார். எனவே தமது படையை அழைத்து, கோட்டையைத் தவிர்த்துவிட்டு, ஆர்க்காட்டுக்கு வெளியே போய்த் தண்டு இறங்கினார்.

ஆர்க்காட்டின் தெற்கே தொலைவில் ஒரு சிறு கோயிலை அடுத்து கிளைவ் படைகள் திரும்பும் போது, "மிஸ்டர் கிளைவ்!" என்று குரல் கேட்டது.

கிளைவ் திரும்பிய போது அந்தப் பழைய சைவக் கோயிலின் இடிந்த மதில் இடுக்கு வழியே ஸாவேஜ் கையை ஆட்டினார்.

"இங்கே எப்போது வந்தீர்கள்?" என்று கிளைவ் தனது குதிரையை நிறுத்தினான்.

"கோயிலுக்குள் ஒரு பரிவாரமே இருக்கிறது" என்று சொல்லி மதிலைத் தாண்டி வந்தான் ஸாவேஜ்.

பொம்மைராஜுப் பாளையம் போனதையும், அங்கு நடந்த விஷயங்களையும் விரிவாக வர்ணித்தான்.

கிளைவ் ஆழ்ந்து அவனைப் பார்த்து, "கடவுளின் மீது பொறுப்பை போட்டு விட்டு ஆர்க்காட்டுக்கு போகப் போகிறேன். எனக்கு என்ன நடக்கும் என்று தெரியாது! அதனால் பணம் நிச்சயமாக வருமா, சொல்லுங்கள்!" என்றான்.

"அதனால்தானே பணயம் பிடித்து வந்திருக்கிறோம்" என்றார் ஸாவேஜின் தூதுவர் ஜேம்ஸ்.

"ஹூம் இந்தியர்கள் எதிலும் அதிக விசுவாசம் வைப்பதில்லை! தங்கள் சுயநல அக்கறை நிறைவேற வேண்டும் என்றால், தங்கள் சொந்த மகளைக் கூட இழக்கத் தயாராக இருப்பார்கள்!" என்றான்.

ஜேம்ஸ் பேசவில்லை.

"நீங்கள் பின்னால் வாருங்கள்! கோட்டையை நான் முதலில் பிடிக்கட்டும். பிறகு எல்லோரும் சேர்ந்தே நுழையலாம்!" என்று கூறினான்.

* * *

செஞ்சுகா அந்தக் கோயிலின் அம்மனைக் கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள்.

பிரகாரங்களில் பரிவாரம் தங்கி இருந்தது.

இப்போதுதான் தாய் தந்தையரை விட்டு வந்த வருத்தம் தெரிநதது.

பணயமாகப் போவதற்கு அவள் ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கலாம்.

ஆனால் அது தனது தந்தையின் ஜமீனுக்கே பாதகமாக முடியும்.

எனவே ஆட்சேபணை எதுவுமின்றி ஒரு தியாகத்துக்குத் தயார் ஆனாள்.

அம்மனை வலம் வந்துவிட்டு வெளியே வந்ததும், ஸாவேஜ் வாயிலில் வந்து நின்றார்.

"இளவரசி! நீங்கள் பல்லக்கில் ஏறலாம்! புறப்படப் போகிறோம்!" என்றார்.

படிகளில் காலை வைத்து செஞ்சுகா இறங்கினாள்.

பரிவாரம் இப்போது வரிசைப்பட்டு நின்றது.

முக மண்டபத்து அருகே பல்லக்கு உட்கார்ந்திருந்திருந்தது.

செஞ்சுகா சலனமில்லாத மனத்துடன் அதை நோக்கிச் சென்றாள்.

மற்ற காரியங்களைக் கவனிக்க ஸாவேஜ் போய் விட்டான்.

பல்லக்கை அடையுமுன், "செஞ்சுகா!" என்று குரல் கேட்டுத் திரும்பினாள்.

தொனி குறைவாகக் கேட்ட குரல் அது. எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை.



சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அப்போது தான், கோயில் கூரைக்கு மேலே அந்த முகப்பு பொம்மைகள் அருகில் ஒரு முகம் தெரிவது தெரிந்தது.

ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

வர்மனின் முகம் அது.

ஏதோ சைகை செய்து கொண்டிருந்தான்.

என்ன சொல்ல விரும்புகிறான்?

## 15. பரிசல் கரை சேர்ந்தது

"செஞ்சுகா" என்ற குரல் கேட்க, அந்தப் பெண் மின்னல் விரைவில் திரும்பிப் பார்க்க. கோயிலின் மேல் தட்டோட்டியில் வர்மன் பாதிக் கண்ணீருடன் அவனை நோக்கி யாரும் காணாதவிதமாய்ப் பிராகாரம் வரும்படி ஒரு ஜாடை கொடுத்தான்.

மெல்லிய சுட்டு விரலை முகவாயில் புதைத்தாள் அவள்.

அங்குமிங்கும் கள்ளப் பார்வையைத் திருப்பிச் சிறிது நேரம் யோசித்தாள். பிறகு எதையோ மறந்தவள் போல் உள்ளே அவசரமாக ஒரு ஜதியில் போனாள்.

ஏதோ மர்மத்தை உணர்ந்த ஸாவேஜ் குழுவின் ரிச்சார்ட் ப்ரின்ஸ் என்ற இளைஞர் அவள் பின்னால் நடந்து போக

புடரிப் பக்கம் ஏற்பட்ட குறுகுறுப்பால் செஞ்சுகா அறிந்து கொண்டாள்.

உள்ளே நிற்கும் துவார பாலகர்களை வேண்டுமென்றே வணங்கிடுவது போல் ஜாடையாக ப்ரின்ஸைக் கண்டு கொண்டு விட்டுச் சிறிது நேரம் காத்திருந்து ப்ரின்ஸ் திரும்பிப் போகவில்லை என்று தெரிந்ததும், தயக்கத்துடன்

அவளாகத் திரும்பிப் பல்லக்கை நோக்கிப் போனாள். போனதும் பெருமூச்சுடன் நின்றாள். தரையைக் கீறினாள். பிறகு வர்மன் எங்கிருந்தாவது அவளைக் கவனித்துக் கொண்டிருப்பான் என்று நம்பி வலது கையை மேலே தூக்கி வளைகள் முழங்கை வழிய மென்மை அபிநயமாக 'வருகிறேன்' என்பதை உணர்த்தினாள்.

பல்லக்கில் ஏறியதும் அது புறப்பட்டது.

பரிவாரங்கள் சலனமாகிப் பின் தொடர்ந்தன.

ராஜ வழியைச் சீக்கிரம் பிடித்துத் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன.

கன்னிகாம்பாபுரம், அமிர்தபுரம் எல்லாம் கடந்து நடுப் பகலில் சோளிங்கபுரத்தில் தண்டு இறங்கினார்கள்.

பகல் உணவை உண்டு விட்டுத் திரும்பப் புறப்படும் போது, செஞ்சுகா சோளிங்கபுரத்து நரசிங்க தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தாள்.

"பகவானே! என் தந்தைக்கு எந்தத் தீங்கும் நேரிடக் கூடாது. என் பெற்றோர்களைக் காப்பாற்று" என்றாள் மனம் உருக.

இருட்டும்போது ராணிப்பேட்டை அடுத்து பாலாற்றங்கரையை அடைந்தார்கள். ஆற்றில் வெள்ளம் வந்திருந்தது.

மறுகரையில் ஆர்க்காடு இருந்ததால் எதிரியின் வேவுகாரர்களும் ஆயுதக்காரர்களும் இருப்பார்கள் என்ற பயம்.

எனவே பரிசல் துறைக்குக் கிழக்கே ஓசையில்லாமல் ஒரு தோப்பில் தண்டு இறங்கினார்கள்.

வெள்ளைக்காரர்கள் தயார் நிலையில் இருந்தார்கள். கையில் பிஸ்டலும் உடைவாளுமாக நடந்தார்கள்.

ஜான் ஸாவேஜுக்கு ஒரு கவலை இருந்தது. கிளைவ் ஆர்க்காட்டைப் பிடித்திருப்பாரா? மாட்டாரா?

இதற்குள் ஒற்றன் யாராவது வந்திருக்க வேண்டும். வரவில்லை.

ஐந்நூறு பேரை மட்டும் வைத்து, ஆர்க்காட்டைப் பிடிக்க முடியுமோ?



ஆர்க்காட்டில் சந்தா சாகிப் 1000 சிப்பாய்களை வைத்திருப்பதாகக் கேள்வி.

அப்படியே ஆர்க்காட்டைப் பிடித்து விட்டாலும் சரி, அதனால் திருச்சிராப்பள்ளி முற்றுகையின் உக்கிரம் குறையும் என்று கிளைவ் நம்பினார்.

அதைப் புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை) கவுன்ஸிலும் ஒத்துக் கொண்டுவிட்டது.

ஆர்க்காடு பணிந்து விட்டதா?

அல்லது கிளைவ் வெளியில் நிற்கிறாரா?

இருட்டில் கரை ஓரமாக உளவு பார்க்க ஸாவேஜின் ஆட்கள் இருமருங்கும் போயிருந்தார்கள்.

கிழக்கே அரை நாழிகை தூரத்தில் ராமய்யனும், பலராமய்யனும் இங்கிலீஷ் சிப்பாய் கும்பல் ஒன்றைப் பார்த்ததும் திடுக்கிட்டார்கள்.

விசாரித்ததில் கிளைவுக்கு உதவிக்காகப் பதினெட்டு பவுண்ட் பீரங்கிகளைச் சென்னை கம்பெனியார் அனுப்பியிருந்தார்கள்.

ஆற்றில் வெள்ளம் போனதாலும், எதிர்க்கரையில் என்ன நடக்கிறது என்று தெரியாததாலும் இங்கேயே காத்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது.

செய்தி கேட்டதும் ஸாவேஜ் ஓடோடி வந்து சென்னையிலிருந்து வந்த கேப்டன் லெனாக்ஸைச் சந்தித்தார்.

லெனாக்ஸ் மொத்தம் இரண்டு பீரங்கிகளைக் கொண்டு வந்திருந்தார். கிளைவ் கேட்டதன் பேரில் கம்பெனி நிர்வாகம் அவைகளை அனுப்பித்திருக்கின்றன. பகலிலேயே அவர்கள் வந்து விட்டார்கள்.

ஸாவேஜ் தமது சகாக்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அவரது ஆணையின் பேரில் ஐந்தாறு பரிசல் ஓட்டிகள் குடிசைகளிலிருந்து அழைத்து வரப்பட்டார்கள். இந்த இருட்டில் பரிசல் விடுவதில் ஆபத்து உண்டா என்று கேட்டார்கள். ஆபத்து இல்லை. ஆனால் ஓட்டுவது கடினம் என்று இழுத்தார்கள்.

ஸாவேஜ் அதிகப் பணம் தருவேன் என்று சொன்னதும் இணங்கினார்கள்.

இங்கிலீஷ்காரர்கள் இரண்டு பரிசல்களிலும் செஞ்சுகா, அவள் தாதி ஒரு பரிசலிலும், இதர முக்கிய ஊழியர்கள் இரண்டு பரிசலிலும் ஏற்றப்பட்டார்கள்.

ஏனையவர்கள் திரும்பி விடலாம் என்று உத்தரவு இடப்பட்டது.

அக்கரை நிலைமை தெரிந்த பிறகு பீரங்கிகளை நகர்த்தலாம் என்று ஏற்பாடு ஆயிற்று.

அது ஒரு ஊமையான இருட்டு! இரண்டே தினங்களுக்கு முன் புயல் அடித்ததால் மழை ஏகமாகப் பெய்து பாலாறு சேறாறு மாதிரி ஓடியது. ஒரே வேகமான பிரவாகம். சுழிப்பும் இழிப்புமாக ஓடியதில் ஒருவித தணிந்த, ஆனால் உறுமல் போல் இரைச்சல்! இருட்டில் அதைப் பார்ப்பதற்கே அச்சமாக இருந்தது.

ஆகாயம் இருட்டியிருந்தாலும் நட்சத்திர வெளிச்சம் ஒரு ஊமை மினுப்பில் தெரிந்தது.

செஞ்சுகாவும் அவளது தாதியும் பரிசலில் ஏற அது கிளம்பியது.

பரிசல்கார இளைஞன் தனது நீண்ட கழியால் ஆற்று மணல் படுகையில் நுனியை ஊன்றித் தனது பலத்தால் பரிசலைத் தள்ளிக் கொண்டிருந்தான்.

ஆற்றின் ஓரங்களைத் தாண்டி நடுவுக்குப் போன போது நீர் ஓடும் வேகம் மிகையானது என்று தெரிந்தது.

பரிசல்கள் ஒன்றுக்கொன்று விலகின. ஆற்று வேகம் வேறு இழுத்துச் செல்ல செஞ்சுகாவின் பரிசல் சுற்றிக் கொண்டு கிழக்கே பாய்ந்தது.

பரிசல்காரன் முயன்றும் முடியவில்லை.

அப்போது பிரவாகத்தில் ஒரு கறுத்த தலை மிதந்து வருவது போல் இருந்தது.

பரிசல்காரன் கவனிக்குமுன், நீரில் நீந்தி வந்த அந்த மனிதன் கக்கத்தில் தெப்பக் கட்டையோடு பரிசலில் ஏறினான்.



பரிசல் ஆபத்தாகத் தொட்டில் ஆட, அந்த மனிதன் பரிசல்காரனைத் தண்ணீரை நோக்கித் தள்ளினான். "யோவ்" என்று கூவிக் கொண்டு தண்ணீரில் அவன் விழ, அவனை நோக்கித் தெப்பக் கட்டையை எறிந்தான். பிறகு கழியை எடுத்துப் பரிசலைக் கிழக்காக விருட்டென்று விட்டுக் கொண்டு போக, .

சொட்டச் சொட்ட நிற்கும் அவன் வர்மன் என்று அறிந்து செஞ்சுகா திடுக்கிட்டாள்.

அருகில் இருந்த தாதி வாய் புதைத்து மற்ற பரிசல்கள் எங்கே என்று பார்த்தாள்.

இருட்டில் எதுவும் தெரியாமல் போக, ஏதோ விபரீதம் நடக்கிறது என்று புரிந்து கொண்டாள்.

வர்மன் கிழக்கே அரை நாழிகை சென்று பரிசலைக் கரையில் ஒதுக்கினான்.

"இளவரசி, இறங்கிவிடுங்கள், தப்பித்தீர்கள்!" என்று சொன்ன போது, செஞ்சுகா இருட்டில் வாய் பேசாது உட்கார்ந்திருந்தாள்.

ஆச்சரியத்துடன் அவன் பார்க்க,

"ஐயா, நீங்கள் செய்தது பிடிக்கவில்லை. நான் இறங்கப் போவதில்லை" என்றாள் கம்பீரமாக. அவள் குரலில் இருந்த உறுதியைப் பார்த்துத் திகைத்து அவளை நோக்கி வந்தான் வர்மன்.

* * *

ஆர்க்காடு 1751-ல் ஒரு தலைநகர அந்தஸ்தில் லட்சம் ஜனத் தொகையுடன் பெரிதாக இருந்தது.

அதில் கோட்டைப் பகுதி தனியாக இருந்தது. கோட்டைக்குள் நாலாயிரம் அளவு ஜனங்கள் இருந்தார்கள்.

இங்கிலீஷ் படை வந்த போது உண்மையாகவோ, பொய்யாகவோ, ஜனங்கள் அவர்களை ஆரவாரமாக வரவேற்றார்கள்.

அங்கங்கு மலர்களை அள்ளி வீசினார்கள். பலர் பழங்களைக் கொண்டு வந்து எதிர்ப்பட்ட சிப்பாய் கையில் கொடுத்தார்கள்.

கிளைவின் இருபது வெள்ளைக்கார அதிகாரிகளுக்கும் அது ஆச்சரியமாக இருந்தது.

இவர்கள் இப்படி வரவேற்கிறார்களே பின்னால் குழியைத் தோண்டுவார்களோ?

இல்லை. இவர்களுக்குச் சந்தா சாகிப்பை பிடிக்கவில்லை. அதனால்தான் நம்மை வரவேற்கிறார்கள் என்று நினைத்தனர் சிலர்.

கோட்டை திறந்தபடி கிடந்தது. அதன் பாதுகாப்பில் இருந்த அத்தனை வீரர்களும் வெளியே போய் விட்டார்கள்.

கோட்டைக்குள் நுழைந்த கிளைவ் அவசரமாகக் கொத்தளங்களையும் காவல் மாடங்களையும் பார்வை இட்டான். உள்ளே சுரங்க வழி ஏதாவது இருக்கிறதா என்று எல்லா இடங்களையும் பரிசோதித்துவிட்டு, கடைசியில் கோட்டைக்கதவுகளை மூடச் சொன்னான்.

பிரும்மாண்ட இரும்புக்கதவு மூடப்பட்டது.

பிறகு தமது தளகர்த்தர்களுடன் அவசர ஆலோசனையில் இறங்கினான்.

நகரத்துக்கு வெளியே போய்விட்டதே ஆர்க்காட்டுப் படை! ஏதாவது ராஜ தந்திரமாக இருக்குமோ! திடீரென்று தாக்குவார்களோ? அல்லது வேறு திட்டம் வகுத்திருப்பார்களோ?

"எத்தனை சிப்பாய்கள் அவர்களுக்கு?" என்றான் கிளைவ்.

"ஸர்! இங்கே தவசிப் பிள்ளைகளை விசாரித்து விட்டேன். மொத்தம் 1100 சிப்பாய்கள்தான்!" என்றான் லாம்பர்ட்.

"பீரங்கி இருக்கிறதா?"

"சின்னக் குழல் பீரங்கி இரண்டு இருக்கிறதாம்."

"அவ்வளவுதானே! இன்னும் நமக்குப் பீரங்கி வந்து சேரவில்லை, பார்!" என்று அங்கலாய்த்தான் கிளைவ்.

"இதற்குள் வந்திருக்க வேண்டும். நகரத்துக்கு வெளியே ஆர்க்காட்டுப் படையைப் பார்த்துத் தயங்குகிறார்களோ என்னவோ?"

"உளவுக்காரர்களை அனுப்பி விட்டீர்களா?"



"அப்போதே போய் விட்டார்கள்!"

"பர்ட்டன்!" என்றான் கிளைவ். மீசை வைத்த பர்ட்டன் ஏற்கெனவே கணக்குக் குறிப்பேட்டுடன் இருந்தான்.

"பர்ட்டன்! கோட்டையில் ஐந்து பகுதிகள் சரியாக இல்லை! கட்டுமானம் வேண்டும். இல்லாவிட்டால் எதிரி தாக்கினால் உடைந்துவிடும். உடனே இந்த வேலையை ஆரம்பிக்கிறோம். ஒரு வேளை எதிரி நம்மை முற்றுகையிட்டால் தாங்க முடியுமா?"

பர்ட்டன் உடனே பதில் சொல்லவில்லை. கிளைவின் நேர் முகத்தில் பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளே மனக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

"ஸர்! இரண்டே வாரங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியும். அதற்கு மேல் வசதி கிடையாது. ஜியார்ஜ் கோட்டை (சென்னை) யிலிருந்து உதவி வந்தால் உண்டு"

"அவர்களே திண்டாடுகிறார்களே! எங்கே அனுப்பப் போகிறார்கள்?"

"அப்படியானால் முற்றுகையைத் தாக்குப் பிடிக்க முடியாது!"

"திருப்பதி பணம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்!" என்றான் கிளைவ்.

"எந்தக் காலத்துக்கு வரப் போகிறது?"

"இல்லை, இனித் தப்ப முடியாது. ஸாவேஜ் துரை பொம்மைராஜு பாளையம் போயிருக்கிறார். பணம் இங்கே எப்படியும் வரும்."

"வந்தால் தான் ஆயிற்று!"

"சங்கர்ராவ்!" என்று இந்தியத் தளபதியை அழைத்தான்.

"எஸ் ஸர்!"

இங்கிலீஷ் கோட்டுப் போட்டு, பச்சைத் தலைப்பாகை அணிந்திருந்தார்.

"கோட்டைக்குள்ளே இருக்கிற ஜனத்திற்கு மளிகைச் சாமான் இருக்கிறதா, அதை விசாரிக்க வேண்டுமே!"

"விசாரிக்கிறேன். இங்கே கோட்டை வீடு ஒவ்வொன்றிலும் சேமிப்புக் கிடங்கு உண்டு. ஆனால்..."

கிளைவ் புருவத்தை உயர்த்தினான்.

"வெளியிலிருந்து இனி எதுவும் வரவொட்டாதபடி செய்து விடுவார்கள்."

"ஓகோ! வெளியே இருக்கும் ஆர்க்காட்டுப் படையைக் கூறுகிறீர்களா?"

"ஆமாம்! அவர்கள் நமது விநியோகத் தடத்தைத் துண்டித்து விடுவார்கள்!"

"அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்" என்றான் லாம்பர்ட்.

கிளைவ் நெற்றியில் சுருக்கம்.

"அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள்?"

"ஊருக்கும் ஆற்றுக்கும் இடையே!"

"அவர்களைத் தாக்கினால் என்ன?"

பலரும் அதை ஆமோதித்தார்கள்.

## 16. திருமலைப்பெருமாள் செழித்த விதம்

காலையில் செஞ்சுக்கா கலக்கமான கண்களுடன் வர்மனிடம் விவாதித்துக் கொண்டிருந்தாள்.

"ஐயா! நீங்கள் செய்தது தவறு. என்னைத் தப்புவித்திருக்கக் கூடாது. தாங்கள் எனக்குச் செய்தது உதவி அல்ல!" என்று வருத்தமுடன் கூற,

வர்மன் ஸ்தம்பித்து நின்றான்.

"தேவி! தாங்களா இப்படிக் கூறுகிறீர்கள்?" என்றான்.

"ஆமாம், வீரரே! என்னை அபகரித்து விட்டது பெரிய வீரமா? நானே கூட இவர்களை ஏமாற்றி ஓடியிருக்கலாமே! அப்புறம் என் தந்தை கொடுத்த வாக்கு என்னாவது?"



என்றாள் செஞ்சுகா.

காலைப் பசும் வெய்யில் இளம் பொன் போல எங்கும் சிதற, அசப்பில் அவள் ஒரு பிரதிமம் போல விகசித்தாள். சுற்றிலும் மாமரச் சோலை மின்னும் இலைகளாக அடர்ந்திருந்தது. ஆர்க்காட்டுக்குக் கிழக்கே ஒரு காத தூரத்தில் செங்கிப் பாளையம் என்ற சிற்றூரில் அவர்கள் இருந்தார்கள்.

அங்கே தான் இரவில் அவர்கள் பரிசில் ஒதுங்கியது.

அதுவரை உற்சாகத்தில் இருந்த வர்மன் கண்களை நிதானமாக்கி அவள் மீது வைத்தான்.

"தேவி! ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?" என்றான் தழதழப்புடன்.

"ஆமாம், ஐயா! தாங்கள் இப்போது செய்த காரியம் அனைத்தும் அனர்த்தமே! சிந்தித்துப் பார்த்தீர்களா?"

"எப்படி அனர்த்தம், தேவி?" என்றான் அவன்.

"என் தந்தை இதை விரும்புவாரா?"

"அவர் விருப்பம் இதில் என்ன இருக்கிறது? ஒரு தந்தை தன் மகளைப் பணயமாக அனுப்பலாமா?"

"அவர் சாதாரணத் தந்தை அல்ல, ஐயா! ஒரு ஜமீனுக்கு அதிபதி!"

"அதனால் என்ன?"

மெள்ள நகைத்தாள் அவள்.

"நாடு என்று வந்தால் வீட்டைத் தியாகம் பண்ண வேண்டும்."

அவன் திகைத்தான்.

"ஆமாம், வீரரே! நாட்டுக்கு நலமையானால் வீட்டைத் துறக்கலாம். என் தந்தை அதைத்தான் செய்திருக்கிறார்."

"நாட்டுக்கு இப்போது என்ன நன்மை?"

"திருப்பதி என்னும் 'திரு' எங்கள் ஜமீனில் தான் இருக்கிறது. இந்த மாபெரும் பொக்கிஷத்தை அவர் காப்பாற்ற வேண்டாமா?"

"உங்களை அனுப்புவதால் எப்படிக் காப்பாற்றப் போகிறார்!"

"காலம் ஏதாவது செய்கிறதா என்று பார்ப்பார்! நவாபுகளின் பதவிச் சண்டையில் யார் வெற்றி பெறுவார்கள் என்று கவனிப்பார். அதற்குமுன் திருமலை என்னும் அந்தத் 'திருவை' வாரி இறைத்து வீண் விரயம் செய்ய மாட்டார். அத்தனையும் மக்கள் சொத்து ஆயிற்றே! அதை இந்த நவாபு யுத்தங்களில் செலவு ஆவதற்கு விடுவார்களோ?"

"ஓகோ! நவாபு முடிவு தெரியும்வரை நீங்கள் பணயமாக இருப்பீர்களோ?"

"அது ஒரு ராஜ யுக்தி. அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்?"

"தேவி! நன்றாகக் கூறுகிறீர்கள்! யுத்தம் முடிந்து, முடிவு தெரிந்து விட்டால் மாத்திரம் உங்கள் திருப்பதித் 'திரு'வைக் காப்பாற்ற முடியுமோ?"

மெள்ள நகைத்தாள் அவள்.

"ஐயா! 'திரு' என்றால் வெறும் செல்வம் மட்டுமல்ல, சீர்மை, அழகு, செழிப்பு என்று எத்தனையோ பொருள் உண்டு. இதைக் குறித்துத்தான் வைணவப் பெரியவர் ராமானுஜர், திருவரங்கத்தைத் திருவரங்கத் 'திரு' என்று குறிப்பிட்டார். திருவரங்கம் என்பதே அவருக்கு ஒரு செல்வம்!"

"இளவரசி! நான் அதிகம் படித்தவனல்ல!"

"நானும் பிரமாதமாகக் கற்கவில்லை. கேள்விப்பட்டதே அதிகம். ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் இந்தத் திருமலைத் 'திரு'வை அழிவிலிருந்து காப்பாற்றியவர் யார் தெரியுமா?"

"தெரியாது."

"அதே ராமானுஜர்தான்! காடாகவும் வனமாகவும் இருந்த இந்த வேங்கிட மலையைப் நந்தவனமாக்கி புஷ்பமாக்கி வைத்தவர் அவர்தான், வீரரே!"

"எனக்குத் தெரியாது, இளவரசி!"

"திருமலை என்னும் இந்த வேங்கிட மலை மேல் அர்ச்சகர் தினம் ஏறி வருவதே கஷ்டம்! சந்திரகிரி



பாரிசத்தில் அர்ச்சகரும், இதர கோவில் பரிவாரங்களும் தங்கி, தினமும் மலை ஏறி சுவாமிக்கு வழிபாடு செய்து வந்தார்கள் அந்நாளில்! சந்திரகிரி வழியாக ஏறுவது கடினம்! செங்குத்தான இறக்கம். மழை நாளில் ஓடைகள் ஓடி வரும். வழுக்கும். இத்தனை இடர்ப்பாடுகளும் போதாது என்று, மலை ஏறித் தொடர்ந்து பத்து நாள் வேலை செய்தவர்கள், நிச்சயம் கொடிய ஜுரத்துக்கு (கொசுக்கள் தொல்லையால் எழுந்த மலேரியா நோய் என்பது பின்னால் வந்தவர்களின் கண்டுபிடிப்பு!) ஆளாவார்கள்."

"ஓகோ! திருமலை மேலே யாரும் தங்கமாட்டார்களா?"

"சொற்பப் பேர்தான் தங்குவார்கள்... அவர்கள் யாவும் துறந்தவர்களாகவும் கடவுளர் கைங்கரியமே வாழ்க்கையில் முக்கியம் என்று கருதுபவர்களாகவும் இருந்தார்கள். மற்ற யாரும் கொடிய ஜுரத்துக்குப் பயந்து அங்கே தங்க மாட்டார்கள். தினமும் அடிவாரத்திலிருந்து மேலே போய்ச் சேவைகள் செய்து விட்டு இறங்கி விடுவார்கள். ஆனால் இதற்குக் கூட மகத்தான சோதனைகள் தோன்றியதால் யாருமே திருமலைக் கோயில் கைங்கரியத்தை மனமுவந்து ஏற்றுக் கொள்ள முன் வரவில்லை."

"அப்படியானால் கோயில் க்ஷீணித்திருக்குமே!"

"அதைத்தான் நானும் சொன்னேன். திருமலை என்னும் 'திரு' ராமானுஜர் காலத்தில் க்ஷீணித்து மோச நிலையில் இருந்தது. அதை அவர்தான் சீர்திருத்தம் செய்து செப்பனிட்டார்!" என்றாள் செஞ்சுகா.

செஞ்சுகாவுக்கு அழகு வன்மை மட்டுமல்ல, சொல்வன்மையும் இருப்பது கண்டு அதிசயப்பட்டான் வர்மன். எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாள்!... கேட்கக் கேட்கச் சுவையாக இருக்கிறதே!

"ராமானுஜர் எப்படித் தான் சீர்திருத்தம் செய்தார் இளவரசி?" என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

"மலையடிவாரத்தில் திருப்பதி என்று ஊரை ஸ்தாபித்தவரே அவர்!"

"அப்படியா?"

"ஆமாம்! கோயிலும் கட்டி நான்கு மாட வீதிகளோடு ஊரையும் ஸ்தாபித்தார். சந்திரகிரி மலையடிவாரத்தை விட இந்த இடம் வசதியாக இருந்தது. அர்ச்சகர்களையும் இதர பரிவாரங்களையும் இங்கே குடியேற்றினார். அது மட்டுமல்ல! அப்போதெல்லாம் கோயிலை அடுத்தால் காடு தான்! பயங்கரமான வனம்! அந்த வனத்தைத் திருத்தி நந்தவனம் ஆக்கியவரும் ராமானுஜர்தான்!"

"அப்படியா?" என்று ஆச்சரியமுடன் கேட்டான் வர்மன்.

"ஆமாம்! பெருமாளுக்குத் தினமும் நடத்த வேண்டிய புஷ்பக் கைங்கரியம் நடத்த முடியாமல் போகிறது என்பதை உணர்ந்து காரணம் என்னவென்று யோசித்தார் அந்த மகான்! அடிவாரத்திலிருந்து தான் மேலே புஷ்பங்கள் போய் வந்தன. அவற்றை எடுத்துச் செல்லச் சமயங்களில் பரிவாரங்கள் அகப்பட மாட்டார்கள். இதற்காக ராமானுஜர், மலை மேலேயே அதுவும் கோயிலைச் சுற்றியே நந்தவனம் ஏற்படுத்தத் தீர்மானித்தார்."

"அது முடியுமா? மலைமேல் தான் யாரும் தங்க மாட்டார்கள், என்றீர்களே!"

"ஆமாம். கொடிய ஜுரம் வந்தாலும் வரட்டும், நீ போய்த் தங்கு! பகவானுக்குப் புஷ்பக் கைங்கரியம் செய்!" என்று தமது சீடன் அனந்தாழ்வானை அனுப்பித்தார்.

"அவர் போய்த் தங்கினாரா?"

"தங்கினாரா? மனைவியோடு தங்கி நந்தவனத்தையும் செழிக்க வைத்து, பெருமாளுக்குக் குறைவற புஷ்பங்கள் கிடைக்கும்படி செய்தார்."

அந்த வைணவ மகானின் பல வேறு தரப்பட்ட சேவைகளைச் சில கணங்கள் வரை மனத்தில் நினைத்துப் பார்த்தான் வர்மன்.

"அப்படியெல்லாம் இந்தத் திருமலைத் 'திரு'வை க்ஷீணத்திலிருந்து காப்பாற்றியது மட்டுமல்ல, அது மேலும் மேலும் வளர்வதற்கு வழி வகுத்தார். அந்த வைணவப் பெரியவர். அவரும், அவர் வழி வந்தோரும் பட்ட அரும்பாடுகளினால்தான் இன்று திருமலைக் கோயிலும் செழித்திருக்கிறது. திருப்பதியும் செழித்திருக்கிறது. கோயிலுக்கு இந்த வருஷத்தின் வருமானம் தெரியுமா?"



"உங்கள் தந்தை பேசிக் கொண்டிருந்தார் அதைப் பற்றி!"

"உண்டியலும், நில வருமானமும் சேர்ந்து இரண்டு லட்ச ரூபாய்!" (கி.பி. 1751-ல் கணக்கிடப்பட்ட வருமானம்.)

"அப்போதே கேள்விப்பட்டு மலைத்துவிட்டேன்!"

"மலைத்துப் பிரயோசனமில்லை! இதைக் காப்பாற்றி மேலும் மேலும் திருமலைத் 'திரு'வை நாம் வளர்க்க வேண்டாமா?"

"ஆமாம், இளவரசி!"

"அந்த வேலையில் தான் ஈடுபட்டிருக்கிறார், என் தந்தையார்! திருமலையின் 'திரு' அநியாயப்பட்டவர் கையில் போய்விடக் கூடாது. நல்லவரிடம் போனால் தான் அந்தக் கோயிலுக்கு நன்மை பிறக்கும். திருமலைச் செல்வமும் செழிக்கும். எனவே இந்த நவாபு சண்டையைக் கருவியாக உபயோகித்துக் கொண்டு, திருமலையின் திரவியத்தை யாருக்கும் கொடாமல் இருக்கிறார். இனியும் அப்படியே இருக்க விரும்புகிறார். இதனால் தான் என்னைப் பணயமாக அனுப்பித் தனது குடும்பத்தில் ஒரு தற்காலிக சோகம் ஏற்பட்டாலும் பொருட்படுத்தாது, திருமலைச் செல்வத்தைத் தான் காக்க வேண்டும் என்று இருக்கிறார், புரிந்ததா, வீரரே!"

வர்மனின் கண்கள் அப்போது நிறைந்திருந்தன.

அவன் கண் முன்னால் ஒரு பெரிய சித்திரத்தைச் செஞ்சுகா எழுதிக் காண்பித்தது போல் இருந்தது.

"புரிந்தது, இளவரசி! எனினும்..." இழுத்தான் அவன்.

"என்ன சொல்லுங்கள்!"

"பணயம் என்றால் வேறு யாராவது ஒரு ஆண் மகனைக் கூட வைத்துக் கொள்ளலாம். தங்களை வைத்துக் கொள்வது பிடிக்கவில்லை. நிச்சயம் இதற்கு உடன் படேன்!"

அழுத்தத்துடன் கூறும் போது கண்களில் நீர் பனித்துவிட்டது.

"வீரரே!" என்றாள் அவள். "என்னைக் காப்பாற்றி எங்கே கொண்டு போவீர், அதைச் சொல்லுங்கள்!"

"உங்கள் தந்தையிடமே!" என்றான் அவன் தழதழப்புடன்.

"சரி! அப்போது இங்கிலீஷ்காரர்கள், சும்மா விடுவார்களா? நவாபுதான் சும்மா விடுவாரா? படைகளை அனுப்பி என்னை மீண்டும் பெற முயற்சி செய்ய மாட்டார்களா? அதுமட்டுமல்ல, இந்த ஜமீனை எடுத்து மற்றவரிடம் கொடுத்து விட மாட்டார்களா? அன்றைக்கே பாப்கான் சாகிப் ஜமீனை ஏற்கத் தயாராக வந்திருந்தாரே, அவரிடம் எங்கள் ஜமீனும், திருமலையும் போக வேண்டுமா?"

அவள் கேள்விகள் அவன் மனத்தில் அம்பு போல் சொறுகியது.

அந்தச் சிறுமி எத்தனை விஸ்தாரமா ராஜரிகத்தைப் பார்க்கிறாள். எனினும், வர்மன் மனம் கேட்காமல் போக, வெகு நேரம் வாதித்துப் பார்த்தான்.

ஆனால் கடைசியில் செஞ்சுகா சபதமாகக் கூறிவிட்டாள். அவளுக்கு அவன் நன்மை செய்வதானால், நிச்சயம் அவன் அவளை ஜான் ஸாவேஜிடம் மீண்டும் அழைத்துப் போய் ஒப்படைக்க வேண்டும். அவன் விரும்பாவிடில் அவளே அவரைத் தேடிப் போகத் தயாராக இருந்தாள். ஆமாம், நிச்சயம்.

மாலை ஆகும் போது, அவர்கள் ஆர்க்காட்டை நெருங்கினார்கள்.

செஞ்சுகா வாடகைப் பல்லக்கில் வந்தாள். வர்மனும் தாதியும் நடந்து வந்தார்கள்.

பாலாற்றுக் கரையில் கூடாரங்களில் தண்டு இறங்கியிருந்த படைவீரர்கள் அவர்களைத் தூரத்திலிருந்தே கண்டு கொண்டார்கள்.

அவர்கள் ஆர்க்காட்டுக் கோட்டையிலிருந்து இங்கிலீஷ்காரருக்குப் பயந்து வெளியே வந்த சந்தா சாகிப் படையினார்.

படையின் ஐந்து வீரர் குழு விரைந்து சென்று செஞ்சுகா, வர்மனைப் பிடித்து வந்து தங்கள் தளபதி கூடாரத்தில் கொண்டு நிறுத்தினார்கள்.

தளபதி செஞ்சுகாவின் தோற்றத்தை நோக்கி, அரச வம்சம் என்று நினைத்து, "நீங்கள் யார்?" என்று கேட்டான்.



"பொம்மராஜு ப்பாளையம் இளவரசி!" என்றாள் அவள்.

"என்ன?" என்று அதிசயித்தான் அவன்.

அடுத்த கணம் அவன் செய்த காரியம் திடுக்கிடும் படி இருந்தது.

## 17. உன்னையும் என்னையும் சேர்த்தது விதி!

தன் முன் நிற்கும் இளம் பெண் பொம்மராஜு பாளையம் இளவரசி என்று தெரிந்ததும், ஆர்க்காட்டு கோட்டைக் காவல் தளபதி குலிகான் அவளை உடனே ஆசனத்தில் அமர்த்தி ராஜ உபசரணைகள் செய்தான். அவளிடமிருந்து விவரங்கள் தெரிந்த பிறகு, "ஆகா, ஆபத்தில் சிக்கி இருக்கிறீர்களே! இருங்கள்! எங்கள் நவாபுக்குச் செய்தி அனுப்புகிறேன்!" என்று சொல்லி அவளுக்குத் தனிக் கூடாரம் அடித்து அதில் அவளைத் தங்க வைத்தான்.

செஞ்சுகா பகலெல்லாம் மனம புழுங்கினாள். "எங்கேயோ போக வேண்டியவள் எங்கேயோ வந்து விட்டோமே, இது புதுச் சிக்கலை உண்டாக்கும் போலிருக்கிறதே" என்று நினைத்து, அந்தி விழுந்த தருவாயில் கூடாரத்திலிருந்து எட்டிப் பார்க்க,

வெளியே உள்ள கரம்பை மேட்டில் அடர்ந்த கிளைகளோடு வளர்ந்திருந்த நாவல் மரத்தின் கீழ் வர்மன் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

கூடாரத்தை விட்டு வெளியே வந்து சுற்றி வர நட்டிருந்த கோரைப் புல்வேலிக்கு !அருகே நின்று, "வீரரே!" என்று மெள்ள அழைத்தாள்.

வர்மன் ஒரு கணம் திகைத்து அங்குமிங்கும் பார்த்து, செஞ்சுகாவைக் கண்டு மெள்ள எழுந்து வந்து வேலிக்கு அப்பால் சற்று எட்டத்தில் நின்றான்.

சிவந்த விசிறியாக அந்தி ரேகை விரிந்து கொள்ள,

குருனாகப் பொட்டுத் தைத்தாற்போல் இரு குறு நட்சத்திரங்கள் சுருக்கென்று பிறந்து மின்னத் தொடங்கின.

செஞ்சுகாவை அந்த நிதானத்தில் பார்த்ததில்லை. சுறுசுறு என்று நெருப்புப் பொறி போல் துள்ளிக் கொண்டிருப்பாள். கண்கள் இரண்டும் கெண்டை ஜோடி போல் நொடி நேரம் சும்மா இராது.

இங்கே எப்படி இப்படி நிதானத்தில், அமைதியில் சலனமின்றி இருந்தாள்!

கண்கள் ஆகாயம் போல் விரிந்து அவனை நோக்கி இருந்தன.

எங்கும் மெல்லிய பட்டுப் போன்ற ஒளி உதிர்ந்திருக்க, அவள் அந்தக் கூடாரப் பின்னணியில் சித்திரம் போல நின்றாள்.

"இளவரசி!" என்றான் அவன்.

செஞ்சுகா ஒரு நீண்ட மூச்சை விட்டு விட்டு, "வீரரே! வாழ்க்கையைப் பார்த்தீர்களா?" என்றாள். வார்த்தைகள் சோகத்துடன் கனமாக வந்தன. "எங்கேயோ போக நினைத்தேன். எங்கேயோ அகப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

"வருந்துகிறேன் இளவரசி! இந்தக் கதிக்கு உங்களை ஆளாக்கி விட்டேன்! நான் மட்டும் தங்கள் பரிசலைக் கடத்திக் கொண்டு போயிராவிட்டால்...?"

"அதுதான் விதி, வீரரே! விதி என்பது வெறும் இரண்டு எதிர்பாராத சம்பவங்களின் சந்திப்பு அல்ல. காலத்தைத் தோண்டிப் பார்த்தால் எத்தனையோ அடுக்கு அடுக்கான சம்பவங்கள் நிகழ்ந்து இந்த விதிச் சம்பவமாகப் பரிணமித்து விடுகிறது. நினைத்துப் பாருங்கள். நவாப் பதவிக்கு ஏன் போட்டி வர வேண்டும்? வெள்ளைக்காரர் நம் நாட்டை ஏன் தேடி வர வேண்டும்? வந்தவர்களை இரு நவாப்களும் ஆளுக்கொரு வெள்ளைக்கார இனத்தை ஏன் உதவிக்கு ஏற்றுக் கொள்ள வேண்டும்? இங்கிலீஷ்காரர்கள் ஏன்



என்னைப் பணயமாகக் கேட்க வேண்டும்? அப்படிப் பணயமாகப் போகிற இடத்தில் வாசல் வரை வந்துவிட்டு நான் ஏன் இந்த ஆர்க்காட்டுப் படையிடம் சிக்க வேண்டும்? வீரரே! விதியைத் தோண்டிக் கொண்டுப் போனால் பிரபஞ்சத்தின் ஆரம்பம் வரை போய்விடலாம்! ஒன்றின் மேல் ஒன்று சார்ந்து இருக்கிறது வீரரே!" என்றாள் அவள்.

அவள் சொல்லும் வார்த்தைகளை ஆச்சரியமான கவனமுடன் கேட்டான் அவன்.

கல்வி, கேள்விகளில் செஞ்சுகா சிறந்தவளாக இருக்க வேண்டும். ஒரு ஞானியைப் போலத் தத்துவம் பேசுகிறாளே!

"இளவரசி! நடந்ததெல்லாம் தான் விதி! நடக்க விருப்பது நம் கனவு!" என்றான் நிதானமுடன்.

செஞ்சுகா அவனை ஆழ்ந்து பார்த்தாள். அவள் விழியில் கூட 'ஆச்சரியம் துள்ளியது. வர்மனை அதிசயப் பார்வை பார்த்து,

"வீரரே! நீங்களும் நிறைய நினைக்கிறீர்கள் போல இருக்கிறதே! ஒன்று பார்த்தீர்களா? நீங்களும் நானும் சந்தித்தது கூட விதி! என் குறவஞ்சி நடனத்தை பார்த்துத் தாங்கள் ஆவேசப்பட்டது, காவலை மீறி என்னைக் காப்பாற்ற வந்தது, பரிசலைக் கடத்தியது எல்லாம் நினைத்தாலே விதிதான்! தந்தையைத் தேடி எங்கேயோ போகிறவர், எங்கேயோ அகப்பட்டு..."

அவள் வார்த்தைகளை மென்மையாக்கிக் காற்றில் விட அவன் மனமும் அவள் சொல்வதை எல்லாம் கேட்டுத் தத்தளித்தது.

உண்மையில் எங்கே போக வேண்டியவன் அவன்! தந்தையைத் தேடிப் புதுச்சேரிக்குப் போக வேண்டியவன்! ஆனால் அவனது உணர்ச்சிகள் அவனை எங்கெங்கே இழுத்து வந்து விட்டன!

போகும் இடமெல்லாம் ஏதோ ஓர் உணர்ச்சியில் சிக்கிக் கொள்கிறான். அதனால் அங்கங்கு வாழ்க்கை எனும் வாகனத்தைத் திருப்புகிறான். இங்கே வந்து இந்த இளவரசியிடம் பேசிக் கொண்டிருப்பது கூட அவனை அறியாமல் மனகள் பிரவாகமாக எழுந்துள்ள உணர்ச்சிதானே! ஆமாம்! இதுவும் உணர்ச்சிதான். இதற்கு

ஆட்பட்டுத்தானே இதுவரை நினைத்தறியாத ஆர்க்காட்டு வாசலை அவன் மிதித்திருக்கிறான். இல்லாவிடில் ஏன் இங்கே வரப் போகிறான்?

இன்னொன்று! இந்த உணர்ச்சியில் நூதனமாக ஒன்று பார்க்கிறான். இந்த உணர்ச்சி ஆனந்தமாக இருக்கிறது. இன்பமாக இருக்கிறது. உற்சாகமாக இருக்கிறது. மனத்தின் எல்லா நுணுக்குகளிலும் சென்று பரவசமாக நிரம்புகிறது. எங்கேயோ மிதப்பது போல இருக்கிறது.

அது மட்டுமல்ல, இதை அனுபவிக்கும் போது மேலும் மேலும் இதில் திளைக்க வேண்டும் போல இருக்கிறது. வேறு எதைப் பற்றியும் கவலைப்படத் தோன்றவில்லை.

ஒரு பெருமூச்சுடன் அவன் சொன்னான். "இளவரசி! தங்களைச் சந்தித்ததும், தங்களுக்கு உதவி செய்ய நான் முன் வந்ததும் விதியினால் இந்த விதியைப் பெரிதும் போற்றுகிறேன் இளவரசி!" என்றான் அவன்.

"தெரியும் வீரரே! உங்களுக்கு நாட்டுப் பற்று நிறைய இருக்கிறது என்று! இல்லாவிடில் இப்படி இந்த அன்னியர்களிடமிருந்து என்னைக் காப்பாற்ற முற்படுவீரா? வீராவேசத்துடன் எழுவீரா?" என்றாள் அவள்.

"வெறும் நாட்டுப் பற்று மட்டுமல்ல" என்று சொல்ல வாயெடுத்தான் அவன்.

ஆனால் வேறு என்ன அது என்று சொல்ல அவன் அதை இனம் பிரிக்கவில்லை. சிறிது மௌனமாக இருந்தான்.

பிறகு, "இளவரசி! இப்போது கூட நீங்கள் சொல்லலாம்! இந்தக் கணமே உங்களை விடுதலை பண்ணி உங்கள் தந்தையாரிடம் சமர்ப்பிக்கிறேன்" என்றான் அவன்.

"அப்படிச் செய்தால் எல்லாம் முடிந்து விடுமா, வீரரே?" என்று கேட்டாள் அவள்.

"இல்லை, இளவரசி! தங்களுக்கு ஏற்படும் இந்தக் கஷ்டங்களாவது குறையாதா? அரண்மனையில் வாழ வேண்டியவள் இப்படியா ஆற்றங்கரை ஓரம் ஒரு துணிக் கூடாரத்தில் வாழ்வது? இந்தத் துயரங்களை நீக்கத்தான்..."

"நீங்கள் அப்படி நினைப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, வீரரே! எனினும் தாங்கள் நினைப்பது போல்



இது எனக்குத் துயரம் அல்ல! தந்தை சொல்லையும், குடும்பத்தின் கீர்த்தியையும் காப்பாற்ற வேண்டி ஏற்றுக் கொள்ளும் கஷ்டங்கள் துன்பங்களே அல்ல! நம் மனத்திலேயே கஷ்டங்களை இன்பமாகவும் மாற்றலாம். துன்பமாகவும் மாற்றலாம் வீரரே! வைணவர்கள் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"என்ன இளவரசி?"

"அகப்பட்டிருக்கிறோம் என்று நினைப்பதை விட, ஆட்பட்டிருக்கிறோம் என்று நினைப்பது மேல்."

"இது என்ன தத்துவம் இளவரசி?"

"இந்த உலகில் 'அகப்பட்டிருக்கிறோம்' என்று நினைத்தால் எல்லாமே அல்லலாகத்தான் தோன்றும். அதை விட்டு உலகமே கடவுளின் லீலை, இதில் திளைத்து அவனுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்று நினைத்தால் எல்லாமே ஆனந்தமாகிவிடும். வெறும் நினைப்பிலேயே ஒன்றை இன்பமாகவும், துன்பமாகவும் மாற்றிவிடலாம் வீரரே!"

அவள் சொல்லைக் கேட்டுப் பிரமித்து நின்றான் அவன்! அது உண்மைதானே! இப்போது அவனே பல சங்கடங்களில் அகப்பட்டிருக்கும் போது, அத்தனையும் அவளுக்காகத் தானே என்று நினைக்கும் போது, எப்படித் துன்பம் உறுத்தாமல் மறைந்து இன்பம் மட்டுமே ஜனிக்கிறது!

ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அந்த நேர ரோந்துக்கு குலிகான் வருவதைப் பார்த்து மௌனமாகி விட்டான் அவன்.

* * *

மறு தினம் காலையில் ஏற்கெனவே போட்டிருந்த திட்டத்தின் படி ராபர்ட் கிளைவின் நூறு பேர்ப் படை திடீரென்று கோட்டையை விட்டு வெளியே வந்து ஊருக்கு வெளியே இருந்த ஆர்க்காட்டுப் படையை மின்னல் தாக்காகத் தாக்கியது.

லாம்பர்ட்டும், சங்கர்ராவும் அதிக பங்கு பெற்றார்கள். அரை மணி நேரம் மட்டுமே போர் நிகழ்ந்தது. கிளைவ்

படையில் பன்னிரண்டு பேரும், ஆர்க்காட்டுப் படையில் 26 பேரும் உயிர் இழந்தார்கள். அரை மணி முடிந்ததைக் குறிக்கும் தம்பட்டம் ஒலிக்க, கிளைவ் படை உடனே திரும்பிக் கோட்டையை நோக்கிப் பறந்து விட்டது. திரும்பவும் கோட்டைக்கதவுகள் அடைக்கப்பட்டன.

கிளைவ் அன்று மாலையில் தமது ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிய போது, அவரிடம் கோட்டை உளவு வழியே வந்த கடிதம் கொடுக்கப்பட்டது.

ஜான் ஸாவேஜ் அதை எழுதியிருந்தார். "பொம்மராஜுப் பாளையம் இளவரசி செஞ்சுகாவைத் திருப்பதிப் பணத்திற்காகப் பணயம் எடுத்துக் கொண்டு வரும் போது, செஞ்சுகாவை ஒரு இந்திய வீரன் கடத்திப் போய் விட்டான். தற்சமயம் அவர்கள் இருவரும் ஆர்க்காட்டுப் படையில் சரண் புகுந்திருப்பதாக உளவுச் செய்தி! கிளைவ் உடனே அந்தப் படையுடன் சண்டை போட்டு, இளவரசியை மீட்டுக் கொள்ள வேண்டும், அவசரம் மட்டுமல்ல, இது அவசியம்!"

கடிதத்தை மடித்து வைத்தான் கிளைவ்.

பிறகு அதன் விவரங்களைக் கூட்டத்தில் தெரிவித்தான்.

எல்லோரையும் பார்த்து, "உங்கள் முடிவு என்ன?" என்றான் கிளைவ்.

"நிச்சயம் அந்தப் பெண்ணை மீட்டுக் கோட்டைக்குள் கொண்டு வர வேண்டும். சந்தாசாகிப் கையில் அகப்பட்டால் ஆபத்து" என்றார்கள்.

"அப்படியானால் நாளை காலை தாக்குதல்" என்றான் கிளைவ்.

"அதுவே சரி!" என்றார்கள் அவர்கள்.

"மிஸ்டர் மார்கன் மோரிஸ்! அப்போ நீங்கள் நாளை போகிறீர்கள்" என்றான் கிளைவ் ஒரு இளைய தளகர்த்தரை நோக்கி. "உங்களோடு ஏழு தளபதிகள் வருகிறார்கள். அதே நூறு பேர்ப் படை தர முடியும்."

"வெற்றி நிச்சயம்" என்றான், மோரிஸ் புன்னகையோடு.

மறுநாள் காலை திடீர் என்று வெளிப்பட்டு அந்த 100 பேர் சேனை ஆர்க்காட்டுப் படையைத் தாக்கியது.



ஏற்கெனவே முதல் நாள் அனுபவத்தில் குலிகான் எச்சரிக்கையாக இருந்தான்.

கிளைவ் அனுப்பும் படைகள் மிகச் சிறிய படையே என்பதை அவன் புரிந்திருந்தான்.

எனவே அவர்களை வளைப்பதற்கு யோசனை கூறியிருந்தான்.

இந்த முறை கிளைவ் படை வந்ததும், ஆர்க்காட்டுப் படை தைரியமாக எதிர்த்தது.

சண்டை தொடங்கிய சில நிமிடங்களில் ஒரு தயாரான பகைவனைச் சந்திக்கிறோம் என்பதை மோரிஸ் உணர்ந்தான்.

போர் இந்த முறை விறைப்பாக நடந்தது. வாளும் ஈட்டியுமே அதிகம் உபயோகப்படுத்தப்பட்டன. கால் மணி நேரத்தில் இரண்டு வெள்ளைத் தளபதிகளும் இருபத்திரண்டு கிழக்கிந்திய கம்பெனி சிப்பாய்களும் இறந்து விட்டார்கள். ஓரளவு அதைப் புரிந்த மோரிஸ் மனம் கலங்கினான்.

இருந்தும் விடாது, செஞ்சுகாவின் கூடாரத்தையே குறி வைத்து, அவனும் அவனது சகாக்களும் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தந்திரத்தில் இரண்டு வெள்ளைத் தளபதிகளும் அவர்களின் ஒரு இந்தியச் சிப்பாயும் செஞ்சுகாவின் கூடாரத்தின் சமீபம் போய்விட்டார்கள்.

யாரோ ஒருவன் கூக்குரல் கொடுக்க, வர்மன் திடீரென்று உஷாராகி எழுந்திருந்தான்.

கை வாளைத் தூக்கியது.

வருகிறவர்களை வர்மன் ஆவேசத்தோடு சந்தித்தான். கை ஒரு சூறாவளி போலச் சஞ்சரித்தது. சண்டை தொடங்கிய ஐந்தாம் நிமிடம் ஒரு வெள்ளையன் கீழே விழுந்தான். அடுத்தவன் தாக்குப் பிடிக்க, அவனுக்கும், வர்மனுக்கும் உக்கிரப் போர் நடந்தது.

வாட்கள் இயந்திர கதியில் ஒன்றை ஒன்று மோதின, தாக்கின, வெட்டின.

"உதவி! உதவி!" என்று வெள்ளைத் தளபதி அப்போது கத்த, உடனிருந்த இந்தியச் சிப்பாய் மற்றவர்களை அழைக்க ஓடினான்.

வெள்ளைத் தளபதியை ஓடவிடா வண்ணம் வர்மன் வளைத்துச் சுற்றித் தாக்குதலைக் கணத்துக்குக் கணம் ஏற்றிக் கொண்டே போக,

கூடாராத் திரையை விலக்கி செஞ்சுகா வெளியே வந்து அந்தத் துவந்த யுத்தத்தைப் பார்க்க ஆரம்பித்தாள்.

வர்மனா இவ்வளவு அழகாகச் சண்டை செய்கிறான்.

விழிகள் விரியப் பார்த்தாள் அவள்!

## 18. செஞ்சுகா எங்கே போனாள்?

செஞ்சுகாவின் கூடாரத்துக்குச் சற்று தூரத்தில் அந்தத் துரிதச் சண்டை நடந்தது. ஆசான் கற்பித்த வித்தைகள் அத்தனையும் கை கொடுக்க, வர்மன் ஒரு போர்ப் புயலாகச் சுற்றி இரண்டு வெள்ளையர்களை வீழ்த்தி விட்டான். வாள் சண்டை அது!

இதற்குள் வெள்ளையர்களின் எக்காளம் திடீரென முழங்க, அவர்கள் சிப்பாய்களும் காவலாட்களும் விரைவாகத் திரும்பினார்கள். படை ஆர்க்காட்டுக்குள் திரும்பியது.

கிளைவுக்கு ஒரே கலக்கமாக இருந்தது. மூன்று வெள்ளை அதிகாரிகள் இறந்துவிட்டார்கள். சிப்பாய்களில் 22 பேர் கொல்லப்பட்டார்கள்.

அவன் கொண்டு வந்திருக்கும் சைனியமோ சிறியது. இதில் இனியும் ஆட்களை இழக்கக் கூடாது. கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாது என்று தீர்மானித்தார்கள்.



இதற்கிடையில் சென்னையிடம் கேட்டிருந்த 18 பவுண்டு பீரங்கிகள் வந்து விட்டன என்று உளவுச் செய்தி வந்து விட்டது. அவற்றை எப்படிக் கோட்டைக்குள் கொண்டு வருவது என்பது அவனது பிரச்னையாகப் போய்விட்டது.

ஆர்க்காட்டுக்கு வெளியே கில்லேதார் அகமத்கான் என்பவர் வர்மனை அழைத்து வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

அவன் இல்லாவிட்டால் வெள்ளையர்கள் செஞ்சுகாவைப் பறித்துப் போயிருப்பார்கள்.

வர்மன் அப்படி ஒரு தனி வீரன் என்றே யாருக்கும்தெரியாது.

"தம்பி" என்றார் கில்லேதார். "இப்படிச் சூரனாக இருக்கிறாயே. நீ இன்றிலிருந்து எங்கள் தளகர்த்தில் ஒருவன். இந்தா பிடி!" என்று உத்தரவுச் சின்னமாக வெள்ளி வாள் ஒன்றை அவனிடம் நீட்ட, "ஐயா, ஐயா!" என்று ஆட்சேபணை சொல்ல வாய் எடுத்தும் அது முடியாமல் கையில் திணிக்கப்பட்ட வாளை ஒரு மரியாதைக்காக ஏற்றுக் கொண்டான்.

பிறகு கண்ணீர் மல்க, "ஐயா! நான் வந்திருக்கும் காரணமே வேறு. நான் என் வேலைகளை முடித்து விட்டு நெல்லைச் சீமைக்கு திரும்ப வேண்டும். எனக்கு உத்தியோகம் ஏதாவது கொடுத்துத் திணற வைக்காதீர்கள்!" என்றான்.

கில்லேதார் அவனை விடவில்லை. அவனைத் தன்னோடு சம ஆசனத்தில் அமர்த்தினான். வெள்ளையரை வெற்றி கண்டதற்காக ஒரு விமரிசையை அங்கு நடத்த ஆரம்பித்தான்.

அழகிய பணிப் பெண்கள் மதுக் கோப்பைகளைக் கொண்டு வந்தார்கள்.

மழமழத்த ஜாடிகளிலிருந்து மது வார்க்கப்பட்டது.

இரண்டு நாட்டியப் பெண்கள் தோன்றி ஆட வந்தார்கள்.

வெளியே ஷெனாய் ஒலித்தது.

திமுதிமு என்று நகராக்கள் முழங்கின.

படை ஆட்கள் சந்தோஷத்தில் ஆரவாரிக்க, அந்தச் சத்தமும் ஏகோபித்த 'ஹோ'வாகக் கேட்டது.

அந்தத் தரிசை வெளி எங்கும், மகிழ்ச்சியும், பரவசமும் கொந்தளித்தன.

கில்லேதார் சாயங்காலம் வரை வர்மனை விடவில்லை.

எல்லாக் கேளிக்கைகளிலும் உடன் இருக்க வைத்தார்கள்.

அந்தி அணைந்ததும் வாண வேடிக்கைகள் கூட நடந்தன.

இரவு போஜனத்திலும் வர்மன் அவர்களுடன் இருக்க வேண்டி வந்தது.

நடுநிசி மேல் தனது கூடாரத்திற்குச் சென்று உறங்கி விட்டுக் காலையில் எழுந்து வர்மன் முதல் காரியமாகச் செஞ்சுகாவைப் பார்க்க விரைந்தான்.

அவளைப் பார்த்தால் என்ன சொல்வாள்?

அவள் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி ததும்பும்?

"வீரரே! பிரமாதமாகச் சண்டை போட்டீர். நீர் மட்டும் இல்லாவிட்டால் அந்த பரங்கியர் என்னைப் பிடித்துப் போயிருப்பார்கள்" என்று கன்னம் குழையச் சொல்லுவாள்.

ஜமீன் அரண்மனை முன் அவன் பரங்கியரோடு சண்டை போட்டதை அவள் அன்று பார்க்கவில்லையா?

கண்களை விரித்து இரண்டு நீலக் கடல்களே பார்ப்பது போல் பார்த்தாளே.

வாய் கூட ஆச்சரியத்தில் திறந்து இருந்ததே!

முகவாயில் மென்மை முறுவல் சின்ன விசிறியாய் விசிறியதே! அதில் காந்தமான கதிர்கள் வசீகரமாகக் குழைந்தனவே.

அவளே காலையில் முதல் மலர் போல உயர்ந்து, பரந்து, கம்பீரமாக நின்றாளே!

அந்தக் காட்சி அத்தனையையும் நினைவு வைத்திருந்தான் வர்மன்.

வர்மன் விரைந்தான்.



அவளது கூடாரம் எட்டத்தில் தென்பட்டதும் மனம் ஒரு தத்துக்கிளி போல் துள்ளியது.

கண்களில் கனவு கரக்க,

பெருகிவரும் உவகை எல்லாவற்றையும் சிரமத்துடன் அடக்கிக் கொண்டான்.

கூடாரத்தை அடைந்தான்.

வாசலில் பணிப் பெண்ணைக் காணவில்லை. அடுத்து அந்தத் தாதி அமர்ந்திருப்பாள். அவளையும் காணவில்லை!

சோம்பல் முறித்துக் கொண்டு ஒரு சிப்பாய் எழுந்து வந்தான்.

"உள்ளே இளவரசி இல்லையா?" என்றான்.

"இளவரசியா?" என்றான் அவன்.

"இங்கே தான் இருந்தார்களே!" என்றான் வர்மன்.

"எனக்குத் தெரியாது. நாங்கள் இங்கே நேற்று இரவு படுத்திருந்தோம்!" என்று கூறினான் அவன்.

வர்மனுக்கு ஆத்திரம் வந்தது. எங்கே அவள்?

கூடாரம் மாறிவிட்டாளா?

அல்லது ஆற்றுக்குக் குளிக்கப் போய் விட்டாளா?

எங்கே அவள்?

அருகிலுள்ள மற்றக் கூடாரங்களில் கேட்டுக் கொண்டே போக, ஒரு ஹவ்வில்தார் விஷயத்தைக் கூறினார்.

"நேற்றைக்கே தளபதி அவர்களைத் திருச்சிராப்பள்ளி அனுப்பிவிட்டார்களே!"

"திருச்சிராப்பள்ளியா? அங்கே எதற்கு?"

"நவாப் (சந்தாசாகிப்) படைகள் அங்கே தானே இருக்கின்றன."

"ஏன் அங்கே அனுப்பித்தார்?"

"இங்கே இருந்தால் ஆபத்து, வெள்ளைக்காரர்கள் அவளை அபகரித்து விடுவார்கள்! நவாபிடம் இருந்தால் அது நடக்காது. அது மட்டுமல்ல. திருப்பதிப் பணம் அவருக்கு ஒழுங்காகப் போய்ச் சேரும்."

வர்மன் கண் ஒரு கணம் இருண்டது. தரையில் நிற்க முடியவில்லை. பாதங்கள் ஆட்டம் கண்டன.

"ஐயா!" என்றான் நெஞ்சு நெகிழ. "ஏன் இப்படிச் செய்த்ரீர்கள்? என்னிடம் கேட்க வேண்டாமா? என்னைத் தான் ஜமீன்தார் அனுப்பியிருக்கிறாரே! அவருக்கு நான் எப்படிப் பதில் சொல்லுவது?" என்று பாதியும் புலம்பினான்.

"இல்லை தம்பி! இது கில்லேதார் உத்தரவு! அவரிடமே கேள்!" என்று கூறினான்.

வர்மன் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனை ஒரு ஆத்திரம் பற்றியது. 'சீ' என்று காற்றில் கையை எறிந்தான். பற்கள் கடிபட்டன. தரதர என்று நடந்தான். கில்லேதார் கூடாரத்தை அடைந்தான்.

"பிரபு! பிரபு!" என்று கூறிக் கொண்டு உள்ளே போனான். காவலாளிகள் வழிவிட்டார்கள்.

கில்லேதார் ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும் முனையை வெளியே இழுத்து, ஆச்சரிய விழியாக அவ்னை விழித்தார்.

"பிரபு! எங்கள் இளவரசியை என்ன செய்தீர்கள்?" என்றான். அவனை மீறி ஆத்திரம் அந்த வார்த்தைகளின் ஓரங்களைப் பற்றியது.

"உட்கார் தம்பி! ஏன் பதற்றமடைகிறாய்?"

"இல்லை, எனக்குத் தெரிய வேண்டும். இளவரசியை எங்கே அனுப்பினீர்கள்?"

உட்கார்ந்து கொண்டே கேட்க, கில்லேதார் புன்னகை புரிந்தார். "ஏன் தம்பி? பத்திரமான இடத்துக்கு அவளை அனுப்பியிருக்கிறேன்!"

"எங்கே?"

"எங்கள் நவாப் தண்டுக்கு!"

"அங்கே ஏன் அனுப்பினீர்கள்?"

"தம்பி! இங்கே வெள்ளையர்கள் நமக்குத் தொல்லை தருவதை நீ தான் கண்ணால் பார்த்தாயே! இங்கே இளவரசியை விட்டு வைத்திருந்தால் ஆபத்து ஆயிற்றே! அதுவும் இளவரசியை இந்த வெட்ட வெளியில் எத்தனை



நாள் பாதுகாக்க வைப்பது? மேலும் திருப்பதிப் பணம் எங்கள் நவாபுக்குச் சொந்தமாயிற்றே! அதை அவரிடம் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுக் கொள்வதன்றோ முறை! இதை எல்லாம் ஆலோசித்துத் தான் இளவரசியை நவாப் சமூகத்திற்கு அனுப்பி விட்டேன்" என்றார்.

"சரியில்லை பிரபு, சரியில்லை! தாங்கள் செய்தது சரியில்லை. என்னைக் கேட்டிருக்க வேண்டாமா?" என்றான் வர்மன் ஆத்திரமாக.

"பொறு தம்பி! சண்டை சமயம் இது. இதில் அவசரமாக நாங்கள் தீர்மானிக்க வேண்டி வந்தது. அனுப்பி விட்டோம்!" என்றார் ஒரு முறை ஹுக்காவை உறிஞ்சி.

"நான் ஒப்பவில்லை! ஒப்பவும் மாட்டேன். இந்தாருங்கள்! உங்கள் வெள்ளிவாள்! நான் உங்கள் தளகர்த்தர் அல்ல. போகிறேன். நான் இளவரசியைப் பார்த்தாக வேண்டும்!"

என்று வாளை அவர் முன்னால் படக்கென்று போட்டுவிட்டுக் கிளம்பினான் வர்மன்.

கூடார வாயிலுக்குப் போயிருக்க மாட்டான். "இந்தா தம்பி!" என்றார் கில்லேதார். திரும்பினான்.

"நீயும் அங்கே தானே போகப் போகிறாய்?"

"எங்கே?"

"திருச்சிராப்பள்ளிக்கு!"

"ஆமாம்."

"நானே உனக்குக் கடிதம் எழுதித் தருகிறேன். அப்போது தான் படைத் தண்டு அருகில் நீ போக முடியும்."

அவரை நோக்கி வந்தான் வர்மன்.

கில்லேதார் தம் கைப்பட எழுத ஆரம்பித்தார்.

வர்மன் உன்மத்தமாக வெளியே வந்தான்.

நேராக! ஓடோடி அந்தக் கூடாரத்தை அடைந்தான்.

செஞ்சுகா தங்கிய கூடாரம் அந்தச் சமயம் உள்ளே யாருமில்லை.

உள்ளே பல நிமிடங்கள் பிரமித்தது நின்றான்.

"இந்தக் காற்றைத்தானே அவளும் சுவாசித்திருப்பாள்?"

தரை மீது மிருதுவான மணல்மேல் மென்மையாக நடந்தான்.

"இந்த மண்ணில்தான் அவள் பாதங்கள் பதிந்தன."

கண்ணில் நீர் மல்கிறது.

கூடாரத்தின் உள் திரைகளைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

"ஐயா!" என்று குரல் கேட்டது. வெளியே போனான்.

ஒரு பணியாள் ஒரு குதிரையைக் கொணர்ந்திருந்தான்.

"இதை எங்கள் தளபதி தங்களிடம் கொடுக்கச் சொன்னார்."

வர்மனுக்கு மகிழ்ச்சி!

"அவருக்கு நன்றி செலுத்துகிறேன்" என்றான் அவன்.

பிறகு குதிரை அருகில் வந்து அதன் கறுப்பு மேனியை இருமுறை தட்டினான்.

குதிரை அன்போடு திரும்பிப் பார்த்தது. ஒரு துள்ளுத் துள்ளி ஏறி அமர்ந்தான். பிறகு தெற்கே நோக்கிப் பறக்க ஆரம்பித்தான்.

அந்த ஆர்க்காட்டுப் படையின் கூடாரங்களைத் தாண்டியிருக்க மாட்டான்.

"ஐயா! ஐயா!" என்று குரல் கேட்டது. பெண் குரல் அது! ஆச்சரியத்தோடு குதிரையை நிறுத்தினான்.

ஒரு துருக்கிய இளம்பெண். அவசரத்தோடு தன் முகத் துணியைக் கழுத்தில் திணித்தவாறு ஓடி வந்தாள்.

வர்மன் குதிரையிலிருந்து இறங்கினான். ஒரு பாறையை அடுத்து வந்து நின்றான்.

"ஹுஸூர்! இதைத் தங்களிடம் தரும்படி செஞ்சுகா சொன்னார்கள்...!" என்றாள்.

இருபத்திநாலு வயது இருக்கும். கண்ணில் மை தீட்டிப் பெரிதாக்கியிருந்தாள். முகம் பனிபோன்ற வெளுப்பு. காதுகளில் குழைகள் தொங்க, தன் வளைக்கைகளை நீள நீட்டி ஒரு ஓலையை அவனிடம் கொடுத்தாள்.



"நீ யார்?" என்றான் அவன்.

"நான் பணிப் பெண்! இளவரசியிடம் வேலை செய்தேன்."

வர்மன் அவசரமாக ஓலையைப் பிரித்தான்.

படிக்க ஆரம்பித்தான்.

## 19. மெள்ள எழுந்தது காதல்!

வர்மன் ஓலை நறுக்கைப் பிரிக்க, முத்தான எழுத்தாணி முத்துக்கள் உள்ளே சிதறிக் கிடந்தன.

வீரரே,

தங்களுக்கு செஞ்சுகா தெண்டன் சமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

தாங்கள் வாள் சுழற்றியதை முன்னமேயே பார்த்தவள் நான். அரண்மனை முன்னால் அந்த வெள்ளையனை என்னமாய் தவிக்க வைத்தீர்கள்?

திரும்பவும் இன்று என் கூடாரம் முன்பே பார்த்து விட்டேன்.

எனக்கு வந்த பகையை என்ன தீரமாகச் சுழற்றி அடித்தீர்கள்?

கையே சக்ராயுதமாக மாறியதே!

அனைத்துத் தேகத்தையும், முகவிலாசத்தையும் பார்த்த போது, பையத் துயின்ற பரந்தாமனே வந்து யுத்தம் செய்தது போல இருந்ததே!

இந்த அபலை பொருட்டுத் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுக்க வேண்டுமோ?

ஏதோ ஒரு சிறு ஜமீனின் சின்ன இளவரசி இவள் என்று வாளாவிராமல் அன்றிலிருந்தே என் பங்கில் இருந்து வருகிறீர், பார்த்து வருகிறேன்.

அப்படிப் பார்த்து வந்ததில்தான் என் மனத்தில் என்னையறியாத ரகசிய முளை ஒன்று கிளர்ந்திருக்கிறது.

அது எப்படிப் பரிணாமமாகி வந்தது என்பதும் தெரியாது.

ஆனால் பரிசலில் கிராமத்தில் ஒதுங்கின பிறகு நான் சொன்ன வாதங்களைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு, மறுமொழியின்றி நிசப்தமாய் நீங்கள் போனீர்களே,

அப்போது தான் முதல் முறை காற்று சிலம்பி என் இதயத்தின் திரையைத் திறந்தது.

உள்ளே கிளையும், பூவும், மொட்டுமாய் என் ரகசிய வளர்ச்சியை அப்போது தான் கண்டேன்.

வீரரே, இதுவரை குயில் கூவியதில் நான் எந்த ருசியும் கண்டேனில்லை.

ஆனால் இன்று பாலாறு ஓடும் கரையின் மாமரங்களிலிருந்து துளும்பிய குயில் கூவல்கள் ஏன் எனக்குக் கற்கண்டாய் இனிக்கின்றன.

தோப்புகளில் இளம் தளிர்களையும், மென்மலர்களையும் தழுவி வரும் இந்தத் தென்றல் இதுவரை எனக்கு இதம் தந்ததில்லை.

ஆனால் இன்று ஏன் அது மிருதுவான சுகமாய் என் மெல்லிய மேனி எங்கும் அபிஷேகிக்கிறது?

நேற்று வரை வெறும் நீரும், நிலமுமாய்த் தெரிந்த இந்த ஆறும் புல்வெளியும் ஏன் இன்று எனக்கு ஓடும் கனவாகவும், அதற்கு அமைந்த கற்பனைக் கரையாகவும் தோன்றுகிறது.

வீரரே!

என் சிந்தையை நான் அடக்க முடியவில்லை. எழுந்தால் தோன்றுகிறீர் நீர்! விழித்தால் தோன்றுகிறீர், நீர்!

என் ஒவ்வொரு நினைவின் முன்னும் பின்னும் இடையுமாய்த் தோன்றுகிறீர் நீர்!

ஆச்சரியம்.

நேற்று நான் உறங்கவில்லை.

விழிகள் ஏனோ விழித்திருக்கின்றன.



நினைவின் மென் சுருதி ஏதோ ராகத்தின் வருகைக்குக் காத்திருக்கிறது.

சுவாசம் மெல்லிதாச் சிறல் போட நிசப்த ரூபமாக நான் யாருக்கோ காத்திருக்கிறேன்.

கண்களில் இமைகள் சோகமாய் அழுந்துகின்றன.

விழியில் ஒரு பளிங்குத் திவலை ஏனோ நிரந்தரமாய் நடுங்கிக் கொண்டிருக்கிறது.

இழுத்த தந்தி போல் நடுநடுங்கும் இதயத்துடன், நான் ஆவல் மயமாய், வேட்கை மயமாய், தாப மயமாகக் காத்திருக்கிறேன்.

இவ்விதம் எப்படி மாறினேன் நான்?

இந்த நுண் உணர்வுகள் என்னிடம் எவ்விதம் குடி புகுந்தன.

வீரரே, நான் விம்மிதத்தோடு யோசித்துப் பார்க்கிறேன்.

அப்போது தான் ஒன்று புரிகிறது. அதை மனம் திறந்து கூறுகிறேன்.

எங்கள் அரண்மனையில் தாங்கள் என்று பாதம் வைத்தீரோ, அன்றே என் மனத்தில் புது நடுகைக்கு விதை விழுந்துவிட்டது. அந்த விதை முளைத்து மூவிலை விட்டுப் பூத்து, காய்த்து, இன்று மணத்து நிற்கிறதென்றால் -

அதன் காரணம் எல்லாம் தாங்கள்தான் வீரரே! தாங்களேதான்!

இதை என் மானம் தவிர்த்து, வெட்கம் விலக்கி, வெகுளி போல விண்டுரைத்து விட்டேன் நான்.

இனி எனக்குச் சுமையில்லை.

நான் பறக்கிறேன், வீரரே, நான் பறக்கிறேன்!

"பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டோம்,

கால்ஆழும்; நெஞ்சழியும்; கண் சுழலும்..."

வீரரே, நான் இதைச் சொல்லவில்லை, நம்மாழ்வாரே கூறியிருக்கிறார். வருகிறேன்.

அனந்த கோடி நமஸ்காரமிட்ட,

அடியாள்,

படித்து முடித்தான் அவன். கண்களிலிருந்து முத்துக்கள் உதிர்ந்தன. உதடுகள் மென் நடுக்கமிட்டன.

மெதுவாக மடக்கித் தனது அங்கிப் பைக்குள் பூப் போல வைத்தான்.

நிமிர்ந்து பார்த்த போது அந்தப் பணிப் பெண் கண்களில் நீர் வார்த்திருந்தது.

திடுக்கிட்டான் அவன்.

"என்ன இது?" என்றான்.

"இல்லை ஹுஸுர்! வாழ்க்கையில் நேர் எதிரே பிரேமையைப் பார்க்கும் போது என் மனம் தளும்பி நிற்கிறது!"

இமை ஓரம் துணுக்காக நின்ற திவலை உருண்டு கீழே உதிர்ந்தது.

வர்மன் அவளை அதிசயத்துடன் பார்த்தான்.

"இந்தா பெண்ணே! நீ கூட அந்த நோயில் அகப்பட்டிருந்தாயா?" என்றான் தணிந்த குரலில்.

"இல்லை, பிரபு, எனக்கு அந்தப் பாக்யம் கிடையாது!"

அவள் குரல் தழுதழுத்தது.

"ஏன்? என்ன காரணம்?"

"நான் பணிப்பெண்! அந்தப்புரத்துத் தாதி! என்னை விருப்பப்பட்டவருக்கு எல்லாம் என் அன்பைக் கொடுக்க வேண்டும். என் மனத்தை நான் தானாக யார் மீதும் படரவிடக் கூடாது" என்றாள் அவள் மெல்லிய இழையாக. ஒரு நாடியில் சோகம் தொனித்தது.

"ஆனால் ஹுஸுர்! சபையில் யார் பாடினாலும் காதல்! யார் ஆடினாலும் காதல்! அதைக் கேட்டுக் கேட்டு இப்படியும் மனம் பரவசமாகிறது. எனக்கு அது கிடைக்காவிட்டாலும் பிறருக்கு அது கிடைப்பதைப் பார்க்கும் போது மனம் பேரானந்தம் அடைகிறது! நான் வருகிறேன் பிரபு நீடுழி வாழுங்கள்."

அவள் புறப்பட்டாள்! "இருங்கள்!" என்றான், அவன். தன் பையைச் சோதித்து ஒரு வெள்ளி நாணயத்தை எடுத்து அவளிடம் அளித்தான்.



கண்களில் அதை மாறி மாறி ஒற்றிக் கொண்டு நடந்து போனாள் அவள்.

வர்மன் குதிரை ஏறினான். மீறிடும் கண்ணீர்த் துளிகள் மழைத் திவலைகள் போல உதிர்ந்தன.

அங்கங்கு இளைப்பாற நிற்கும் போதெல்லாம் அங்கியிலிருந்து ஓலையை எடுத்து மீண்டும் படித்தான். மனம் பல இடங்களில் விம்மியது. தன்னையும் ஒருத்தி நினைத்தாளா என்று நினைத்தான். அந்த நினைப்பிலேயே கண் வழிந்தது.

மனத்தில் செஞ்சுகாவைப் பார்க்க வேண்டும் என்று பெரிய ஆத்திரம் துரத்தினாலும், இரண்டாம் நாள் தான் திருச்சிராப்பள்ளியை அணுக முடிந்தது.

காரணம் வழியில் எங்கேயாவது 'செஞ்சுகா கோஷ்டியார்' தண்டு இறங்கியிருப்பார்களா என்று கவனித்து வந்தான்.

திருச்சிராப்பள்ளிக்கு வெளியே சந்தாசாகிப் படைகள் எங்கே தங்கியிருக்கின்றன என்று கேள்வி பட்டுக் காவிரியின் கிழக்கு முகத்தை நோக்கிச் சென்றான்.

தக்க தருணத்தில் தண்டுள் நுழைந்து செஞ்சுகாவைத் தேட வேண்டுமென்று யோசனை! அதற்காகக் காத்திருந்தான்.

அப்போது தான் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டைக் கோவில் அவன் பார்வையில் விழ,

மனம் பரவசமாகியது.

தாயுமானவப் பெருமானை நினைத்தான்.

"சுவாமி! தங்கள் இருப்பிடம் இன்னும் இந்தக் குடியற்று இடமாக வேண்டுமா? நல்ல வழியில் இதைத் தீர்த்து, நாட்டில் தர்மத்தை நிலை நிறுத்தக் கூடாதா?"

என்று பிரார்த்தித்தான்.

சந்தா சாகிப் படைகள் காவிரியின் ஓரம் வந்து விட்டது. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கோட்டையைச் சுற்றி அல்லவா அவை இருக்க வேண்டும்!

ஏன் இங்கே இருக்கின்றன?

அதே நேரம், இவரது படைகள் இவ்வளவு தள்ளி இருக்கும் போது கோட்டையுள் இருப்பவர்கள் ஏன் கோட்டையைத் திறந்து வெளி வரக் கூடாது?

சந்தாசாகிப்பின் தண்டை அணுகுவதே சிரமமாக இருந்தது.

நெருங்கினால் அம்புகள் வந்து விழுந்தன.

படை வீரர்கள் கண் கொத்திப் பாம்பாக இருந்தார்கள்.

இதற்கு யுக்தி என்ன செய்வது?

வெள்ளைக் கொடி தூக்கிப் போனால் ஏதோ, என்னவோ என்று அவனைத் தண்டுக்குள் அனுமதித்தாலும் அனுமதிப்பார்கள்.

அப்படிச் செய்யலாமா?

தன் பையிலிருந்து வெள்ளை வேட்டியைக் கிழித்துக் கொடியாக மாற்றி அவன் அன்று காலை புறப்பட -

ஏதோ குரல் அவனை அழைப்பது போலிருந்தது.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

ஆச்சரியத்தில் அவன் கண்கள் மலர்ந்தன.

வருவது யார்?

அந்த விழிகளை அவன் மனத்துள் பிம்பம் செய்தவனாயிற்றே? அந்த முறுவலை இதயத்தில் செதுக்கி விட்டவன் ஆயிற்றே!

அவள் தானே அவனது முதல் கனவுகளைத் திறந்து விட்டவள்!

வந்தவள் சிந்து. இப்போதும் அவளைப் பார்த்தவுடன் மனம் எப்படிப் பரவசம் கொள்கிறது.

"வீரரே!" என்றாள் அவள். "நல்ல சமயத்தில் இங்கே கிடைத்தீர்கள்! தாங்கள் என்ன செய்யவிருக்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

"அம்மணி! செஞ்சுகா இப்போது சந்தாசாகிப் படையோடு இருந்து வருகிறாள். அதைக் கண்டுபிடிக்கவே போகிறேன்" என்றான் அவன்.



"நில்லுங்கள் வீரரே! நில்லுங்கள்! அங்கே போகாதீர்கள். சந்தாசாகிப்பின் யோகம் இப்போது மாறிவிட்டது" என்றாள் சிந்து.

"அப்படியா?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் வர்மன்.

"ஆமாம்! இப்போது எதிராளி கை வலுவாகி இருக்கிறது. இந்தச் சமயம் நவாபிடம் போய் மாட்டிக் கொள்ளாதீர்கள்."

வர்மனுக்கு அந்த வார்த்தைகள் பிடிக்கவில்லை. அப்படியானால் அவன் செஞ்சுகா அந்தப் படையோடு அப்படியே கிடப்பதா?

"அம்மணி! எனக்குக் குழப்பமாக இருக்கிறது! என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறேன்!" என்றான் அவன்.

"வீரரே! நிச்சயமாய் நீர் அந்தப் படைத் தண்டுக்குள் போக முடியாது!" என்றாள் அவள்.

"ஏன்?" என்றான் அவன்.

## 20. வியாபாரி வந்தார்

அந்த நேரத்திலும் அந்த இடத்திலும் சிந்துவைக் கண்டதும் ஆச்சரியப்பட்ட வர்மன்,

சந்தாசாகிப் படை வீட்டுக்கு நீங்கள் போக முடியாது. ஆனால் நான் அங்கே அழைத்துச் செல்ல முடியும் என்று கூறினாள் அவள். அவள் கூறுவதைக் கேட்டு மேலும் ஆச்சரியம் அடைந்தான்.

"இவளுக்கு எல்லா இடத்திலும் வியாபகம் இருக்கிறதே" என்று நினைத்தான்.

"சரி! அழைத்துப் போங்கள். உங்கள் நிபந்தனைக்கு உட்படுகிறேன்!" என்றான்.

* * *

இருவரும் புறப்பட்டார்கள். போகிற வழியில் வர்மன் செஞ்சுகா பற்றிய விவரங்களைக் கூறிய வண்ணம் சென்றான்.

கோரைப் புற்கள் இருபுறமும் வளர்ந்த தடத்தின் வழியே சென்றார்கள்.

இடையில், "ஆமாம்! உங்களுக்குச் செஞ்சுகா மீது எவ்வளவு கரிசனம் இருக்கிறது!" என்றான் அவன்.

சிறிது தூரத்தில் பாதை பள்ளத்தில் இறங்கியது.

அங்கே விரிவான புல் பரப்பில் ஒரு கூடாரம், குதிரை, பொதி மாடுகள், ஊழியர்கள், காவலர்கள் சகிதம் வேன்ஸான் ராஜ் என்ற வர்த்தகர் ஒரு முக்காலியில் அமர்ந்திருந்தார்.

அவரிடம் கொண்டு போய் வர்மனை நிறுத்தினாள்.

வேன்ஸான் ராஜ் நல்ல ஆகிருதியுடன் அழகாக இருந்தார். தீர்க்கமான நாசி, எடுப்பான உதடு, பரந்த மார்புகள், நீண்ட கைகள்!

முகம் முழுச் சிவப்பு இல்லாவிடினும் ஒரு வெள்ளை மினுக்குக் காட்டியது.

கண்ணில் இந்தியத்தனம் நிறைய இருந்தது. நிறையத் தாடி வளர்ந்து தாடைகளை மூடி இருந்தது.

ஐரோப்பிய உடை தரித்துக் கையை இடுப்பில் வைத்திருந்தார்.

பரங்கியரின் வெள்ளை நிறம் மட்டுமல்ல! பல்வேறு நிறங்களைப் பார்த்திருக்கிறான்.

இவன் வெள்ளைத் தேசத்தைச் சேர்ந்தவனாக இருக்காது. வேறு ஏதாவது தேசமாக இருக்கும்!

வேன்ஸான் சிந்துவைப் பார்த்தவுடன், "போன்ஷுர்" என்று முகமன் கூறினான். "உட்காருங்க! உட்காருங்க!" என்றான்.

சிந்து புல் தரையில் அமர்ந்தாள்.

வர்மனும் அமர்ந்தான்.

"இன்னா சௌக்கியமா? நாய்க்கராஜா சௌக்கியமா? போளேகார் (பாளையக்காரர்) எல்லாம் சௌக்கியமா?



கார்வேட் ராஜா சௌக்கியமா?" என்று ஒவ்வொருத்தராகக் குசலம் விசாரித்தவாறு பேசினான் அவன்.

"இங்கே ஒரு காரியமாக வந்தோம்" என்றாள் சிந்து.

"என்ன வேணும். திமான்தே (கேளுங்கள்)" என்றான் வேன்ஸான்.

"படை வீட்டுக்கு இவர் போக வேண்டும்!" என்றாள் சிந்து.

"ஓ! வியாபாரியா?"

"இல்லை."

"ஒற்றனா?"

"நிச்சயம் இல்லை. நம்ப கார்வேட் ராஜா மகள் செஞ்சுகா இந்தப் படை வீட்டிலே இருக்காங்க!"

"ஆங்!" என்று திகிலோடு விழித்தான் வேன்ஸான். "ஏன், போனாங்க! என்ன விஷயம்?"

"பணயம் எழுதிட்டிருக்காங்க!" என்றாள் சிந்து.

விவரங்களைச் சுருக்கமாய்க் கூறினாள். வேன்ஸான் கண்களை மூடித் தாடியை வருடி விட்டான்.

"மான் திய! (என் கடவுளே)" என்றான் அவன். "என்னெல்லாம் நடக்குது! உங்க நாடு பாழாப் போகுது!"

சிந்து பதில் சொல்லவில்லை.

"அம்மா, நான் சொல்றேன் கேளுங்க! இப்போ சந்தாசாகிப் கை கொஞ்சம் கீழே இறங்குது. நேரம் சரியில்லை."

"ஏன்?" என்றாள் சிந்து.

"இங்கிலீஷ்காரன் ஆர்க்காட்டுக்குள்ளே புகுந்துக் கிட்டான் இல்லே?"

"ஆமாம்!"

"சந்தாசாகிப்பின் கபிதல் (தலைநகரம்) ஆச்சே அது! போயிட்டா அவமானமாச்சே! இப்போ என்ன செய்யப் போறார்?"

"மகன் ராஜா சாகிப்பை அங்கே அனுப்பியிருக்கார்!"

"எப்போ?"

"போய் ரெண்டு நாளாச்சு!"

"படை எத்தனை போகுது?"

"இரண்டாயிரம் சிப்பாய்!"

"அப்போ ஆர்க்காட்டைத் திருப்பிப் பிடிச்சுடுவாங்க!"

"ஆமாம்! இங்கிலீஷ் படை 500 பேர் தானே! உளவு வந்திருக்கு! இவங்க போய் அத்தனை பேரையும்

நசுக்கிடப் போறாங்க! ஆனா, இங்கே தான் நிலைமை பலவீனமாகும்."

"ஏன்?"

"ரெண்டாயிரம் போச்சுதுன்னா, இன்னும் சந்தாசாகிப் கையிலே ரெண்டாயிரம் தான் மிச்சமிருக்கும். திருச்சிராப் பள்ளிக் கோட்டை இன்னும் பிடிபடவில்லை! முகம்மதலி பலமாகத்தான் இருக்கார். இங்கிலீஷ்காரன் ராஜ தந்திரம் பண்ணறான். ஆர்க்காட்டைப் பிடிக்க போனதே, சந்தாசாகிப்பை அங்கே இழுக்கத்தான்! இங்கிலீஷ்காரன் நினைச்சது சரியாப் போச்சு. பாதிப் படை அங்கே போயாச்சு! மீதி பாதியோ இங்கே காணாது! அஞ்சு மாசமா சாகிப் (சந்தா சாகிப்) முற்றுகை போடறாரு. இந்தா பிடிச்சாச்சு, அந்தாப் பிடிச்சாச்சுன்னு சொன்னாங்க. முகம்மதலி சரணாயிடுவான்னு சொன்னாங்க! ஆனா, காலம் பாருங்க, இங்கிலீஷ்காரன் அவருக்கு உடந்தையாக வந்ததிலே எல்லாம் மாறிப் போச்சு! கோட்டைக்குள்ளே போக முடியல்லே! கோட்டையைத் தாக்கினா சாகிப் (சந்தாசாகிப்) முதுகைத் தாக்கவே இங்கிலீஷ் படை கோட்டைக்கு வெளியே சித்தமாயிருக்கு. அப்படியே இழுப்பறியா இருக்கு விஷயம்! நான் கூட பேசாமல் புதுச்சேரி போயிரலாமான்னு பார்க்கிறேன்."

"ஏங்க? வியாபாரம் என்னாகறது?"

"ஹூம்! இது ஒரு வியாபாரமா? தூப்ளே சொன்னாருன்னு வந்தேன். சாகிப் கையிலே பணமில்லை. சிப்பாய்களுக்குச் சம்பளம் கொடுக்கலை. சாகிப் என்னைக் கூப்பிட்டு உத்திரவாதம் எழுதிக் கொடுத்துச் சிப்பாய்களுக்கு அரிசி போடச் சொன்னாரு. போட்டேன். திரும்பத் திரும்பப் போடச் சொல்றாரு! பார்த்தேன். சரக்கு எடுத்துக்கிட்டு வரேன்னு வந்துட்டேன். இப்போ இங்கிலீஷ்காரன் சாமான்



வாங்கிக்கிட்டுப் போறான். அதான் இப்படி ஒதுக்கமாகவே வந்துட்டேன். டேய் முருகா, பூதேத்ய் (பாட்டில்) கொண்டா!"

சீசா வந்தது.

அதிலிருந்து செக்கச் சிவந்த திரவத்தைக் கோப்பையில் ஊற்றினான்.

அவர்களிடம் நீட்ட, அவர்கள் மறுத்ததும், "அ வோத்ர ஸாந்தே!" (உங்கள் ஆரோக்கியத்திற்காக) என்று சொல்லி ஒரு மடக்கு விழுங்கினான்.

(அந்த நாட்களில் படைகளுக்கு ராணுவமே சாப்பாடு போடாது. சம்பளம் வழங்குவதோடு சரி. அவரவர் உணவை அவரவர் தயாரித்துக் கொள்வார்கள். அவர்களுக்குப் பொருள்களை வழங்குவதற்காக வியாபாரிகளும், படைகளோடேயே செல்வார்கள். யுத்த களத்திற்கு அப்பால் தண்டு இறங்கி வியாபாரம் நடத்துவார்கள். சிப்பாய்கள் தாங்களே தங்கள் சமையலைக் கவனிப்பார்கள். அல்லது சமையல் ஊழியர்களை நியமித்துக் கொள்வார்கள். சமயங்களில் படையை விட அதன் ஊழியர்களே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். மேனாட்டவர் வந்த பிறகு தான் இந்தப் பழக்கம் சிறிது சிறிதாக மாற ஆரம்பித்தது.)

"அப்படியானால் சந்தாசாகிப் தோற்றுப் போவாரா?" என்று ஆச்சரியமுடன் கேட்டாள் சிந்து.

"தோல்வி என்பது இல்லை. முற்றுகையை விட்டு ஓட வேண்டியிருக்கும். இல்லாவிடில் இன்னொரு ஆபத்து இருக்கிறது..."

"என்ன ஆபத்து?"

"திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்கு வெளியே இங்கிலீஷ் படைகள் நிற்கின்றன. ஆற்றுக்கு அப்பால் ஸ்ரீரங்கத்தில் படை நிற்கிறது. இங்கிலீஷ்காரன் தந்திரசாலி! போகிற போக்கில் சாகிப் படையைச் சுற்றியும் தன் படையினைச் சூழ வைத்து, சாகிப் தப்பி ஓட வழியில்லாமல் பண்ணி விடுவான். சாகிப் என்னை அவசரமாக அழைத்து வர இரண்டு மூன்று முறை ஸோல்தாதுகளை (சிப்பாய்கள்) அனுப்பி வைத்தார். ஒரு கபிதான் (கேப்டன்) கூட வந்து

போனார். 'வருகிறேன்' என்று சொல்லி அனுப்பியிருக்கிறேன். இப்போது குழப்பமான நிலையில் பொலிதிக் (அரசியல்) பக்கம் தலை வைக்காமல் இருப்பது நல்லது."

சிந்து சலனத்தோடு கேட்டாள்.

"ஏன் பிரெஞ்சுக்காரர்கள் சாகிப்பிற்கு உதவவில்லையா?"

"அவர்களே புதுச்சேரியில் போதிய பலம் இல்லாது இருக்கிறார்கள்! ஒரு படை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தளபதி ஜாக்கே லா ஒரு தைரியசாலி அல்ல. ஒதுக்கலாக ஆற்று ஓரம் தண்டு இறங்கிச் சும்மா இருந்து வருகிறான்."

"அவன் படை எவ்வளவு?"

"ஐநூறு பேர்தான் இருப்பார்கள். சொற்பம் தான். இருந்தாலும், இங்கிலீஷ்காரன் போலத் தைரியம் காட்ட வேண்டாம்?"

"அப்போ நிச்சயம் இனி சாகிப் திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க முடியாது! இல்லையா துரை?"

இன்னொரு மடக்கை விழுங்கினான் வேன்ஸான்.

"இப்போது இருக்கும் சூழ்நிலையில் முடியாது. அதுமட்டுமல்ல சாகிப்பிற்கே இங்கே இருந்தால் ஆபத்து..."

சிந்து மௌனமானாள்.

* * *

**மா**லை வெயில் சாய்வாக விழத் தொடங்கியது. ஆறும் தோப்புகளும் மென்மையான மஞ்சள் ஒளியில் நனைய ஆரம்பித்தன.

வேன்ஸான் சீசாவைக் கீழே வைத்தான்.

"துரை!" என்றாள் சிந்து. "இந்த நிலையில் செஞ்சுகா இங்கே இருப்பது தவறு இல்லையா?"

"நிச்சயம் தவறு. வெற்றி எந்தப் பக்கம் திரும்புமோ தெரியாது!"

"செஞ்சுகாவை இவர் பார்க்க வேண்டும்!"

"முயற்சி செய்கிறேன் அம்மா! சிக்கலான விஷயம்!"



"நீங்கள் மனம் வைத்தால் நிச்சயம் நடக்கும்."

"மனம் நிச்சயம் வைக்கிறேன். ஆனால் சூழ்நிலை சரியில்லை."

"முடிந்தால் செஞ்சுகாவை நீங்கள் விடுவிக்கவும் வழி செய்யலாம்!"

வர்மன் இதைக் கூற, வேன்ஸான் நிமிர்ந்து அவனைப் பார்த்தான்

"விடுதலையா...?" ஒரு சிரிப்புச் சிரித்தான். "சாகிப்பிற்கு வேண்டியது இப்போது பணம். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார். பணயமாகச் செஞ்சுகா அகப்பட்ட பிறகு நிச்சயம் அவளை விடுதலை செய்ய மாட்டார்."

"அப்படியானால் அவளைப் பார்க்கவாவது செய்கிறோம்!" என்றான் வர்மன்.

வேன்ஸான் துரை சிறிது நேரம் யோசனையில் இருந்தான் பிறகு, "ம்ம்ம்" என்று சொல்லித் தனது பெரிய உடலை மேலே தூக்கினான்.

"வா தம்பி! இந்த அந்தி நேரம் தான் சிறந்தது. உள்ளே போய்ப் பார்க்கலாம். உன் உடையைக் கழற்று. எங்கள் வியாபாரி உடையைப் போட்டுக் கொள். முருகா! இவருக்கு நம்ப உடை கொண்டு கொடு. சீக்கிரம்"

உடை வந்தது. அந்த மேனாட்டு பாண்ட், சட்டைகள் அணிந்ததும் வர்மனுக்குப் புதுக் களை வந்திருந்தது.

சிந்து அவனை ஆர்வத்தோடு பார்த்தாள்.

"ம்! குதிரை ஏறு!" என்றார் வேன்ஸான். "நீங்க இங்கேயே இருங்க!" என்றான் சிந்துவை நோக்கி.

இருவரும் புறப்பட்டார்கள்.

புல் தரிசை வழியே குதிரைகளைச் செலுத்தினார்கள். மெள்ள எங்கும் இருள் விழுந்து கொண்டிருந்தது. தூரத்தில் கோட்டை சிறியதாகத் தெரிந்தது.

கோட்டைக்கு வெளியே ஆற்றங்கரையை ஒட்டி இரண்டு வெளிச்சத் திடல்கள் தெரிந்தன.

"வலதுபுற வெளிச்சத்திற்குத்தான் போகிறோம்" என்றான் வேன்ஸான்.

"இடதுபுற வெளிச்சம் என்ன?" என்றான் வர்மன்.

"அது இங்கிலீஷ் படை!" என்றான் வேன்ஸான்.

மெல்லிய ஆற்றங்கரைக் காற்றில் சிலுசிலுத்துப் போய் இருவரும் இலகுவான மனத்துடன் பிரயாணம் செய்தார்கள். சந்தாசாகிப்பின் படை வீட்டை நெருங்க, நெருங்க, அங்கே ஏதோ ஆரவாரம் கேட்பது தெரிந்தது. கூச்சலும் கூப்பாடும் கேட்பது போல் இருந்தது. தீவர்த்திகள் அங்குமிங்கும் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தன.

"தம்பி! என்னவோ குழப்பம் நடக்கிறது அங்கே!" என்றான் வேன்ஸான்.

"அப்படியானால் செஞ்சுகாவை மீட்கலாமா?" என்றான் வர்மன்.

வேன்ஸான் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"தம்பி! அவசரப்பட்டு எதையும் செய்யாதே! நீ எனக்கு வியாபார உதவியா வருகிறாய். அவ்வளவுதான். அதனால் தான் உன்னைத் தண்டுக்குள் விடுவார்கள். அங்கே போய் உன் சூரத்தனம் கீரத்தனம் எதுவும் காண்பிக்காதே! ஒரு கேள்வி உன்னைக் கேட்க வேண்டும். செஞ்சுகாவைக் காப்பாற்ற நீ மட்டுமா வந்தாய்?"

"ஆமாம்!"

"உனக்கு என்ன சொந்த அக்கறை?"

வர்மன் உடனே பதில் சொல்லவில்லை.

## 21. உன் கண்களை எப்போதும் பூஜிப்பேன்

**வர்மனும் வேன்ஸான் துரையும் கவனிக்க, சந்தா சாகிப் படை வீட்டில் ஏதோ பூசல் நிகழ்ந்து கொண்டிருந்தது.**

**சச்சரவு, கூப்பாடு, மோதல், சாடல்களின் அத்தனை துணுக்குச் சத்தங்களும் ஏகோபித்துக் காதில் விழ,**



அந்தி நேர சிவப்பு வெளிச்சமும், தரையில் எழுந்த ஏகமான தூசியும் சேர்ந்து அந்தப் பிரதேசத்தை ஒரு பனிமூட்டம் போல் காண்பித்தது.

வழக்கமாக இந்த நேரத்திற்குள், அவர்கள் நிற்கும் எல்லையில் வேவுகாரர்கள் அவர்களை நிறுத்தி விசாரித்து விட வேண்டும்.

அடுத்த எல்லையில் சிப்பாய்கள் நின்று விசாரிக்க வேண்டும்.

இரண்டு எல்லையுமே கேட்பாரற்று வெறுமையாக இருக்க,

"தம்பி! இங்கே என்ன நடக்கிறது? தெரியவில்லையே!" என்றார் வேன்ஸான்.

குதிரைகளை மெள்ள நடக்க விட்டு இருவரும் படை வீட்டை நெருங்கினார்கள்.

அமளித் துமளியின் ஆதாரக் காரணங்கள் தெரிந்தன.

இளைத்துக் கொண்டு தப்பி ஓடும் காலாள் தளபதி ஒருவனை நிறுத்தி இரண்டு மடக்குச் சாராயம் கொடுத்துக் கேட்க, அவன் அங்கு நடந்தவைகளை உற்சாகத்துடன் விளக்கினான்.

சந்தாசாகிப்பை அவசரமாகப் பார்க்க, பிரெஞ்சு கவர்னர் தூப்ளே தமது பிரதிநிதி ஆந்த்ரேயை அனுப்பியிருந்தார்.

ஆர்க்காட்டை கிளைவ் கைப்பற்றியதில் தூப்ளேக்கு ஆத்திரம்.

அது ஒரு கொடிய செயல். அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தூப்ளே ஆந்த்ரே மூலம் தெரிவித்தார்.

சந்தாசாகிப் ஏற்கெனவே கலங்கி இருந்தார். ஆர்க்காடு பறிபோவதை மிகப் பெரிய இழப்பாகக் கருதவில்லை.

அவரைப் பொறுத்தவரையில் திருச்சிராப்பள்ளிதான் நவாப் பதவியின் வெற்றிக்கு முக்கிய சின்னம்! இந்தக் கோட்டையை ஜெயித்தால், இனி எந்தக் கோட்டையும் படியும்.

தூப்ளே அந்த வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

ஆர்க்காடு தான் நவாபின் சுபா (ராஜதானி)வுக்கே முக்கிய சின்னம். அதை நிச்சயம் இழந்து விடக் கூடாது என்றார்.

"பிரெஞ்சுத் துரைகளே! நீங்கள் இங்கே வருமுன்பே நான். என் மகன் ராஜா சாகிப்பை ஆர்க்காடு அனுப்பி விட்டேன். 2000 சிப்பாய்கள் போகிறார்கள். எனது கஷ்டமான நிலையிலும் அதைச் செய்திருக்கிறேன். இனிமேல் என்னால் எதுவும் செய்வதற்கில்லை. திருச்சிராப்பள்ளி என் பெருமைக்குரிய விஷயமாகிவிட்டது. இதை விட்டு நான் போக முடியாது. நீங்கள் வேண்டுமானால் படை அனுப்புங்கள். ஆட்சேபணை இல்லை!" என்றார் சந்தாசாகிப்.

"எங்களிடம் போதிய படை இருந்தால் தூப்ளே ஏன் தயங்கப் போகிறார்? எங்கள் படைகளை எப்போதுமே இங்கிலீஷ் நாய்களுக்கு எதிராக வைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எங்களை எப்பவும் தாக்க வரலாம்! நாங்கள் தயாராகவே இருக்க வேண்டும். தவிர, பாரிஸிலிருந்து தூப்ளேக்கு அடிக்கடி தாக்கீது வருகிறது. "வியாபாரத்திற்குப் போனாயா, சண்டை செய்யப் போனாயா! சண்டையில் ஈடுபட்டு வர்த்தகப் பணத்தை எல்லாம் பாழக்குகிறாயே!" என்று கோபித்து எழுதுகிறார்கள். இரண்டு புறமும் அவருக்குத் தலைவலி" என்றார் ஆந்த்ரே!

"அப்படியானால் தூப்ளே எங்களுக்கு இனி படை அனுப்ப முடியாதா?" என்றார் சந்தாசாகிப், தாபமாக.

"இப்போது அந்த நிலையில் இல்லை" என்றார் ஆந்த்ரே.

"அப்படியானால் பணமாவது கொடுங்கள். சண்டையில் ஜெயிக்கிறோம்." என்றார் சந்தாசாகிப்.

"பொக்கிஷத்தில் பணமே மிச்சமில்லை. எல்லாம் செலவழிந்து விட்டது. புதுச்சேரியில் பாதுகாப்பு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கே பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறது. நீங்கள் தயவு செய்து ஏதாவது ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்! பிரான்சிலிருந்து தங்கம் எதிர்பார்க்கிறோம். வந்தால் உடனே உதவி செய்கிறோம்" என்றார், ஆந்த்ரே.



"எதுவும் முடியவில்லை என்றால் உங்களுக்கு நான் சினேகிதனாக இருந்து என்ன பயன்? முகம்மதலியைப் பாருங்கள்! அவருக்கு இங்கிலீஷ்காரர்கள் வேண்டிய உதவியை அளிக்கிறார்கள். அதைப் போல நீங்கள் எனக்குச் செய்ய வேண்டாமா? என் சிப்பாய்களுக்குச் சம்பளம் கூட என்னால் கொடுக்க முடியவில்லை. இங்கே மாசக் கணக்காக உட்கார்ந்திருக்கிறேன். நீங்கள் மராத்தியர் உதவியையாவது எனக்கு வாங்கித் தருவதுதானே!" என்றார் சந்தாசாகிப்.

"அவர்கள் (மராத்தியர்) பசை உள்ள பக்கம் சாய்கிறார்கள். முராரி ராவுக்குப் பல ஆட்களை அனுப்பி விட்டேன். பிரயோசனமில்லை."

"ஏன், தனிப் படைக்காரர்களையாவது என்னிடம் சேர்த்து விடுவதுதானே?"

(மராத்தியர் அந்நாளில் தனித்தனி ராணுவக் கூட்டங்களாகக் கூட உலாத்தி வந்தார்கள். அவர்களது சேவையை ஊதியம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்! தனிப்படை இத்தகைய படைதான்.)

"சரி! அவர்களுக்குக் கொடுக்கவும் பணம் வேண்டுமே! எங்கே போவது?" என்றார் ஆந்த்ரே!

"அடேயப்பா! எவ்வளவு பெரிய வர்த்தக நிர்வாகம் உங்களுடையது. உலகம் பூராவும் வியாபித்து இருக்கிறதே! இந்த உதவி செய்ய முடியாதா?"

"ஐயோ, நவாப் துரை! எங்களுக்கும் எத்தனையோ கஷ்டம் உண்டு. உலகம் பூராவும் நாங்கள் இங்கிலீஷ் காரரோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால் நீங்கள் நினைக்கிற அளவுக்கு எங்களிடம் வசதி இல்லை..."

"அப்படியானால் என்னை விடுங்கள். நானே பார்த்துக் கொள்கிறேன்."

கிட்டத்தட்ட மனஸ்தாபம் போல ஆகிவிட்ட அந்தச் சந்திப்பில் கடைசியில் ஆந்த்ரே நிச்சயம் பிரெஞ்சு உதவி இன்னும் அதிகமாக அவருக்குக் கிடைக்கும் என்று கடைசியில் வாக்குறுதி கொடுத்துவிட்டுச் சென்றார். என்ன காரணம் கொண்டும் சந்தாசாகிப்பிற்குப் பக்க பலமாகக் காவேரிக் கரையில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரெஞ்சுப்

படையைத் திரும்ப அழைக்கப் போவதில்லை. சாகிப் கவலை கொள்ள வேண்டாம் என்று கூறிச் சென்றார் ஆந்த்ரே.

பிரெஞ்சுப் பிரதிநிதி வந்திருப்பது தெரிந்து, இந்தச் சமயத்தில் கலகம் செய்தால் சம்பளத்தைப் பெறலாம் என்று சிப்பாய்கள் பூசலைக் கிளப்பியிருக்கிறார்கள். அது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

விவரங்களைக் கூறிவிட்டு அந்தக் காலாட் தலைவன் போய்விட,

வேன்ஸான் யோசித்த வண்ணம் இருந்தார்.

வர்மனுக்குச் செஞ்சுகாவின் நினைப்புத்தான் வந்தது.

பாவம்! இங்கேயும் அவள் ஒரு கூடாரத்தில் அடைபட்டுக் கஷ்டப்படுகிறாளோ?

ஆர்க்காட்டை விட இங்கே வசதிகள் குறைவாக இருக்குமோ? தன்னுடைய கதியை நினைத்துத் துக்கித்து அழுவாளோ?

அவளது மது தோய்ந்த வார்த்தைகள் அவன் மனத்தில் மீண்டும் புரண்டன. ஓலை நறுக்கில் தனது மனத்தை உருக்கி எழுதிய வார்த்தைகள்!

"போலாமா, ஐயா?" என்றான் வர்மன்.

வேன்ஸான் ஒரு மடக்கு மது குடித்து விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"தம்பி! எல்லாவற்றையும் தான் கேட்டாயே! இப்போது போனால் உனக்கு என்ன செய்தி கிடைக்கப் போகிறது?" என்றார்.

"நாம் நவாப்பையே பார்த்துக் கேட்டு விடுவோமே!" என்றான் வர்மன்.

"அது அவ்வளவு சுலபமா?"

"ஏன், உங்களுக்கு அவரை நன்றாகத் தெரியும் என்றீர்களே!"

"தெரியும் தம்பி! ஆனால் இப்போது இருக்கும் நிலையில் என்னிடமே கடன் கேட்டாலும் கேட்பார்? நான் என்ன சொல்லுவது?" என்றார் வேன்ஸான்.



"ஏதாவது பதில் சொல்லுங்கள். நான் செஞ்சுகாவைச் சீக்கிரம் பார்க்க வேண்டும், ஐயா!" என்றான் வர்மன்.

"தம்பி!" என்று நிறுத்தி அவனை ஆழ்ந்து பார்த்தான் வேன்ஸான். "அந்தப் பெண்ணின் மீது உனக்கு ஏன் அவ்வளவு ஆர்வம்?"

"ஐயா, அது தான் எனக்கும் புரியவில்லை" என்றான் வர்மன்.

விளையாட்டுக்காகச் சொல்கிறானா என்று திரும்பிப் பார்த்து, அப்படியில்லை என்று புரிந்ததும் "உன் வயது என்ன?" என்றார்.

"வயசைச் சொன்னால் என் ஆயுசு குறைந்து விடும். நான் வாலிபன்." என்றான் வர்மன். சிரித்தார் வேன்ஸான். "இந்த வயதுதான் தக்க பருவம். இதைக் கேள் தம்பி!

*"எ மாங் கேர் ஸெஸ்ர தி தோலோத்ரே வோஸிய*

*லார்ஸ்கான் நெ வெர்ரா ப்ளு ஒ ஸொலை த லு மியேர்*

*தோ ஆன் மெர், தெர்ப் ஒ ப்ரே, எ தெத் வால் ஒ ஸி ய!"*

அழகாகப் பாடினார் வேன்ஸான்.

அவருக்கு இனிய குரல் இருந்தது. அந்த வார்த்தைகள் அவனுக்கு எதுவும் புரியவில்லை. எனினும் உணர்ச்சிகரமாக வந்தது. பாடலூடே ஏதோ தனிமையான சோகமே ஒலித்தது!

"ஐயா! இதென்ன பாடல்!" என்றான் வர்மன்.

வேன்ஸான் கண்களைத் துடைத்துக் கொண்டார். "இது பிரெஞ்சுப் பாடல் தம்பி! பிலிப்தெஸ்போர்த் என்பவர் எழுதியிருக்கிறார். ஐம்பது வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்தவர். அவர் பாடல்களில் காதல் சோகமாக ஜொலிக்கும்." என்றார்.

"ஓ!" என்று கண்ணை அகல விரித்தான் வர்மன்.

"எப்போது சூரியனில் ஒளி அவிந்து போகிறதோ, கடலில் நீர் வறண்டு போகிறதோ, தீரங்களில் புற்கள் மறைகின்றனவோ, வானத்தில் தாரகைகள் இருள்கின்றனவோ, அப்போது தான் என் இதயம் உன் விழிகளைப் பூஜிப்பதை நிறுத்தும். இது தான் தம்பி இதன் அர்த்தம்!"

"ஐயா! மீண்டும் சொல்லுங்கள்!" என்று துள்ளிக் கேட்டான் வர்மன்.

வேன்ஸான் அதை மீண்டும் கூறினார்.

வர்மனின் கைகள் குதிரையின் கயிற்றுப் பிடிப்போடு நின்றன.

கண்கள், நீந்தி, நீந்தித் தூரைவெளிகளில் ஓடியது.

இதயம் இன்பமாகப் படபடத்தது.

தத்தளித்தவாறு நின்றான் அவன். "என்ன தம்பி?" என்றார் வேன்ஸான்.

"மனத்தில் எங்கேயோ சோகம் பிழிகிறது" என்றான் நெஞ்சை அழுத்திக் கொண்டு.

"பிழிகிறதா! அதுபோதும்! மூன்று எழுத்து மோகினி உன்னை ஆட்கொண்டு விட்டாள் என்று அர்த்தம்!"

வர்மன் பேசவில்லை.

"இல்லாவிட்டால் உயிரைப் புல்லாக மதித்து இங்கே வருவாயா?"

"அதென்ன மூன்று எழுத்து மோகினி ஐயா!"

"காதல்" என்றார் வேன்ஸான்.

பிரமித்தான் வர்மன்.

அதே நேரம் பூசல்களின் ஆரவாரமும் உச்சமாகிக் கொண்டிருந்தது-அவை நெருங்கியும் வந்து கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு கும்பல் அவர்கள் பக்கத்திலேயே வந்து விட்டது. அந்த இருட்டில் தீவர்த்திகளை ஏந்திக் கொண்டு, "விடாதே பிடி, கொல்லு!" என்று சத்தங்கள் கேட்டன.

"சந்தாசாகிப் ஒழிக" "நவாப் ஒழிக!" என்று மாற்றுக் குரல்களும் கேட்டன.

தீவர்த்தியுடன் வருபவர்கள் தான் சந்தாசாகிப்பின் சிப்பாய்கள் என்பது வேன்ஸானுக்கு நன்கு தெரிந்து விட்டது.

அவர் கண் முன்னால் சண்டையும் துவங்கியது.

கலகச் சிப்பாய்கள் வெறியுடன் போரிடத் தொடங்கினார்கள்.



தீவர்த்திகள் விழுவதிலிருந்து சாகிப்பின் படை திணறுவது தெரிந்தது.

திடீரென்று அவர் பார்வை படை நடுவே விழ, அங்கே சந்தாசாகிப்பே சண்டை போட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவர் இருக்கும் நிலையைப் பார்த்தால் அப்போது கஷ்டமாக இருந்தது.

"தம்பி! வாள் வைத்திருக்கிறாயே, சண்டை போடுவாயா?" என்றார் வேன்ஸான்.

"ஓ, முடியும்!" என்றான் வர்மன்.

"இதோ உனக்கு நல்ல சந்தர்ப்பம்! உன் காரியம் நிறைவேற வேண்டுமானால் நீ அவரைக் காப்பாற்று! நானும் உன்னோடு வருகிறேன்!" என்றார் வேன்ஸான்.

அடுத்த விநாடியில் இருவரும் அந்தப் பூசலுக்குள் நுழைந்தார்கள்.

நன்றாக இருட்டி விட்ட நேரம் அது. ஆகாயம் கறுத்த விதானமாகத் தெரிய சிற்சில விண்மீன்கள் சுள் என்று தெரிந்தன. சண்டையின் உக்கிரத்தினால் கூக்குரல் சிறிது மங்கி இருந்தது. அது ஒரு உறுதிச் சண்டை என்பது போல் எல்லோர் முகத்திலும், தீவிரமும், ஆவேசமும் இருந்தது. தீவர்த்தி ஒளிகள் அங்கங்கே துள்ளி விழுந்து சண்டையைத் துளித் துளிக் காட்சியாகக் காண்பித்தன.

சந்தாசாகிப் கலகக்காரர்களின் மீது குறியாக இருந்தார்.

அவரைச் சுற்றியே தாக்குதல்கள் நடந்தன.

விசுவாசச் சிப்பாய்கள் கூட அதிகம் தாக்குதலைத் தாங்க முடியாமல் ஒவ்வொருவராக உதிர்ந்து கொண்டிருந்தார்கள்.

நவாப் படுவேகத்துடன் இயங்கி எல்லோருக்கும் உற்சாகம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சீக்கிரத்தில் அந்த இளைஞன் சூறாவளி போல உட்புகுந்ததை மற்றவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

நொறுங்கிக் கொண்டிருந்த நவாபின் ஆட்கள், அவனைக் கண்டு சீக்கிரம் தெம்பு பெறத் தொடங்கினார்கள்.

குதிரையிலிருந்து இளைஞன் எந்தக் கவசமும் இல்லாமல் போரிட்டான். மாறி மாறி வீசும் ஒளி ஒன்று அவன் கத்தியுடையது! அல்லது திவர்த்தியுடையது!

ஒளியில் கத்தி அடிக்கடி மின்னலிட்ட அவசரமே அது எவ்வளவு சீக்கிரம் சுழல்கிறது என்பதைக் காண்பித்தது.

"விடாதே, பிடி கொல்லு!" என்று நவாப் பக்கப் படைகள் உற்சாகத்தோடு கூவத் தொடங்கின.

பிளவுபட்டுக் கொண்டிருந்த நவாபின் சொந்தப் பாதுகாப்பு அரண், சீக்கிரம் தனது வலுவை மீண்டும் பெற்றது.

நவாபின் அருகாமையில் வந்திருந்த கலகக்காரர்கள் அத்தனை பேரும் அடிபட்டு மாய்ந்து போனார்கள் அல்லது ஓடி விட்டார்கள்.

அந்த இளைஞன் வர்மன் களைத்து 'இனியும் கடினம்' என்று நினைக்கிற நேரத்தில் 'வெற்றி வெற்றி' என்கிற நவாப் படையின் கூக்குரல் கேட்டது.

உடம்பில் பல காயங்களுடன் வர்மன் ஒரே ஒரு கணம் நிதானித்துச் சுற்றி வரப் பார்த்தான். கலகக்காரர்கள் ஓடுவதும் சண்டை முடிவடைவதும் தெரிந்தது.

இப்போது ஒரு இருட்டு அவன் கண் முன் வியாபித்தது.

தலை சுற்றும் பிரமை ஏற்பட்டது. குதிரை மேல் இருக்க முடியவில்லை. தடாலென்று கீழே சாய்ந்தான்.

கண் திறந்தபோது கூடாரத்தில் இருப்பது தெரிந்தது.

ஆச்சரியமாக இருந்தது. பிழைத்து விட்டானா?

கூடாரத் திரையில் பகல் வெளிச்சம் பளீர் என்று அடித்தது.

உடலில் பல இடங்கள் காந்துவது இப்போது தெரிந்தது.

ஏதோ குளிர்ச்சியாக சில ஸ்பரிசங்கள் விழுந்ததும் கண்களை விசாலமாக்கினான்.

செஞ்சுகாவா அவள்? தன் மீது மருந்து தடவிக் கொண்டிருக்கிறாளே!

ஆச்சரியத்துடன் அவள் தோள் மீது கை வைத்து, "செஞ்சுகா!"



அந்தப் பெண் சிந்துவுக்கு அது தர்மசங்கடமாக இருந்தது.

அவனை ஆதரத்துடன் பார்த்தாள்.

"நான் செஞ்சுகா இல்லை" என்று சொல்லியும் அவன் கையை எடுக்கவில்லை.

மெள்ள அவள் அவன் கையைப் பற்றினாள்.

கண்களில் இரு திவலைகள் வந்தன.

## 22. மற்றொரு உள்ளம் திறக்கிறது

வர்மனின் கண்கள் இன்னும் சஞ்சலித்தன. இது செஞ்சுகாவா? வேறு பெண்ணா?

மலங்கியவாறு விழித்தான். அந்தப் பெண் ஒரு காலை நந்தவனம் போல இருந்தாள். முகத்தில் மென்மை, பசுமை, புதுமை எல்லாம் தவழ்ந்தன. கண்கள் இரண்டும் ஒரு மலர் ஜோடியாக அவனுக்குத் தோன்றியது.

"நான்தான், வீரரே! சிந்து!" என்றாள் அவள். புன்னகை வந்தாலும் சோகம் ஒரு ரேகையாகக் கண் ஓரம் தத்தளித்தது.

"சிந்து?" என்றான் ஆச்சரியமுடன்.

"ஆமாம்!"

நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாக ஒளியாகி வந்தன. அவன் சண்டை போட்டது. காயம் பட்டது.

சுற்றிலும் வியப்புடன் பார்த்தான்.

"இன்னும் காவேரிக் கரையிலேயே இருக்கிறோமா?"

"ஆமாம்."

"வேன்ஸான் ராஜ் இருக்கிறாரா?"

"இல்லை. அவர் புதுச்சேரி போயிருக்கிறார். உங்கள் உடம்பு சரியானதும் அழைத்து வரச் சொன்னார்."

உள்ளே ஊழியர் ஒருவர் ஒரு ஏனத்தில் சூடாகக் கஞ்சி கொணர்ந்து கொடுத்தார். சிந்து அதை வாங்கி ஒரு பாத்திரத்தில் ஆற்றி அவன் முன்னால் வைத்தாள்.

"அப்புறம் செஞ்சுகா விஷயம் தெரிந்ததா?"

பாத்திரத்தைத் தூக்கியவாறு கேட்டான்.

"ஏன் தெரியாமல்?"

"ஏன் என்ன ஆயிற்று?" பதற்றமுடன் கேட்டான் அவன்.

"ஏன் வீரரே! உங்கள் உடம்பு சரியாகி விட்டதா என்று கவனிக்கவில்லை. அதற்குள் செஞ்சுகாவா?"

அங்கலாய்ப்புடன் கேட்டாள் அவள்.

ஒரு விநாடி சுரீர் என்று அது தைத்தது. "இல்லை அம்மணி! அவளுக்காகத் தானே இவ்வளவு பாடுபடுகிறோம்" என்றான் சமாளித்தவாறு.

சிந்து சிறிது நேரம் பேசவில்லை.

ஒரு சிப்பந்தியை அழைத்துத் தண்ணீர் கொண்டு வைக்கச் சொன்னாள்.

"அவளைப் புதுச்சேரிக்குக் கொண்டு போய் விட்டார்கள்!" என்றாள் மெதுவாக.

டக்கென்று பாத்திரத்தைக் கீழே வைத்தான் வர்மன்.

"அங்கே எதற்கு?"

"பிரெஞ்சுக்காரர் பாதுகாப்பில் இருப்பதற்காக!"

"இது என்ன வம்பு?"

"வம்பு என்ன இருக்கிறது? இங்கே படை வீட்டில் பாதுகாப்பு இல்லை என்று தெரிந்தது. பிரெஞ்சுக்காரர்தான் அடுத்தபடி புகழ்! அங்கே அவளை அனுப்பியாகிவிட்டது."

"உங்களுக்கு யார் சொன்னார்கள்?"

"வேன்ஸான் சொன்னார். அவர் புதுச்சேரி போய் விட்டார். உங்கள் உடம்பு குணமானதும் அழைத்து வரச் சொன்னார்."



"என் உடம்பு குணமாகவில்லையா?"

"நல்ல குளிர் ஜுரமும் வந்திருந்தது. ஒரு வாரம் நினைவில்லாமல் இருந்தீர்கள்?"

"ஒரு வாரமா?"

"ஆமாம். வேன்ஸான் வைத்தியரை அனுப்பியிருக்கிறார்."

அவன் பேசவில்லை.

"நானும் இங்கே இருக்கிறேன்."

மெலிதாக உரைத்தாள் அவள்.

எழ முயன்றான் அவன்.

அப்போது தான் உடம்பில் பலவீனம் தெரிந்தது. அது மட்டுமல்ல! உடம்பு பூராவும் பட்டிருந்த காயங்கள் அங்கங்கு இன்னும் ஊமை வலியில் இருந்தன.

அடேயப்பா! அவன் வீரம் எல்லாம் எங்கே? கேவலம் ஒரு ஜுரம் கீழே அவனைப் போட்டுப் புரட்டிவிட்டதே!

"நான் எழுந்திருக்க எத்தனை நாளாகும்? வைத்தியர் என்ன சொல்கிறார்?"

"இன்னும் ஒரு வாரம் ஆகும்!"

"அவ்வளவு நாளா?"

அவ்வளவு நாட்களிலும் சிந்து அவனுக்குப் பணி விடை செய்வதைப் பார்த்தான். அவள் ஒரு அலுங்காத தீபம் போல இருந்தாள். மௌனம் அவள் மொழியாக இருந்தது. கண்கள் தான் விசாரித்தன. பேசின. ஆனால் அரைக்கணம் மேல் அவள் அவன் முன் இருப்பதில்லை. மின்னல் இழுப்பாக வெளியே மறைந்து விடுவாள்.

சமயங்களில் அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றும். அது ஒரு தாபமாக வேலை செய்யும். மெள்ள எழுந்திருப்பான். கூடாரத்தின் வாசலுக்கு வந்து திரையை விலக்கிப் பார்ப்பான். காவேரி வரை நிர்மலமாக இருக்கும். ஒருவித வண்டின் 'ரமரம' இரைச்சல் தான் மெலிதாகக் கேட்கும்.

எங்கே சிந்து? நாலா புறமும் பார்ப்பான். தென்னையும் மாவும் கணக்கற்ற பசுமைச் செடிகளும் எங்கும் முளைத்திருக்கும்.

அவற்றின் அத்தனை ஊடேயும் வெறுமைதான் தெரியும்.

மனத்தில் அப்போது சூன்யமாக ஒரு வெறுமை நிறையும். மனத்தை அது பிழிவது போல இருக்கும். இயற்கையோடு அவனும் சோகிப்பது போல் நினைப்பான்.

* * *

அன்று அந்தி நேரத்தில் மெல்லிய கிற்றுப் போல் ஒரு பாடல் இழை மிதந்து வந்தது.

மெள்ள நடந்து கூடார வாயிலுக்கு வந்தான்.

அந்தியின் அடிவானம் குங்குமமாகச் சிவந்து கிடந்தது.

அத்தனை இயற்கையும் ஒரு மௌன நிழலாக மாறிக் கொண்டிருந்தன.

மெல்லிய காற்று காவேரியின் மணத்தோடு வீசியது.

கீழே அவன் முன்னால் ஒரு ஒற்றை அடித்தடம் நெளிந்து நாணல் புதர் வழியே ஓடியது.

மெதுவாக நடந்தான்.

சிறு இழைகளாகப் பாடல் தெளிவாகக் கேட்கத் தொடங்கியது.

"ஆனேன் பரவசமாய் ஆவி மெழுகது போல்
தானே மயங்கித் தயங்கினேன்.
கன்னலே வில்லாய், களிவண்டே நாணாக
பன்னு மலர் ஐந்தும் பாணமாய்
முன்னமலர்
மாரி எனவே, பெரிய
வானகம் எல்லாம் நெறிய
வேரி மிகவே சொரிய வேகமுடன் நான்
சோர்ந்தேன்
கலை சோர்ந்தேன்
துய்ய வளை சோர்ந்தேன்
சேர்ந்தேன் மலரணையே சேர்ந்தேனே"

விட்டு விட்டு அடிகள் மிதந்து வந்தன.

திரும்பத் திரும்ப ஒரே அடிகள் வர, அவற்றின் சோகம் அதனுடன் தொற்றி வருவது போல் இருக்க,



புல் தரிசையின் மேடு ஏறியதும், பரந்த நதி சற்றே கருநீலப் பரப்பாகத் தெரிய,

மணல் பரப்பெல்லாம் நிலா முற்றம் போல் மெல்லிய வெம்மை விகசித்தது.

அங்கே நீர் விளிம்புப் பாறையில் கால்களைக் கை கோத்துச் சிந்து உட்கார்ந்திருந்தது தெரிந்தது.

மனத்தில் அந்தக் காட்சி ஏன் சொல்ல இயலாத் துயரை ஏற்படுத்தியது.

ஏதோ அபலை பூமியில் நடுவாந்தரத்தில் அமர்ந்து புலம்புவது போன்று காட்சி தந்ததாலா?

அல்லது பாடும் பாடலின் சோக ரேகைகள் எல்லா இடமும் பரவி அவன் மனத்தை அழுத்தியதாலா?

அருகில் போய் நின்றான்.

இழை அறுந்தது போல் அவள் திடீரென்று பாடலை நிறுத்தினாள்.

பாறையின் விளிம்புகளில் 'கிளுக், கிளுக்' என்று நீர் சுழலிடும் தொனிகள் மென்மைக் குழந்தைச் சிரிப்புகளாக மேலே கிளம்பின.

நிசப்த விழிகளால் அவனைப் பார்த்தாள்.

"ஓ!" என்றாள். "இவ்வளவு தூரம் நடந்து..."

"இவ்வளவு இனிதாகப் பாடுவீர்கள் என்பது தெரியாது!" என்றான் அவன். "அதுதான் என்னை இழுத்து வந்தது?"

அவள் தலை குனிந்தாள்.

பாறை மீது நுண்ணிய விரலால் கோடுகள் இழுத்தாள்.

"பாடுவேன், ஆடுவேன்! பாடல் கட்டுவேன், சித்திரம் வரைவேன்..."

"அப்படியா?" ஆச்சரியமாகக் கேட்டான் அவன்.

"ஆனால் இப்போது அத்தனையும் தேவை இல்லை! சுருட்டி வைத்து விட்டேன்! நாடு நன்றாக இல்லாத போது பாட்டு எதற்கு?"

அவன் பேசவில்லை!

"இது என் தீர்மானம் மட்டுமில்லை! எங்கள் ரகசிய

உடன்படிக்கைக் குழு இருக்கிறதே! அதன் தீர்மானம்கூட! தெய்வப் பாடலைத் தவிர வேறு எதையும் பாடுவதில்லை! இப்போது பாடியது கூட ஒரு தெய்வத்தின் மீது சாதாரணப் பெண் தூது விட்டுப் பாடியதுதான்!"

"இத்தனை சோகமா! கண்ணீர் வந்துவிட்டதே!"

"ஓ! அது என் குரல்வாசியாக இருக்கலாம்!"

"உங்களுக்கு ஏன் சோகம், சிந்து?"

"இல்லையா?" என்று முழுவதுமாகத் திரும்பி அவனைப் பார்த்தாள். "எங்கள் குலங்கள் மதுரையை ஏற்க வர வேண்டாமா? உங்கள் குலங்கள் நிம்மதியாகப் பாளையங்களை ஏற்க வர வேண்டாமா?"

"வருமா?"

"வரும்! உங்களைப் போன்றவர் நம்பிக்கை வைத்தால்..."

"ஏன்! என் நம்பிக்கைக்குக் குறைவு இல்லையே?"

"நம்பிக்கை இருக்குமானால் சந்தாசாகிப்பைக் காப்பாற்ற முனைந்திருப்பீரா?"

திடுக்கிட்டான் அவன். "என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்! அவர் படையே அவரைத் தாக்கிக் கொல்ல முயலும் போது நீங்கள் சந்தாசாகிப்பைக் காப்பாற்றலாமா?"

"ஆபத்தின் போது...?"

"ஆபத்தின் போது எதிரியைக் காப்பாற்றலாமா? அவன் நமது பரம விரோதி! ராணி மீனாட்சியை நயவஞ்சகமாகக் கொன்று எங்கள் வம்சத்தை ராஜ்யம் புரிய விடாமல் தடுத்தவரை, நீங்கள் பாதுகாக்க வேண்டுமா?"

சற்றே அழுத்தமுடன் கூறினாள். அதில் நிறைய சூடு ஏறி அவனைத் தகித்தது.

புதிதாக ஒரு வார்த்தை உணர்பவன் போலச் சிறிது யோசித்தான்.

"எங்கள் குழுவுக்கு உதவுவதாக சத்தியம் எடுத்துக் கொண்டீரே, அது என்னவாயிற்று?"

அவன் தத்தளித்தான்.

"நான் செய்தது செஞ்சிக்காவுக்காகத்தானே!"



"உங்களுக்கு ஏன் அவ்வளவு அக்கறை ஒரு நாட்டுக்காக ஒரு தனி மனிதரையோ மனுஷியையோ தியாகம் பண்ணலாம் என்றோமே!"

அந்த வாதம் அவன் மேல் சாட்டை போலப் பட்டது.

"உண்மை! ஆனால் செஞ்சுகாவைப் போல் ஒரு இளவரசியை..."

"அதனால் என்ன? கார்வேட் ராஜாவே அவளைத் தியாகம் செய்ய முனைந்தபோது..."

அவனுக்கு மனம் அரித்தது. செஞ்சுகா மீது ஏற்பட்டிருந்த அளவற்ற அன்புதான் அவனை அப்படிச் செய்யச் சொல்லியிருந்தது. அது கூடச் சரியா?

"நானும் தான் இளவரசி! வீரரே!" நிமிர்ந்து சொன்னாள் அவள்.

"நீங்களா?"

"ஆமாம்! எங்கள் நாயக்கர் வம்சம் ஆண்டால் நானும் இளவரசிதான்!"

வர்மன் மனத்தில் அவனை அறியாமல் ஒரு புளகம் ஏற்பட்டது.

திடீரென்று அவள் மீது மதிப்பும், மரியாதையும் கூடியது.

"தேவதாசி என்றீர்களே!"

"சந்தர்ப்பம் அப்படி வந்ததால்..."

வர்மன் அவளைப் பார்த்தான். முகத்திலும் கண்ணிலும் அந்த அரச குடும்பத்தின் ஒய்யாரம் இருந்தது. கம்பீரம் தெரிந்தது.

தவிர அவளிடம் ஏதோ தெய்வீகமும் இருந்தது. முழுத் தாமரையும் மலர்ந்தது போல ஒரு பரவசமான பூரணம் அவளிடம் இருந்தது.இவளைப் பார்த்தால் செஞ்சுகா வெறும் மொட்டு.

"வீரரே! ஒரு ஜமீனின் துயரை நீங்கள் நீக்க முயன்றது சரி! ஒரு நாட்டின் துயரை நீக்க முனைய வேண்டாமா? நாட்டின் துயர் நீங்கினால் ஜமீன் துயர் தானாக நீங்குமே!"

சுருக்கென்று அந்த வார்த்தைகளும் அவனைத் தைத்தன.

அந்தக் கணத்தில் சிந்துவே நாட்டுத் துயரின் சின்னமாக தோன்றினாள். இவளது துயர் துடைப்பது அல்லவா முதல் வேலை! இவளாகத் தனியாக நின்று எத்தனை காரியங்களைச் செய்து வருகிறாள்! இவளை அல்லவா அவன் முதலில் கவனித்திருக்க வேண்டும்.

"இளவரசி! தப்பிதம் செய்து விட்டேனா?" என்று தழுதழுக்கக் கேட்டான் அவன்.

"இல்லை வீரரே! ஒரு சந்தர்ப்பத்தை இழந்து விட்டீர்! சந்தாசாகிப் கதை முடிந்திருந்தால் இதற்குள் நமக்கு எல்லோருக்குமே நல்ல காலம் பிறந்திருக்கும்..."

"உண்மை! இளவரசி! என்னை மன்னியுங்கள்."

"பரவாயில்லை, வீரரே! ஒரு கணம் சிந்தியுங்கள். இந்த இரு வாரமும் ஒரு கூடாரத்தில் தங்கி உங்கள் நோயும், காயமும் ஆறுவதற்கு உதவிகள் செய்தேனே எதற்கு?"

"என் மேல் இரக்கம் வைத்திருக்கிறீர்கள்?"

"இரக்கம் மட்டுமல்ல! தங்கள் வீரத்தை உணர்ந்தவள் நான். லட்சத்தில் ஒருவர்தான் அப்படி ஒரு வீரத் தேர்ச்சியுடன் கிடைப்பார்கள். உங்களால் எங்கள் நாடு விடுதலை அடையும் என்று நம்பினேன். இப்போதும் நம்புகிறேன்."

"என்னாலா?"

"ஆமாம் வீரரே! உங்கள் வீரம் மகத்தானது. அதை எங்கள் சொத்தாக எடுத்துக் கொள்ள நினைக்கிறேன்."

"நீங்களா நினைக்கிறீர்கள்!"

"ஆமாம், மனம் விட்டுச் சொல்கிறேன். எங்கள் வாழ்க்கை எல்லாம் கூட உங்கள் வாளைச் சார்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். உங்கள் மீது பூரண நம்பிக்கை வைத்து ஆசைக்கு மேல் ஆசை வளர்த்து வந்த எனக்கு இல்லை எங்களுக்குக் கைம்மாறு செய்வது இப்படியா? வீரத்தையும் சாகசத்தையும் வீண் வழிகளில் செலவழிக்கிறீர்களே!"

அவன் உணர்ச்சிகள் அலை மோதி எழுந்தன. கண்களில் ஈரம் இலங்க, "இளவரசி! இப்போது சொல்லுங்கள் நான் என்ன செய்ய வேண்டும் என்று!" என்றான் ஆத்திரத்துடன்.

"முதலில் வேண்டுவது சந்தாசாகிப்பின் பலி என்றேனே?"



"இப்போதே தயார் இளவரசி! நான் என்ன செய்ய வேண்டும்?"

"அப்பா!" என்று மூச்சு விட்டாள் அவள். அவளுக்கு நிம்மதி வந்தது போலிருந்தது. கண்களில் திவலைகள் தளும்பின. "பரவாயில்லை! சற்று முன் தான் சோகத்தில் இருந்தேன். பாடல் பாடாதவள் சுற்றி வர நடப்பதை எல்லாம் பார்த்து மனமுடைந்து என் சொந்த சோகத்தை நினைத்துப் பாடினேன். இப்போது கடவுளே எனக்கு மாற்றம் தந்து விட்டார்! எழுங்கள் வீரரே!"

இருவரும் எழுந்தார்கள்.

ஒரு வாரத்தில் வேன்ஸான் ராஜ் வர்மனை தூப்ளே மனைவியிடம் கொண்டு நிறுத்தியிருந்தான்.

வர்மனுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது. அந்த விஸ்தார அறையின் அமைப்பு, உள்ளே இருந்த ஆசனங்கள், ஜோடனைகள் யாவுமே விசித்திரமாகத் தோன்றின.

"இந்த இளைஞன் நமக்கு உதவி புரிவானா?" என்று கேட்டாள் மதாம் தூப்ளே.

## 23. நீர்ப் பண்டம் நான்!

மதாம் தூப்ளேயிடம் சிறிது நேரம் பேசுவதற்குள் அவள் குணங்கள் வர்மனுக்குப் புலப்படலாயின.

பணத்திலும், பொன்னிலும் நிறைய ஆசை இருந்தது. வேன்ஸானின் வர்த்தக விஷயங்களைப் பற்றி நிறைய விசாரித்தாள். அவருடைய கப்பல்கள் எங்கெங்கேயிருந்து வர இருக்கின்றன. என்னென்ன பொருள்கள் வரப் போகிறது எல்லாம் கேட்டாள். எந்தப் பொருளை இந்தியாவில் விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்று கேட்டாள்.

பிறகு வேன்ஸானை அருகில் அழைத்து, அவர் போட்டிருந்த சங்கிலி, மோதிரம், இவைகளின்

நூதனர்களையும், விலையையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

இடையில், "எனக்கும் இதுபோல ஒன்று வேணும்!" என்று பொதுப்படையாகச் சொன்னாள். கொச்சையாகப் பேசினாலும், தமிழ் நன்றாகப் பேசினாள்.

பிறகு வர்மனிடம் பேசிக் கொண்டிருந்த போது, "மதாம், எக்ஸ்க்யூஸே முவா!" (மன்னியுங்கள்!) என்று வேன்ஸான் குறுக்கிட்டார்.

பிறகு அழகான பிரெஞ்சில் வர்மனைப் பற்றியும், அவன் தேடி வந்த செஞ்சுகா பற்றியும் கூறினார். வர்மன் தீரசாலி. அபூர்வ திறமைக்காரன். அவனிடம் மதாம் தூப்ளே நல்ல பொறுப்பான காரியங்களையும் கொடுக்கலாம். இந்த இளைஞன் ஒரு பெண் மீது மையல் கொண்டிருக்கிறான். இந்த மையல் தான் அவனைச் சந்தாசாகிப் படை வீட்டுக்குக் கொண்டு வந்து, ஒரு மோசமான நிலையில் சந்தா சாகிப்பையே காப்பாற்றியது. அவர் உயிரைக் காப்பாற்றியதற்கு நல்ல வெகுமதிகள் அளிக்கப்பட வேண்டியவன். இவனுக்கு உதவி செய்து இவனை நம்பிக்கையில் வைத்திருந்தால் விலை மதிப்பில்லாத சேவைகளை அவனிடமிருந்து பெறலாம்.

இத்தனை விஷயங்களையும் பரபரவென்று கூறிவிட்டு அவசரமாக அவர் போக வேண்டியிருப்பதாக மதாமிடமிருந்து விடை பெற்றுப் போய்விட்டார்.

அவர் போன பிறகு மதாம் தூப்ளே வர்மனை மேலும் மதிப்போடு பார்த்து, "உட்காருங்கள்" என்று பானம் கொண்டு வந்து தரச் சொல்லி உபசரித்தாள்.

ஒரு கூப்பில் அது மது என்று தெரிந்ததும் வர்மன் வைத்து விட்டான்.

"தம்பி! உனக்கு நான் என்ன செய்ய வேணும் சொல்லு! செய்யறேன். வேன்ஸான் ராஜ் அவ்வளவு சொல்லி விட்டுப் போய்விட்டாரே!" என்றாள்.

வர்மன் சிறிது நேரம் தயங்கினான். மதாம் மேலும் வற்புறுத்தவே, அவன் செஞ்சுகாவைப் பற்றிக் குறிப்பிட்டான்.



"ஓ! அந்தச் சின்னப் பொண்ணு! கார்வேட் ராஜா பொண்ணு!"

"ஆமாம்!" என்று பாய்ந்து சொன்னான் வர்மன்.

"நம்ப ஊரிலேதான் இருக்கா! நம்ம துரை (தூப்ளே) தயவிலேதான் இருக்கா! நவாப் அனுப்பிச்சு வச்சிருக்கார்" என்றாள் மதாம்.

"எங்கே இருக்கிறாங்க?"

"நெல்லித் தோப்பு பங்களாவிலே"

"நான் அவங்களை உடனே பார்க்கணும்."

"கொஞ்சம் இருங்க!"

மதாம் மணியைத் தட்டினாள். சிப்பந்தி ஒருவன் ஓடி வந்து வணங்கினான்.

"நாராயணனைக் கூப்பிடு."

நாராயணன் இளவயதுக்காரன். குடுமி வைத்து மேலே சட்டை போட்டிருந்தார். கீழே பஞ்ச கச்சம். மதாம் தூப்ளேயின் துபாஷி அவன்.

"இந்தா நாராயணா! இவர் நமக்கு ரொம்ப வேண்டியவர். கார்வேட் ராஜா மகளை இவர் பார்க்கணும் என்கிறார். ராஜாவே அனுப்பியிருக்கார். நீ ரங்கப்பிள்ளைகிட்டே போய்ச் சொல்லி ஏற்பாடு செய்யணுமே!"

"இதோ போறேன், மதாம்!"

ஏற்பாடு முடிவதற்குள் சாயங்காலம் ஆகிவிட்டது. நாராயணன் தகுந்த பாதுகாப்போடு வர்மனை நெல்லித் தோப்புப் பங்களாவுக்கு அனுப்பி வைத்தான்.

புதுச்சேரியின் நேர் குறுக்கும், நேர் நெடுக்கும் செல்லும் தெருக்களைப் பார்த்தவாறு வர்மன் சென்றான். பல்லக்கு மட்டுமின்றி தெருவில் குதிரைகள் இழுத்த ஷார்தேக்களையும் (சாரட்டு) மனிதர்கள் பின்னாலிருந்து தள்ளிய ஷார்தேக்களையும் பார்த்தான். விசித்திரமான உடைகளில் சில பிரெஞ்சுப் பெண்கள் நல்ல வெளுத்த நிறத்தில் ஆங்காங்கு தென்பட்டார்கள்.

நெல்லித் தோப்பு அரியாக்குப்பம் ஆற்றின் வடகரையில் இருந்தது.

ரங்கப் பிள்ளை வழங்கிய உத்தரவுக் காகிதத்தைக் காண்பித்த பின்னரே அவனை உள்ளே அனுமதித்தார்கள்.

தோப்புச் சூழ்ந்த பெரிய மாளிகை அது. சுற்றிவர, பிரெஞ்சுக்காரர்களும் இந்தியர்களும் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே மாளிகை முகப்பில் அவனைச் சோதனை செய்து உள்ளே பெரிய கூடத்தில் உட்கார்த்தினார்கள்.

மெள்ள இருட்டத் தொடங்கிய நேரம் அது. காற்று எங்கும் சில்லிட்டுக் கிடக்க, அந்தப் பிரதேசமே நிசப்தமாக இருந்தது.

கூடத்தில் கண்ணாடிக் கூண்டுகளுக்குள் மெழுகுவர்த்திகள் எரிந்தன.

உருக்கிய தங்கம் போல ஒரு பொன் வெளிச்சம் கூடத்தில் பரவியிருந்தது.

ஓரங்களில் கிடந்த தூபச் சட்டிகளிலிருந்து மென்மை மணத்தில் புகை சூழ்ந்த வண்ணம் இருந்தது.

ஏதோ காலடிகளைக் கேட்க, ஆவல் கொந்தளித்துத் திரும்பினான்.

எதிரே உப்பரிகை போலக் கட்டுமானத்தில் ஒரு கதவு போன்ற வாசல் திறந்தது.

அதன் உள்ளிருந்து வந்த உருவத்தைக் கண்டதும், அவன் மூச்சு ஸ்தம்பித்தது. உள்ளே எழுந்த உணர்ச்சித் ததும்பலில் கண்ணால் சரியாகப் பார்க்க இயலவில்லை. உருவம் சிதறிக் கொண்டு தெரிந்தது.

"வீரரே!" என்றாள் அவள். நடுக்கத்துடன் மெள்ள எழுந்தான். இன்னும் உணர்ச்சிகள் சீராகவில்லை. உருவத்தை நோக்கி, "செஞ்சுகா!" என்றான். நாத் தழுதழுப்பில் வார்த்தை சிலும்பியது.

அவள் அந்த வெளி விளிம்பு வரை வந்தாள்.

கூடத்து ஒளி தங்க ரேகைகளாக அவள் மீது விழுந்தன.

மெல்லிய பால் கட்டி போல வதனம் துலங்கியது. இருள் போன்ற கூந்தல் இரு பக்கமும் வழிந்தது. சின்ன முத்துக்கள் போல் புன்னகைகள் உருண்டன.



மெய் மறக்க அவளைப் பார்த்தான்.

கண்கள் தான் அவள் கண்களில் லயித்தன. அந்த லயிப்பில் ஆன்ம லயிப்பே ஏற்பட்டது. உடல் மயமான கோசம் எல்லாம் மறந்து வெறும் எண்ண சொரூபனாக மட்டும் இருப்பதாகத் தோன்றியது.

ஒரு அமிர்தக் கடலில் மிதப்பது போலத் தோன்றியது!

"வீரரே!"

இரண்டாம் முறை அழைக்கவும் அவன் நினைவுகள் தரை தட்டின.

இன்னும் நீர்த் திவலைகளில் பட்டு அவள் உருவம் சிதிலமாகத் தெரிந்தது.

கொட்டிக் கொட்டிக் கண்ணீர்களை உள் வாங்கினாள்.

கடைசியில் பார்த்த போது ஒரு வன தேவதை போல் புத்தம்புது வனப்பில் அவள் தெரிந்தாள்.

சந்திரக் கதிர் போல் முகம்.

கனைச் கழிகள் போல் விழிகள்.

பிரம்ம ஜாமத்து நிலா போலச் சற்றே வெளிறியிருந்தாள்.

உடம்பு ஒரு சோபையான மெலியலில் இருக்க,

கண்கள்! அவை கண்களா!

இரண்டும் கவிதைகளாக இருந்தன.

இப்போது காவியங்களாகித் துள்ளலும் சிருங்காரமுமாய்க் காட்சி அளித்தன.

"இளவரசி சௌக்கியமா?"

குரல் விம்மியது.

"சௌக்கியந்தான் வீரரே!"

"நானே தாபத்தில் எரிகிறேன் இளவரசி! உங்கள் தந்தையார் என்ன பாடுபடுவாரோ?"

"பட மாட்டார் வீரரே! மனம் இசைந்து தான் அனுப்பியிருக்கிறார்கள்!"

"இன்னும் எத்தனை நாள் பிரிந்திருப்பார்கள்?"

"ஏழு மலையான் தீர்மானிக்கும் வரை!"

"எப்போது தீர்மானிப்பார்?"

"அசோக வனத்துப் பிராட்டியை அவர் நினைத்தால் ஒரு கணத்தில் கொண்டு வந்திருக்க மாட்டாரா? இருந்தாலும் இந்த உலகத்தின் நியதிக்கு ஏற்பப் பெற வேண்டும் என்று நினைத்து அல்லவா பொறுமையாக அத்தனை சம்பவங்களையும் நிகழ விட்டுக் காத்திருந்தார். அந்தப் பிராட்டியின் விடுதலையே அத்தனை காலம் கழித்து வந்த போது இந்தப் பிராட்டியின் வ்டுதலைக்கு அதற்குள் என்ன அவசரம்!"

அவள் வார்த்தைகள் அவன் மனத்தை எங்கேயோ தைத்தது.

கண்களில் நீர் ஸ்படிகங்கள் தத்தளித்து உருண்டன.

"இன்னமும் சொல்லுங்கள்! நான் தங்களுக்காக..." என்று மேலே போக இயலாமல் பிறழ்ந்தான் அவன்.

"வீரரே! எனது லிகிதம் கிடைத்ததோ!" என்றாள் அவள்.

"கிடைத்தது இளவரசி! அதை வாசித்து ஆனந்தப் பரவசத்தில் இருக்க வேண்டியவன் இப்படிச் சோக சாகரத்தில் இருக்கிறேன் இளவரசி!"

"ஆனந்தங்களின் விளிம்புகள் எல்லாமே சோகங்கள் தான் வீரரே!"

"இளவரசி...!" மேலே பேச முடியாமல் தத்தளித்தான்.

"சொல்லுங்கள் வீரரே!" என்றாள் முகிழ்வுடன்.

"நீங்கள் எப்படி தனியாக இருக்கிறீர்கள்?" உடைந்தவாறு வினவினான் அவன்.

அவள் கண்களில் பாஷ்பம் மிளிர்ந்தது.

"நான் எப்படி இருக்கிறேனா, நீராக இருக்கிறேன்!" தழுதழுத்தாள் அவள்.

"நீராகவா?"

"ஆமாம்! நீராகத்தான்! நீர்ப்பண்டமாக!"

"நீர்ப் பண்டமா?" விழித்தான் அவன்.

"ஆமாம், வீரரே! நீர்ப் பண்டம் ஒன்று இருந்தால் அதன் தன்மை என்ன தெரியுமோ?"

நிறுத்தினாள்.



பிறகு அவளே தொடர்ந்தாள்.

விழிகளை விரிவாக்கி அவனை நோக்கித் "திருவாய்மொழியை அனுபவிப்பார்' கதி தெரியுமோ, வீரரே!" என்றாள்.

"இளவரசி! நான் அதிகம் படித்தவன் அல்ல!"

"கேளுங்கள் வீரரே! 'தென் குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை ஒன்பதோடு ஒன்றுக்கும் மூவுலகும் உருகுமே!' இது நம்மாழ்வார் சொல்! திருவாய்மொழியை அனுபவிக்க முனைந்தவர் நீர்ப் பண்டமாக உருகுவார்கள்! நானும் இங்கே நீர்ப்பண்டம்தான்! ஆனால் ஆழ்வாரோ அடியாரோ போன்று அருள் பெற்றவள் அல்ல! வெறும் சிறியவள்! அதனால் நான் உருகுவது உலகைக் கடந்தவனுக்கு அல்ல! உலகுக்குள்ளே அமிழ்ந்து, அதன் இன்ப, துன்பங்கள் ஏற்ற இரக்கங்கள் இத்தனையிலும் தத்தளிக்கும் பாமர மயமான... வீரரே ஏன், தவிக்கிறீர்கள்!... உங்களைப் பற்றித்தான்!"

சொல்விழவும் அவள் கண்கள் உடைந்து அருவித் துமளியாய் வழிய, கைகளில் முகத்தை மறைத்துக் கொள்ள,

"இளவரசி! இளவரசி!" என்று பொருமலாய்ச் சொல்லிச் செய்வதறியாது திகைத்தான் அவன்.

அவனது மனத்தின் நினைத்தறியாத பகுதியை எல்லாம் அவள் சொற்கள் தொடுவது போலத் தோன்றின.

வார்த்தைகள் சொல்ல முடியாமல் தத்தளித்தான். கடைசியில், "இளவரசி! இளவரசி! என் மனம் அமிர்தமாய் நிரம்புகிறது. தங்களுக்கேதான் இந்த வாழ்க்கை! என்ன வேண்டுமானாலும் உத்தரவு இடுங்கள்! செய்து முடிக்கிறேன்!" என்றான் அவன்.

சிறிது நேரம் மௌனம் சூழ்ந்தது.

இருவரும் தங்கள் தங்கள் கண்ணீரை வழிப்பதிலும் உணர்ச்சியை நிலைப்படுத்துவதிலும் நேரத்தைப் போக்கினார்கள்.

கடைசியில், "வீரரே!" என்றாள் செஞ்சுகா. அவள் குரல் கனத்திருந்தது. "என் வாழ்வுக்கு ஏது தனி ஆசை! சிந்துவின் ஆசை தான் என் ஆசை! அதை முதலில் நிறைவேற்றுங்கள்!

மற்றவையெல்லாம் 'புல்லுக்கும் ஆங்கே புசியுமாம்' போன்றவை. தானே நிறைவேறும்!" என்றாள்.

பிறகு இருவரும் தங்கள் தங்களுக்கு நடந்தவைகளைப் பற்றி விவரித்துக் கூறினார்கள். ஒருவர் பட்ட கஷ்டத்திற்காக மற்றவர் அனுதாபப்பட்டார்கள். பேசும் பேச்சினாலேயே மனங்கள் இதம் அடையச் சீக்கிரம் ஒரு சகஜ நிலைக்கு வந்தார்கள்.

இரவு திரும்பும் போது வர்மனுக்கு இன்பமும் இருந்தது. துன்பமும் இருந்தது.

சத்திரத்துக்கு வந்து உணவு அருந்தியதும், சிந்து வந்து அவனை அவசரமாக அழைத்துப் போனாள்.

கிழக்குக் கோட்டைப் புறம் சென்று ஒரு கட்டடத்தில் நுழைந்து அதன் பாதாளப் படிகளில் திவர்த்தி ஏந்தி வர்மன் இறங்கும் போது, சிந்து அவனைப் பின் தொடர்ந்தாள்.

சட்டென்று நின்றான் வர்மன். "அம்மணி! இது என்ன இடம்?" என்றான்.

## 24. நான் பட்டது நீர் படீரே!

பாதாள கிடங்கில் படிகளில் திவர்த்தி கொளுத்திக் கொண்டு வர்மன் நடந்து சென்றான்.

பின்னால் நிழல் போல் ஊர்ந்து வந்தாள் சிந்து!

உள்ளே காற்று சிக்கென இறுகிக் கிடந்தது. பழம் வாடை மூக்கை நெரித்தது. வெளிச்சத் திவலை அங்குமிங்கும் பக்பக்கிட அனாதி இருட்டுக்கள் கரைவதற்குத் தயக்கமிட்டன. வௌவால்கள்தான் பயந்து இரவின் கத்தரித்த துணுக்குகள் போல நெடுகிலும் வட்டமடித்தன.



படிகள் நெளிந்து சென்றன. பூகர்ப்பத்துள் இறங்கும் பிரமை. இரு பக்கமும் சுவர்கள் குறுகி வந்தன.

கடைசியில் சமதளமான தரையில் நின்றார்கள்.

அந்த தளம் ஒரு நடை தாழ்வாரமாக நீண்டு செல்ல, வரிசையாக கல் அறைகள் தென்பட்டன.

ஒவ்வொன்றுக்கும் வாசலில் கனத்த அழிக்கம்பி!

பின்னால் வந்த சிப்பந்தி ஒருவன் வர்மனிடமிருந்து திவர்த்தியை வாங்கிக் கொள்ள, வர்மன் ஆவலோடு ஒவ்வொரு இடை கழியையும் கவனித்தான்!

உள்ளே இருந்தவர் அத்தனையும் நடை பிணங்கள்!

வெற்று உடம்புடன் துணி எதுவுமில்லாமல் பலர் நின்று கொண்டிருந்தார்கள்.

பலர் படுத்து எந்த உற்சாகமும் இன்றி இருந்தார்கள்.

ஒன்று இரண்டு பேர் கையை வெளியே நீட்டி, "அழைச்சிட்டுப் போ! அப்பா அழைச்சிட்டுப் போ! மகனே அழைச்சிட்டுப் போ!" என்று கத்தினார்கள்.

வர்மன் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவரைக் கவனித்தான்.

நால்வர் இருந்தார்கள்.

ஒவ்வொருவரும் கண்களில் ஒளியில்லாமல் பார்த்தார்கள்.

முகத்தில் எலும்புகள் தெரிந்தன. சுவர் மூலையில் சாய்ந்து கொண்டு அரைக் கண்ணை மூடியிருந்தார்கள்.

ஒருவர் மட்டும் தொண்டு கிழமாக இருந்தார். சுதவு ஓரம் விரக்தியாகப் படுத்து இருந்தார்.

வர்மன் பல முறை அவர் மீது வெளிச்சம் அனுப்பி, அருகில் அமர்ந்து பார்த்தான்.

மனம் சமுத்திர அலை ரீதியில் அலை பாய்ந்தது. ஒரு வேளை அவர் அவனது தந்தையாக இருக்குமோ!

உணர்ச்சி மேலிட, "தம்பி!" என்று அழைத்தான். சிப்பந்தி ஒருவன் சட்டென்று பிரசன்னமானான்.

அதற்குள் கண்கள் எல்லாம் மழையாகிப் பார்வையை மட்டுப்படுத்தின.

கிழவனை இடது கையைத் தூக்கிப் புஜத்தின் அடியில் பார்த்தான்.

கிழவருக்கு அநேகமாக ஜீவனில்லை. என்ன செய்தாலும் மரத்துப்போய்க் கிடந்தார்.

"என்ன வீரரே!" என்றாள் சிந்து.

"இல்லை என் தந்தையின் புஜத்தில் நாகம் பச்சைக் குத்தியிருக்கும்" என்றான்.

வேறு ஆட்கள் அங்கே கிடையாது என்று அறிந்து வந்த வழியே இருவரும் திரும்பி வந்தார்கள்.

மேலே அந்தக் கோட்டையின் உட்புற நிழலுக்குள் மதாம் தூப்ளே காத்திருந்தாள். சின்ன நாற்காலிச் சிவிகை பக்கத்தில் காத்திருந்தது.

"என்ன தம்பி! அவரைக் கண்டாயா?" என்று ஆவலுடன் கேட்க,

"அம்மணி! என் தந்தையைக் காணவில்லையே!" என்று வருத்தம் தெரிவித்தான்.

"அப்படியா! வயதானவர் நாலு பேர் இருந்தார்களே!" என்றாள் அவள்.

"அவர்களில் என் தந்தை யாருமில்லை" என்றான் வர்மன்!

"நல்லது, நாளை ப்ரஸான் ப்யூரோவிலிருந்து (சிறை அலுவலகம்) ரெஷிஸ்த்ர தாகுமான் (டாகுமெண்ட் ரெஜிஸ்டர்) வாங்கிப் பார்ப்போம். ஒரு வேளை விடுதலை ஆகியிருக்கலாம்!" என்றாள்.

பிறகு நள்ளிரவில் அந்த சிறு குழு கோட்டைக் கிடங்கிலிருந்து புறப்பட்டு நகர வீதிகளை நோக்கி சென்றது.

வர்மன் இரவு உறங்கவில்லை. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லையே என்று வருத்தம். இவ்வளவு சுலபமாகக் கோட்டைக் கிடங்குக்குப் போக அனுமதி கிடைக்கும் என்று நினைக்கவில்லை. மதாம் தூப்ளே தயவால் அது நடந்து விட்டது. அவனது தந்தை எங்கே போனார்?

தாயாரைப் பிரிந்து வந்து ஆறு மாதமாகிவிட்டது. இப்போது அவள் நினைவு குபீரென்று வந்தது. கண்ணீர் ஆறாக வந்தது! தந்தையை அழைத்துச் செல்வோம் என்று என்ன பெருமிதத்துடன் வந்திருந்தான்!



மறுநாள் மதியம் இரண்டு மணிக்கு மேல் மதாம் தூப்ளே திரும்பவும் கூப்பிட்டு விட்டாள்.

அவன் போன போது சிந்துவும் வந்திருந்தாள். மதாம் அருகில் மற்றொரு ஆசனத்தில் அமர்ந்து அவள் குறுகுறுப்பாக அவனைப் பார்த்தது மனத்தை என்னவோ செய்தது.

கண்ணை எடுக்க முயன்றாலும் அடிக்கடி அது அவன் மீது விழுந்து மீண்டும் மீண்டும் வேதனையை வாங்கிக் கொண்டிருந்தது.

மதாம் தூப்ளே ஒஃபி ஸியேக்களை (அதிகாரிகள்) அழைத்திருந்தாள்.

எல்லோரும் எட்டு வருட தஸ்தாவேஜுகளைத்தான் தேடி முடிந்தது. அதற்கு முன் உள்ள தஸ்தாவேஜுகள் இங்கிலீஷ்காரர் படையெடுப்பில் எரிந்து விட்டது.

இருக்கும் தஸ்தாவேஜுகளைப் பார்த்ததில் வர்மன் தந்தையான பாளையக்காரரைப் பற்றி எந்தக் குறிப்பும் கிடையாது.

எல்லோரும் அறிவித்துவிட்டு மதாமிடம் விடைபெற்றுப் போனார்கள்.

வர்மன் திகைப்புடன் நின்றான்.

கண்களில் சலனமில்லை.

அவன் எடுத்துக் கொண்ட யாத்திரை லட்சியம் அதோடு முடிகிறது என்று நினைத்தான்.

"கலங்காதே தம்பி!" என்று அருகில் வந்து தட்டிக் கொடுத்தாள் மதாம்.

"இந்த ஊரில் இருந்து, கொஞ்சம் தேடிப் பார். கிடைத்தாலும் கிடைக்கலாம். சிலர் கப்பல் ஏறி வேலை செய்யப் போவார்கள். கப்பல் இங்கே வந்தால் கண்டுபிடித்து விடலாம். தைரியம் இழக்காதே! கட்டாயம் கிடைப்பார்! அவர் கிடைக்கும் வரை நமது சமூகத்திலேயே இரு!" என்றாள்.

மறுநாள் கப்பல் மாலுமிகளுக்கான ப்யூரோ (அலுவலகம்)க்குப் போய் பழைய சுவடிகளைத் தேடி காணாமல் மனம் நொந்து வெளியே வந்தான் வர்மன்.

மனம் புழுங்கியது. சற்று எட்டத்தில் நீல அலைகள் பாய்ச் சுருள்கள் போல் மடிய, பார்க்கும் தூரம் வரை நாட்டுப் படகுகள் மிதந்து கொண்டிருந்தன.

"அப்பா! எங்கே இருக்கிறாய்? எங்கே போனாய்?" என்று புலம்பியவாறு சாலையில் தெற்கு நோக்கி நடந்து, தோப்புகளிடையே புகுந்தான்.

மனம் வெதும்பியது. என்றுமில்லாத நிராசையில் ஒருவித விரக்தியும் ஏற்பட்டது.

தொட்டதும் நழுவி, கொண்டதும் நழுவியது போலிருந்தது.

வாழ்க்கையின், ஆதாரங்கள் எல்லாம் கழன்று விட்டன போல் தோன்ற இனி வாழ்க்கையால் என்ன பயன் என்று கூட நினைத்தான்.

தென்னந்தோப்புகள் படர்ந்து உப்பங்கழி வரை நீண்டிருந்தன.

நீலக் கண்ணாடி போன்ற அந்த நீர்க்கரை வந்ததும் வர்மன் நின்றான்.

என்ன நேர்த்தி வாய்ந்த காட்சி! மாவும் தென்னையும் பசும் பொன்னாய் விதானம் விட்டிருந்தன.

சூரிய ஒளிகள் இலை இடுக்குகள் வழியே தகதகத்துக் கொண்டிருந்தன.

நீர்த்துறையிலிருந்து குளிர் காற்று மெள்ள ஊடாடிப் பறந்தது. எதிர்க்கரையில் காடு போல் தோப்புகள் மண்டியிருந்தன.

மனம் லகுவாகப் பறக்க, வேதனையின் கனம்தான் அடிக்கடி கீழே இழுத்தது.

கண்கள் வெறுமையாக அங்கங்கு பரிமாற, ஒரு கணத்தில் எதையோ நோக்கித் திடுக்கிட்டு நின்றான்.

அங்கே நீர்க்கரை ஓரமாக வளைந்து ஓடும் தென்னை மீது கண்ணை மூடிச் சாய்ந்திருப்பது யார்!



சிந்துவா!

"...சிந்து!" என்றான்.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

அவன் அடிகள் வைத்து அருகே போனான்.

சிந்து சோகத்தில் இருந்தாள்.

கன்னத்தில் வைரத் துளிகள் உருண்டிருந்தன.

முகவாய், கழுத்து எல்லாம் நீர் உலர்ந்த கறைகள் தெரிந்தன.

"சிந்து" என்றான்.

விழித்தாள் அவள். கண்ணை இமைத்துப் பார்த்தாள். "நீங்களா அழைத்தீர்கள்!" என்றாள்.

"ஆமாம் சிந்து! அம்மணி என்று அழைப்பேன். நிறையப் பழகிவிட்டேன். இனி நான் ஊர் திரும்பப் போகிறேன். ஒரு சோகம் நம் இருவரையும் நெருக்கிவிட்டாற்போல் தோன்றுகிறது. ஒரு பரிச்சயத்தில் நெருக்கமான சாயலைக் காட்டவே, 'சிந்து' என்றேன்! நான் ஊர் திரும்பப் போகிறேன் சிந்து" என்றான் அவன்.

சிந்து சில்பம் போல நின்றாள். கண்ணிலிருந்து சோகம் இறங்கியது. விழியை மட்டும் சிறு சிறு சாய்வில் நகரவிட்டாள்.

"வர்மரே!" என்றாள். ஒரு நீண்ட மூச்சை இழுத்து விட்டாள். "நானும் தங்களை நெருக்கமாகி அழைக்கிறேன். தாங்கள் மனத்தில் பெறும் வெறுமையை நானும் என்றைக்கோ பெற்று விட்டேன். அதுவும் இரு நாளாக நான் அனுபவித்த சூன்யத்திற்கு எல்லையில்லை! ஒரு வேளை பிரபஞ்சம் பிறப்பதற்கு முன் அப்படி ஒரு மாபெரும் சூன்யம் இருந்திருக்கலாம். நானும் விரக்தியில் இருக்கிறேன் வர்மரே! சிவகங்கைக் காட்டுக்குள் போய் என் குடும்பத்துடன் வாழ விரும்புகிறேன். நாடு என்று சீர்திருந்தி வருகிறதோ அப்போது வரட்டும் பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள் வர்மரே!"

"நடை போன படி வந்தேன். இனி என் செய்வேன் என்ற வெறுமைதான் என்னைப் பிடுங்கி எடுக்கிறது. ஒரு

சமயத்தில் எதுவுமே பிடிக்கவில்லை! ஊரை நோக்கித் திரும்பலாம் என்ற எண்ணம் தான் மேலே எழுந்துவிட்டது."

"ஏன்! என்னைப் போல் நீங்கள் ஒரு நாட்டையா திரும்பப் பெற வந்தீர்கள்? ஒரு தந்தையைத் தேடி வந்தீர்கள்! அவ்வளவுதானே! இன்னும் கூடத் தேடலாமே! மதாம்தான் உதவி செய்வதாகக் கூறி இருக்கிறாளே!"

"இல்லை சிந்து! எப்போது கிடங்கில் இல்லை என்று தெரிந்து விட்டதோ, இனித் தேடி என்ன லாபம்?"

"அப்போது போகத்தான் முனைந்து விட்டீர்கள்!"

"ஆனால்....??" என்று நிறுத்தினான்.

"என்ன?" என்று திரும்பினாள்.

"புதுப் பாசங்களின் வேர்கள் அங்கங்கே என்னைப் பிணைத்திருக்கின்றன. தாய் தான் எனக்கு நேசத்தைத் தந்தவள். ஆனால் தாயை விட நூதனமான நேசம் ஒன்று இருக்கிறது என்பதை இந்தச் சில வாரங்களில்தான் உணர்ந்தேன்."

நிமிர்ந்து அவளைப் பார்த்தான் வர்மன்.

அவள் கண்களில் ஒரு தேடலான ஆவல் இருந்தது.

"இந்த சில வாரங்களிலா வர்மரே!"

"ஆமாம் சிந்து! அந்த நூதன சிநேகம் என் மன ஆழங்களில் மட்டுமல்ல, உள்ளே என் ஜீவ ஆழத்திலும் தொட்டு நிற்பதை உணர்கிறேன். அந்த சிநேகம் விட்டப் பாசக் கயிறு என்னை 'அசையகில்லேன்' ஆகக் கட்டியிருப்பதை இப்போது இந்தக் கணத்தில் உணர்கிறேன் சிந்து!" என்றான் அவன்.

சிந்து கண்களைக் கொட்டினாள். அவள் முகத்தில் தோன்றிய அந்த உணர்ச்சி பரவசமா அல்லது சோகமா என்று இனம் காண முடியாமல் இருந்தது.

"வர்மரே! அதென்ன நூதன சிநேகிதம்?" என்றாள்.

வர்மன் உடன் பதில் சொல்லவில்லை.

பிறகு, "இந்த நூதன சிநேகம் உங்களுக்கு ஏற்படவில்லையா?" என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை.



"சொல்லு சிந்து! சொல்லு! உங்களுக்கு இது ஏற்படவில்லையா? இந்தச் சில வாரங்களில் நான் பட்டபாடுகள் அனைத்தும் நீங்கள் அனுபவிக்கவில்லையா? நான் பட்ட துயரை எல்லாம் நீங்களும் அனுபவிக்கவில்லையா? அதன் பலன்தானே இப்போது இங்கே சூன்யம் பிடித்தது போல் இருவரும் வந்து நிற்கிறோம்?" என்றான்.

அவள் என்ன சொல்லப் போகிறாள்?

வர்மனின் மனம் படபடத்தது.

அவள் கண்களில் நீர் வந்து கொண்டிருந்தது.

## 25. ஆர்க்காடு திணறுகிறது

சிந்துவிடம் பிரியா விடைபெற்றுத் திரும்பித் தனது இருப்பிடமான வேதபுரீசுவரச் சத்திரத்திற்கு வந்த போது மனம் கனத்திருந்தது. நிறைய எண்ணங்கள் நுண்ணிய புஷ்பங்களாக பூத்திருந்தன. உப்பங்கழிப் பக்கம் போன போது எவ்வளவு கனமான இதயமுடன் சென்றான்... இப்போது என்ன லகுவான இதயத்துடன் மிதக்கின்றான்.

சத்திரத்தில் ஏற்கெனவே ஆள் ஒருவன் காத்திருந்தான். மதாம் தூப்ளே அழைப்பதாகக் கூறினான்.

திரும்பவும் அரசாங்க மாளிகை நோக்கிச் சென்ற போது நிறைய எண்ணங்கள் வட்டமிட்டன.

இந்தப் பிரெஞ்சு நகரில் அவனுக்கு எல்லாம் ராஜ உபசாரமாக நடக்கிறதே! இது அத்தனையும் வேன்ஸானைச் சாரும் என்று நினைத்தான்.

மாளிகையின் புற வாசல் வழியாக அழைத்துச் சென்று மதாம் முன்னால் நிறுத்தினான் அந்த ஆள்.

"என்னப்பா! எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டாள் மதாம்! மெத்தை போட்ட நாற்காலியில் உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். மைக்கூடும் காகிதங்களும் மேஜை மீது இருந்தன. பேனாவைக் கூட்டுக்குள் போட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள். "இனிமேல் என்ன செய்யப் போகிறாய்?" என்றாள்.

"அப்பாவைக் காணவில்லை. இனிமேல் ஊருக்குப் போய்விட நினைக்கிறேன்" என்றான் வர்மன்.

"ஊருக்கா! நன்றாகச் சொன்னாய்! இங்கே இருந்து கொண்டு அப்பாவைத் தேடுவாயா? ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்? நான் ரங்கப்பிள்ளை கிட்டே கூடச் சொல்லியிருக்கிறேன்."

ரங்கப்பிள்ளைதான் அரசாங்க துபாஷி.

"கிடைத்து விடுவாரா?"

"நிச்சயம் கிடைப்பார். மனம் தளராதே! அது வரை எனக்கு ஒரு காரியம் செய்!"

"சொல்லுங்கள் மதாம்."

"செஞ்சுகாவைப் பார்த்து விட்டாயல்லவா?"

"ஆமாம்!"

"உனக்குத் திருப்திதானே?"

மதாமின் வெளுத்த முகத்தில் ஒரு குறும்பு நகை ஓடியது. அவரது பருமனான நெஞ்சுகள் பெருமூச்சில் மேலே நிமிர்ந்து இறங்கின.

"திருப்திதான்!" என்றான் வர்மன். குரல் அப்போது குழைந்தது.

"அவளைப் பத்திரமாக கார்வேட் நகரம் சேர்க்க வேண்டாமா?"

"மதாம் அது தான் என் ஆசை?"

"அது எனக்குப் புரியும். வந்து... உன் பேர் என்ன?"

"வர்மா!"

"வர்மா! இப்போது இருக்கும் 'பொலித்திக்'கில் (அரசியலில்) அவளை அவ்வளவு தூரம் அழைத்துப்



போவது சரியல்ல! அந்த இங்கிலீஷ் பாதகர்களால் நமக்கு ஆபத்து நிறைய உண்டு. திரும்பி அவளைப் பிடித்து எங்கேயாவது கொண்டு போய்விடுவார்கள். பிறகு நமக்கு அகப்பட மாட்டாள்."

"நீங்கள் சொல்வது சரி மதாம்."

"நீயே பார்த்தாயே! அவளை ராஜப் போகத்தில் தான் நாங்கள் வைத்திருக்கிறோம்."

"நல்லது மதாம்!"

"அவளுக்கு இங்கு ஒரு குறையும் வராது. இந்த கிளைவ் ஆர்க்காட்டுக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். ராஜா சாகிப் அவனைச் சுற்றி ஒரு முற்றுகைப் போட்டிருக்கிறார். முற்றுகை தொடர்ந்து இருபது நாளாகிறது. உள்ளே அவன் இனிமேல் ஒரு நாளும் இருக்க முடியாது. சீக்கிரம் விழுந்துவிடுவான். அவன் விழுந்து ஆர்க்காட்டு சுபாவில் சிறிது அமைதி வந்தால் தான் இவளை கார்வேட் நகரம் கொண்டு போக முடியும். அதுவரை பொறுக்க வேண்டும்."

வர்மன் ஆழ்ந்து பார்த்தான். "அதெல்லாம் சீக்கிரம் நடக்குமா?" என்றான்.

"எல்லாம் சீக்கிரம் நடக்கும் பார்" என்றாள் அவள். "அதற்குள் எனக்கு ஒரு காரியம் செய்!"

"என்ன?"

"கார்வேட் ராஜாவிடம் நீ செஞ்சுகாவைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? அவர் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாரே!"

"ஆமாம்!"

"நானே ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அவரிடம் கொண்டு சேர்ப்பித்து விடு."

தயங்கினான் வர்மன்.

"என்ன யோசிக்கிறாய்?" என்றாள் மதாம்.

"இல்லை மதாம்! நீங்கள் அனுமதி தந்தால் தான் செஞ்சுகாவை யார் கண்ணிலும் படாமல் கொண்டு போய் விட முடியும்!" என்றான் வர்மன்.

"ஐயையோ! அது எப்படி முடியும்? கார்வேட்

நகரிலிருந்து ஆர்க்காடு வரையில் உன்னால் அவளைப் பாதுகாக்க முடியவில்லையே!" என்றாள்.

அதுவும் உண்மைதான் என்று அவனுக்குத் தோன்றியது.

"அது மட்டுமில்லை வர்மா! மராத்தியர் எங்கும் உலாவிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பிடித்து விட்டால்..."

"மராத்தியர் உங்கள் நண்பர்கள் இல்லையோ!"

"நண்பர் வகையில் சேர்த்தி அல்ல! சந்தர்ப்ப வாதிகள். பணம் அதிகமுள்ளவர் பக்கம் சாய்வார்கள். அது மட்டுமல்ல! பல மராத்திக் கும்பல்கள் தன்னிச்சையாக உலாவுகின்றன. அவர்கள் யார் பணம் கொடுத்தாலும் வேலை செய்வார்கள்."

வர்மன் பேசவில்லை.

"தவிர இங்கிலீஷ்காரர்கள் இப்போது ரொம்ப வியாபகமாக இருக்கிறார்கள். அவர்கள் கைகளில் அகப்பட்டாலும் ஆபத்து! நான் சொல்வதைக் கேள், வர்மா! செஞ்சுகா நிச்சயம் கார்வேட் நகரம் போகத்தான் போகிறாள். நல்ல நேரம் வரை பொறு. இப்போது எனக்கு ஒரு காரியம்!"

"சொல்லுங்கள்!"

"கார்வேட் ராஜாவுக்குக் கடிதம் எழுதுகிறேன். அதை அவரிடம் கொண்டு போய்க் கொடு."

"செய்கிறேன்."

"இது ரொம்ப ரகசியமாக இருக்க வேண்டும்."

"சரி."

"குவர்னர் தூப்ளேக்கும் துபாஷி ஆனந்தரங்கருக்கும் தெரியக் கூடாது."

"சரி மதாம்."

"கார்வேட் ராஜா ஒருவரிடமே காட்ட வேண்டும். வேறு யாரிடமும் காட்டக் கூடாது."

"இல்லை."

"தந்தை பேரில் சத்தியம் செய்வீரா?"

"சத்தியம்! போதுமா?"



மேஜை மீது எழுதி வைத்திருந்த கடிதத்தில் மதாம் கையெழுத்து இட்டாள். பிறகு அதை மடக்கி ஒரு உறையுள் போட்டு அவனிடம் கொடுத்தாள்.

பின்னர் எழுந்து அருகில் இருந்த தட்டை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதில் வெற்றிலை, பாக்கு, பழம், அத்தர், கற்கண்டு ஒரு ஜரிகை வேட்டி, துப்பட்டா, தூரம் பார்க்கும் கண்ணாடிக் குழல் (டெலஸ்கோப்) ஒரு பணமுடிப்பு, எல்லாம் கொடுத்தாள்.

"போய் சீக்கிரம் திரும்பி வா, வர்மா. உனக்கு இன்னும் பரிசில்கள் தருவேன்!" என்றாள் மதாம்.

குழலை வர்மன் வினோதமாய்ப் பார்த்தான்.

"இது தெலஸ்கோப்!" என்றாள் மதாம். அது பார்க்கும் வகையை விளக்கினாள்.

வர்மன் ஒற்றைக் கண்ணில் வைத்துச் சன்னல் வழியாகப் பார்த்தான்.

நெடுந்தொலைவில் கடலும், ஒரு கட்டுமரமும் தெரிய பளீர் என்று முகம் பெரிதாகியது.

ஆச்சரியத்தில் வாய் திறந்து விட்டது.

ஒவ்வொரு திசையையும் பார்த்துவிட்டுக் குழலை மடக்கி உள்ளே வைத்தான்.

காணாத அதிசயத்தைக் கண்ட உவகை அவன் முகத்தில் தெரிந்தது.

"வர்மா! இன்னும் எனக்கு உதவி செய்! உனக்கு இன்னும் அதிசயங்கள் எல்லாம் தருகிறேன்!" என்றாள்.

"நாராயணா!" என்று அழைத்தாள்.

அவளது துவாஷி வந்தான். "இந்தா இவருக்கு ஒரு உயர்ந்த ரகக் குதிரையைக் கொடு. ஒரு கைத்துப்பாக்கி கொடு! பயணத்திற்கு வேண்டியதெல்லாம் கொடு! ஒரு பிரெஞ்சு அடையாளச் சீட்டுக் கொடு!"

எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு பொழுது சாய்ந்த பிறகு சத்திரம் திரும்பினான் வர்மன்.

* * *

ஆர்க்காட்டு நகரத்தில் இருந்தது அந்தக் கோட்டை! ஒரு மைல் சுற்றளவுதான். ஆனால் சற்று பலம் வாய்ந்த கோட்டை!

இந்தக் கோட்டைக்குள் தான் ராபர்ட் கிளைவும் அவனது ஐநூறு பேர் படைக் கூட்டமும் சிக்கி இருந்தார்கள்.

கோட்டைக்கு வெளியே தான் ஆர்க்காட்டு நகரமும் அதன் லட்சம் ஜனத் தொகையும்.

கோட்டையைக் கிளைவ் பறித்துவிட்டார் என்பதைக் கேட்டு, சந்தாசாகிப் தமது மகனான ராஜாசாகிப்பை அனுப்ப, அவர் தமது பத்தாயிரம் பேர் படையோடு ஆர்க்காட்டு நகரத்துக்குள்ளே சென்று கோட்டையின் வாசல்புறம் நின்றார்.

கிளைவின் ஐநூறு பேர் படை எங்கே? நவாபின் பத்தாயிரப் படை எங்கே?

நவாபின் பத்தாயிரம் பேர்ப் படையில் பாதிப் பேர் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். மேனாட்டுப் படைகளுக்கு நிகரானவர். பிரெஞ்சுக்காரர்கள் இந்தப் பயிற்சியை அவர்களுக்கு அளித்திருந்தார்கள்.

எனவே, கிளைவின் அதிகாரிகள் அந்தப் பெரும் சேனையைப் பார்த்து மலைத்து நிற்க,

கிளைவ் சிறிது அளவு கூட மனத்தளர்ச்சி அடையவில்லை.

அந்த இளைஞனிடம் எப்போதுமே ஒரு நம்பிக்கை இருந்தது. தான் எப்போதுமே ஜெயிக்கப் பிறந்தவன் என்று நினைத்தான். பிரெஞ்சுக்காரர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைப் (சென்னை) பிடித்த போது கூட அசகாயமாகத் தப்பித்தவன் அவன். மேலும் இரண்டு மூன்று சண்டைகளில் மற்றவர்கள் செய்ய முடியாது என்று நினைக்கும் காரியத்தை இளைஞன் கிளைவ் நிகழ்த்தி வெற்றியைப் பிடித்திருக்கிறான்.

எப்படியும் தன்னால் இந்த ராஜாசாகிப்பை ஜெயிக்க முடியும் என்று மனத்துள் இரும்பு போல் உறுதி கொண்டான் அவன்.



கிளைவ் ஆர்க்காட்டை அடைந்தது செப்டம்பர் 1, 1751. ராஜாசாகிப் ஆர்க்காட்டை அடைந்த தேதி செப்டம்பர் 23, 1751. மறுநாள் (செப்டம்பர் 24) தனது சொற்பப் படையோடு வெளியே வந்து போர் இடத் தீர்மானித்தான்.

திடீரென்று கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு வந்து ராஜாசாகிப் படைகளைத் தாக்க ஆரம்பித்தான்.

எதிரிகள் பிரமித்து விட்டார்கள். என்ன நடக்கிறது என்று தெரிவதற்குள் நூற்றுக்கணக்கானவர்கள் மாய்த்து விட்டார்கள்.

எனினும் உயர் முறையில் பயிற்சி பெற்ற ராஜா சாகிப் படைகள் ஒரு மேனாட்டுப் படை போலவே இயங்கி கிளைவைத் தாக்க ஆரம்பித்தன.

கிளைவின் சொற்பப் படை சீக்கிரம் திணற ஆரம்பித்தது. மளமள என்று சிப்பாய்கள் விழ ஆரம்பித்தார்கள். கேப்டன்களும் வரிசையாகக் கொல்லப்பட்டார்கள்.

இளைஞன் கிளைவ் தானே வெளியில் வந்து யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

படைகளின் தவிப்பு அவனுக்குப் புரிந்து விட்டது. ஊக்கமளித்தவாறு அவனே படைகளோடு போரிட்டான்.

மேலும் சிறிது நேரம்தான் அவர்களால் தாக்குப்பிடிக்க முடிந்தது.

நகரத் தெருக்கள் பக்கம் தான் சண்டை நடந்தது. எதிரிச் சிப்பாய் ஒருவன் ஒரு வீட்டின் மீது ஏறிக் கிளைவைக் குறி பார்த்துக் கொண்டிருந்தான். கிளைவ் விடாமல் தனது சிப்பாய்களோடு சேர்ந்து போய் இட்டுக் கொண்டிருக்க, எதிரிச் சிப்பாய் குறி வைப்பதைக் கவனிக்கவில்லை.

ஆபத்து எந்த நொடியிலும் காத்திருந்தது.

ஆனால் திடீரென்று எதிரிச் சிப்பாயின் செய்கைகளைப் பார்த்த இங்கிலீஷ் காப்டன் ஒருவன் கிளைவ் அருகில் தாவிக் குதித்து அவனை அப்பால் தள்ளினான்.

அதே நேரம் எதிரிச் சிப்பாயின் துப்பாக்கியும் வெடிக்க, குண்டு அந்தக் காப்டன் உடம்பில் ஏறியது.

அடுத்த கணம் அவன் துடித்துப் போய் விழுந்து இறந்தான்.

கிளைவ் உடனே பின் வாங்க உத்தரவிட்டான்.

சிப்பாய்கள் வேகமாகக் கோட்டைக்குள் போனார்கள்.

கோட்டைக் கதவைச் சாத்தி சிக்கென அடைத்தார்கள்.

உள்ளே கணக்கெடுத்த போது ஐம்பது சிப்பாய்களும், 15 வெள்ளைக்கார அதிகாரிகளும் இறந்திருப்பது தெரிந்தது.

கிளைவ் கலங்கினான்.

பதினைந்து அதிகாரிகளையும் ஒரே சண்டையில் இழந்தது மனத்தைப் பாதித்தது.

இன்னும் சில அதிகாரிகள் மிச்சமிருந்தார்கள்.

தனது சொற்பப் படையில் இனி ஆட்சேதம் ஏற்பட்டால் தனது பலம் வெகுவாகக் குறையும் என்று அவன் எண்ணினான். இனி வெளிச் சண்டை போடக் கூடாது. கோட்டையைப் பாதுகாப்பது தான் தனது ஒரே வேலை என்று நினைத்தான்.

உள்ளே அடைபட்டுக் கிடந்து பத்து நாட்கள் ஓடிவிட்டன. எதிரியால் கோட்டையை உடைத்து உள்ளே வர முடியவில்லை.

ஆனால் கோட்டைக்குள் உணவு அதிகம் கிடையாது என்பது எதிரிக்கு நன்றாய்த் தெரியும்.

எனவே சண்டையில் முறியடிப்பதை விடப் பட்டினியால் முறியடிப்பதே எளிது என்று எண்ணினான்.

பன்னிரண்டாம் நாளில் இருந்து உள்ளே நிலைமை மிகவும் மோசமாகியது.

உணவை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தாலும் இருக்கிற அளவு வெகுவாகக் குறைந்து விட்டது. இன்னும் ஒரு வாரம் ஓடினால் அதிசயம்!

அன்று மாலையில் கிளைவ் தனது ஆலோசனை அறையில் கட்டில் மேல் திண்டு போட்டு சாய்ந்திருக்க, அவனது கால் பகுதியில் இன்னும் கடைசி ரணங்கள் இருந்ததால் அதைச் சுற்றி ஒருவன் 'பாண்டேஜ்' கட்டிக் கொண்டிருந்தான்.



பக்கத்தில் 45 வயது மதிக்கத்தக்க இந்தியர் ஒருவர் தலைப்பாகை தாடி மீசையுடன் கிளைவ் முன்னால் பவ்யமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"கம்பெனி கவுன்ஸிலுக்கு நான் எழுதிவிட்டேன். இந்தா பாட்ரிக்! அந்தக் காகிதத்தை இப்படிக் கொடு!" என்று கூறினான் கிளைவ்.

பாட்ரிக் ஓடிவந்தான்.

"இன்னும் மூன்று நாட்களுக்குள் எங்களுக்குப் பணம் வர வேண்டும். இல்லையேல் நாங்கள் ஆர்க்காட்டை இழக்கிறோம்!" என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை கிளைவ் அந்த ஒற்றன் கையில் கொடுத்தான்.

"உடனே போங்கள்! பணம் வர வேண்டும். இல்லையேல் எல்லோரும் மடிவோம்!" என்றான்.

## 26. காதலிக்க ஒரு இதயம் போதாது!

ராபர்ட் கிளைவின் முன்னே பணிவுடன் நின்றவர் சங்கரசுப்பிரமணியம் என்ற ஒற்றர். இங்கிலீஷ்காரரின் தலைமை ஒற்றர்களில் ஒருவர். சென்னையிலிருந்து வந்திருந்தர்ர். மூன்று நாட்கள் ஆர்க்காட்டுக் கோட்டைக்கு வெளியே காத்திருந்தார். கோட்டைக்குள் எப்படிப் போவது? நவாப் படை சூழ்ந்து கொண்டு இருக்கிறது.

லஞ்சத்தைப் போல எளிதான திறவுகோல் உலகத்தில் ஏது? யார் படையாக இருந்தால் என்ன? படையில் சேர்ந்திருக்கும் வீரன் ஊதியத்தை நம்பித்தானே சேர்ந்திருக்கிறான்? நாட்டுப் பற்று சிறிது இருக்கலாம். ஆனால் அதெல்லாம் ஊதியத்திற்குப் பிறகுதான்! மேலும் நாடு என்று கொள்ளும் அளவுக்கு ஒரு நாடும் அந்தக் காலத்தில் உருப்படியாக இல்லை.

நவாப் படையில் தளகர்த்தர் இருவருக்கு லஞ்சம் கொடுத்தார். கோட்டையில் தெற்குப் பாரிசம் வழியாக இரவில் உள்ளே போவதற்கு அனுமதி பெற்றார்.

பிறகு கோட்டை உப்பரிகைக் காவலுக்கு அவர் யார் என்று அறிமுகம் செய்து, அதை காவல்காரன் தன் மேலதிகாரிகளிடம் சொல்லி, அவர்கள் சங்கரசுப்பிரமணியத்தை அடையாளம் கண்டு கொண்டதும்,

பிறகு ஒரு கூடையைக் கீழே இறக்கி அதன் மூலம் அவரை மேலே இழுத்துக் கோட்டைக்குள் கொண்டு சென்றதும் வெகு அவசரமாக நடந்து விட்டன.

தளபதி ஸாண்டர்ஸிடமிருந்து கடிதம் கொண்டு வந்திருந்தார் அவர். சங்கேதமொழியில் எழுதப்பட்டிருந்தது. கிளைவ் அதை வாங்கித் தமது மெய்க்காவலரிடம் கொடுத்தான். அவர்கள் சொற்ப நேரத்தில் அந்த சங்கேதத்தை அவிழ்த்துக் கொண்டு வந்தார்கள். கிளைவ் அதை வாங்கிப் படித்தான்.

அவன் முகம் சரியாகக் கனியவில்லை.

காலில் கட்டுப் போடுகிறவரைப் பார்த்து, "ஆயிற்றா?" என்று கேட்டான்.

தலையை ஆட்டி விலகினான் அவன்.

கிளைவ் திரும்ப ஒரு முறை கடிதத்தைப் பார்த்து, "தாமஸ்!" என்றான்.

தாமஸ் தனது ராணுவ உடையில் முன்னால் வந்தான்.

"உதவி கிடைக்க ஒரு வாரம் ஆகும் என்கிறார்கள்."

முகத்தைக் கடுமையாக்கிச் சொன்னான் கிளைவ்!

"ஒரு வாரம்!" என்று பயம் பொங்கக் கேட்டான் தாமஸ்!

கிளைவ் பதில் சொல்லவில்லை.

"இன்னும் மூணு நாள் தாக்குப் பிடிக்க முடியாது. அரிசி, கோதுமை எல்லாம் காலி! சிப்பாய்கள் அரைப் பங்கீட்டில் இருக்கிறாங்க! பட்டினி வயிறு போர் செய்யாது!" என்றான் தாமஸ்.

"கோட்டைப் பாதுகாப்பு சிதைந்துவிடும். காவலில் பாதிப் பேர் நோயாளிகள்" என்றான் பாட்ரிக்.



"லஞ்சம் கொடுக்கப் பணமில்லை. இனிமேல் பொருள்கள் உள்ளே வராது!" என்றார் கிடங்கு அதிகாரி.

(கோட்டை முற்றுகையில் இருந்ததால் லஞ்சம் கொடுத்துத்தான், உணவுப் பொருள்களை உள்ளே கொண்டு வந்தார்கள்.)

"மிஸ்டர் ஷங்க்!" என்றான் கிளைவ். சங்கரசுப்பிரமணியத்தை நோக்கி, "உனக்குத் தெரியுமா, நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்று! ஸாண்டர்ஸுக்கு இது புரியாதா? முற்றுகையை அவர் பார்த்ததில்லையா?" என்றான் ஆற்றாமையோடு.

"ஸர்!" என்றார் சங்கரசுப்பிரமணியம். "எல்லா உதவியும் இப்போது திருச்சிராப்பள்ளிக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அங்கே முகம்மதலி தக்க வசதி இல்லாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார். உங்கள் பாடாவது தேவலை! உள்ளே இருப்பவர்கள் ராணுவப் படையினர்தான்! "திருச்சினாப்போலி" கோட்டைக்குள் இருப்பவர்கள் சாதாரண ஜனங்களும் கூட! முற்றுகையில் அவர்கள் கலகலத்து விட்டார்கள். முகம்மதலிக்கு எதிராகத் திரும்பக் கூடாது அல்லவா? ஆகவே உதவி அனுப்ப வேண்டிய முதன்மையை 'திருச்சினாப்போலி' பெறுகிறது" என்றார்.

"ஷங்க்! நாங்களும் ஒரு மோசமான நிலைக்கு வந்துவிட்டோம்! இதிலிருந்து தப்ப வழியில்லை! ஸாண்டர்ஸிடம் சொல்லு! உதவி வந்தால் இன்னும் இரண்டு மூன்று நாளில் வர வேண்டும். இல்லாவிடில் எங்கள் கதி அதோ கதி ஆகிவிடும்!" என்றான் கிளைவ்.

பிறகு, "அந்தத் திருப்பதிப் பணம் என்னவாயிற்று! அது வந்தாலாவது சமாளிக்கலாமே!" என்று கூறினான் அவன்.

"அதற்குத் தான் பணயம் வாங்கி உங்களிடம் அனுப்பித்து வைத்தார்கள்!"

"பணயம் வந்து சேரவில்லையே!"

"அதைக் குறித்துத்தான் ஸாண்டர்ஸும் கவலைப்படுகிறார். பொம்மராஜு ஜமீனின் மகள் எங்கே போனாள் தெரியவில்லை!" என்றார் சங்கரசுப்பிரமணியம்.

"வழியில் யாராவது கடத்தியிருப்பார்கள்!" என்றான் கிளைவ்.

"தீவிரமாக அவளைத் தேடுகிறாம். நிச்சயமாக திருப்பதிப் பணம் தங்களுக்குத்தான் வரும். அதை வேறு உபயோகத்துக்குத் திருப்பக் கூடாது என்று கண்டிப்பாகக் கவர்னர் உத்தரவு போட்டிருக்கிறார்."

"போடட்டும்! இங்கே பணம் வந்தால் தானே ஆயிற்று! வரவில்லையே! இன்னும் யாரையாவது கார்வேட் நகரம் அனுப்புவது தானே?"

சங்கரசுப்பிரமணியம் மௌனம் சாதித்தார். "நல்லது! நீங்கள் இன்னும் ஒரு நாள் இருங்கள்! இங்கே நடப்பதை நேரில் பாருங்கள்! நான் கடிதம் எழுதித் தருகிறேன்!" என்றான் கிளைவ்.

பிறகு சட்டென்று எழுந்திருக்க, வாசல் பக்கம் ஏதோ சலசலப்பு ஏற்படுவது தெரிந்தது.

அதை அடுத்து இரண்டு பேர் ஒரே இரைப்புடன் வந்து நின்றார்கள்.

* * *

மதாம் தூப்ளே கூறியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டிருந்தான் வர்மன்.

திருப்பதிப் பொருளின் மீது எத்தனை பேர்களுக்குத்தான் ஆசை!

அத்தனைப் பேரும் கேட்கிறார்களே!

இப்படிக் கேட்பதற்கு ஏதாவது நியாயம் கியம் இருக்க வேண்டாமா?

அந்தப் புண்ணியப் பொருளைத் தொடுவதற்கு அருகதை அற்றவர்கள் எல்லாம் அதைக் கேட்கிறார்களே?

சிந்துவை இரண்டு நாளாய்க் காண முடியவில்லை. எங்கேயாவது பயணம் போய்விட்டாளா? உடன்படிக்கைக் குழு அவளை அழைத்திருக்குமோ!

அவனது மனத்தை அன்று திறந்து அவளிடம் சொல்லியதிலிருந்து அவனுக்குச் சுமை இறங்கிய உணர்ச்சி



வந்து விட்டது. கனத்தில் மிதக்கும் உணர்ச்சி அவனைத் தழுவியது. "வீரரே! நீர் படுவதை நான் படவில்லை என்று ஏன் எண்ணுகிறீர்கள்? நிச்சயமாய் நானும் படுகிறேன். ஆனால் பொறுங்கள்! சீக்கிரம் என் மனத்தை வகைப்படுத்திக் கூறுகிறேன். ஆனந்தத்தில் அது இப்போது அல்லாடுகிறது. அதன் தத்தளிப்புகள் முடியட்டும்!" என்று கூறியிருந்தாள்.

ஆனால் போகும் போது அவன் இன்னும் தவிப்பதைப் பார்த்து, "இன்னும் தளர்ச்சி ஏன், வீரரே! உங்கள் நினைப்பு தான் என் நினைப்பாகவும் இருந்து வருகிறது! இதில் சந்தேகம் இல்லை! இவ்வளவு சொன்னால் போதாதா!" என்று கூறி அவனைச் சமாதானப்படுத்திச் சென்றாள்.

நல்லவேளை! கடைசியாக அவள் அப்படிச் சொல்லிச் சென்றதன் காரணத்தால் தான் அவன் இப்போது ஆனந்தப்படுகிறான். மனம் பறவை போலப் பறக்கிறது. தந்தை கிடைக்காத துக்கம் கூடச் சற்று மிதமாகி வருகிறது.

நினைவில் மூழ்கியவனாய் வர்மன் அந்தக் காலையில் நடந்து செல்ல, சீக்கிரம் சீமான்கள் சாலையை அணுகினான்.

வரிசையாகத் தோட்ட வீடுகள் தென்படத் தொடங்கின.

பசுமையும் குளுமையும் நிறைந்த கொடி செடி வர்க்கங்கள் அவன், மனத்துக்கு இதத்தை அளித்தன.

வாசலில் பீரங்கி வண்டி வைத்திருக்கும் அடையாளத்தைத் தேடிக் கடைசியில் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தான்.

பெரிய முகப்பில் சாரட்டு ஒன்று பளபள என்று நின்றது.

உள்ளே பியானோவிலிருந்து எழுந்த சங்கீதத் துணுக்குகள், சின்னச் சின்னப் புஷ்பங்களாக மிதந்து வந்தன.

அந்த ஐரோப்பிய இசை அவன் மனத்தை கிறக்கிவிட்டது. கைகளைக் கோர்த்து சிறிது நேரம் நின்றான். பிறகு கயிற்று, மணியை இழுக்க, உள்ளே 'கலிங்' என்று சத்தம் எழுந்தது.

வேன்ஸான் வெளியே வந்து பார்த்தார்! "அடேடே

வர்மனா? வா! வா! இன்னும் வரவில்லையே என்று பார்த்தேன்!" என்று சொல்லி உள்ளே அழைத்துப் போனார்.

ஹால் பூராவும் பிரெஞ்சு மோஸ்தரில் இருந்தது. பெரிய கப்-போர்டுகளும் அலமாரிகளும் மூலைக்கு மூலை கரும் பளிங்குகளால் ஒளி வீசின.

மேலே விதானங்களில் மூன்று வித சேண்டிலியர்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

ஒரு லூயி பதினான்கு நாற்காலியில் உட்கார்த்தி அவனிடம் பேசினார் அவர்.

மதாம் தூப்ளேயிடம் இரண்டாம் முறை போய் வந்ததையும் திருப்பதிப் பணத்தைக் கொண்டு வரச் சொல்லி அவள் கேட்டுக் கொண்டதையும் கூறினான் வர்மன்.

"அதெல்லாம் இருக்கட்டும்! செஞ்சுகாவைப் பார்த்தாயா?" என்று கேட்டார் வேன்ஸான்.

"பார்த்தேன்!" என்றான் வர்மன்.

"உனக்கு ஒரே ஆனந்தம் ஏற்பட்டிருக்குமே!" என்றார் அவர்.

"ஆமாம் துரை!" என்றான் அவன்.

"இப்போது கூட ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு விநாடியும் அவள் நினைவு வந்து கொண்டிருக்குமே!" என்றார் வேன்ஸான்.

வர்மன் அவரை ஏறிட்டுப் பார்த்தான். முகம் பூராவும் புன்னகை மயமாய் இருந்தார் வேன்ஸான்.

தோற்றத்தில் கூட உல்லாசம் அல்லாடியது.

வேன்ஸான் உடனே பாடினார். பிரெஞ்சுப் பாடல் அது. மனத்தை அள்ளி எடுத்து உணர்ச்சிக் கடலாய்ப் பாடினார்.

'லமூர் ரேங்! லெ ஸாங் புய்யோன்! ல'ன்னே எ போன்!" என்ற கடைசி வரிகளைத் திரும்பத் திரும்பப் பாடினார் அவர்.

அவர் நிறுத்தியதும் நிசப்தம்! எனினும் அவர் பாடிய வரிகள் இன்னும் சுழிகளாக அங்கே குமைந்து, உலைந்து, கலைந்து உலாவுவது போல் இருந்தது.

"துரை!" என்று அவரைக் கலைத்தான் வர்மன். அவர்



கண்களில் பளிங்குபோல் உணர்ச்சித் திவலை ஒன்று உறவாடியது.

"இது என்ன அர்த்தம்! யார் பாடினார்கள்?" என்றான் வர்மன்.

"வர்மா!" என்று கவிதைக் கனிவான குரலில் அழைத்தார் அவர். இன்னும் அவர் உணர்ச்சியை விட்டு அகன்றாரில்லை. "என் பெயரை உடைய ஒருவர்தான் இதைப் பாடினார். 'வேன்ஸான் உ வாத்யூர்' என்பது அவர் பெயர். மூணு வருடங்களுக்கு முன்தான் இறந்தார்."

'சூரியன் நம்மொடு நெருக்கமாகி, உலகை எல்லாம் வெம்மை செய்கிறான். காதல் எங்கும் அரக ஆள, ரத்தம் எல்லாம் வெம்மை ஆகிறது நல்ல ஆண்டு இது'

"வர்மா! காதலின் வெம்மை பட்டால் எங்கும் குதூகலம்தான்! நீ அதில் இப்போது மிதப்பாயே!" என்றார்.

வர்மன் தத்தளித்தான்.

"வர்மா! கீழை நாட்டில் நாம் நிறையப் பறி கொடுத்து விட்டோம். தலையாய இழப்பு நமது காதல்! காதல் செய்வதை மறந்துவிட்டோம். இழந்து விட்டோம். வாழ்க்கையின் ஒரு ஜீவ ஊற்றை முற்றிலும் துறந்துவிட்டோம். பரீஸுக்கு (பாரீஸ்) போ! அத்தனைப் பெண்களும் காதல்கள்தான்! அத்தனைப் பார்வையும் காதல்கள் தான்! அப்பா நான் மறக்கவே மாட்டேன் அந்த நினைவுகளை! அந்த நகரில் காலடி வைத்ததும் தான் சுவர்க்கத்தை அனுபவித்தேன். வர்மா! காதலிக்க ஒரு இதயம் போதாது! ஆயிரம் இதயங்கள் வேண்டும்! ஒருத்தரை மட்டும் அல்ல, அத்தனை பேரையும் காதலிக்க வேண்டி வரும்!" என்றார் வேன்ஸான்.

வர்மன் சிரித்தான்.

"அத்தனைப் பெண்களையுமா?" என்றான் வர்மன்.

"ஆமாம் வர்மா! இதிலென்ன தப்பு இருக்கிறது? பார்க்கிற பெண்கள் எல்லாம் காதல்தான். ஒவ்வொருவர் கண்ணும் உன்னைப் பிழிந்து எடுக்கும். ஒரு விஷயம் தெரியுமோ? ஒரு காதலியை உன்னால் தேர்ந்தெடுக்க முடியாது! அவ்வளவு பேர் இறைந்து கிடப்பார்கள்!" என்றார் வேன்ஸான்.

"துரை! அத்தனைப் பேரைக் காதலிக்கலாமா?" என்றான் வர்மன்.

"வர்மா! உன் மனம் அதை ஏற்காது! முதன் முதலில் மனம் ஒற்றைக் காதலை ஏற்காது. பார்க்கும் இடம் எல்லாம் அல்லாடும், கிறங்கும்! மதி மயங்கும்! அந்த உன்னத அனுபவத்தை வர்ணிக்கக் கூட முடியாது. உலகம் பூராவும் ஒரு காதல் மண்டலமாகத் தோற்றம் காட்டும். நீ பறப்பாய்! வர்மா! பறப்பாய்?"

"நீங்கள் நிறையப் பேரைக் காதலித்தீர்களா?" என்றான் வர்மன்.

"ஆமாம் தம்பி! முதலில் அப்படித்தான் மனம் வண்ணத்துப் பூச்சியாகப் பறந்தது. பிறகு ஒரு நாள் ஒரு வீட்டுக்குப் போனேன். சாப்பிட அழைத்திருந்தார்கள். அந்த வீட்டுக்காரியும் அவள் மகளும் பரிமாறினார்கள். கடைசியில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன். 'ஐயா! இதை மறந்து விட்டீர்கள்!' என்று நான் மறந்து போன கைத்துணியை என்னிடம் தந்தாள் அந்த இளம்பெண்! அப்போது அவள் பார்த்த பார்வை, அதில் கைது ஆகி நின்ற நான் நின்ற மருட்சி, எங்கள் இருவர்க்கும் இடையே ஓடிய பல சுவர்க்க மயமான கணங்கள்! எல்லாமே எங்கள் விதியை நிர்ணயித்து விட்டன. என் ஆன்மா அவளைக் காதலிக்கத் தொடங்கிவிட்டது. அவளை அது தேர்ந்து எடுத்துவிட்டது. அவள் என் மனைவி ஆனாள்!" என்றார்.

வர்மனின் மனம் நினைவுகளில் அல்லாடியது. சிந்து! ஒரு நதியைப் போல ஆழம், அமைதி, கம்பீரம், சோபை, சௌந்தரியம்.

செஞ்சுகா! ஒரு கடலைப் போல் கொந்தளிப்பு, ஆர்ப்பரிப்பு, உக்கிர அழகு, ஓய்வடையாத தத்தளிப்பு!

நதிக்கும் கடலுக்குமிடையே அவன் மனம் அல்லாடுகிறது.

மனத்தின் அந்த வேதனையை, தவிப்பை வேன்ஸான் பேசிய பேச்சுக்குப் பின்னால் தான் இன்னது என்று உணர முடிந்தது.

வேன்ஸான் 'பாரீஸ்' பற்றி இன்னும் பேசிவிட்டு அவனைச் சாப்பிட அழைத்துச் சென்றார்.



உடம்பு சரியில்லாமல் இருக்கும் தம் மனைவி திருமதி ழியான் வேன்ஸானைக் காண்பித்தார். அறிமுகம் செய்தார்.

மேஜைக்கு அழைத்துப் போனார்.

அவன் உட்கார்ந்ததும், வேன்ஸானின் மகள் மதில்தா ப்ளேட்களைக் கொண்டு வைத்தாள். மகளை அறிமுகம் செய்தார் வேன்ஸான்! பன்னிரண்டு பதிமூன்று இருக்கும்! மதாம் ழியானின் சாயல் அப்படியே இருந்தது.

அவள் பரிமாற அந்த 'சூப்' வகையறாக்களை வர்மன் எச்சரிக்கையாக ருசி பார்த்தான்.

வேன்ஸான் சற்றுத் தள்ளி ஒரு கோப்பை மதுவில் ஐக்கியமாகி, புகைத்துக் கொண்டிருந்தார்.

ஒருவாறு உணவுகளை ஒருவிதமாக முடித்துவிட்டு, வேன்ஸானிடம் கடைசி விடைபெற்று, வர்மன் வெளியே வந்தான்.

'மதாம் தூப்ளே சொன்ன ஆணையை நிறைவேற்று! சீக்கிரம் இங்கே வா! உனக்கு நல்லதுகள் நடைபெறும்!' என்று சொல்லி வழி அனுப்பினார் வேன்ஸான்!

தெருவில் சிறிது தூரம் போயிருக்க மாட்டான். "மிஸ்ஸிய! மிஸ்ஸிய!" என்று மெல்லிய குரல் அழைக்கத் திரும்பினான்.

அந்த இளம் பெண் மதில்தா தன் கவுன் நுனிகளைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தாள்.

"இந்தாருங்கள்! உங்கள் கைவாள்! இது விட்டு விட்டீர்களே!" என்று அவனிடம் கொடுத்தாள்.

திடுக்கிட்டு அவன் அவளைப் பார்க்க, அந்த இளம் பெண்ணின் கண்ணின் வழியே ஏழுலகக் காதல் வசியமும் மிதந்து வந்தது.

சுருக்கென்று பொறிதட்ட நின்றான். மனம் எங்கேயோ பிழிபட்டது. வேன்ஸான் சொல்லியது அவனுக்கே நடக்கிறதோ?

கடவுளே! உலகத்தில் யாரைப் பார்த்தாலும் 'காதல்' என்றாரே! வேடிக்கை என்று நினைத்தேன்! அப்படி இல்லையோ?

வாளைச் சட்டென்று வாங்கி இடுப்புப் பட்டையில் செருகினான். "நன்றி சொல்லுறேன் வரேன்" என்று கூறி விறுவிறுப்பாக நடந்தான்.

தெரு வளைவுக்கு வந்திருப்பான். மர நிழல் ஓரம் நிற்கும் உருவத்தைக் கண்டு திடுக்கிட்டான்.

சிந்து நின்று கொண்டிருந்தாள்.

"வீரரே! வேன்ஸான் வீட்டை விட்டு வர மனம் இல்லையோ! புறப்படுங்கள் அவசரம்! நாம் புதுச்சேரி விட்டுப் போகிறோம்!" என்றாள்.

அவள் கூறியதும் அவன் மனத்தைத் தைத்தது.

## 27. இரண்டில் ஒன்று

வர்மன் வந்ததும் சிந்து, தனது குதிரையில் ஏறிக் கொண்டாள். "அவசரம்! அவசரம்!" என்று குதிரையைத் தட்டி விட்டாள்.

"எங்கே போகிறோம்? சிந்து" என்றான் அவன்.

"நமக்கு காரியம் இல்லையா! நம் கெடு நாட்கள் வந்து கொண்டிருக்கின்றன" என்றாள் சிந்து.

இருவரும் முதலில் வழுதாவூரான் சத்திரத்திற்குச் சென்றார்கள். அங்கேதான் வர்மன் தன் உடமைகளை வைத்திருந்தான்.

"சீக்கிரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள்! ஊரை விட்டுப் போகிறோம்!" என்றாள்.

"அதற்குள்ளேயா?" என்றான்.

சிந்து மறுமொழி சொல்லவில்லை.

வர்மன் எண்ணச் சுமையுடன் உள்ளே சென்றான். மனம் ஏன் அவ்வளவு கலக்கியது?



ஊரை விட்டுப் போகிறோம் என்பதாலா?

தந்தையை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை.

எப்படியும் அதற்குத் திரும்பி வரத்தான் வேண்டும்!

அவர் என்ன ஆனார் என்பதைத் தெரியாமல் ஊர் திரும்புவதா?

அதுதானே அவனது முக்கிய காரியம்?

ஆமாம்.

அது போகட்டும். இப்போது சில்லறையாக அவன் மனத்தை அரித்துக் கொண்டிருப்பது அந்த நாலு விழிகள் தான்.

ஒன்று செஞ்சுகாவின் ஜோடி! மற்றொன்று மாதில்தாவின் ஜோடி!

அவைகளுக்கு என்ன சக்தி?

வண்டினம் போல் ரீங்காரமாக மனத்தை வளையமிடுகின்றன.

வேன்ஸான் எவ்வளவு தத்ரூபமாகச் சொன்னார்! பார்க்கும் அத்தனை கண்களும் காதல் என்று!

நடைமுறையில் அத்தனை காதல்கள் இருப்பது சாத்தியமா!

அவருக்கென்ன? அவர் வெள்ளைக்கார வழக்கைப் பின்பற்றுபவர். என்ன வேண்டுமானாலும் சொல்லுவார்!

தனது பொருள்களைச் சேகரித்துப் பையில் போட்டு வெளியே வந்தான் வர்மன்.

இருவரும் வீதிகளைக் கடந்து மேற்குக் கோட்டைப் பக்கம் போனார்கள். கோட்டை வாயிலில் இருந்த தலையாரி தகராறு செய்தான்.

அவர்களை வெளியே அனுப்புவதற்கு உத்தரவு வேண்டும் என்று கூறினான்.

மதாம் தூப்ளேயின் உத்தரவை எடுத்து வர்மன் காட்டினான்.

குவர்னர் துரை அல்லது துபாஷி ரங்கப்பிள்ளை உத்தரவு வேண்டும் என்றான்.

இருவரும் சிறிது நேரம் சஞ்சலப்பட்டு விட்டு பிறகு சத்திரத்திற்கே அன்றைய இரவைக் கழிக்கத் திரும்பினார்கள்.

காலையில் மீண்டும் புறப்பட்டு, துபாஷி ஆனந்தரங்கப்பிள்ளை வீட்டுக்குப் போய்ச் சேர,

அவர் காலையில் பழையது சாப்பிட்டுவிட்டு குவர்னர் துரை மாளிகைக்கு போய்விட்டார் என்று செய்தி வந்தது.

அப்பால் குவர்னரைப் பார்த்துவிட்டு அவர் நேராக அவரது பாக்குக் கிடங்குக்கு வருவார் என்பது அறிந்து,

நேரே கிடங்கு இருக்கும் வீதியில் போய் நின்றார்கள்.

வெயில் ஏறிக் கொண்டிருந்த தருணத்தில் சிவிகை ஒலி கேட்க,

இருவரும் கிழக்கு நோக்கிப் பார்க்க,

பல்லக்கு ஒன்றில் ஆனந்த ரங்கப்பிள்ளை சமத்காரமாய் உட்கார்ந்து வந்தார்.

இரு பக்கமும் தீவர்த்திகளும், சாமரமும் பிடித்த ஆட்கள் வந்தார்கள்.

பாக்கு கிடங்கு வாசலில் பல்லக்கு நிற்க, ஆனந்தரங்கப்பிள்ளை கீழே இறங்கி கிடங்குக்குள் போனார்.

அவ்வளவில், வர்மனும், சிந்துவும் சென்று காரியஸ்தர் வழியாக சொல்லி அனுப்ப,

சிறிது நேரத்தில் அவர் திரும்பி வந்து உள்ளே அழைத்துப் போனார்.

பாக்குக் கிடங்கு என்கிற வகையில் பச்சைப் பாக்கின் பசுமையான துவர்ப்பு நெடி உள்ளே அடித்தது.

குவர்னரிடம் துபாஷி (மொழி பெயர்ப்பாளராக ஆரம்பித்த இந்தப் பதவி பின்னர் அந்தரங்கக் காரியதரிசி அளவுக்குப் படிப்படியாக மாறி விட்டது.)யாக இருந்த ரங்கப்பிள்ளை தாமே ஒரு நல்ல வர்த்தகராகவும் இருந்து வந்தார்.

பல தேசங்களிலிருந்து பொருட்களை வாங்கி விற்றதும் அல்லாமல், பல தேசங்களுக்குப் பொருட்களை ஏற்றுமதியும் செய்து கொண்டிருந்தார்.



'ஆனந்தப் புரவி' என்கிற பெயரில் சொந்தக் கப்பலும் இருந்தது.

உள்ளே பெரிய கூடத்தில் மாக்கோலம் போடப்பட்டு சித்திர சாலை போல இருந்தது. மேலே விதானத்தில் திருமால் நாகம் மேல் சயனித்திருக்கும் திருக்கோலம் நீலம், வெள்ளை, பச்சை, மஞ்சள், ஆகிய வர்ணங்களில் தீட்டப்பட்டு இருந்தது. ஓரத்தில் குறு நாகப்பட்டை போன்ற தங்க முலாம் பூசப்பட்ட ஜிகினாத் துணுக்குகள் மின்னிக் கொண்டிருந்தன.

ஆனந்த ரங்கப்பிள்ளை திண்டு போட்டு அதில் அமர்ந்திருந்தார்.

இரு பக்கமும் இருவர் விசிறி வீசிக் கொண்டிருந்தார்கள்.

நாற்பத்திரண்டு வயது நிரம்பிய ரங்கப் பிள்ளை பார்ப்பதற்கு ஒரு யௌவன இளைஞர் போல் வீற்றிருந்தார்.

தலையில் கட்டியிருந்த பாகை இன்னும் கலைக்கப்படவில்லை. நெற்றியில் வைண நாமத்தின் சிசூர்ணம் தான் பெரும்பாலும் புலனாயிற்று.

கறு கறுவென்று நீற மீசை.

காதில் இரு பெரிய வளையங்கள் தொங்கின.

பூசினாற் போல மேனி.

சட்டை போட்டு அதற்கு மேல் அங்கி தரித்து இடது விலாப் பக்கம் அதன் நுனிகளைக் கட்டியிருந்தார்.

அவர்கள் போன போது இடுப்புப் பட்டையைக் கழற்றி, அந்த பதவி கௌரவத்தைக் காண்பிக்கும் உடைவாளை எடுத்து கீழே பாய் மீது வைத்தார்.

வர்மனும், சிந்துவும் உள்ளே வந்ததும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து, "உட்காருங்கள்" என்றார்.

உள்ளே நல்ல குளிர்ச்சியாக இருந்ததுடன் இதமான வெளிச்சமும் இருந்தது.

வந்த காரணத்தை வர்மன் கூறினான்.

ரங்கப் பிள்ளைக்குச் சிறிதே மாறு கண் இருந்தது. அவர்களை உற்றுப் பார்க்கிறாரா என்று அடிக்கடி வர்மனுக்கு உதறல் ஏற்பட்டது.

"எங்கே வந்தீங்க? எங்கே போறீங்க?" என்று கேட்டார்.

தந்தையைத் தேடி வந்ததாகவும் தந்தை கிடைக்காததால் திரும்பப் போவதாகவும் கூறினான்.

சிந்து தனது தூரத்து உறவு என்று கூறினான்.

"நல்லது தம்பி. முறி எழுதித் தரேன்" என்று ரங்கப் பிள்ளை சொல்லிவிட்டு, லிகிதம் எடுக்கச் சாய்ந்ததும்

வர்மனுக்கு பிடிபடாத எதுவோ தோன்றியது.

மேலே அவர் கேட்ட கேள்விக்கு மதாம் தூப்ளேயைப் பார்த்த விவரத்தை வர்மன் கூற,

ரங்கப் பிள்ளை அதிக ஆர்வம் உள்ளவராய், மதாம் என்னென்ன பேசினார்கள், என்னென்ன செய்தார்கள் என்று விவரமாகக் கேட்டு,

வர்மன் கார்வேட் ராஜாவிடம் போவதையும், மதாம் தூப்ளே அந்த ராஜாவுக்குக் கடிதம் எழுதியிருப்பதையும் தெரிந்து கொண்டார்.

கடுதாசி ஒன்றை எடுத்து மைக்கூடு பேனாவால் உத்தரம் ஒன்று எழுதி அதற்கு தமது முத்திரை பதிப்பித்து அவர்களிடம் கொடுத்தார்.

தற்போதைய ராஜாவிடம் ரங்கப்பிள்ளை பழக்கம் ஆனதில்லை என்றும்,

அதற்கு முந்தைய ராஜாவிடம் மிக அன்னியோன்யமாகப் பழகியதாகவும் ரங்கப் பிள்ளை தெரிவித்தார்.

பின்னர், அவர்களுக்கு விடை கொடுக்க, இருவரும் புறப்பட்டு வெளியே போனார்கள்.

அன்று சாயந்தர வேளையில் தமது சொந்த லிகிதம் என்கிற 'தினப்படி சேதிக் குறிப்பு' எழுதும் போது,

...வருஷம் புரட்டாசி ஆதிவாரம் என்று ஆரம்பித்து,

'காலமே பழயது சாப்பிட்டு துரையவர்கள் அழைத்ததன் பேரில் அவுரிடம் போன இடத்தில்...' என்று தொடங்கிய குறிப்பில்,

'அப்பால் பாக்குக் கிடங்கில் வந்து சிரமப்பட்டு பரிகாரம் செய்யற வேளையில் ஒரு ஆணும் பெண்ணும்



வந்து என்னைக் கண்டு மேற்கு வாசல் வழியே போவதற்கு உத்தரம் வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களை விசாரித்த போது மதாம் தூப்ளே திருப்பதி பணத்திற்கு ஆசைப்பட்டு கார்வேட் ராஜாவுக்கு கடிதம் எழுதியிருப்பது தெரிய வந்தது.

கணவனுக்குத் தெரியாமல் மதாம் தூப்ளே செய்யும் காரியங்களுக்குக் கணக்கு வழக்கு கிடையாது. பணம் ஒன்றே குறியாக வைத்து எத்தனையோ திரிசமன் காரியங்கள் செய்து வருகிறார். இன்னும் என்னவெல்லாம் செய்து துரையவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப் போகிறாரோ...." என்று எழுதினார்.

உத்தரம் வாங்கி கோட்டை வாசலைக் கடந்த பிறகு,

"வர்மரே நாம் தெற்கே போகிறோம்!" என்றாள் சிந்து.

"பொம்மராஜு பாளையம் போக வேண்டாமா?" என்றான் வர்மன் திடுக்கிட்டு.

"இப்போது அதற்கு அவசரம் அல்ல" என்றாள் சிந்து.

"ஐயோ! செஞ்சுகாவின் கதி!" என்றான் வர்மன்.

சிந்து திரும்பி அவனை தீர்க்கமாக ஒரு முறை பார்த்தாள்.

"ஏன் என் கதியைப் பற்றி நீங்கள் நினைக்கவில்லையா?" என்று குரல் தாழ்ந்து கேட்டாள் சிந்து.

அவள் கேட்ட தொனியின் அத்தியந்த ஸ்பரிசம் அவன் மன ஆழங்களைத் தொட்டது.

"சிந்து!" என்று சொல்லி நிறுத்தினான். அவன் கண்கள் கலங்கி இருந்தன.

"ஏன், என்னிடம் இப்படிக் கேட்கிறீர்கள்? நான் ஏதாவது தப்பிதம் செய்து விட்டேனா?..."

துடித்துக் கொண்டு கேட்டாள் அவள்.

அவன் பேசவில்லை.

"சிந்து! நான் எல்லாவற்றுக்குமே புதியவன். எங்கேயோ ஒதுங்கிப் போன ஒரு சீமையில் ஒரு குக்கிராமத்தில் இருந்தவன் நான்! திடீரென்று என் கண்களைப் பெரிதாக்கி

விட்டது போல தெரிகிறது. எல்லாமே எனக்குப் புதுமையாகத் தோன்றுகின்றன. யார் எதை சொன்னாலும் ஏற்றுக் கொள்கிறேன். எனது தென் சீமை குக்கிராம வாழ்க்கையிலிருந்து இங்கே எல்லாமே மாறுபட்டு தோன்றுகிறது. அதில் எப்படி எப்படி நான் நடந்து கொள்ள வேண்டும் என்று முறைமை எனக்குத் தெரியாமல் போகலாம். அதை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கலாம். சிந்து..." என்றான் அவன்.

சிந்துவின் முகத்தில் குறுநகை பூத்தது.

"வர்மரே! உங்கள் வெகுளி வெகுவாக என் மனத்தைக் கவர்கிறது. எதையும் பற்றி கவலைப்படாதீர்கள்! எல்லாவற்றையுமே நீங்கள் சமமாகப் பார்க்கிறீர்கள். எல்லாவற்றிலுமே சமமாக அன்பு செலுத்துகிறீர்கள். தப்பிதமல்ல! ஆனால் ஏதாவது ஒன்றில் சற்று அதிகமாக, ஆர்வமாக, ஆழமாக அன்பைச் செலுத்த வேண்டியிருக்கும். அப்போது தான் 'தான்', 'தனது' என்பதெல்லாம் ஏற்பட்டு 'குடும்பம்', 'பந்தம்', 'குலம்' எல்லாம் தோன்ற ஆரம்பிக்கும்..." என்று சொல்லி நிறுத்தினாள் அவள்.

அவன் கண்கள் படபடத்தன.

"சிந்து நீங்கள் சொல்வது மனசில் பளீர் என்று பாய்கிறது. அதன் அர்த்தம் புரிவது போல் நெருடுகிறது. வேன்ஸான் கூடச் சொன்னார். அத்தியந்தமான ஆன்ம அன்பு ஒருவர் மீதுதான் பாயுமென்று. அதை இந்தக் கணத்தில், இப்போதே, உங்களிடம் உணர்ந்தேன். சிந்து... சிந்து... உங்கள் நேசம் என் மீது ஆன்ம பூர்வமாக விழுந்திருக்கிறது. என் நேசம்... மேற்பரப்பில்லாது ஆழத்திலிருந்து வரும் என் நேசரம், நிச்சயம் இதோ இதோ தங்கள் மீதுதான் பாய்கிறது சிந்து...

அவன் கண்கள் கலங்கி மங்கின. குதிரையை விட்டுக் கீழே குதித்தான்.

சிந்துவின் குதிரை அருகே சென்றான்.

அவள் கைகளை ஏந்தி வாங்கினான்.

பிரமித்து இரு பளிங்குச் சுடர் போல் அவன் கண்கள் அவள் மீது லயிக்க,



அவள் கண்களில் ஆனந்த மிகுதியால் பிரவாகம் வழிந்தது.

அந்த நிசப்த இன்ப வேளையில் அந்த மனோகரக் காட்டு வழித் தடத்தில் இருவர் உள்ளங்களும் களங்கமில்லாமல் ஒன்றை ஒன்று தழுவின. உச்சி முகர்ந்தன.

இருவருக்குமே பிரமை தட்டிய விழிகள் தான் அப்போது.

ஒருவரை ஒருவர் பார்த்து லயித்தார்கள்.

அவள் குதிரை மீதும்!

அவன் பூமி மீதும்,

ஒருவர் கண் வழியே ஒருவர் காலம் காலமாய் பிரயாணமாகி யுகங்கள் கடந்து அந்த அனாதிக்குள் நுழைந்து பிரபஞ்சம் பிறப்புக்கு முன் இருந்த ஒன்றேதான் நாங்கள். இங்கே தூலத்தில் இரண்டாக இருக்கிறோம் என்று நினைத்தார்கள்.

திடீரென்று ஒரு குரல் கேட்க, பிரமைகள் சற்று தயங்கியவாறு கலைந்தன.

"வர்மரே! ஏறுங்கள்!" என்றாள் சிந்து.

"எதுவரை போகிறோம் சிந்து!"

"தெற்கே, புதுக்கோட்டை சமீபம் வரை! ஒரு மாபெரும் தருணம் அங்கே காத்திருக்கிறது. செய்தி வந்திருக்கிறது" என்றாள் அவள்.

"என்ன!" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் வர்மன்.

"ஆமாம்! உடன்படிக்கைக் குழு கடைசித் தீர்மானம் எடுக்க நேரம் நெருங்கிவிட்டது. இந்தத் தீர்மானம் நமது எல்லோரது பிரச்னைகளையும் தீர்த்து வைக்கப் போகிறது!" என்றாள் சிந்து.

அவளது நம்பிக்கையைக் கண்டு வர்மன் ஆச்சரியப்பட, மீண்டும் அந்தக் குரல் காட்டு விளிம்புகளில் ஒலித்தது!

# 28. போர், ராஜ்யம் இவைகளால் என்ன சுகம்?

குரல் கேட்டதும் வர்மனும் சிந்துவும் தங்கள் குதிரைகளை இழுத்து மர அடர்வுகளுக்குள் சென்றார்கள்.

அங்கிருந்து நடத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

குரல் மட்டுமல்ல! குதிரை குளம்பின் படபடப்பும் கேட்டது.

அந்தத் தனி வழியில் வேன்ஸான் குதிரை மீது விரைவாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் தான் இஷ்டமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் பாட்டின் திவலை மர இடைவெளிகளிலெல்லாம் சென்று நிரம்பி ஒரு சின்ன அளவு பிரதித்துவனியைக் கொடுத்தது.

எழுந்திருக்கப் போன வர்மனை சிந்து கைப் பிடித்து அமர்த்தினாள். "அவரை இப்போது விட்டு விடுங்கள்!" என்றாள்.

வேன்ஸானும் குரலும் சேர்ந்து சிறிது தூரத்தில் மறைய, இருவரும் வெளி வந்தார்கள்.

"அப்பா! ஏதோ பிரஞ்சுக் காதல் பாட்டுப் பாடுகிறார்!" என்றான் வர்மன்.

"காதல் பாட்டா? என் மனம் அவர் குரல் கேட்டே வேதனைப் படுகிறதே!" என்றாள் அவள்.

உண்மையில் அவள் கண் கலங்கியிருந்தது.

அவள் குதிரை அருகில் வர்மன் வந்தான்.

கண்களில் சிலிர்ப்புடன், சிந்துவின் நீண்ட மென் கரங்களை ஏந்திக் கொண்டான்.

"வீரரே!" என்றாள் அவள். "நம் தனிமையைக் கலைத்து விட விருப்பமில்லை. அதனால்தான் அவரை நிறுத்தச்



சொல்லவில்லை!" என்றாள்.

அவள் முகம் பூராவும் உணர்ச்சி மயமாகி இருந்தது.

கண்கள் வெளி தூரங்களில் நீந்தி ஓடியிருந்தன.

அவளைப் பார்த்தாலே ஏதோ பிரமிப்பில் மூழ்கி இருந்தது போல் தோன்றியது.

"சிந்து!" என்றான் தழதழக்கும் குரலில்.

அவள் பேசவில்லை.

இப்போது சிறிது நேரமாக் ஒரு பெரிய லயிப்பில் இருந்தாள் அவள்.

அதுவும் அவர்கள் இருவரின் மனங்களும் திறந்த பிறகு அவளை அறியாமல் அவள் உள் இதயத்தில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

திடீரென்று அவளுக்கு ஒரு புதிய நோக்கு கிடைத்தது போலவும் இருந்தது.

அவளுள் மறைந்திருந்த சுய ஆசை, சுய ஆர்வம், சுய தாபம் எல்லாம் அவளை ஒரு சுயபரமான வாழ்க்கைக்கு இழுத்தன.

நாடு ஏன், ராஜ்யம் ஏன், ராஜாக்கள் ஏன், வஞ்சங்கள் ஏன்? சண்டைகள் ஏன்? எல்லாமே விடுவித்து, எங்காவது ஒரு அமைதி பூமியில் ஒரு குடில் போட்டு ஒரு எளிய இனிய மென்மை வாழ்வு வாழலாம் போல இருந்தது.

"வீரரே!" என்றாள் அவள் தழதழப்பான குரலில்.

"சிந்து" என்றான் அவன்.

"வாழ்க்கையில் நான் தப்பிதம் செய்து விட்டேன் என்று தோன்றுகிறது" என்றாள்.

"என்ன தப்பிதம்?" என்றான் அவன்.

குதிரையை விட்டு வழுவினாள். கடிவாளக் கயிற்றைப் பற்று இல்லாமல் கடாசினாள்.

"இல்லை வீரரே! நிர்மலமாக, நிச்சிந்தையாக இருந்த உங்களை நான் கெடுத்து விட்டேனோ என்று நினைக்கிறேன்" என்றாள் அவள்.

"நீங்களா? ஏன் என்னைக் கெடுக்கப் போகிறீர்கள்?"

"தெற்குச் சீமைக் கிராமப்புறத்திலிருந்து வெகுளியாக இங்கே வந்தீர்கள்! உங்களை அனாவசியமாக ராஜாங்க விஷயங்களில் ஈடுபடச் செய்தேன்" என்றாள் அவள்.

"ஏன்? நல்லது தானே அது? நாட்டு நடப்பு தெரியாது இதுவரை இருந்தேன். அதை கற்றுக் கொடுத்ததில் என்ன தப்பு?"

அவள் சிறிது நேரம் நிதானித்து விட்டுப் பேசினாள்.

"அறிவு ஒரு பந்தம்! வீரரே"

ஆச்சரியமுடன் பார்வையைத் தூக்கினான் அவன்.

"அது ஒரு விலங்கு! சிறை! அறிவு சுழலும் போது தாம் நமக்கு அமைதி கிடைக்கிறது"

"தத்துவமா! சிந்து!"

"தத்துவமோ இல்லையோ! என் அனுபவமாகத் தோன்றுகிறது. இப்போது பாருங்கள். நாட்டைப் பற்றி நாலும் சொன்னதால் தானே உங்களுக்கு அதைப் பற்றி கவலை வருகிறது."

"ஒரு விதத்தில் உண்மை."

"இதைச் சொல்லாமல் இருந்தால் நீங்கள் புதுக் கவலைப்பட்டிருக்க மாட்டீர்கள் அல்லவா?"

"அதுவும் உண்மை!"

"அறிவை வளர்த்துக் கொண்டே போய்விட்டு கவலைகளையும் ஏன் சேர்த்துக் கொண்டே போக வேண்டும்? ஹூம்! வேண்டாம் இது! வேண்டாம்!"

என்று சொல்லி எல்லாம் துறந்தவள் போல் நிழல் ஓரத் தரையில் அமர்ந்தாள் அவள்.

"ஹூம்" என்று புன்னகை சாய்த்து, மிளிர்வான முகத்துடன் வர்மன் அவளை நெருங்கினான்.

அதற்குள் அவள் தனது வாளையும் இடைக் கச்சையும் அவிழ்த்துப் போட்டிருந்தாள்.

முகத்தில் என்ன விரக்தி தோய்ந்திருந்தது!

வியப்புடன் வர்மன் அவளை நோக்கி அடியிட்டுச் சென்றான்.



அந்த நேரம் தரையில் கிடந்த கச்சையிலிருந்த உருண்டு வரும் ஓலை மீது அவன் கண் பாய்ந்தது.

எடுத்து அதைப் பிரித்தான்.

உள்ளே அதன் வாசகங்களைப் படிக்கும் போது உடல் சிலிர்த்தது.

"சிந்து!" என்றான் பரபரப்புடன்.

* * *

ராபர்ட் கிளைவ் அந்த இரைச்சலுக்குக் காரணத்தைச் சீக்கிரம் தெரிந்து கொண்டான்.

உள்ளே அவசரமாக வந்த சிப்பந்திகள் "ராஜா சாகிப் தூது ஆள் அனுப்பியிருக்கிறார்!" என்று சொன்னார்கள்.

"உடனே ஆபீஸ் அறைக்கு அழைத்து வா" என்று சொன்ன கிளைவ், எழுந்து தாங்கலாக நடந்து, அடுத்த அறைக்குப் போனான்.

மேஜை முன்னால் உட்கார்ந்து, தனது காயம் பட்ட காலை மறைப்பதற்காக, மேலே மேலே விரிப்பைப் போட்டு முன்னால் தரை வரை தொங்கச் செய்தான்.

கறுக்கான உடையுடன் நிற்கும் அதிகாரிகளைத் தன்னோடு உட்கார்த்தி வைத்தான். களைப்போ, சோர்வோ தெரிந்தவர்களை உள்ளே போகச் சொன்னான்.

சிப்பந்திகள் தூதுவரை அழைத்து வந்தார்கள்.

நீள அங்கி தரித்த நவாப் ராணுவ அதிகாரி உள்ளே வந்தார்.

நவாப் ராஜா சாகிப் அனுப்பித்த தூதுவன் என்றார்.

கோட்டை அதிகாரியிடம் அனுமதி வாங்கி உள்ளே வந்திருந்தார்.

கிளைவை பார்த்ததும் முகமன் தெரிவிக்க, கிளைவ் எழுந்து நின்று கை குலுக்கினான்.

அதிகாரியின் பெயர் அடில் கான்!

கிளைவ் ஒரு சிறுவனா?

அடில் கானின் பதிந்த பார்வை அப்படியே இருந்தது. லேசாக மீசை மேல் புன்முறுவல் தோன்றியது.

"என்ன வேண்டும், தளபதி!" என்றான் கிளைவ் ஒரு கம்பீரக் குரலில்.

அதில் இடியின் கடினம் இருந்தது.

அடில்கான் நிதானப்பட்டார். உண்மையில் இந்த கிளைவ் இரண்டு சண்டைகளில் ஜயித்திருப்பான். ஒரு கடின இதயத்தின் கடுங்குரல் கேட்கிறதே என்று நினைத்தான்.

"இந்தாருங்கள்! நவாப் தங்களுக்கு அனுப்பிய கடிதம்!" என்று கிளைவிடம் அவன் ஒரு கடிதத்தை நீட்டினான்.

கிளைவ் வாங்கினான்.

கடிதத்தைப் பிரித்தான்.

படித்தான்.

பிறகு சர்வ சாதாரணமாக மூடினான். "இந்தா" என்று அழைத்தான்.

சிப்பந்தி ஓடி வந்தான்.

"கோப்பை கொண்டு வா."

கோப்பை வந்தது.

சீமை மது அது. பூராவும் நிரம்பியிருந்தது.

பாடமான திராட்சையின் வாசனை மெள்ள லகரியாகச் சுழன்றது.

"இந்தா."

சிப்பந்தி நின்றான்.

"எல்லோருக்குமே கொடு! நவாப் தூதுவர் வந்திருக்கிறார். மகிழ்ச்சி அல்லவா!"

வெண்கலக் கோப்பைகள் வெளி வந்தன. அங்கே கூடியிருந்தோர் ஒவ்வொருவர் கையிலும் சென்றன.

அடில் கான் திகைப்புடன் அந்த நடவடிக்கைகளைக் கவனித்தார்.

இருபது நாள் ஆகிவிட்டது.

இன்னமுமா சீமை மது மிச்சம் இருக்கிறது.

ஆச்சரியம்! எல்லோரும் தடையின்றிக் குடிக்கிறார்களே!

"தளபதி சாப்ஸ் ஏதாவது வேண்டுமா? அல்லது முந்திரி?"

"போதும், போதும், துரை!"



"இன்னொரு கோப்பை?"

"போதும், போதும், துரை!"

கிளைவ் சிப்பந்தியை விடவில்லை. அங்குள்ள தனது அதிகாரிகளுக்கு மீண்டும் கோப்பையை நிரப்பச் சொன்னான்.

அடில்கான் மனத்துக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

கடிதத்தைப் படித்ததும் இந்த இளைஞன் கிளைவ் எந்தவிதச் சலனமும் செய்யவில்லையே, குஷியாக இருக்கிறானே! ஒரு வேளை மனத்தில் முடிவு செய்து விட்டானோ?

நேரம் ஆவது தெரிந்ததும், "துரை!" என்றான் அடில்கான்.

"என்ன?" என்றான் கிளைவ்.

"பதில் ஏதாவது உண்டா?"

"ஓ... உங்கள் கடிதமா?... அதையே மறந்து விட்டேனே!... என்ன பதில் எழுத வேண்டி இருக்கிறது... நீங்களே போய் வாயால் சொல்லுங்கள்!"

"என்ன சொல்ல?"

"கிளைவ் துரை பணத்தின் மீது ஆசை வைக்கவில்லை என்று!"

திடுக்கிட்டான் அடில்கான்.

"இதுதான் முடிவா?"

"ஆமாம். நீங்கள் போய்ச் சொல்லலாம்."

"சரி!" என்று எழுந்தான் அடில்கான்.

விடைபெற்று காலடி வைத்தவரை "தூதரே!" என்று நிறுத்தினான் கிளைவ்!

"நான் சொன்னதை உங்கள் ராஜா சாகிப்பிடம் தெரிவியுங்கள்! உடனே முற்றுகையை விட்டு அவர் திரும்பிப் போக வேண்டும். இல்லாவிட்டால் படை பூராவும் சின்னாபின்னமாக்கப்படும். ராஜா சாகிப்பின் தலையும் கொய்யப்படும். நான் ஒரு வெள்ளைக்காரன்! நினைவில் வைக்கச் சொல்லுங்கள்!"

தாதுவனுக்குச் சொந்தமாக பதில் சொல்ல ஆத்திரம் ஓடியது. ஆனால் அதைச் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக கடைவாயை வெளிப்படையாக அரைத்தான்.

ஒரு வணக்கம் தெரிவித்துவிட்டு விடைபெற்றான்.

அவன் போனதும் எல்லோரும் சிரித்தார்கள்.

உண்மையில் கிளைவ் ஒரு நாடகமாடி இருந்தான்.

உள்ளே மதுவின் சேமிப்பு மிகவும் குறைந்து விட்டது.

அடில்கானுக்கு மட்டுமே முழுக் கோப்பை மது கொடுக்கப்பட்டது.

கிளைவ் உட்பட மற்ற எல்லோருக்கும் முக்காலும் நீர் கலந்த மது வழங்கப்பட்டது.

மறைவிலிருந்த சங்கரசுப்பிரமணியம் கிளைவிடம் வந்தான்.

"துரை! உங்களுக்கு அவன் என்ன கடிதம் எழுதியிருந்தான்?" என்றான்.

"எனக்கு ஐந்து லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்கிறார்களாம். கோட்டைப் பொறுப்பை உதறி விட்டு நான் போய்விட வேண்டுமாம்!"

சொல்லி பிரமாதமாகச் சிரித்தான் கிளைவ்.

மற்ற எல்லோரும் அதில் கலந்து கொண்டார்கள்.

கிளைவ் உடனே, "ஷங்க்" என்றான். "நடந்ததை எல்லாம் ஸான்டர்ஸிடம் சொல்லு. என் திடத்தை அவர் எப்போதும் நம்பலாம். ஆனாலும் ஒரு நெருக்கடியில் பண பலம் அல்லது ஆள் பலம் ஏதாவது வேண்டியிருக்கிறது. எனக்கு இரண்டும் கிடைத்தால் கூட நல்லது." என்றான்.

சங்கரசுப்பிரமணியம் விடைபெற்றான்.

கிளைவ் அரை விநாடி உட்கார்ந்திருக்கவில்லை.

"தாமஸ்" என்றான்.

"எஸ் ஸார்!"

"நாளை நிச்சயம் தாக்குதலை எதிர்பார்க்கிறேன். கோட்டை சரியாக இருக்கிறதா?"

"இருக்கிறது."



"ஆள் பலம்?"

"இரு நூறு சிப்பாய்கள் நோயாளிகள்."

"ஓ!" என்றான் கிளைவ். அந்த விஷயம் அவனுக்குக் கசப்பாக இறங்கியது. "வாருங்கள், பரிகங்களைப் பார்ப்போம்!" என்றான்.

எல்லோரும் கோட்டைச் சுவருக்குச் சென்றார்கள்.

கிளைவ் தனது காயத்தைப் பாராமல் விறுவிறுப்பாக சாரத்தில் ஏறி பரிகங்களைப் பார்த்தான். இந்தியச் சிப்பாய்தான் இரண்டு மூன்று என்று விரவி நின்று கொண்டிருந்தார்கள்.

தெம்பும், சகிப்புத் தன்மையோடும் அவர்கள் நிற்பதைப் பார்த்து கிளைவின் கண் சிறிது கலங்கியது.

"போதுமான ஆட்கள் இல்லை. எனினும் ஊக்கம் தளரவில்லை. இவர்களுக்கு நாம் முழு உணவு கூடக் கொடுக்காமல் பங்கிட்டுக் கொடுக்கிறோம்." என்றான் தாமஸிடம்.

இரண்டாவது பரிகத்தில் கற்கள் பெயர்ந்து கிடப்பதைப் பார்த்து மலைத்து நின்றான் கிளைவ்.

## 29. திருப்பதிப் பணம் எங்களுக்கு வேண்டும்

ராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டுக் கோட்டை மீது ஏறிப் பரிகங்களையும் உப்பரிகைகளையும் பார்த்து வந்தார்.

இரண்டாம் பரிகத்தைப் பார்த்ததும் திகைப்பு ஏற்பட்டது.

கற்கள் சிதறிப் பலவீனமாக இருந்தது. ஒரு குண்டுக்குத் தாங்காது. எதிரிகளிடம் பீரங்கி தற்சமயம் இல்லை எனினும் அதே நிலை நீடிக்கும் என்று நம்ப முடியாது.

அருகில் இருந்த இந்தியச் சிப்பாய்களை அழைத்தார். இருக்கும் கற்களை உபயோகித்து மண்ணைக் குழைத்துப் பூசச் சொன்னார். அவர்கள் உடனே விரைந்தார்கள். எல்லோருக்கும் பங்கிடல் முறையில் தான் உணவு கிடைத்து வந்தது. சோர்ந்து இருந்தாலும் உற்சாகமாக இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

மற்றொரு இடத்தில் நாமம் போட்ட சிப்பாய் மேற்கே நோக்கி உட்கார்ந்து பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தான்.

கிளைவ் வருவதைக் கண்டு மற்றவர்கள் அவனை எழுப்ப முயன்றார்கள். கிளைவ் வேண்டாம் என்று சமிக்ஞை செய்தான்.

சிறிது நேரம் அவன் பக்கத்தில் நிற்க, நாமதாரிச் சிப்பாய் தனது ஜபம் முடிந்து திரும்பிப் பார்த்து, கிளைவ் நிற்பதைப் பார்த்து, திடுக்கிட்டு எழுந்து விறைப்பாக ஸல்யூட் அடித்தான்.

"உன் பேரென்ன?" என்றான் கிளைவ்.

"ஏழுமலை!" என்றான் சிப்பாய்!

"இப்போது எந்தக் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்தாய்?" என்றான் கிளைவ்.

"வெங்கடாசலபதி!"

"திருப்பதிப் பெருமாளா?"

"ஆமாம்."

"என்ன வேண்டிக் கொண்டாய்?"

"எல்லாம் சரியாக முடிஞ்சு, வீட்டுக்கு நான் க்ஷேமமாய்த் திரும்ப வேண்டுமின்னு..."

"ஓகோ, அப்படியா! இங்கே யுத்தம் சரியாக முடிய வேண்டுமானால் வெங்கடாசலபதி உதவி வேணும் தெரியுமா?"

ஏழுமலை என்பவர் நாற்பது வயது ஹவில்தார்! கிளைவ் சொன்னதைக் கேட்டதும் அவர் கண்கள் கலங்கிவிட்டன.

"பிரபு! தாங்களா இப்படிச் சொல்கிறீர்கள்?" என்றான் தாழ்ந்த குரலில்.



"நான் தான் சொல்கிறேன். இதில் என்ன அதிசயம்?" என்றான் கிளைவ்.

"இல்லை, நீங்கள் வேறு சம்பிரதாயங்களை ஏத்துக்கிட்டவர்கள் ஆச்சே!"

"அதனால் என்ன? உங்கள் கடவுள் கிட்டே பணம் இருக்கு!"

சிரித்துக் கொண்டே சொன்னான் கிளைவ்.

ஹவில்தார் ஏழுமலை நம்பவில்லை. புன்னகையாக மீசையெல்லாம் தெரியச் சிரித்தார்.

"இல்லை ஹவில்தார்! நிஜமாகத்தான் சொல்கிறேன். திருப்பதிப் பணத்தைத் தான் நான் எதிர் நோக்கி இருக்கிறேன். அவர் பணம் கிடைத்தால் போதும். இந்தச் சண்டையில் ஜெயித்து விடுவோம். நீங்கள் இடைவிடாது பிரார்த்தியுங்கள்!"

கிளைவ் சொல்லிவிட்டு மேலே தொடர்ந்தான்.

ஏழுமலை தனது காதுகளை நம்பாமல், அந்த வெள்ளையன் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

* * *

இலங்கைக்கு தென் கிழக்கிலுள்ள மாயமான் காட்டில் சாதாரணமாக யாரும் உட்புக முடியாது.

அவ்வளவு அடர்ந்திருக்கும். அதன்றி அதில் பள்ளத்தாக்குகளும், குன்றுகளும், மூளையைக் குழப்பி விடும். திசை தெரியாமல் திருப்பிவிடும்.

உள்ளே அந்தக் காட்டை அரணாக வைத்துக் கொண்டு சுதந்திர ராஜ்யம் செய்து கொண்டிருந்த ஆறு ஏழு மறவ இன மக்களுக்கு மட்டுமே அந்தக் காட்டின் அத்தனை வழிகளும் அத்துப்படி.

காடுகள், தெற்கு, கிழக்கு, மேற்கு திசைகளில் பரவி, தென் சீமைகளை அநேகமாக கத்தரித்து விட்டது போல ஒரு எல்லையைக் கொடுத்தன.

இவைகளின் வியாபிப்பு காரணமாக இவைகளை ஊடுருவித் தெற்கே செல்வது கடினமான காரியம்.

நவாபுகள், வெள்ளைக்காரர்கள் யாருமே இதற்கு விதிவிலக்கு அன்று.

சிற்சில இனங்களை எதிர்த்து சண்டையிட்டு சில போர்களில் ஜெயித்திருக்கிறார்களே தவிர, அவர்களை யாருமே முழுவதுமாக அடக்கி ஆண்டதில்லை.

எனவே இந்த மறவ இனங்களும், இவர்களது உதாரணத்தால் தென் சீமை மக்களும் சற்று சுதந்திர மனப்பான்மை உடையவர்களாகவே அந்த நாட்களில் இருந்து வந்தார்கள்.

இந்த மாயமான் காட்டில் நுழைந்த போது, வர்மனையும் சிந்துவையும் உள்ளே வழிகாட்டிச் செல்ல ஆட்கள் வந்திருந்தார்கள்.

போகப் போகக் காட்டில் நிறைய வீரர்கள் கூட்டம் சேர்ந்திருப்பதை வர்மன் உணர்ந்து கொண்டான்.

காடுகளுடே ஒரு காத தூரம் நடந்து சற்று விஸ்தாரச் சமவெளியை அடைய, ஒரு பெரிய ஆலவிருட்சம் அந்த இடம் முழுவதிலும் கரிய நிழலை ஆழ்த்தியிருந்தது.

வர்மன் அந்த நிழல் வெளிக்குள் செல்ல,

ஏற்கெனவே அங்கே பெரிய கூட்டம் ஒன்று கூடியிருந்தது.

கல்மேடையில் பல பாளையக்காரர்கள் அமர்ந்திருந்தார்கள்.

அவர்களில் பல பேரை வர்மன் ஏற்கெனவே பொம்மராஜு பாளையத்தில் பார்த்து விட்டான்.

பலர் புதிதாய் இருந்தார்கள்.

எல்லோரும் விபூதியும், சந்தனமும் பூசியிருந்தார்கள். முகங்களில் வீரம் மின்னியது. கொழுத்த கைகளும், கால்களுமாக, ஒரு இயல்பைத் தாண்டிய தேக ஆகிருதியுடன் தென்பட்டார்கள்.

"இதோ பாருங்கள்!" என்றாள் சிந்து.

அவன் சென்ற ஓரத்திலிருந்து ஒரு சரிவும் கீழே சிறு பள்ளத்தாக்கும் தெரிந்தது.



பள்ளத்தாக்கு எங்கும் சிறுசிறு புகை எழுந்து கொண்டிருந்தது.

வர்மன் ஆச்சரியத்துடன் பார்க்க, அங்கும் காட்டு மரங்களின் அடியில் ஏராளமான வீரர்கள் வார்த்தையாடி அமர்ந்திருப்பதைக் கண்டான்.

அவர்கள் செய்யும் சமையல் புகையே, அப்படி மேலே சுருள்களாக வந்து கொண்டிருந்தது.

"இதென்ன?" என்றான் வர்மன் ஆச்சரியத்துடன்.

"தம்பீ!" என்று ஒரு பழகிய குரல் அவனை அழைத்தது. திரும்பிப் பார்த்தான். ஏற்கெனவே பார்த்த பெரியவர்தான்.

"பார்த்தாயா? உடன்படிக்கைக் குழு என்ன செய்திருக்கிறது என்பதை?"

வர்மனை அழைத்து, கல்மேடை மீது உட்கார்த்தினார்.

பலரும் வர்மனைப் பார்த்தார்கள்.

"பெரியவரே!" என்றான் வர்மன். "இதெல்லாம் என்ன?" என்று வீரர் கூட்டத்தைக் காட்டிக் கேட்டான்.

"தம்பீ! அத்தனை பாளையக்காரர்களும் திரட்டி இந்தச் சேனையை அனுப்பி இருக்கிறார்கள்."

"எதற்கு?"

"போரிடுவதற்குத்தான்!"

"யாரோடு இடப் போகிறார்கள்?"

பெரியவர் புன்னகை குதப்பினார்.

"அதுதான் பிரச்சனை! யாரோடு செய்தால் எங்கள் நாயக்க வமிசமும், பாளையக்கார வமிசமும் பழையபடி சீராகும் என்று யோசிக்கிறோம்."

வர்மனுக்கு புன்னகை வந்தது.

"வேடிக்கையாக இருக்கிறது பெரியவேரே!"

"கேட்கப் போனால் அப்படித்தான் தோன்றும். எங்களுக்குள் பெரிய விவாதமே இதுதான். சிலர் இங்கிலீஷ்காரனை விரட்டு என்கிறார்கள். சிலர் பிரெஞ்சுக்காரனை துரத்து என்கிறார்கள். சிலர் சந்தாசாகிப்பையும், சிலர் முகமதலியையும் சொல்கிறார்கள். சிலர் எல்லோரையுமே விர:் டு!" என்கிறார்கள்.

வர்மனுக்கு இன்னும் புன்னகை வந்தது.

"யாரை விரட்டுவது என்று இன்னும் தீர்மானமாகவில்லையா?"

"ஒருவிதமாய் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்." என்றார் பெரியவர்.

"என்ன சொல்லுங்கள்?"

"எல்லோரையும் விரட்டவோ, அல்லது வெறும் வெள்ளையர்களை மட்டும் விரட்டவோ எங்களுக்கு, ஆள் பலம், பணபலம் போதாது. எனவே யாருடனாவது கட்சி சேர்ந்து நமக்கு வேண்டாதவரை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும்."

"சரி, முதலில் ஒழித்துக் கட்டப்பட வேண்டியவர் யார்?"

"ஒன்று இங்கிலீஷ்காரன் அல்லது பிரெஞ்சுக்காரன்."

"இதில் தீர்மானமாகவில்லையா?"

"இல்லை! இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஓகோ! இதிலும் விவாதம்தான் போலும்!"

"ஆமாம். இதில் முடிவு எடுத்துக் கொடுக்க உதவியாகத்தான் வேன்ஸான் துரையை அழைத்திருக்கிறோம்."

"ஓகோ! அவர் எந்த விதத்தில் உங்களுக்கு உதவுவார்?"

"வேன்ஸானுக்கு எங்கள் உடன்படிக்கைக் குழுமேல் ஒரு பற்று உண்டு."

"ஆச்சரியமாயிருக்கிறதே! அவருக்கு எப்படி பற்று' வரும்?"

"அவர் நாலும் படித்தவர். நாலு நாடு போனவர்! அனுபவசாலி! எனவே அவர் சொல்வதைக் கேட்கலாம் என்று இருக்கிறோம்."

"உங்களுக்கு யோசனை சொல்வதாகச் சொன்னாரா?"

"ஆமாம்! எங்கள் மீது அவருக்கு ஏனோ விசுவாசம்! எங்கள் நோக்கத்தை அவர் உன்னதமானது என்கிறார்."



"சரி! அவரிடம் ஆலோசனை கேட்கப் போகிறீர்களா?"

"ஆமாம்!"

சிந்து இப்போது இடைமறித்தாள். "வீரரே! இப்போது இங்கே தங்களை அழைத்து வந்திருக்கிறார்களே! அதற்கும் காரணம் இருக்கிறது!"

"என்ன சொல்லுங்கள்!" என்றான் வர்மன்.

"எங்களுக்குப் பண பலம் வேண்டுமல்லவா?"

"ஆமாம்!"

"திருப்பதி பணம் எங்களுக்கு வேண்டும்."

"ஓ! உங்களுக்குத் தான் பொம்மராஜ பாளையத்து ஜமீன்நார் உடன்பாடு ஆயிற்றே! அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியதுதானே!"

"அவர் சில நிர்ப்பந்தங்களில் இருக்கிறார். அவரிடமிருந்து பணத்தைப் பெற இங்கிலீஷ்காரர்கள் தங்கள் சிறு கோஷ்டியை அனுப்பியிருக்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்களும் அப்படியே. சண்டை போடும் இரண்டு நவாபுகளும் அப்படியே! இவர்களிடம் அகப்பட்டுத் திண்டாடுகிறார் ஜமீன்தார்!"

"உங்களுக்கு ரகசியமாக கொடுத்துவிடுவதுதானே!"

"அதிலும் சிக்கல் இருக்கிறது. நாளை அவரது ஜமீனே பறி போனாலும் போகும்."

"சரி, இந்தச் சிக்கல் தீர என்ன வழி?"

"ஜமீன்தார் திருப்பதிப் பணத்தை யாருக்கு வேண்டுமானாலும் அனுப்பட்டும். ஆனால் அதை இடைமறித்து நாம் அபகரித்து விட வேண்டும். அப்போது நமக்குக் காரியமும் வெற்றியாகும். ஜமீன்தார் மீது பழியும் போகாது."

"சரி! அதைச் செய்யுங்களேன்."

"அதற்காகத்தான் உன்னை அழைத்திருக்கிறோம் இங்கே!"

"நானா? நான் இதில் என்ன செய்வேன்?"

"நீயும் உடன்படிக்கைக் குழுவில் கை ஒப்பம் போட்டிருக்கிறாயே!"

"ஆமாம்!" என்று சொல்லி சிந்துவைப் பார்த்தான் அவன். சிந்து முறுவல் செய்தாள்.

"நீதான் இதற்குத் தகுதியானவன் என்று எங்கள் அபிப்பிராயம். நீதான் இந்த இடைமறித்து அபகரிக்கும் வேலையைச் செய்ய வேண்டும்."

ஒரு கணம் வர்மன் கண்ணை மூடினான்.

இது என்ன புதுவித பூதம் கிளம்புகிறது?

திருப்பதிப் பணம் கிடைத்தால் தான் செஞ்சுகா பணயத்திலிருந்து விடுதலை ஆவாள்!

அவள் விடுதலைக்காக அவன் பாடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இப்படி புதிதாய் பிரச்னையை அவனிடமே புகுத்துகிறார்களே!

மனம் தத்தளிக்க, மெள்ள சிந்துவின் பக்கம் திரும்பினான்.

அவளது ஆழமான கண்கள் அவனை தீர்க்கமாக நோக்கின.

மனவெளிக்குள் இருக்கும் ஆன்மப் பறவையே ஒரு முறை சிறகை அடித்தது!

அவனது இதயம், மனம், உணர்வு, எல்லாமே குழைந்து விட்டன.

சிந்து ஆர்ப்பரிக்கும் கடல் அல்ல!

அமைதியான நதி!

அவள் ஆழமாக, உள்ளே பாயும் சக்தி பெற்றவள்.

"சிந்து!" என்றான் மனம் தடுமாற.

"வீரரே!" என்றாள் அவள்.

"இந்தக் காரியத்தை...." என்று இழுத்தான் அவன்.

"நெருக்கடி முற்றிவிட்டது வீரரே! நாம் இதில் இறங்காமல் இருக்க முடியுமா? நாட்டுக்காக இப்போதாவது ஏதாவது செய்தால் தானே வீடு வாழ முடியும்..."

சிந்துவா?அவளா இப்படிப் பேசுகிறாள்!

பெரியவர் பாக்கு வெற்றிலையை எடுத்தார்.

அவனிடம் மௌனமாக நீட்டினார்.



திரும்பவும் வர்மன் ஒருமுறை சிந்துவைப் பார்த்தான்.

காணக் கிடைக்காத சௌந்தரியமாக அவள் கண்கள் ஒளி வீசின. அவற்றின் வசிகரம் ஏதோ கிரணங்கள் போல் வெளி வந்து அவனை மூழ்குவித்தன.

மெல்லிய அரும்பாகப் புன்னகை ஒன்று காட்டினாள் அவள்.

"வாங்கிக் கொள் தம்பி! சம்மதம் ஆச்சு."

வர்மன் தாம்பூலத்தை வாங்கிக் கொண்டான்.

நான்காம் நாள் பொம்மராஜு பாளையம் அரண்மனையில் அவன் ஜமீன்தார் முன்னிலையில் உட்கார்ந்திருந்தான்.

திண்டு மேல் சாய்ந்திருக்க கார்வேட் ராஜா, "இனி என்னிடம் எதுவும் இல்லை! எல்லாம் அந்தத் திருவேங்கடவன் செயலே!" என்று கூறிக் கண்ணை மூடினார்.

## 30. திருமலைக்கு யாத்திரை

பொம்மராஜு பாளையத்தின் ஜமீன்தார் திண்டில் சாய்ந்த வண்ணம் கால்களைத் துவள நீட்டியிருந்தார்.

கண்களில் சிந்தனைகள் மொய்த்தன.

வர்மன் அவரது பரந்த முகத்தைப் பார்த்த வண்ணம் இருந்தான்.

என்ன சொல்லப் போகிறார் அவர்!

பொய் மான் காட்டில் நடந்த விஷயங்களை எல்லாம் வர்மன் அவரிடம் கூறியிருந்தான். அடேயப்பா! தெற்குப் பாளையக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து பெரிய படையைத் திரட்டிக் காட்டில் தண்டு இறங்கி இருந்தார்கள்.

பரங்கிகளை அவர்கள் நாட்டை விட்டுத் துரத்தப் போகிறார்கள்.

மதுரையில் நாயக்கர் வமிசத்தை மீண்டும் நிறுவப் போகிறார்கள்.

அத்தனையையும் நிகழ்த்த ஆள் பலம் திரண்டு விட்டது. பண பலம் தான் இனி வேண்டியது.

ஜமீன்தார் திருப்பதிப் பணத்தைத் தந்து உதவுவாரா?

ஏன், அவரும்தான் உடன்படிக்கைக் குழுவுக்கு சேக்காளிதானே?

ஜமீன்தாரான கார்வேட் ராஜாவுக்கு உடம்பு வேறு சரியில்லை. சாய்ந்தவாறு இரண்டு முறை புரண்டார். பிறகு எழுந்து உட்கார்ந்தார்.

"வர்மா! இது ஒரு நாளில் முடிவு எடுக்கிற காரியமல்ல! தவிர ஒரே ஒரு ஆள் மட்டும் எடுக்கிற முடிவு அல்ல!" என்றார் ராஜா.

"ஏன்! நீங்கள் யாரை இனிக் கலந்து கொள்ள வேண்டும்?" என்றான் வர்மன்.

"வா! இப்படி!" என்று வர்மனை அழைத்துப் போனார் அவர்.

அரண்மனையின் உட்பகுதிகளை வர்மன் பார்த்ததில்லை. வளைவுகள் அழகாக விரித்து தூண்கள் மீது வந்து தாக்கின.

சுவர்களில் தங்க முலாம் இட்ட பூவேலைகள் சங்கிலிகளாகப் பின்னின.

கம்மென்று ஒருவித நறுமணம் எங்கும் மெல்லிய ரேகைகளாகத் தவழ்ந்தது.

சட்டென்று ஒரு பக்கம் திரும்ப, அது பூஜை அறையாக இருந்தது.

உள்ளே விளக்குகள் தங்கத் திவலைகளாக எரிய, நட்ட நடுவில் நாயகமாக நின்றவர் திருப்பதி வேங்கடாசலபதி!

"இவரைத் தான் கலந்து கொள்ள வேண்டும் நான்! வேறு யாருமில்லை!" என்றார் கார்வேட் ராஜா!



அவர் சொன்னதின் தொனி அவனைச் சிலிர்க்க வைத்தது.

மரத்தில் செய்யப்பட்டுக் கம்பீர நிலையில் நிற்கும் வேங்கடவனைப் பார்த்தான்.

"எனக்கு வேறு யாருமில்லை! அவர்தான் ஆலோசகர்! வழி சொல்ல வேண்டும்! ஏனெனில் பொருள் அவருடையதுதானே!"

வர்மன் பேசவில்லை.

பிரசன்ன முகத்துடன் விளங்கும் ஏழுமலைக் கடவுளைப் பார்த்தான்.

மனத்தில் ஏதோ அழுத்தினாற்போல் இருந்தது. அந்த நிமிடத்திற்கு சுவாசம் தடைப்பட்டது.

"அவரது பொருளை எல்லோரும் கேட்கிறார்கள்! யாருக்குக் கொடுப்பது என்று தெரியவில்லை! வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குக் கொடுத்துவிட்டேன்! இப்போது வகை தெரியாது திண்டாடுகிறேன்! வர்மா! எனக்காக ஒன்று செய்!"

"சொல்லுங்கள் பிரபு!"

கார்வேட் ராஜா சன்னதி வரை சென்று குனிந்து ஒரு மஞ்சள் துண்டு முடிச்சை எடுத்தார்.

அதை அவனிடம் கொடுத்து, "எனக்காக ஒன்று செய் வர்மா!" என்றார். துணி முடிச்சு கனமாக இருந்தது. உள்ளே நாணயங்கள் பேசுவது கேட்டது.

"எனக்கு கொஞ்ச நாளாய் உடம்பு சரியில்லை. எனக்குப் பதிலாக நீ நேரே திருமலைக்குப் போ! என் அப்பனின் திருவடிகளில் காணிக்கையை வை! அவரிடமே முறையிடு, 'சுவாமி' தாங்கள் நாள்தோறும் பக்தர்களுக்குத் தரிசனம் தந்து, அவர்களுடைய ஏராளக் காணிக்கையைப் பெற்று வருகிறீர்கள்! இந்தக் காணிக்கை எல்லோரது கண்களையும் இழுக்கிறதே! எல்லோரும் இதற்காகப் போட்டி போடுகிறார்களே! தங்கள் வருமானம் அத்தனையையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பில் நான் இருக்கிறேன். இந்தப் பொருளை அடியவன் யாரிடம் கொடுக்க வேண்டும் என்று நியமித்து அருளக் கூடாதா? ஏழுமலை சுவாமி! கண்ணைத்

திறந்து வழியைக் காட்டு!' என்று என் பிரார்த்தனையைப் பெருமாளின் திருச்செவி சாத்தும்படி முறையிடு செய். பிறகு திரும்பி வா!" என்றார் கார்வேட் ராஜா.

அவர் கண்களில் நீர் துளிர்த்திருந்தது.

பூஜைப் பெருமாளின் முன் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்தார்.

"இந்தக் காணிக்கையை ஒரு மாதத்திற்கு முன் செலுத்தியிருக்க வேண்டும். ராஜரீக விஷயங்கள் என்னைக் கவர்ந்து விட்டன. இப்போதும் தேக நிலை சரியில்லை. எனக்குச் சரியான பிரதிநிதி நீதான்! போய் வா!" என்றார்.

பிறகு அ வர் அரண்மனை கொலு மண்டபம் வழியாக வரும்போது அங்கே ஓரத்தில் தொங்க விடப்பட்டிருந்த கிளிக் கூண்டிலிருந்து 'செஞ்சுகா' என்று குரல் கேட்டது.

ராஜா பளீர் என்று திரும்பினார். அவர் கண்ணில் கருக் என்று ஒரு திவலை பொட்டிட்டது.

ஆதுரத்துடன் அந்தக் கூண்டை அணுகினார். "பஞ்சவர்ணம்! அழாதே பஞ்சவர்ணம்! செஞ்சுகா சீக்கிரம் வந்துடுவாள்!" என்றார்.

ஒரு பருத்த வயோதிகக் கிளி, பிடிப்புக் கொம்பில் மாறி மாறிக் காலை வைத்துத் தத்தளிப்பைக் காட்டியது.

ராஜா திரும்பும்போது, கண்ணைத் துடைத்து, "செஞ்சுகா!" என்றார் சோகப் பரவசமாய். "அவள் தான் பெருமாளின் காணிக்கை! அவள்தான் அந்தக் காணிக்கை சொரூபம்! பெருமாளுக்காகவே அவள் பணயமாகப் போயிருக்கிறாள் அல்லவா! வேங்கடமுடையான் அவளை வைத்து விளையாட்டுக் காட்டுகிறான். அவளை அவனே பார்த்துக் கொள்வான்" என்றார்.

பிறகு குனிந்து கொண்டே நடக்கும் போது, பாதியும் தனக்குள் புலம்பியவாறு "இல்லாவிட்டால் உன்னைப் போல ஒரு நல்ல மனிதனை அனுப்புவாரா கடவுள்? நீ அவளைப் பின்பற்றியே போயிருக்கிறாயே! அவள் மனத்துக்கு அது எவ்வளவு ஆறுதல் தந்திருக்கும்?" என்று கூறினார்.

வாசல்புறம் வந்ததும், நிமிர்ந்து, "நான் என் மகளுக்காகக் கவலைப்படவில்லை, வர்மா! ஏதோ நீ அவளுக்காகப்



புதுச்சேரி வரை போய் செய்தி கொணர்ந்திருக்கிறாய்! அதுவரையில் நல்லது. ஆனால் என் பெண்ணை விடுவிப்பதற்காக, நான் மதாம் தூப்ளேவுக்கு திருப்பதிப் பணத்தைக் கொடுத்து விடப் போவதில்லை! வேங்கடவன் என்ன சங்கல்பிக்கிறானோ, அதையே நான் பின்பற்றப் போகிறேன்" என்றார்.

வர்மன் அவரிடம் விடைபெறும்போது கண்கலங்கி விட்டது.

பொம்மராஜு பாளையத்தில் தண்டோரா போட்டு இளவரசி (செஞ்சுகா) சௌக்கியமாகப் புதுச்சேரியில் இருக்கும் நிலை விவரிக்கப்பட்டது. செஞ்சுகாப் போன இடம் பற்றிய தகவல் கிடைக்காமல் ஜனங்கள் அலமாந்திருந்தார்கள்.

அவர்களை இந்தச் செய்தி குளிர்விப்பதாக இருந்தது.

நாள் பார்த்து நாழிப் பார்த்து வர்மன் திருமலைக்குப் புறப்பட்டான்.

* * *

நெற்றியில் நாமம் தரித்து ஒரு நல்ல வைணவ பக்தன் போலக் கிளம்பினான் அவன்.

பொம்மராஜு பாளையத்திலிருந்து அடிவாரத் திருப்பதியை அடைய அதிகம் ஆகிவிட்டது.

திருப்பதி நான்கு மாட வீதிகளைச் சமைத்த சிறு ஊராக இருந்தது.

ஆனால் தெருக்களில் எப்போதும் யாத்திரிகர்கள் நடமாட்டம் இருந்தது.

அவர்கள் வசதிக்கு ஏற்ப அதற்கான இனத்தார் தனித்தனி சத்திரம் கட்டி வைத்திருந்தார்கள்.

வர்மன் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் கோவிந்தராஜு பெருமாளை வணங்கிவிட்டு அவருக்கு அர்ச்சனை செய்து பூஜித்து விட்டுக் கிளம்பினான்.

திருப்பதி ஊரின் அண்மையிலேயே மலைக் காடுகள் நெருங்கி வந்திருந்தன.

மேற்கு நோக்கி மலையை ஏறிட்டுப் பார்த்தான்.

ஒரு பசுமைச் செழிப்பு மலையில் துளி இடம் விடாமல் மொய்த்திருந்தது.

அந்தப் பிரம்மாண்ட வளர்ச்சிகளைக் கண்டு அவன் அதிசயித்து நின்றான்.

"கோவிந்தா கோவிந்தா" என்ற குரல்கள் அவனை அடிக்கடி உலுக்கிய வண்ணம் இருந்தன.

அந்த ஆரம்ப வனப் பிரதேசம் வழியே மலையை நோக்கிச் செல்லும் பாதை நெளிந்து ஓடியது.

சற்று சிந்தனை வசப்பட்டவனாய் அதில் நடந்தான் வர்மன்.

"திருமலை தரிசனமா!"

யாருக்கும் எளிதில் கிடைக்காத அபூர்வம் ஆயிற்றே அது!

அவனது தாயார் கேள்விப்பட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

ஊருக்குத் திரும்பும்போது தாயாருக்கு மரப்பாச்சிகள் வாங்கிப் போக வேண்டும்.

முடிந்தால் கற்சட்டிகளும் வாங்கிப் போக வேண்டும்.

யாத்திரிகர்கள் சிறுக சிறுகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

நாட்டின் பல பாகத்திலிருந்து வருபவர்கள் அவர்கள்.

உடல் தளர்ந்தும் உள்ளம் தளராமல் நடந்து வந்தார்கள் அவர்கள்.

மலையிலிருந்து இறங்கிய கும்பல்கள் சற்று உற்சாகமாக வருவது தெரிந்தது.

எதிருக்கு எதிர் இரு கோஷ்டிகளும் சந்திக்கும் போது ஒரே 'கோவிந்தா' மயங்கள்!

வர்மன் மௌனமாக இயற்கை வளத்தைப் பார்த்தவாறே நடந்து சென்றான். அவன் மனம் பரவசத்தில் ஆழ்ந்திருந்தது.

யாத்திரிகர்களின் நம்பிக்கை அவனைப் பெரிதும் பாதித்திருந்தது.



குடும்பங்கள் கூட, வயோதிகர்கள் உட்பட அந்த மலைக்குச் செல்லும் காட்சி அவனை வெகுவாக கவர்ந்தது.

அடிவாரத்தை நெருங்க நெருங்க, ஆனந்த பரவசங்கள் மிகுந்து கொண்டிருந்தன.

திடீரென்று இப்போது தெரியும் கோபுரம் என்ன கோபுரம்? அது என்ன கோயில்?

யோசிப்பதற்குள், "வர்மா!" என்று குரல் கேட்டது.

திரும்பினான்.

குரல் வந்த இடம், ஒரு தோப்பின் பக்கத்திலிருந்து என்று தெரிந்தது.

சுற்று முற்றும் பார்த்தான்.

"வா, இப்படி இங்கேதான் இருக்கிறேன்."

குரல் இரண்டாம் முறை வந்தது.

சட்டென்று குறிப்பாகத் திரும்ப, அந்த தென் திசைத் தோப்பில், நிழல் அடர்ந்த பகுதியில் யாரோ கீழே சிரமப் பரிகாரமாய் சாய்ந்து படுத்திருப்பது தெரிந்தது.

அவசரமாக போய்ப் பார்க்க, உடனே புரிந்து விட்டது அவனுக்கு.

அது வேன்ஸான் தான்!

வர்மன் வருவதைப் பார்த்து முழுப் புன்னகை முகத்துடன் அவனை நோக்கியிருந்தார்.

வர்மனுக்குக் கண்களை நம்ப முடியவில்லை.

சில நாட்களுக்கு முன்னதாகத்தானே அவரைப் பொய்மான் காட்டில், பாளையக்காரர் தண்டு இறங்கிய இடத்தில் பார்த்தது!

அதற்குள் இங்கே எப்படி வந்தார்?

முடிகிற காரியமா அது!

சற்றுத் திரும்பிப் பார்த்ததில் அவனுக்கு அவர் வந்த விதம் புலனாயிற்று.

மாமரத்தின் நிழலோரத்தில் இரண்டு குதிரைகள் நின்று கொண்டிருந்தன.

இரண்டையும் மாறி மாறி உபயோகித்து அவசர அவசரமாக திருப்பதி வந்திருக்கிறார் அவர்.

"தாங்களா? பிரபு! தாங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?" என்றான் வர்மன்.

"உட்கார் வர்மா!" என்றார் அவர்.

உட்கார்ந்தான்.

"அதிசயப்படாதே வர்மா! நானும் திருமலைக்கு வரப் போகிறேன்!"

திடுக்கிட்டான் அவன்.

"நீங்களா?"

"ஆமாம்!"

"நீங்கள் எதற்கு?"

"உடன்படிக்கைக் குழு என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது."

"என்ன வேண்டுகோள்?"

வேன்ஸான் சாய்மானமாக எழுந்து உட்கார்ந்து வர்மனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

## 31. கண்டேன் திருமலை!

பெரிதாகக் கிளை கப்பியிருந்த புன்னை மரங்களின் நிழலில் வேன்ஸான் கவலையில்லாதவர் போல் சயனித்திருந்தார்.

வர்மனைக் கண்டதும் உடம்பைத் தளர்த்தி எழுந்து உட்கார்ந்தார்.

இங்கே எப்படி வந்தார்? ஏன் வந்தார்? வர்மனின் கேள்விகள் சரங்களாக வந்தன.



சிரித்தார் வேன்ஸான். "தம்பி, உடன்படிக்கைக் குழு என்னை இங்கே அனுப்பித்திருக்கிறது. கார்வேட் ராஜாவின் சித்தம் அறிந்து விட்டு வரும்படி!" என்றார் அவர்.

"அதற்குத் தாங்கள் ஜமீன்தார் மாளிகைக்கு அல்லவா போக வேண்டும்?" என்றான் வர்மன்.

"அதுவும் உண்மையே! அதற்கு முன் எனக்கு ஒரு ஆசை! ஏழுமலையானை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும்!" என்றார் வேன்ஸான்.

"ஏழுமலையானையா? தாங்களா?" என்றான் வர்மன். "நீங்கள் வழிபடும் சித்தாந்தமே வேறு ஆயிற்றே! உருவ வழிபாட்டை மறுப்பவர்கள் ஆயிற்றே! உங்கள் கடவுளை மாத்திரம் நம்பினால்தான் மோட்சம் என்று சொல்பவர்கள் ஆயிற்றே!" என்று அடுக்கினான் வர்மன்.

"அதனால் என்ன? இப்போது தானே கிறிஸ்துவை வழிபடுகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் பரம வைஷ்ணவன் ஆயிற்றே. என் பூர்வ வாசனை போகுமா, என்ன?" என்றார் வேன்ஸான்.

"அப்படியானால் வாருங்கள்! நான் திருமலைக்குத் தான் போகிறேன்!" என்றான் வர்மன்.

அவ்வளவில் வேன்ஸான் எழுந்து இரண்டு குதிரைகளையும் அழைத்துப் போய், பக்கத்து சத்திரத்தில் ஒப்படைத்துவிட்டு வர்மனோடு புறப்பட்டார்.

ஆழ்வார் தீர்த்தம் நெருங்கிய உடன் தான் திருமலையின் அடர்த்தியான காடுகளில் ஏகமான வியாபிப்பு கணத்தில் பிரமை கொடுத்தது. இருவரும் வடக்காகப் புறப்பட்டு ஆழ்வார் தீர்த்தத்தை அடைந்தார்கள்.

அங்கே மனைவியை இழந்தவர்களும், தந்தையை இழந்தவர்களும் கட்டாய மொட்டை போட்டுக் கொண்டு தீர்த்தத்தில் குளித்தார்கள்.

வர்மனும், வேன்ஸானும் மொட்டை போடாமல் தீர்த்தத்தில் மட்டும் குளித்துவிட்டு மலைச்சாரலில் நடந்து பிறகு மேலே நோக்கி ஏறத் தொடங்கினார்கள்.

வர்மன் மௌனமாக அந்த மலை வனப்பின் அரிய வர்ணங்களில் மனத்தைக் கொடுத்திருந்தான்.

மாக்கல் பாறைகளும், சரலும் படிந்த பாதையில் சற்று பிரயாசையாய் ஏறி காலி கோபுரத்தின் வாசலுக்கு வந்தனர்.

வர்மன் வியர்வை சிணுக்கு முகத்துடன் வேன்ஸானை ஏறிட்டுப் பார்த்தான்.

வேன்ஸான் வெறும் நடையில் கூடத் தியானம் பயில்வது போல் இருந்தது.

முகத்தில் மென்மை, பரந்த அமைதி! கண்ணில் ஊடுருவும் நோக்கு! முழு ஆகிருதியிலுமே ஏதோ லட்சியம் ஜொலிப்பது போல் அமைவு.

"துரை!" என்று வர்மன் அழைக்க, சட்டென்று பிரமை கலைந்த வேன்ஸான், "தம்பி! துரை என்று அழைக்காதே! அன்னிய சமயத்தவன் என்று என்னை மேலே ஏற விடமாட்டார்கள்." என்றான்.

"ஓகோ, விடமார்ட்டார்களா?" என்றான் வர்மன் ஆச்சரியத்துடன்.

"அதோ பார்! ஆட்கள் இருக்கிறார்கள். கோவில் காவலாளி, நவாபு சர்க்கார் தொழிலாளி, கம்பெனிக் காவலாளி இன்னும் எத்தனைப் பேருக்குத் திருமலை சொத்து மீது நாட்டம் இருக்கிறதோ அத்தனை பேரின் காவலாளிகளும் அங்கே நிற்கிறார்கள்"

வர்மன் பார்த்தான்.

கோபுர நிழலில் அத்தனை பேரும் கூட்டமாய்த் தரையிலும், பாறையிலும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"வர்மா! பின்னால் திரும்பிப் பார்!" என்றார் வேன்ஸான்.

மூச்சை நிறுத்தும் அழகில் அந்தத் திருப்பதி இறக்கம் அவனைத் திகைக்க வைத்தது.

திருப்பதி ஊரையே காணவில்லை.

தோப்புகளும் உபவனங்களும் அதை மூடியிருந்தன.

கோவிந்த ராஜப் பெருமாளின் கோபுரம் மட்டும், பசுமைகளுக்கு மேலே தலையை நீட்டித் தெரிந்து கொண்டிருந்தது.

தூரத்தில் சுவர்ணமுகி ஒரு கீற்று மின்னல் போல் வெய்யிலில் தகதகத்துக் கொண்டிருந்தது.



"இது தான் திருச்சுகனூர் (திருச்சானூர்) கோபுரம் தெரிகிறது பார்!" என்று வலப்புறத்தில் கை நோக்கிக் காட்டினார்.

தூரத்தில் சந்திரகிரி மலையும் அதன் அரண்மனைகளும் மெல்லிய திரையில் தெரிவது போல் மங்கித் தெரிந்தன.

கோபுரத்தை அடைந்தார்கள்.

காவலாளிகள் அவர்களது நெற்றியைப் பார்த்தார்கள்.

வர்மன் நாமம், வேன்ஸான் ஸ்ரீசூர்ணமும் போட்டிருந்தார்கள்.

"ம், துக்காணி கொடுங்க!" என்றார் காவலாளி.

மலைமேல் ஏறுகிறவர்கள் எல்லாரிடமும் 24 துக்காணி வசூலித்தார்கள். (ஒரு துக்காணி இரண்டு காசுகள்.)

மலையடிவாரத்தில் ஏற்கெனவே டோலிவாலாக்கள் அவர்களை முற்றுகை இட்டு விட்டார்கள்.

அவர்களில் பலர் காலி கோபுரம் வரை வியாபித்து இருந்தார்கள்.

இந்த முதல் ஏற்றம் ஏறிய பல யாத்திரிகர்கள் அயர்ந்து போய் டோலி அமர்த்திக் கொண்டனர்.

நீண்ட கழி நடுவில் தொங்கும் ஊஞ்சல் போன்ற அமைப்பில் ஆளை உட்கார்த்திக் கொண்டு, இரு டோலிக்காரர்கள் படியின் இரு ஓரங்களிலும் நின்று கொண்டார்கள். ஒருவர் ஒரு படியில் காலை வைக்க, மற்றவர் அவரைத் தொடர்ந்து அதே படியில் காலை வைத்துக் கொண்டார்.

டோலியில் உட்கார்ந்திருப்பவருக்கு படி நடுவில் ஏறிப் போவது போல் பிரமை.

அந்த வினோதப் பிரயாணங்களைப் பார்த்தவாறு வர்மன் மேலே ஏறினான்.

படிகளின் உட்புறங்களில் பிச்சை எடுப்பவர்கள் அங்கங்கே திட்டுக்களாக உட்கார்ந்திருந்தார்கள்.

ஏறுபவரும், இறங்குபவரும் எங்கும் சல சலத்த வண்ணம் இருந்தார்கள்.

தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர்கள், குஜராத்திகள், மராட்டிகள், கோசாயிகள், பைராகிகள், யோகிகள் என்று பல திறப்பட்ட மனிதர்களைச் சந்திப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"கோவிந்தா, கோவிந்தா" என்ற முழக்கங்கள் "சிலிர் சிலிர்" என்று அங்கங்கு தெளித்துச் சிதறின.

எதிர் எதிர் யாத்திரிகர்கள் சந்திக்கும் போது, ஏதோ வாட்கள் சந்தித்தாற்போல 'கோவிந்தா' கோஷம் உக்கிர நெருப்புப் பொறி போல அதிகப் பிரகாசமாக வெளிவந்து சிதறியது.

அம்மையார் கோனேறு (அவசாரிகோனா) வந்த போது யாத்திரிகர்கள் சற்று கவனம் அடைந்து நாலா பக்கமும் பார்த்தார்கள்.

அந்நாளில் திருமலைக் காடுகளில் யானைகள், சிறுத்தைகள், புலிகள், காட்டெருமைகள் எல்லாம் உலாவின.

மனித நடமாட்டத்தின் அருகில் அவை வருவதில்லை என்றாலும், ஏதாவது தனி மிருகம் தப்பித் தவறி வந்துவிடப் போகிறது என்று கவலை கொண்டார்கள்.

அந்தக் கணவாயும் அதன் இறக்கமும் கிரக்கம் தரும் ஒரு காட்சியைக் கண் முன் நிறைந்தன.

வாழை, பலா, தேக்கு, கோங்கு, மஞ்சாடி என்று பலவகை மரங்கள் பலவித இலை வியாபகங்களாகத் தெரிய, ஒரு ராட்சதக் கிண்ணக் குழியில் பலவித வர்ணங்களைத் தீற்றி வைத்திருப்பது போல் பிரதேசம் பூராவும் வண்ணத் துகிலாகத் தெரிந்தது.

பசுமையான கண்ணாடிக் காற்று எங்கும் மென்மையாக ஓடியது. முகர்ந்த போது ஆரோக்கியமே உள்ளே பாய்வது போல் ஒரு அதிசய பிரமை கொடுத்தது.

இறங்கி இறங்கி அடிவாரம் போகும் வரை எளிதாக இருந்தது.

அதன் பிறகு ஏறும் போது, அந்த மேடுதான் சிரமத்தைக் கொடுக்கத் தொடங்கியது. மூச்சு வாங்கியது. வியர்வைகள் திவலைகளாகத் தெளித்தன.



"இந்த மோட்டைத்தான் 'முழங்கால் முறிப்பான்' என்பார்கள்" என்றார் வேன்ஸான்.

"முழங்காலை மட்டும் முறிக்கவில்லை. மூச்சையும் முறிக்கிறது" என்றான் வர்மன்.

வாய்விட்டு மூச்சை விட்டான் அவன்.

இருவரும் மௌனமானார்கள்.

அரை முகூர்த்தமாய்ப் பிரயாசையாக மேட்டில் ஏறி மேலே நின்ற போது, முகமெங்கும் சிலிர்த்தது.

இளைக்க இளைக்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள்.

வழியெல்லாம் தங்குவதற்குச் சிறுசிறு மண்டபங்கள் வந்து கொண்டிருக்க, மேட்டின் உச்சியில் அத்தகைய மண்டபத்தோடு ஒரு சன்னிதியும் இருப்பதைப் பார்த்தான் வர்மன்.

"இது தான் பாஷ்யக்காரர் சன்னதி! வா அங்கே சற்றுக் களைப்பாறுவோம்!" என்றார் வேன்ஸான்.

இருவரும் மண்டபத்திற்குப் போய் அமர்ந்தார்கள். காற்று மயிலிறகு போல் வருடியது. அந்த ஆயாசத்தில் காலை நீட்டிப் போட்டுத் துவள விட்ட சுகத்திற்கு வைகுந்தம் கூட இணையாகாது போல இருந்தது.

சன்னதி அந்த நேரத்தில் அடைத்துக் கிடந்தது.

"பாஷ்யக்காரர் சன்னதி என்றீர்களே! அது என்ன சன்னதி?" என்றான் வர்மன்.

"ராமானுஜ சுவாமிக்கு அப்படி ஒரு பெயர்!" என்றார் வேன்ஸான்.

"யார் ஆசாரியர் ராமானுஜரா?" என்றான் வர்மன்.

"ஆமாம். அவருக்குத் தான் அந்தப் பெயர். பாஷ்யக்காரர் என்றால் உரை செய்தவர் என்று பொருள்!"

"ராமானுஜர் உரை ஏதாவது எழுதினாரா?"

"ஆமாம் தம்பி! ஆள் தான் வளர்ந்திருக்கிறாயே தவிர, எதுவும் தெரியவில்லையே! 'பிரம்ம சூத்திரம்' என்பது ஒரு மெய்ஞான நூல்!"

"சரி!"

"நமது நாட்டில் உள்ள எல்லாச் சமயத்தவரும் இந்த நூலுக்கு உரை எழுதுவதை ஒரு முக்கிய வேலையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

"ஓகோ! ராமானுஜரும் உரை எழுதினார்!"

"ஆமாம்! ஸ்ரீ பாஷ்யம் என்று அதன் பெயர். அந்த நூலை வடித்த காரணமாய் ராமானுஜரை பாஷ்யக்காரர் என்கிறார்கள்."

வர்மன் வேன்ஸானைக் கூர்ந்து கவனித்தான். "ஐயா! நீங்கள் இதற்கு முன் திருமலை பார்த்திருக்கி றீர்களா?" என்றான்.

"ஒரே ஒரு முறை வந்திருக்கிறேன்! பத்து வருஷம் ஆகிவிட்டது."

வேன்ஸான் சிந்தனையாக சுற்றுப்புறம் பார்த்துப் பிறகு திரும்பினார்.

"தம்பி! இந்த மண்டபத்தில் இன்னொரு விசேஷம் உண்டு!"

"சொல்லுங்கள்!"

"முதன் முதலில் ராமானுஜர் திருமலைக்கு வந்த போது அவரை அவரது மாமான் திருமலை நம்பி இங்கே தான் சந்தித்து உபசரித்தார்."

"அப்படியா?"

ஆச்சரியம் பொங்கக் கேட்டான் வர்மன்.

"ராமானுஜர் அப்போது திருமலை நம்பியைப் பார்த்து, "தாங்கள் ஏன் வந்தீர்கள்? என்னைச் சந்திப்பதற்கு யாராவது சிறியவரை அனுப்பித்திருக்கக் கூடாதோ?" என்றார். அதற்குத் திருமலை நம்பி, "சுவாமி! ஊர் முழுதும் தேடினேன். என்னைவிடச் சிறியவன் யாருமில்லை!" என்றார்.

"ஆகா! என்ன தன்னடக்கம்?"

"அப்புறம் இங்கேதான் தம்பி, திருமலை நம்பி ராமானுஜருக்கு ராமாயணம் கூறி அதன் உள் அர்த்தங்களை எல்லாம் விவரித்தார்..."



"ஒஹோ அவ்வளவு மேன்மை வாய்ந்த இடமா இது!"

"ஆமாம்! இவைகளை எல்லாம் யார் இங்கே கவனிக்கிறார்கள்? இன்னொரு விசேஷம் சொல்கிறேன் கேட்கிறாயா?"

"சொல்லுங்கள்"

"இப்படி தென் கிழக்காலே போய்ப் பார்! அங்கே ஒரு மண்டபம் இருக்கிறது. கண்ட மண்டபம் என்று பெயர். பார்த்துவிட்டு வா! செய்தி கூறுகிறேன். நீ வரும் வரை இங்கே சற்று நான் இளைப்பாறியிருக்கிறேன்!" என்றார் வேன்ஸான்.

வர்மன் எழுந்தான்.

அவர் காட்டிய திசையில் தூர்ந்து போன பாதை ஒன்று நெளிந்து கொண்டிருந்தது.

இடையில் சிறிது தூரம் போன பின்பு, பாதையின் சிறு சுவடு கூடத் தெரியாமல் இருக்க, அங்குமிங்கும் தேடி, மீண்டும் கண்டுபிடித்து, செடி, கொடி விலக்கி முன்னேறிப் போக,

கடைசியில் பழமையான அந்த மண்டபத்தின் முகப்பு மரங்களின் உச்சிக்கு மேலாக லேசாகத் தெரிய ஆரம்பித்தது.

மகிழ்ச்சியுடன் அதை அவன் அணுக, திடீரென்று ஒரு விஸ்தார இடைவெளியும், அதில் அவனுக்குப் பழக்கமான ஒரு மனிதரும் தெரிந்தார்கள்.

ஆச்சரியப்பட்டு, "சுவாமி!" என்று சொல்ல, பராக்குப் பார்த்திருந்த அந்த வைணவ அந்தணரும் திடுக்கிட்டுத் திரும்பி, வர்மனை ஒருவிதமாகப் பரிச்சயம் கண்டு கொண்டு,

"உங்களை கார்வேட் அரண்மனையில் பார்த்திருக்கிறேன் அல்லவோ!" என்று கேட்டார்.

"ஆமாம், சுவாமி! என் பெயர் வர்மன்! என்னை கார்வேட் ராஜா திருமலைக்கு அனுப்பித்தார். கூடவே தங்களுக்கு ஒரு லிகிதமும் எழுதிக் கொடுத்திருக்கிறார்." என்று கூறி, சுருக்குப் பையை இடையிலிருந்து உருவி அதன் உள்ளிருந்து, ஓலை ஒன்றை வெளியே எடுத்து அவரிடம் நீட்டினான்.

ஓலையைப் படித்துவிட்டு சீனிவாசாச்சாரியார் சற்று யோசனையுடன் நின்றார்.

பிறகு, "வா தம்பி! நீ கார்வேட் ராஜாவின் அந்தரங்கன்! எனவே எனது அந்தரங்கன் கூட!" என்று சொல்லி அழைத்து,

புதர்கள் மண்டிய இடுக்குகள் வழியாக அவனை இட்டுச் சென்றார்.

பல தடங்கல்களைத் தாண்டி, மேலே நிறைய கிறல்களைச் சம்பாதித்த வர்மன், கடைசியில் சீனிவாசாச்சாரியார் ஒரு பழங்கட்டடத்து முன்னால் நிற்பதைக் கண்டு அவரை அணுகினான்.

கட்டடத்துள் சென்ற சீனிவாசாச்சாரியர் பரணிலிருந்து தீவர்த்தி எடுத்து, அரணிக் கட்டை மூலம் நெருப்பு உண்டாக்கி அதைப் பற்ற வைத்தார்.

பிறகு, தீவர்த்தியுடன் வர்மனை அழைத்து, கட்டடத்தின் பின்பக்கம் போய்,

ஒரு கல்லை நகர்த்தும்படி சமிக்ஞை செய்ய,

வர்மன், அப்படியே சென்று ஒரு துவாரம் உண்டாக்க,

மேலும் சில கற்களை அவர் கையால் நகர்த்தி கடைசியில் தீவர்த்தியுடன் உள்ளே புகுந்தார்.

சிறு படிக்கட்டுகள்.

அவர் வெளிச்சம் காட்ட, அவன் இறங்கிச் சென்றான்.

கடைசியில் இருவரும், ஒரு சமதளத்தின் மீது நின்றார்கள்.

கண்ணைக் கொட்டிய வர்மன் எதிரே பொதி பொதிகளாக மூட்டைகள் அடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமுடன் பெரியவரை நோக்கித் திரும்ப,

"அவ்வளவும் ஏழுமலையானின் சொத்து!" என்றார் சீனிவாசாச்சாரியார்.

## 32. திருக்கோலம் தெரியுமோ?

'திருவேங்கடவன் சொத்து' என்று அடுக்கியிருக்கும் பொதிகளை எல்லாம் காண்பிக்க,

வர்மன் கண்கள் விரிந்தவனாய், "அத்தனையும் பொன்னா?" என்று வினவினான்.

"பொன், வைரம், பவழம், நீலம், புஷ்பராகம், வெள்ளி" என்று பிரமிக்கத் தரும் வார்த்தைகளை சீனிவாசாச்சாரி அடுக்கிக் கொண்டே போனார்.

"எல்லாவற்றையும்விட" என்று குரலைத் தூக்கிக் கூறினார் அவர். "இவை அத்தனையும் பகவான் மீது பக்தர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகள்" என்றார்.

"வடக்கே துவாரகையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை பக்த ஜன வெள்ளங்கள், தம் நம்பிக்கைக்காக வார்க்கும் பூவுலக உயர் பொருள்கள், யார் யாருக்கு என்ன கஷ்டத்திற்கு நிவர்த்தி வேண்டுமோ, எந்த விருப்பம் பூர்த்தி ஆக வேண்டுமோ, எந்த நோய் நலிய வேண்டுமோ, எந்த மோட்சம் கிடைக்க வேண்டுமோ அத்தனைக்கும் சின்னங்கள் இங்கே விழுந்து குவிந்து கிடக்கின்றன" என்றார் அவர்.

"வருஷம் என்ன வருமானம் வருகிறது சுவாமி?" என்றான் வர்மன்.

"இரண்டு லட்சத்துக்கும் அதிகம். இன்னும் கூடிக் கொண்டே வருகிறது."

"பொருள்களை எல்லாம் இங்கே ஏன் திரட்டி வருகிறீர்கள்?"

"சமீப காலமாக இது நிகழ்ந்து வருகிறது. ராஜா யார், ராஜாங்கம் யாருடையது என்று தெரியாமல் கலக்கமாக இருப்பதால் இதை அவர்களுக்குத் தெரியாமல் இங்கே சேமித்து வைத்திருக்கிறோம்."

"யார் என்று நிச்சயமாகி விட்டால் கொடுத்து விடுவீர்களா?"

"அதற்கு என்ன தடை?"

"அப்படியானால் உடன்படிக்கை குழுவிடம் கொடுத்துவிடுவதுதானே?"

சிரித்தார் அவர். "அவர்களே முடிவு எடுத்து இன்னும் கேட்கவில்லையே! அதனால் விளையும் சாதக பாதகங்களைத் தாங்கிக் கொள்வார்களா என்றும் தெரியவில்லையே! எல்லாவற்றையும் விட கார்வேட் அரசரிடமிருந்து எமக்கு ஆணை வரவில்லையே!

"அவர் ஆணையிட்டால் கொடுத்து விடுவீர்களா?"

"ஆமாம் நிச்சயமாக! மறுபேச்சுக் கிடையாது. பழைய யாதவராய வம்சம் ஆயிற்றே. அவர்கள் இந்தத் திருவேங்கட மலையைப் பாதுகாக்கிறவர்கள் ஆயிற்றே! வழியில் கண்டா மண்டபத்தைப் பார்க்கவில்லையோ!"

"பார்த்தேனே! பழசாகி மூளியாக நிற்கிறதே!"

"அது நிற்கும் இடத்தைக் கவனித்தாயா?"

"ஏன்?"

"மலையின் தென் விளிம்பில் நிற்கிறது. அந்த நாளில் அதில் ஒரு மணி தொங்கியது.

"அப்படியா?"

"ஆமாம்! அந்த மண்டபத்திற்குத் தெற்கே பள்ளத்தாக்கைத் தாண்டி சந்திரகிரி மலை தெரியுமே கவனித்தாயோ?"

"நன்றாகத் தெரிந்தது. அரண்மனையும் கோட்டையும் கூட ரொம்பச் சின்னதாகத் தெரிந்ததே!"

"சரி, அந்த அரண்மனையில் தான் முன்பு யாதவராய மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த கண்டா மண்டபத்தில் உள்ள மணி முழங்கினால் அங்கே அவர்கள் அரண்மனையின் அதன் ஒலி நன்றாகக் கேட்கும். இங்கே பகவானுக்குத் தளிகை நிவேதனம் ஆன பிறகு இந்தக் கண்டா மண்டபத்திலுள்ள மணியை முழங்குவார்கள். அது சந்திரகிரி அரண்மனையில் ரீங்காரம் செய்யும். அந்த ஒலி கேட்ட பிறகு தான் சந்திரகிரி மன்னர் உணவு அருந்த உட்காருவார்!"



வர்மன் ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தான்.

"அதற்காகவா இந்த மண்டபம் கட்டி இருக்கிறார்கள்?"

"ஆமாம், பிள்ளாய், சந்திரகிரியின் யாதவராயர்கள் அவ்வளவு சிறந்த வைணவ பக்தர்கள்! அவர்கள் வழியில் வந்து ராஜ்யத்தைச் சிறிது சிறிதாக இழந்து வெறும் ஜமீன்தார்களாகி நிற்பவர்கள்தான் இன்றைய இந்த கார்வேட் அரசர்கள். இவர்கள் தான் இந்தத் திருவேங்கடத் திருவைக் காப்பாற்றி வருகிறார்கள்! அவர் மட்டும் சொன்னால் போதும்."

"அவர் சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை. சஞ்சலப்படுகிறார். சஞ்சலத்திற்குக் காரணம் உண்டு. இன்று நாட்டில் ஒருவர்க்கொருவர் அடித்துக் கொள்பவர்கள். எல்லோருமே சபலம் உடையவர்கள்! இதனால் இவர்களிடையே வெற்றி தோல்வி அறுதியிட்டுக் கூறும் வண்ணம் நேர்ந்துவிட்டது! உடன்படிக்கைக் குழுவையே எடுத்துக் கொள்! இந்த நாட்டில் அடி வைத்திருக்கும் எல்லா அன்னியரையுமே அது ஒருத்தனாக இருந்து துரத்தி விட முடியாது! ஒருத்தரோடு கூட்டுச் சேர்ந்து மற்றொருத்தரை வீழ்த்தி, பிறகு வேறொருத்தரோடு சேர்ந்து, இன்னொருத்தரை வீழ்த்தி இப்படிக் குயுக்திகளினாலே தான் சர்வ வல்லமை பீடத்தை அடைய வேண்டும். இந்தக் குயுக்தியை அவர்கள் அறிந்திருந்தாலும் முதல் கூட்டு யாரோடு சேர்வது என்பதிலேயே குழம்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

இதில் சட்டென்று ஒரு முடிவை அவர்களால் எடுக்க முடியவில்லை.

சஞ்சலப்படுகிறார்கள்.

இந்த நிலையில் தான் கார்வேட் ராஜா சொன்னதன் பிரகாரம் திருவேங்கடவன் பொக்கிஷத்தை இங்கே சேர்த்து வருகிறோம்.

இப்போது கூட உன்னை கார்வேட் ராஜா ஏன் திருமலைக்கு அனுப்பினார்?"

கேள்வியைத் தூக்கிச் சீனிவாசாச்சாரியர் நிறுத்தினார்.

"அவருக்கே குழப்பம் சுவாமி! திருவேங்கடவனிடமே

பாரத்தை ஒப்படைப்பது என்று நினைக்கிறார். அவர் சொல்வண்ணமும், இந்தப் பொக்கிஷத்தை ஒப்படைப்பது என்று" என்றார் வர்மன்.

"நல்லது சொன்னாய், பிள்ளாய்! கார்வேட் அரசரும் நன்றே சொல்லியிருக்கிறார். எல்லோருமே திருப்பதிப் பணத்தைக் கேட்கிறார்கள். கூர்ந்து பார்த்தால் அவரவர் கேட்பதற்குப் பின்னால் ஏதோ ஒரு நியாயப்படுத்தப்பட்ட காரணம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் திருவேங்கடவனே தீர்த்துக் கொள்ளட்டும், நல்ல முடிவு!"

சீனிவாசாச்சாரியார் இடத்தை விட்டுக் கிளம்பினார்.

மீண்டும் படிகள் மீது ஏறிப் பொந்து வழியாக வெளியே வந்து, கல் தடுப்பை எடுத்து வைத்தார்.

மூச்சு வாங்கியது.

"நல்லவேளை! என்னால் உனக்கு இந்த மறைவிடம் காட்ட முடிந்தது. எப்போதும் எனக்கு இதில் ஒரு கவலை உண்டு! பொக்கிஷம் இருக்குமிடம் யாருக்காவது தெரிய வேண்டும் என்று! கார்வேட் ராஜாவின் அந்தரங்கனாக இருக்கிறாய்! உனக்குத் தெரிந்தது நல்லது தான் தம்பி! ஒரு சத்தியம் செய்! இந்த இடத்தை அன்னியர் யாருக்கும் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று!"

வர்மன் சத்தியம் செய்தான்.

இருவரும் கண்டா மண்டபத்தின் பாரிசம் வழியாக வந்தார்கள். மண்டபத்தை இப்போது உணர்ச்சித் துளும்பலோடு பார்த்தான் வர்மன்.

கடைசியில் விடைபெறும்போது, "அப்பனே! கார்வேட் ராஜாவின் உடம்பு என்னமாக இருக்கிறது?" என்றார்.

"ஆயாசமாக இருக்கிறார்" என்றான் வர்மன்.

"பாவம்! அவருக்குக் கவலை இராதா? இருக்கும் ஒரு பெண்ணும் பணயமாகப் போயிருக்கிறாள். அந்தப் பெண்ணுக்குத் தான் எத்தனை கஷ்டங்கள் வருகின்றன?" என்றார்.

வர்மன் சட்டென்று திரும்பி, "இதற்கு முன் வேறு கஷ்டப்பட்டாளா சுவாமி?" என்றான்.



சீனிவாசாச்சாரியார் சோகமாக முகத்தைச் சுருக்கினார்.

"ஹூம்! அந்தப் பெண் சின்ன வயதில் மாங்கல்யத்தை இழந்தவளாயிற்றே! ஜமீன் அதைத் தெரியாது வளர்த்து வருகிறார்" என்றார் சீனிவாசாச்சாரியார்.

திடீரென்று அந்த ஏழுமலைகளும் அவன் பாதங்களை விட்டுக் கழன்று போனது போல் தோன்றியது.

இருகைகளாலும் இறுக்கத் தன் உத்தரீயத்தைப் பற்றினான்.

"சுவாமீ! என்ன சொல்கிறீர்கள். அந்தப் பெண் ஒரு விதவையா?"

"ஆமாம்! ஆறு வயதுக்குள் எல்லாம் முடிந்துவிட்டது. அதைத் தெரியாமல் தான் அவளை வளர்த்து வருகிறார். பிரபந்தங்களும் வியாக்கியானங்களும் அவளுக்கு நிறையப் பாடம். ஆண்டாளாகத் திகழ்வாள் என்று எல்லோருடைய அபிலாஷை!"

வர்மன் மௌனமடிந்து நின்றான். பேசவில்லை. கண்கள் வெறித்து சூன்யமாகப் பார்த்தன. திடீரென்று உணர்வுகள் ஓடிவிட்ட மாதிரி இருந்தது.

"நான் வரட்டுமாப்பா!" என்று சீனிவாசாச்சாரியார் சொன்னதும்தான் நினைவு பற்றியது.

"சரி, சுவாமி!" என்றான்.

காட்டு வழியில் அவர் புகுந்து சில விநாடிகளுக்குள் மறைத்து போனார்.

வர்மன் குனிந்த தலையோடு நடந்து போனான்.

நெஞ்சு பலமுறை விம்மியது.

கன்னத் தடத்தில் ஈரம் மெல்லிதாகப் படர்ந்தது.

"என்ன தம்பி நேரமாகிவிட்டதாய்!" என்றார் வேன்ஸான்.

இருவரும் 'முக்கு பாவி'க்குச் சென்றார்கள். வேன்ஸான் நீர் அருந்தினார்.

வர்மன் கை கால்களை மட்டும் கழுவிக் கொண்டான்.

இருவரும் பிறகு மலை ஏறினார்கள்.

* * *

புதுச்சேரியின் வெளிப்புறத்துப் பங்களாவில் கிளி கூவிய போது யாரோ வருகிறார்கள் என்று செஞ்சுகாவிற்குத் தெரியும்.

சன்னலோர மஞ்சத்திலிருந்து மெள்ளத் திரும்பினாள்.

அவளது குறுகுறுக்கும் பார்வை பல இடங்கள் நோக்கித் துள்ளியது.

கடைசியில் வாசல் புறத்திலிருந்து அவளது தாதி பூவாத்தாள் வந்த போது, "என்ன பூ?" என்றாள்.

கையிலிருந்து சுருளை எடுத்துக் கொடுத்தாள் பூ. "அந்த ராமய்யன் தெற்கிலிருந்து வந்திருக்கிறார். உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்றாள்.

ராமய்யன் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை திருச்செந்தூர் வரை யாத்திரை போய் வருவார்.

அங்கங்கே உறவுகள் சொந்தங்கள் உள்ளவர்கள் அவரிடம் லிகிதங்களைக் கொடுத்து அனுப்புவார்கள்.

அவரவரிடம் சேர்ப்பித்துவிட்டு அவரவர் தரும் மறு உத்தரவையும் வாங்கி வருவார். இதற்காக அவருக்குப் பலரும் வெகுமதி கொடுப்பார்கள்!

செஞ்சுகா ஆர்வமுடன் சுருளைப் பிரித்துப் பார்த்தாள்.

அருமைத் தங்கை செஞ்சுகாவை ஆசிர்வதித்து சிந்து அக்காள் எழுதியது.

மோகினித் திருக்கோலத்தைப் பற்றி இங்கே தீவிரமாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

எப்போது விழா எடுப்பது என்பது சீக்கிரம் முடிவாகிவிடும். அது நல்ல நாளாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அப்படி விழாவை நிச்சயித்தால் உன்னை உடனே சந்திக்க வருவேன்.

அப்பா சௌக்கியமாக இருக்கிறார் என்று அடிக்கடி யாராவது வந்து கூறுவார்கள்.

மீண்டும் அக்காள் சிந்துவின் ஆசீர்வாதம்.

இருமுறை படித்து சுருளைத் தன் சந்தனப் பெட்டியில் போட்டுக் கொண்டாள்.



மோகினித் திருக்கோலம்!

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

பாற்கடலில் கிடைத்த அமுதத்தை தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் பங்கிடும் போது, அசுரர்களை ஏமாற்ற வேண்டி விஷ்ணு தரித்துக் கொண்ட மோகினி உருவம்.

அசுரர்கள் அந்தக் கோலத்தைக் கண்டு மயங்கி அமுதத்தைக் கேட்பது கூட மறந்தார்கள்.

சிரித்தாள் செஞ்சுகா!

"பூ" என்றாள்.

"என்னம்மா?" என்றாள்.

"மோகினித் திருக்கோலம் தெரியுமா?" என்றாள்.

"ஓ! தெரியுமே! கோயில்லே சாமிக்கு வேஷம் போடுவாங்களே!"

செஞ்சுகாவிற்குப் புன்னகை குழிந்து கொண்டு வந்தது.

'மோகினித் திருக்கோலம்' சங்கேதத்தில் என்ன இருக்கிறது என்று அவளுக்குத் (செஞ்சுகா) தெரியும். அதற்குத்தான் அவள் காத்துக் கொண்டிருக்கிறாள்! அதற்குத் தான் எல்லோரும் பாடுபடுகிறார்கள்.

மனம் திடுக்கிட்டது. வர்மன் திடீரென்று நெஞ்சின் வளைவில் தோன்றிவிட்டான்.

குங்குமமாகக் குறுநகை குழம்பியது.

ஏனோ தெரியவில்லை!

இதற்கு முன்பு வரை தனிமை ஒரு வேதனையாக இருந்ததில்லை.

இப்போது அங்கங்கு கணங்கள் முள் முள்ளாகக் கிளம்பிக் குத்துகின்றன.

நெஞ்சில் சுருக்கென்று ஆயிரம் பொத்தல்கள்.

"வீரரே! எல்லாம் என் திருமாலுக்கே என்று நேர்த்திப் பட்டிருந்தேன். இப்போது நீர் புகுந்து எடுத்துக் கொள்கிறீரே, நியாயமோ!"

நிச்சயம் கேட்க வேண்டும்.

மனம் இந்த மானிடர்பால் எப்படிச் சென்றது?

'தெய்வம் மனுஷ்ய ரூபேண' என்பார்களே.

வர்மன் உருவத்தில் தெய்வம் வந்து விளையாடுகிறதோ!

அரூபமாய், அளவற்றதாய், பெயர், குணம் அற்றதான தெய்வத்தை அவள் அடைய முடியுமோ?

அரூபத்தை ரூபமாக்கி, அளவற்றதை அளவாக்கி, பெயர், குணம் இல்லாததற்கு பெயர் குணம் தந்து தனது சிற்றறிவுக்குள் சிக்கும் படி ஒரு மானிட உருக் கொடுத்தால்தானே அவள் அதை அடைய முடியும்!

வர்மன் தான் அந்த மானிட உருவோ?

எழுந்தாள். மஞ்சள் தடவிய ஓலையை எடுத்து வந்தாள். எழுத்தாணி சகிதம் எழுத ஆரம்பித்தாள்.

## 33. விட்டோபாவும் வந்தார்

வர்மனும், வேன்ஸானும், திருமலையை அடைந்தார்கள்.

வனம் சூழ்ந்த வாவிகளும், அருவிகளும் சிதறும் மலை ஆதலால், எங்கும் சில் என்று தண்மை பரந்திருந்தது.

வந்த பக்தர்கள், தொலைவுகளிலிருந்து வந்து, சிரம சாத்தியங்களோடு மலைகளையும் கடந்து மேலே வந்திருப்பதால், கோயிலைக் கண்டதும் அவர்கள் கொண்ட பரவசம் பாற்கடல் போன்றது.

எனவே மெய் மறந்து, மெய் சிலிர்த்து, 'கோவிந்தா, கோவிந்தா' என்று ஆன்ம சுத்தமாய் இயம்ப,

மொத்தமான தொனியில் எழுந்த அந்த 'கோவிந்தா' என்னும் நாமம் அந்தப் பிரதேசமெல்லாம் மெள்ளக் கரைந்து நிரம்பி அத்தனை பாப எண்ணங்களையும், பாபங்களையும் விரட்டுவது போல் இருந்தது.



வர்மனும், வேன்ஸானும் அந்தப் பக்திப் பரவசங்களில் திளைத்து,

புஷ்கரணியில் நீராடி, ஜபம் தியானங்களைச் செய்து,

சுத்தமான ஆடைகளுடன் கோயிலின் முகப்பை அணுகினார்கள்.

அந்நாளில் கோவிலைச் சுற்றி நான்கு வீதிகளும், பிறகு புஷ்பம் கொழித்த தோட்டங்களும் இருந்தன.

கிழக்கு மாட வீதியிலிருந்து, கோபுர வாசலில் நுழைய, இடது பக்கம் ராஜ மண்டபம் இருந்தது.

"ஒரு காலத்தில் துருக்கருக்குப் பயந்து இடம் பெயர்க்கப்பட்ட ரங்கநாதர் (உற்சவ விக்கிரகம்) இந்தத் தனி மண்டபத்தில்தான் தங்கி இருந்தார். ரங்கநாத யாதவராயர் இந்த மண்டபத்தை அவருக்குக் கட்டுவித்தான்" என்றார் வேன்ஸான்.

அப்பால் உள்ளே சென்று திருமாமணி மண்டபம் போய்ப் பங்காரு வாகிலி என்ற தங்கக் கதவின் வாசலை அடைய,

அங்கே நின்றிருந்த சேவகர்கள், பக்தப் பெருமக்கள் என்ன கொண்டு வருகிறார்கள் என்பதை ஆராய்ந்து, காணிக்கை கொண்டு வந்தால் அவற்றை ஒரு துணியில் அவர்கள் கண் முன்னால் எண்ணிப் போடச் சொல்லி,

அந்தத் துணியை முடிந்து அவர்கள் கையில் வைத்துக் கொள்ளச் சொன்னார்கள்.

பிறகு சிப்பந்தி ஒருவர் அந்தப் பக்தரை தனியாக அழைத்துச் சென்று சுவாமி வேங்கடவர் முன்னால் கொண்டு விட,

அங்கே சுவாமியின் முன்னால் வைக்கப்பட்டிருந்த பெரிய கங்காளத்திலோ, பெரிய கொப்பரையிலோ தங்கள் காணிக்கையைப் போடுகிறார்களா என்பதை நிச்சயப்படுத்தி விட்டுச் சென்றார்கள்.

வர்மனும், வேன்ஸானும் காணிக்கை சமர்ப்பிக்க, அவர்களைச் சிப்பந்தி உள்ளே சன்னதி வரை அழைத்துச் சென்றார்.

கற்பூரப் புகையும், சந்தனம், பூ, புனுகு, அத்தர் போன்ற வாசனைகளும் கலந்த சன்னதியில் அர்ச்சகர்கள் அவ்வப் போது ஆரத்தி எடுக்க,

'கோவிந்தா கோவிந்தா' தொனி ஏகோபித்து எழுந்து,

மனத்தின் அந்தரங்களிலெல்லாம் சென்று பக்தி மணம் தெளித்துத் துப்புரவாக்கியது.

முதன் முறையாக வேங்கடவரை வர்மன் பார்த்தான்.

புகை நிறைந்த சன்னதியில் வேங்கடவர் சகல ஆபரணங்களும், தரித்து சுயம் பிரகாசியாக இருந்தார்.

நெற்றியில் நாமமும், தலையில் தங்கக் கிரீடமும் கைகளில் கவசங்களும், மார்பில் லட்சுமியும், மேனி பூராவும் வயிர வைடூரியம் மிகுந்த அணிமணிகளும் தரித்து,

பல நூற்றாண்டுகளாக ஒரே இடத்தில் ஸ்தாபிதமாய் இருந்த காரணமாயும்,

பக்த கோடிகளை ஆகர்ஷித்து, அவர்களை ஒரே இடத்தில் கூட்டி வைத்து, 'கோவிந்தா கோவிந்தா' என்று உச்சரிக்கச் சொல்லி, அதன் அனைத்துப் புண்ணியத்தையும் அங்கே நிரந்தர தெய்வீகத் துடிப்புகளாகப் பரப்பி வைத்துள்ள காரணமாயும்,

யாத்திரிகர் அனைவரும் அந்தச் சன்னதியில் ஒரு புளகமான பக்தி அலையில் மூழ்கி எழுந்து பரிசுத்தமானார்கள்.

பிறகு வர்மன் தனது துணிப் பையிலிருந்து கார்வேட் ராஜா கொடுத்த மஞ்சள் பொதியை எடுத்து,

பயபக்தியுடன் வேங்கடவனைச் சேவித்து,

"வேங்கடேசுவரா! ராஜா தீர்மானமில்லாமல் குழம்புகிறார். தங்கள் நிதி யாவும் நல்ல இடத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்பது அவர் அவா! எனவே இந்த நாட்டுக்கு நன்மை பயக்கத்தக்கவர்கள் யாவர் என்று நினைக்கிறோமோ அவர்களிடம் தங்கள் நிதி போய்ச் சேரும்படி அருள் புரிவாய்! எங்களுக்கு வழி காட்டுவாய்!" என்று கண்ணீர் உருக்கமாய்ப் பிரார்த்தனை செய்தான்.

பிறகு வலது புறமிருந்த கொப்பரையில் துணி முடிப்பை நலுங்காமல் செலுத்திவிட்டு,



அர்ச்சகரிடம் தீர்த்தப் பிரசாதமும், சடகோபமும் பெற்று,

'கோவிந்தா கோவிந்தா' என்று பக்த ஜன கோஷ்டியுடன் கோஷமாகக் கூறிக் கொண்டு வெளியே வந்தான்.

வாசலில் ஜனங்கள் பாத்திரங்களிலிருந்து பருப்பு வகை வரை எல்லாவித காணிக்கைகளையும் கையில் ஏந்திக் கொண்டு நிற்பதைப் பார்த்தான்.

அத்தனை பேருக்கும் ஏதோ குறையோ அல்லது மனத்தில் ஏக்கமோ அல்லது பக்திப் பரவசமோ ஏற்பட்டுத் தூர தூரங்களிலிருந்து அங்கே வந்திருந்தார்கள்.

பக்த ஜனங்களை நவாப் உத்தியோகஸ்தர்களான தாசில்தாரர்களும் இதர சிப்பந்திகளும் கண்காணித்ததோடு மட்டுமல்லாமல் அவரவர்க்கு வசதிகளைச் செய்து கொடுத்த வண்ணம் இருந்தார்கள்.

திருடு, கொள்ளை, கொலை போன்று ஏதும் நடந்து விடா வண்ணம் திருமலையிலும், மலைப் பாதையில் ஆங்காங்கேயும் காவல் புரிந்தார்கள்.

பிறகு வர்மனும், வேன்ஸானும் ஊரை வலம் வந்து வடக்குமாட வீதியில் வருங்காலையில் ஒரு மடத்து வாசலில் நின்ற ஒருவர், "அடேடே! தம்பி! தம்பி!" என்று அழைக்க, வர்மன் திரும்பினான்.

தலைப்பாகை அணிந்து முத்துத் தாழ்வடங்கள் தரித்து நீள வெள்ளை நிறத்து அங்கி அணிந்திருந்தவனை நிச்சயம வர்மனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

வைர வர்த்தகன் விட்டோபா அவன்.

"தம்பீ! தம்பீ! பார்த்துப் பல நாள் ஆயிற்றே! பொம்மராஜு பாளையம் ஜமீன்தாரிடம் காரியமாய் உன்னை அனுப்பித்தோமே? செய்து முடித்தாயா? பெண்ணை ஜாக்கிரதையாகச் சேர்த்தாயா? லிகிதத்தைக் கொடுத்தாயா? போனவன் போனவனே என்று ஆகிவிட்டாயே! உன்னோடு வந்த யாரும் எம்மிடம் வந்து எந்தச் செய்தியும் சொல்லவில்லையே! அவர்கள் கதி என்ன ஆயிற்று?" என்று மூச்சு நிற்காமல் கேட்டுக் கொண்டு போனார்.

வர்மன் சிறிதே திகைத்து, விட்டோபா அவனுடன் அனுப்பிய மராட்டிய ஆட்கள் அவன் கையாலேயே மோட்சம் போய் விட்டார்கள் என்பதை நினைத்து,

"ஐயா! என் செய்வேன்! மராட்டியர் தான் முராரி ராவ் தலைன்மயில் பெரும்பாலோர் தங்கி இருந்தாலும், பலர் நாட்டின் சீர் கேடான நிலை கண்டு அவரவர் தனித்தனி கும்பல்களாகச் சேர்ந்து, தம் இஷ்ட முறையில் சூறை கொள்ளைகளை நிகழ்த்துவதையும், பணம் கொடுத்தோர் கட்சியில் சேர்ந்து அவர்களுக்காக யுத்தம் செய்வதையும் தங்கள் சுபாவமாக ஏற்றுக் கொண்டு விட்டார்களே! இந்த நிலையில் எங்களை ஒரு கோஷ்டியார் தாக்கிக் கொள்ளை அடித்துச் சிப்பாய்களையும் கொன்று விட்டதுமன்றி தாங்கள் அனுப்பிய பெண்ணையும் அபகரித்துச் சென்றார்கள்! நான் ஒருவன் தான் மிஞ்சினேன்!" என்று கூறினான்.

அவ்வளவில், விட்டோபா, "ஐயோ, இப்படியா நடந்தது?" என்று மிகவும் தாபப்பட்டு, "இதை நீயாவது பின்னர் வந்து சொல்லியிருக்கலாமே! நான் தான் புதுச்சேரி வரச் சொன்னேனே! ஒரு வேளை உனக்கு வேறு வேலைகள் போலும்!" என்று சொல்லி,

"என்னது. என்று புரிய வில்லை. நாட்டில் நான் எடுக்கும் காரியங்கள் எல்லாம் நஷ்டமாகின்றன. நஷ்டமாகின்றன" என்று புலம்பியவாறு, வர்மனுக்கு விடை கொடுத்தான்.

பிறகு வேன்ஸானோடு வர்மன் கலந்து கொள்ள, "வர்மா, அது யார்?" என்று அவர் கேட்டார்.

"விட்டோபா என்னும் வர்த்தகராம். புதுச்சேரியாம். தங்களுக்கு தெரியாதோ?" என்று கேட்டான்.

"வர்மா! அந்த ஆளைப் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். அவன் ஒரு பிரெஞ்சு உளவாளியாக இருக்கும். ஜாக்கிரதையாக இரு! இங்கே திருமலைக்கு வந்திருக்கிறானே! என்ன காரணம் இருக்கும் புரியவில்லையே. தூப்ளேயே அனுப்பியிருப்பாரோ!" என்று கூறினார்.

"அப்படியானால் உங்களை அவர் நிச்சயம் அடையாளம் கண்டிருப்பார் அல்லவா?" என்று கேட்க,



"நிச்சயம் கண்டு கொண்டிருப்பான். நான் யார் கட்சியும் கிடையாது. இந்த நாட்டுச் சமயத்தவனும் இல்லை. எனவே இவன் இங்கே ஏன் வந்தான் என்று யோசித்திருப்பான்!" என்று கூறினார்.

பிறகு வரும் யாத்திரிகரை அவர்களாகவே அழைத்து உணவு போடும் பல மடங்களில் ஒன்றில் புசித்துவிட்டு, சற்று இளைப்பாறி விட்டு,

பிறகு மாலையில் மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தார்கள்.

முன் இரவில் திருப்பதி சேர்ந்து, அங்கே சத்திரத்தில் தங்கிவிட்டு, வேன்ஸான் கொண்டு வந்திருந்த குதிரைகளில் இருவரும் ஏறிக் கொண்டு விரைவில் பொம்மராஜ" பாளையம் போய்ச் சேர்ந்தார்கள்.

வேன்ஸான் தங்கிக் கொள்ள,

வர்மன் நேராக கார்வேட் ராஜாவின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான்.

உள்ளே ராஜா வழக்கமாக இருக்கும் கொலுமண்டபத்தில் அவரைத் தேடிப் போக,

அங்கே அவர் இல்லாமல் யோசிக்கும் போது,

ஒரு சிப்பந்தி அவனை அழைத்துப் போய் தனி அறை ஒன்றில் கொண்டு விட்டான்.

உள்ளே இருந்த நிசப்தமும் லேசாக எழுந்த கஷாய நெடியும் வர்மனைச் சற்றுத் துணுக்குற வைத்தது.

உள்ளே மெல்லடியிட்டுப் போக, கார்வேட் ராஜா ஒரு மஞ்சத்தில் பாதித் திறந்த கண்ணோடு படுத்திருந்தார்.

அருகில் ராணியார் நின்று கொண்டிருந்தார்.

"பிரபுவுக்கு என்ன?" என்று வர்மன் கேட்க,

"நேற்று இரவிலிருந்து நினைவு இல்லாமல் இருக்கிறார்" என்றார் ராணியார் துக்கத்துடன்.

"பிரபு! பிரபு! திருமலை போய் வந்தேன் பிரபு!" என்று அருகில் போய்க் கூறினான் வர்மன்.

ராஜாவிடமிருந்து எந்த சைகையும் வரவில்லை.

பாதித் திறந்த கண்கள் அப்படியே இருந்தன.

மூச்சு மட்டும் இழுத்து இழுத்து விட்டுக் கொண்டிருந்தார்.

கஷாய, மருந்து வர்க்கங்கள் அங்கே இருப்பதைப் பார்த்து,

அரண்மனை வைத்தியர் கவனித்து வருகிறார் என்பதைப் புரிந்து கொண்டான்.

வைத்தியரும் இதரர்களும் அடுத்த அறையில் சித்தமாகக் காத்திருந்தார்கள்.

வர்மன் அந்த அறைக்குப் போக, அங்கே தென்பட்ட காட்சி வர்மனைத் திடுக்கிட வைத்தது.

இங்கே என்ன நடக்கப் போகிறது?

சூழ்நிலை கலங்கும்படியாக இருக்கிறதே என்று நினைத்து, ஸ்தம்பித்த பாதங்களுடன் நின்றான்.

இதயம் படபட என்று அடித்தது.

## 34. லிகிதமும் தெய்வக் கட்டளையும்

அடுத்த அறைக்குள் வர்மன் நுழைந்த போது பாளையத் தலைவர்கள் அத்தனை பேரும் அமர்ந்திருந்தார்கள்.

எல்லோரும் உடன்படிக்கைக் குழுவினர் அத்தனை பேர் முகமும் சோகமாக இருந்தது. குழுவின் வயோதிகத்தலைவர் வர்மனை சாடை காட்டி அருகில் உட்கார்த்தினார். "ராஜா எப்படி இருக்கிறார்? திருப்பதிப் பணம் பற்றி ஏதாவது சொன்னாரா? நீ கேட்டாயா? எங்கள் வேண்டுகோளைச் சமர்ப்பித்தாயா?" என்றார்.

வர்மன் பதில் கூறினான். அவன் வந்து பார்த்ததிலிருந்து கார்வேட் ராஜா உடல் நலம் சரியில்லை. பணம் பற்றி



அவரால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. முடிவை ஆண்டவனிடமே விட்டு விடுவதென்று வர்மனைத் திருமலைக்கு அனுப்பி வேங்கடவனுக்கு பிரார்த்தனை உண்டியல் போட்டு வரச் சொன்னார். வர்மனும் திருமலை போய் இப்போது தான் திரும்பினான். ராஜா நினைவு இல்லாமல் போனது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'சேர்மா முதலியாரே! இப்போ என்ன செய்யச் சொல்லுறீர்?" என்றார் பெரியவர்.

வெற்றிலை போட்டு விபூதி அணிந்திருந்த சேர்மா முதலியார் உட்கார்ந்தவாறே பேசினார். "இப்பம் என்னங்க செய்யறது. எல்லா ஊர்ப்படையும் கூடியாச்சே!" என்றார் அவர்.

"படை கூடியாச்சு! யாரை எதிர்க்கப் போகிறீர்கள்?" என்றான் வர்மன்.

"அதுதான் பேசி முடிவு பண்ணியாச்சே! இங்கிலீசுக்காரனைத்தான் முதல்லே பொசுக்கறோம்."

"அப்புறம்?"

"அப்புறம் எல்லோருமாக் கூடி பிரெஞ்சுக் காரனைப் பொசுக்கறோம்."

"அப்புறம்?"

"நவாபோட உடன்படிக்கை வச்சுக்கிடறோம்."

"எந்த நவாபு?"

"முகம்மது அலி"

"என்ன உடன்படிக்கை பண்ணுவீர்கள்?"

"நவாபு வடக்கேயே இருந்துக்கிட வேண்டியது. தெற்கே வரக் கூடாது. தெக்கே நாயக்கரும், நாம்பளுமா ராஜ்யம் பண்ணிக்கிட வேண்டியது! நவாபுக்கு வருஷத்துக்கு ஒரு தொகை கப்பம் போட்டுற வேண்டியது"

திட்டம் பிரமாதமாக இருந்தது!

"சரி, முதல் காரியமா என்ன செய்யப் போறீங்க?"

"படை வரப் போகுது, ஆர்க்காட்டுப் பாரிசத்திலே!"

"எதுக்கு?"

"இளைவு இருக்கானில்லே! கோட்டையை விட்டு வெளியே வர்றதுக்குக் காத்திருப்போம். வந்தா நொறுக்கிடுவோம்."

"வாரமல் போனா? ஒரு வேளை சந்தா சாகிப் ஆளுங்கோ கோட்டைக்குள்ளே இளைவை முறியடிச்சுட்டா?"

"நல்லதாப் போச்சு! நாங்க தேவனாம் பட்டணம் (கடலூர்) போறோம். அங்கே இங்கிலீஷ்காரனை நொறுக்கறோம். அப்புறம் சென்னைப் பட்டணம் போறோம். அங்கேயும் நொறுக்கறோம். இத்தனையும் சரியா நடந்துப் போச்சுன்னா, அப்புறம் புதுச்சேரியிலே போய் பிரெஞ்சுக் காரனை துவம்சம் பண்ணறோம்."

வர்மனுக்கு புன்னகைகளாக வந்தன. "நடைமுறையில் இதெல்லாம் சாத்தியமா?" என்றான் வர்மன்.

"நிச்சயம் சாத்தியம்தான்!" என்று மிக அழுத்தமான குரல் கேட்டதும் எல்லோரும் திரும்ப, - அங்கே ஜக வீர பாண்டிய நாயக கட்டபொம்மன் கண்களில் பளபளப்புத் தளும்ப தீவிர முகத்தோடு இருந்தார். (பிரசித்தி பெற்ற கட்டபொம்மனின் தந்தை)

"இந்தப் பரங்கி மிலேச்சர்களை நம் நாட்டை விட்டு ஓட்டினால்தான் சுபிட்சம் உண்டாகும்" என்றார் தொடர்ந்து.

வர்மன் அவரைப் பார்த்துத் திரும்பினான்.

"முதலில் இங்கிலீஸ்காரனை நொறுக்கறோம். அப்புறம் பிரெஞ்சுக்காரனை. சரிதானா?" என்றான்.

"அதுவே சரி! நல்லாப் புரிந்து கொண்டாய்!"

"அதை நிறைவேற்றுவதுதானே?"

"தம்பி படை இருக்கிறது தெற்கே! அதைக் கொண்டு வரவும் சண்டை புரியவும் பணம் வேண்டாமா?"

வர்மன் திரும்பினான். "ஐயா, மனம் இருந்தால் பணம் வராதா?" என்றான்.

"வராது தம்பி. நாட்டில் நல்ல ஆட்சி நடந்தால் பணம் சுரக்கும். இப்போதுள்ள பூசல் ஆட்சியில் வரிப் பணமாக மக்களின் அத்தனை வருமானத்தையும் பிடுங்கிக்கொண்டு ஓடுகிறார்களே! மக்கள் பரதேசிகள் ஆன பிறகு



அவர்களிடம் பணம் திரட்ட வழி ஏது? முடிந்ததைச் செய்திருக்கிறோம். இனி பணம் வேண்டி இங்கே யாசிக்க வந்திருக்கிறோம்."

அவர் சொல்வது சரியாகப்பட்டது வர்மனுக்கு.

அந்தக் குழுவினர் போட்ட திட்டம் ஒழுங்காக நிறைவேறினால் நிச்சயம் நாட்டில் அமைதியான ஆட்சிகள் நடைபெற ஆரம்பிக்கும்.

ஆனால் திட்டங்கள் நிறைவேறுமா? வெறும் கனவுகளாக நின்று விடுமா?

தென் சீமைப் பாளையக்காரர்கள் அனைவருமே ஒரே கனவைக் காண ஆரம்பித்து தேசத்திற்கு நல்ல அறிகுறி அல்லவா!

"ஐயா!" என்று ஆரம்பித்தான் வர்மன். "ராஜா ஏற்கெனவே உங்கள் மீது தான் பற்று வைத்திருக்கிறார். உங்களுக்கு உதவவே விருப்பப்படுகிறார். ஆனாலும் இப்போது இருக்கும் சூழ்நிலையில் யாருக்கும் பணம் அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறார். இதற்கு ஒரு வழி காட்ட வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்து என்னை மலை மேல் போகச் சொல்லி உண்டியலும் போடச் சொன்னார். நான் போட்டு வந்துவிட்டேன். வேங்கடவர் நிச்சயம் ஒரு வழி காட்டுவார். ராஜாவின் உடம்பையும் குணம் செய்வார்" என்றான்.

பின்னர் எல்லோரும் பேசி இருந்து கலைந்து விட்டார்கள்.

இரவு ஆகி ஒரு நாழிகையில் வர்மன் இருப்பிடம் தேடி ஜமீன் ஆள் வந்தது.

அவனை அவசரமாக அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அரண்மனையில் இருட்டைத் தவிர மெல்லிய சோகம் ஊடுருவியிருந்தது. அகல் சுடர்கள் அங்குமிங்கும் ஊசி தைக்கும் வெளிச்சத்தைச் சுண்டிவிட்டன.

பாதிச் சாம்பல் பூத்த இருட்டு எங்கும் பரவியிருந்தது. மென்மையான சாம்பிராணி புகை காற்றில் ஜாடையாக மணத்தது.

ராஜா கொலுவுக்கு அடுத்த அறையில் வர்மன் நுழைந்த போது, கார்வேட் ராஜா - மனைவி அவனுக்காகக் காத்திருந்தாள்.

நாற்பத்தைந்து வயது இருக்கும். சுவர்ணமயமயான மேனியுடனும், முகத்தில் தெய்வ வசீகரத்துடனும் தோற்றமளித்தாள். இருட்டுச் சிமிழ் போன்ற விழிகளுடன் அவனைப்பார்த்து,

"ஐயா, ராஜா தங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். தாங்கள் திருமலை சென்று வந்தீர்களே! பெருமாள் ஏதாவது சூசகம் தெரிவித்தாரோ?" என்றாள்.

அந்த ராஜ மனைவியை வணங்கி எழுந்த வர்மன்,

"நாச்சியாரே! அடியேன் ஒரு தெய்வ நிர்ப்பந்தத்திற்கு அருகதை உடையவன் அன்று. எனவே வேங்கடவன் எனக்கு எந்த சூசகமும் கொடுக்கவில்லை. ஒரு வேளை வேங்கடவன் வேறு வழியாகச் செய்தி அனுப்புவாரோ, என்னவோ! நான் ஒரு துரதிர்ஷ்டக்காரன்! நான் வருவதற்குள் ராஜா நினைவு இழந்து விட்டார். தங்களிடம் ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டான்.

"என்னிடம் எதுவும் சொல்லவில்லை. குழப்பத்திலேயே இருந்தார். கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தார்" என்று சொன்ன ராணி வேங்கட நாயகி அம்மா தம் கையில் வைத்திருந்த ஒரு லிகிதத்தை எடுத்து,

"ஐயா! இப்போது இந்த லிகிதம் புதுச்சேரியிலிருந்து வந்திருக்கிறது. என் மகள் செஞ்சுகா எழுதியுள்ளாள். இதைப் படியுங்கள்" என்று அதைக் கொடுத்தாள்.

கை நீட்டி வாங்கும் போது பதற்றம் ஏற்பட்டது. லிகிதத்தைப் பிரிக்கும்போது கண்ணீர் மல்கியது.

எனது தந்தையாரின் பாத மாலையில் அனந்த கோடி தெண்டனிட்டு செஞ்சுகா எழுதுவது -

இப்பவும் என் வாழ்க்கை இங்கே கசக்கிறது. இத்தனை நாளும் இல்லாத ஒரு வெறுப்பு எனக்கு வாழ்க்கை மீது வந்திருக்கிறது. ஏனென்று எனக்குப் புரியவில்லை. முன்பு நான் இங்கே வந்ததையோ, இங்கே இந்த பிரெஞ்சுக்காரர்



காவலில் இருப்பதையோ என் ஜமீன் பூமிக்கு நான் செய்யும் தியாகம் என்று நினைத்து மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் இப்போது வரவர நான் நினைத்தது எல்லாம் தப்பு என்று தோன்றுகிறது. நாட்டுக்குத் தியாகம் செய்யலாம். ஆனால் அதற்கும் அளவு முறை இல்லையோ என்று தோன்றுகிறது. காலம் காலமாகச் செய்து கொண்டே இருக்க முடியுமா? அப்படியானால் சொந்தத்திற்கு வாழ்வது எப்போது? சொந்தத்திற்கு நான் வாழ வேண்டாமா?

அப்பா எனக்கு உடனே ஊர் வர வேண்டும். வந்து உங்கள் கூடேயும், நமது அரண்மனை, நமது சோலை, நம் நதி, மலைகளிடையேயும், வனத்திலும் கானம் பாட வேண்டும் போல இருக்கிறது. எனவே நான் எழுதியதை யெல்லாம் மனதில் பதித்துக் கொண்டு என்னை உடனே இங்கிருந்து அழைத்துச் செல்லும்படி வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து காலம் தாழ்த்தி விடாதீர்கள்! தர்ம அதர்மங்களில் அதிகம் குழம்பி விடாதீர்கள். இந்தக் கடிதம் கண்ட ஒரு பட்சத்துள் என்னை அழைத்துப் போக வசதி செய்யாவிட்டால் அடியாள் தன் உயிரை மாய்த்துக் கொள்வாள் என்பதை அறிந்து கொள்ளவும்." லிகிதத்தை முடிக்கும்முன் கண்ணில் நீர் வந்தது.

ராணியிடம் அதை ஒப்படைத்தான். "மகாராணி, ராஜகுமாரி எழுதி இருப்பதைப் படித்தால் மனம் நெகிழ்கிறது. வேதனை தாங்க இயலவில்லை. உத்தரவு கொடுங்கள். நான் புதுச்சேரி போய் அவரை அழைத்து வந்து விடுகிறேன்" என்றான் வர்மன்.

ராணி முகத்தில் சலனமே இல்லை.

"ஐயா! தாங்கள் எப்படி அழைத்து வருவீர்கள்?" என்றாள்.

"தந்திரமாக, பிரெஞ்சுக்காரருக்குத் தெரியாமல்."

"ஐயோ, அது தப்பிதம். ராஜாவும் அதை விரும்ப மாட்டார்" என்றாள் ராணி.

"பின்னே எப்படித்தான் அழைத்து வருவது?"

"ஐயா! இங்கே தான் நான் தெய்வ சங்கல்பத்தை உணர்கிறேன். வேங்கடமலை தெய்வம் என்ன சூசகம் தருமோ என்று எதிர்பார்த்திருந்தோமோ, அதை

இப்போதே நிறைவேற்றி விட்டது. இந்தக் கடிதம் ரூபமாக நிறைவேறி விட்டது. நாம் பிரெஞ்சுக்காரர்களுக்குத்தான் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பது தெய்வ சங்கல்பம்!"

பளீர் என்று ஜோதி பூத்தாற்போல அந்த வார்த்தைகள் அவன் மனத்தில் பாய்ந்தன.

செஞ்சுகாவின் லிகிதமும், வேண்டுகோளும் தக்க சமயத்தில் வந்து தெய்வ சங்கல்பத்திற்கு ஒரு சூசக ரூபம் காட்டி விட்டது.

அதை அவன் உணரா விட்டாலும், ராணி விளக்கி விட்டதும், ஒரே சிலிர்ப்பு ஏற்பட்டது.

"மகாராணி!" என்று கும்பிட்டான் அவன்.

"ஆமாம்! தாங்கள் சொன்னது முற்றிலும் சரி. தெய்வக் கட்டளை கிடைத்து விட்டது. போதும் இந்த சூசகம். இதுவே போதும். உத்தரவு கொடுங்கள் ராணி. நான் புறப்படுகிறேன்" என்றான் வர்மன் பரபரப்போடு.

"நல்லது ஐயா! தாங்கள் சித்தமாக இருங்கள். நான் ஸ்ரீநிவாசாச்சாரியாருக்கு ஆள் அனுப்ப வேண்டும். அவரிடமிருந்து பணம் வந்ததும் தாங்கள் புறப்படலாம். மேற்கொண்டு காரியத்தை நான் உடனே கவனிக்கிறேன். தாங்கள் போகலாம்" என்றாள்.

வர்மன் உணர்ச்சிப் பெருக்கோடு வெளியே வந்தான்.

தாழ்வாரங்களைக் கடந்து வெளி வாசல் வருவதற்கு முன், "ஐயா!" என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

தாதி ஒருத்தி மிகுந்த நாணமுடன் ஒதுங்கி இருட்டுள் நின்றாள். கண்கள் மட்டும் இரு ஜீவ வண்டுகளாக அவன் மீது பதிந்தன. நிர்மலமான முகம்.

"தங்கள் பெயருக்கு ராஜ குமாரி ஒரு தனி லிகிதம் வைத்து அனுப்பி உள்ளாள். தங்களிடம் ரகசியமாக அதைக் கொடுத்து விடும்படி உத்தரவு!" என்று சொல்லி மடியிலிருந்த லிகிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதைப் பெறும் போது மீண்டும் அவனுக்குப் பதற்றம் ஏற்பட்டது.



லிகிதத்தை வாங்கி அவளைத் திரும்பிப் பார்த்து, "அம்மணி! தங்கள் பெயர் என்ன? தங்களுக்கு ஏதாவது பரிசில் தர நினைக்கிறேன்!" என்றான்.

"என் பெயர் பத்மாவதி. தங்கள் பரிசிலை நான் உரிய நேரத்தில் வாங்கிக் கொள்வேன்" என்று கூறி இருட்டோடு நடந்து விரைவில் உள்ளே மறைந்தாள் அவள்.

வர்மன் பலவித உணர்வுகளில் தத்தளிக்க, தன் இருப்பிடம் வந்தான். விருந்தினர்க்கான மாளிகை அது. உள்ளே அறைப் பக்கம் போய், அகல் விளக்கில் அந்த லிகிதத்தைப் படிக்க முனைந்தான்.

கண்கள் இளகி நீராக வடிந்தது.

அவனால் வாசிக்க முடியவில்லை.

## 35. யாத்திரை தொடங்கியது

வர்மன் அந்த லிகிதத்தைப் பொக்கிஷம் போல் போற்றி வெளியே வந்தான். கனத்த இருட்டு எங்கும் மொய்த்திருந்தது. தெரு ஒன்றில் சென்று ஒரு சத்திரத்து அகல் விளக்கில் நின்று லிகிதத்தை திறந்தான்.

"நீங்கள் போனதிலிருந்து மனம் மிகவும் வியாகூலப்படுகிறது. இத்தனை நாளும் தனிமை என்னை வருத்தியதில்லை. இப்போது வருத்துகிறது. எனக்கு திடீரென்று குடும்ப நினைவுகள் வருகின்றன. முன்பு வந்ததில்லை. தூரத்தில் பணயமாக இருப்பதை முன்பு ஒரு தியாகமாக எண்ணினேன். இப்போது ஏன் அப்படி வந்தேன் என்று சஞ்சலிக்கிறேன். அப்பாவுக்கும் இதை குறித்து எழுதி இருக்கிறேன். இப்போது என் மனம் ஊரையும், வீட்டையுமே நினைக்கிறது

இத்தனை நாளும் அவைகளை விட்டு நான் பிரிந்தது அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

ஒரு வேளை எனக்கு சுயநலம் அதிகம் தட்டி விட்டதோ!

என் சுயத்தை நான் அதிகம் நேசிக்கத் தொடங்கி விட்டேனா?

வீரரே! அப்பாவுக்கு எழுதியிருக்கிறேன். சீக்கிரம் வந்து என்னை அழைத்துப் போங்கள்."

லிகிதத்தை மூடினான்.

மழலையில் ஒரு கிளி அவனிடம் பேசியது போல் இருந்தது. பெருமூச்சு விட்டான்.

ஒரு வாரத்தில் காரியங்கள் சுறுசுறுவென்று நிகழ்ந்தன. பொம்மராஜு பாளையம் திவான் நரசிங்கம் அங்குமிங்கும் அலைந்து அலுவல்களைக் கவனித்தார். திருமலைக்கு மேல் ஆட்கள் அடிக்கடி போய் வந்தார்கள். என்றைக்கும் காணாத ஸ்ரீநிவாசாச்சாரி ஊரில் தென்பட்டார்.

கார்வேட் ராஜா நினைவற்றுக் கிடப்பதைப் பார்த்து விசனமுற்றார். பெருமாளை நோக்கி, "சுவாமி இந்த நாட்டுக்கு என்ன வந்திருக்கிறதென்று தெரியவில்லையே. நல்லவர்கள் எல்லாம் முடங்கி விடுகிறார்களே! கோயில் பணத்தைத் தம் சொந்த சொத்துப் போல் பாதுகாக்க இனி யார் உள்ளார்? நெருக்கடி ஏறிக் கொண்டே போகிறதே!" என்று நெஞ்சு உருகப் பிரார்த்தித்தார்.

ராணி அவரை அழைத்து நடந்ததை எல்லாம் கூறினாள். புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு திருப்பதி பணத்தை அனுப்பி வைக்கும்படி திருவுள்ளக் குறிப்பு என்று கூறினார்.

ஸ்ரீநிவாசாச்சாரியார் சிறிது கூட யோசிக்கவில்லை. "மகாராணி! ராஜ வம்சம் தாங்கள்! அதனால் தெய்வாம்சம் உள்ளவர்கள். தங்கள் திரு நாவில் நல்லது தான் வரும் அல்லது வராது" என்றார். பொக்கிஷத்தில் எந்த அளவு கொடுக்க உத்தரவு இட்டாலும் செய்வதாகக் கூறினார்.

ஐந்து பல்லக்குகள் சித்தமாயின. அத்தனையும் புதிதாகப் பூட்டப்பட்டன.



அவற்றின் தனுசுக் கொம்பு முழுவதிலும் துவாரங்கள் இடப்பட்டு, திருப்பதிப் பொன்னும் மணியும் நிறைத்து மூடப்பட்டன.

அது போல பல்லக்கின் உட்காரும் தளம் அடையே இடைவெளி கொடுத்து இரட்டையாகச் செய்யப்பட்டது. உள்ளே பொன், வெள்ளிக் காசுகள் பூராவும் நிரப்பப்பட்டன. மரச் சிற்பங்களுள் துவாரம் செய்து வைரம், நீலம் போன்றவை நிரப்பப்பட்டன.

பொம்மராஜு பாளையம் வந்த பத்தாம் நாளில் வர்மன் தெற்கே திருமா மங்கை நோக்கி யாத்திரை கோஷ்டியுடன் புறப்பட்டான்.

கடில நதிக்கரையில் இருந்தது திருமா மங்கை புண்ணிய ஷேத்திரம். நாராயணப் பெருமாளும், நாராயணியும் விசேடம்! அங்கே பெருமாளுக்கு மோகினித் திருக்கோலம் அணிவிப்பது மிகப் பிரசித்தம். திருப்பாற் கடல் கடைந்த போது அமிருதம் உண்டாக, அமிருதத்தை தேவர் அசுரர்களுக்கு பங்கு போடும் நிலையில், பெருமாள் மோகினி உருவம் படைத்து, அசுரர்களை தம் அழகிலேயே மெய்மறந்து ஈடுபட்டிருக்கச் செய்து, அந்த மோகத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு அமிருதம் வார்க்காமல், தேவர்களுக்கு மட்டிலும் வார்த்தார் என்பது கதை.

அதை நினைவு படுத்துவதாய் இங்கே நாராயணருக்கு மோகினித் திருக்கோலம் அணிவிப்பதும், அவரை தோழிக் கிண்ணத்தில் ஏற்றி மோகினி நடை போட்டுக் கோயிலைச் சுற்றி வருவதும் பிரசித்தமானவை.

ஊரும் உலகமும் திரண்டு வரும்.

அதுவும் மோகினி நடை என்பது அந்தக் கோவிலுக்கே பிரசித்தம். வாகனத்தைத் தோளில் ஏற்றி நர்த்தனம் செய்து எழுந்தருளிவிக்கும்போது பெருமாள் நிஜத்தில் ஒய்யார நடையிட்டு வருவது போல் தோன்றும்.

பெருமாளுக்கு அனுசரணையாக நூறு தேவரடியார்கள் வெவ்வேறு ஊர்களிலிருந்து திரண்டு அவர் முன்னே சின்னச் சின்ன மலர்கள் போலக் கொத்து சேர்ந்து, சிருங்கார, அலங்கார நிருத்தியங்கள் செய்து கொண்டு போகும் காட்சி.

அத்தனை மிருதங்கங்களும், அத்தனை வாய்ப்பாட்டுக்காரர்களும் சேர்ந்து ஒரு போல ஆட, ஜனம் அத்தனை பேர்களும் இமையாது அசையாது சித்திரமிட்டாற்போலச் சொக்கி நிற்பார்கள்.

இத்தகைய விசேஷங்கள் நிறைந்த திருத்தலத்திற்குப் பொம்மராஜு பாளையம் ராணியார் போக விரும்புகிறார், போகப் போகிறார், நாளை கிளம்புகிறார் என்று வரிசையாகச் செய்திகள் தண்டோரா மூலம் கேட்டன.

எனவே பத்தாம் நாள் காலையில் மூடு பல்லக்குகளும், இருநூறு அடியார்களுமாய் புறப்பட்ட யாத்திரை கோஷ்டிக்குத் தலைவனாகக் கிளம்பினான் வர்மன்.

"கோவிந்தா, கோவிந்தா" என்ற நாமம் எங்கும் ஒலித்தது. பஜனை கோஷ்டி ஒன்று முன்னால் இனிமையாக ஒலித்துக் கொண்டு சென்றது.

அதிகாலையில் புறப்பட்ட கோஷ்டி மத்தியானத்தைத் தாண்டியவாறே நாராயண வனத்தை அடைந்தது.

வனத்தை நெருங்கியது.

வர்மன் அப்போது இரண்டு ஒற்றர்கள் ஓடி வருவதைப் பார்த்து, கோஷ்டியை நிறுத்தி வைத்தான்.

கோஷ்டிக்கு முன்னால் ஒற்றர் அணி ஒன்று சாதுக்கள் வேடங்களில் தனித் தனி மனிதராகப் போய் கொண்டிருந்தது.

சாலையை மட்டுமில்லாது, சுற்றுப்புறங்களிலும் இறங்கி, ஏதாவது விரோத நடமாட்டம் இருக்கிறதா என்று கவனித்து வந்தார்கள்.

இப்போது வந்த ஒற்றர் இருவரும், ஒரு சிறிய மராட்டி குதிரைப் படை, சாலைக்கு அருகில் தண்டு இறங்கி இருக்கிறார்கள் என்றும், அவர்கள் இப்போது புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும், போகும் திசை தெரியும் வரை காத்திருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

வர்மனின் யாத்திரை கோஷ்டியில் வரும் ஆண்கள் எல்லோருமே சுத்த வீரர்கள்.

சந்தர்ப்பத்திற்கு வேண்டி, புனித யாத்திரை செய்யும் வைணவர்கள் போல் நாமதாரிகளாகத் தென்பட்டார்கள்.



வர்மன் தன் குதிரைச் சவுக்கை ஒரு முறை சொடுக்கி அனைவருக்கும் எச்சரிக்கை ஒலி கொடுத்து விட்டான்.

எல்லோரும் காத்திருக்கும் போது அருகிலுள்ள பல்லக்கிலிருந்து, "வீரரே!" என்று குரல் கேட்டது.

திடுக்கிட்டு வர்மன் திரும்பிப் பார்க்க, முகத்தில் குறுநகைகள் வயிரம் போல் மினுமினுக்க, சிந்து மூடுதிரைகளை விலக்கி அவனைப் பார்த்தாள்.

கோஷ்டியில் காவலர்கள் வருகிறார்கள். பல்லக்கில் பொக்கிஷம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அவை உள்ளே ராஜ குலப் பெண்கள் உடை தரித்த சாதாரணப் பெண்கள் வருகிறார்கள் என்று வர்மன் அறிந்திருந்தான்.

சிந்து வந்தது ஆச்சரியமாக இருந்தது.

சிந்து எப்போது பொம்மராஜு பாளையம் வந்தாள்? எப்போது இந்த கோஷ்டியில் கலந்து கொண்டாள் என்று தெரியாது.

எனவே, அழியாத ஆச்சரியமுடையவனாய், அவளருகே சென்று, "எப்போது வந்தீர்கள் சிந்து! பார்க்கவில்லையே!" என்றான்.

"அவ்வளவு திறமையாக வேலை செய்கிறது எங்கள் உடன்படிக்கைக் குழு! நேற்று இரவு வந்தேன். இன்று கோஷ்டியில் சேர்ந்தேன்" என்றாள்.

"உண்மையில் திறமைசாலிகள்தான்! நாம் புதுச்சேரிப் பத்திரமாகப் போய்ச் சேருவோமா!" என்றான்.

"கவலையே வேண்டாம்! அன்று பொய்மான் காட்டில் பார்த்தீர்களே! அத்தனை வீரர்களும் நம்மை அங்கங்கே வழியில் பாதுகாத்துக் கொள்வார்கள்"

"அப்படியா? அவர்கள் எல்லோரும் இங்கே வந்து விட்டார்களா?"

"எல்லோரும் சாதுக்கள் வேடத்தில் இங்கே வந்துள்ளார்கள்! அங்கங்கே வந்து நம்மைக் கண்டு கொள்வார்கள்."

"அடேயப்பா! ஏற்பாடுகள் எல்லாம் பிரமாதமாக இருக்கிறதே!" என்று பூரித்துச் சொன்னான் வர்மன்.

"இன்னும் ஆறு மாதத்தில் பழைய நாயக்கர்கள், மதுரைக்கு வந்து விடுவார்கள். பாளையக்காரர்கள் அவரவர் பாளையங்களில் நிம்மதியாக இருப்பார்கள். வெள்ளைக்காரர் எல்லோரும் வெளியேறி ஓடி விடுவார்கள். முதலில் பிரெஞ்சுக்காரர்களை துரத்துகிறோம். பிறகு இங்கிலீஷ்காரரைத் துரத்துகிறோம்."

கண்களில் பளிங்கு ஜொலிப்புடன் அவள் பேசினாள்.

வர்மனுக்கு ஆச்சரியம் மனத்தில் கனத்தது.

ஆரம்பத்தில் உடன்படிக்கைக் குழுவைப் பற்றி அவன் அதிகம் நினைக்கவில்லை. ஐந்து பாளையக்காரர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு காரியம் செய்ய மாட்டார்கள். இங்கே ஐம்பத்தாறு பேர் கூடி ஒரு காரியம் செய்வது பெரிய ஆச்சரியமாக இருந்தது.

சிந்து சொன்ன பிரகாரம் மட்டும் எல்லாம் நடந்தால்...??

வர்மனுக்குப் பெருமிதம் ஏற்பட்டது.

நாட்டில் ஏற்படவிருக்கும் பெரிய பெரிய மாறுதல்களுக்கு அவன் ஒரு முக்கிய கருவியாக இருக்கப் போகிறான்.

"திருமலைக்குப் போனீர்களாமே!" என்றாள், சிந்து.

"ஆமாம்! கார்வேட் ராஜா அனுப்பித்தார். ஏழுமலையானைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். என் அதிர்ஷ்டமோ என்னவோ, அவரது பொக்கிஷத்தைப் பாதுகாப்பாகப் பின் தொடர்ந்து செல்லும் பொறுப்பும் எனக்குக் கிட்டியிருக்கிறது. பெருமையாக இருக்கிறது. ஆனால் சிந்து ஏன் நாம் ஒரு சுற்று வழியைப் பின்பற்றுகிறோம்?"

"எது சுற்று வழி?"

"திருப்பதிப் பணத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் கையில் கொடுத்து அவர்கள் மூலம் இங்கிலீஸ்காரர்களை அடிக்க விரும்புகிறீர்களே! அதைச் சொல்கிறேன்."

சிரித்தாள்.

"அந்த வெள்ளையர்கள் கையாளும் வழியேதான். ஒருத்தருக்கு உதவி கொடுத்து இன்னொருத்தரை முடிப்பது. பிறகு உதவி வாங்கியவரைத் தாமே முடிப்பது. இந்த வழி



இல்லா விட்டால் நம்மாலே தனியாக எதுவும் சாதிக்க முடியாது."

"ஐம்பத்தாறு பாளையக்காரர்கள் சேர்ந்தால் கூடவா?"

"ஆமாம் வீரரே! வெள்ளையன் யுத்த முறை வெள்ளையனுக்குத்தான் தெரியும். எனவே வெள்ளையனால் தான் வெள்ளையனை முடிக்க வேண்டும்."

"திட்டம் பிரமாதம். நிறைவேற்ற ஆண்டவன் அருள் புரிய வேண்டும்."

அந்த நேரம் மேலும் இரண்டு ஒற்றர்கள் ஓடி வந்தார்கள்.

ஆர்க்காட்டுக் கோட்டைக்குள் நிலைமைகள் மோசமாகி வந்தது.

உள்ளே உணவுப் பஞ்சத்தில் ஈடு கொடுக்காமல் பலர் நோய்வாய்ப்பட்டார்கள். பங்கிடப்பட்ட உணவு போதாமலே பலருக்கு உடல் பலவீனமாகியது.

சிப்பாய்களிடையே இருந்த உற்சாகம் குன்றிவிட்டது.

ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை செய்யக் கூட வலுவில்லாது இருந்தார்கள்.

பேச்சுக்கள் அறவே நின்றுவிட்டன. அவரவர் தத்தம் தனிமையில் இருக்கத் தொடங்கினார்கள்.

சிலருக்குக் கோட்டையைத் திறந்து ஓடி விடலாமா என்று எண்ணம் தோன்றியது.

இனி இங்கிலீஷ்காரரை நம்பிப் பிரயோஜனமில்லை. கடைசி வரை பட்டினி கிடக்க வைத்தே சாக அடித்து விடுவார்கள் போல இருந்தது.

உண்மையில் கோட்டைக்குள் ஒரு சுடுகாட்டு அமைதி கல்போல் இறங்கி இருப்பதை எல்லோரும் உணர்ந்தார்கள்.

ராபர்ட் கிளைவ் அதிகமாக உணர்ந்தான்.

அந்த மாலை நேரத்தில் சோகத்தோடு கோட்டை மேலே நடந்தான்.

சற்று எட்டத்தில் ஒரு சிப்பாயைப் பார்த்தான். அவன் செய்யும் செயலைப் பார்த்துத் திடுக்கிட்டு ஓடினான்.

## 36. காப்பாற்றியவர் இங்கிலீஷ்காரர்

அந்நாளில் மராத்தியரின் தென் வியாபகம் திகில் கொடுப்பதாக இருந்தது.

ஆரம்பத்தில் சிவாஜியும் அவரது வம்சத்தாரும் வந்த போது மராட்டியப் படையின் நுழைவு இனிமையாகவும் இதமாகவும் இருந்தது.

ஆனால் பின்னர் போகப் போக, நிலைமை வெகுவாக மாறிவிட்டது. எல்லா இனிமைகளும் நட்பு உணர்வுகளும் மறைந்து விட்டன.

மராட்டியர் என்றாலே மக்கள் நடுங்குவதாக இருக்கிறது.

ஆனால் மராட்டியத் தலைமை பலவீனமானதாலும் பூசலுக்கு உட்பட்டதாலும், படைப் பிரிவுகள் பல தம்மிச்சையாக இயங்கத் தொடங்கின.

அவர்களது சுதந்திரங்களுக்குத் தென்னகம் ஒரு சுலப இரையாக இருந்தது. இங்கே உட்பூசல்கள் இருந்தன. அரசாங்கங்கள் நலிந்திருந்தன. தவிர வியாபாரிகளாக இங்கிலிஷ், பிரெஞ்சுக்காரர்கள் தோன்றி, உள் விவகாரங்களில் மெள்ள மெள்ள இழுபடத் தொடங்கி இருந்தார்கள்.

இவை அனைத்துமே ஒரு குழப்ப நாட்டாண்மையை உண்டு பண்ணியிருக்க,

மராட்டிய தன்னிச்சைப் பிரிவுகள் இங்கே தம் விருப்பப்படி இயங்க இது நல்ல வேட்டை நிலமாக மாறிவிட்டது.

பல பிரிவுகள் தங்கள் மூலப்படையை விட்டு வெளி வந்து யார் பணம் கொடுத்தாலும் அவர்கள் பக்கம் போர் புரியத் தொடங்கின.

இன்னும் சில பிரிவுகள் தங்கள் சுயநலமே குறியாக அங்கங்கே திடீர் எனப் புகுந்து கொள்ளையிலும் சூறையிலும் ஈடுபட்டன.



கதை நிகழ்ந்த காலத்தில் இந்த தன்னிச்சைப் படையினர் கோயில் திருவிழாக் காலங்களில் திடீரென்று தாக்கி மக்களிடம் கொள்ளை அடித்து வந்தனர்.

இவர்களைக் கண்டு அஞ்சி கிராம ஜனங்கள் நகரங்கள் நோக்கிப் போக ஆரம்பித்தனர். அத்தகைய மராட்டிய கும்பல் ஒன்று தான் மோகினித் திருக்கோலம் காணப் போகும் யாத்திரிக கோஷ்டியின் ஒற்றர்களுக்குத் தென்பட்டது.

இரண்டாவது ஒற்றன் வந்த போது மராட்டியர் நகர்ந்து போய் விட்டார்கள் என்று தெரிவித்தான்.

வர்மனும் இதர முக்கியஸ்தர்களும் யோசித்தார்கள். போய் விடலாம் என்று தீர்மானித்தார்கள். கோஷ்டி புறப்பட்டது.

ஒரு முகூர்த்தம் நடந்த பின்னர் நிலம் தொய்ந்து ஒரு கணவாய் வந்தது.

மழைக்காலங்களில் நீர் நிரம்பிச் சாரும் கணவாய்.

இப்போது இரு பக்கமும் கோரப் புல்லும் நாணலும் வளர்ந்திருந்தன.

படுகையில் படும் கற்கள் சிதறிக் கிடந்தன.

அந்த இடத்தில் போன போது தான் 'ஓ' என்று இரைச்சல் தொனியுடன் மராட்டியர் அவர்களை நோக்கி இறங்கினார்கள்.

அது ஒரு திடீர் தோற்றம், யாருக்குமே அது கண்கட்டு வித்தையாக இருந்தது.

மராட்டியர் தமது பறக்கும் குதிரைகளில் வந்தார்கள். நாற்பது ஐம்பது பேர் இருக்கும். அத்தனை பேரும் ஏகோபித்து வருவது ஆச்சரியமாக இருந்தது.

நொடியில் அவர்கள் பல்லக்குகளைச் சூழ்ந்தார்கள். பூசல் ஒன்று உலோக ஓசையோடு கிளம்பியது. வர்மனது யாத்திரிகர்கள் அனைவரும் வீரர்கள் . ஆனார்கள். பாளையக்காரர்கள் அவர்கள்! மின்னல் சொடுக்குகள் போல வாட்கள் மேலே எழுந்தன. பரந்த வீதியான மார்புகளும், திண்டு திண்டான உடம்புகளும் அங்குமிங்கும் மத்த கஜங்கள் போல் ஊடுருவின.

ஆரம்பத்தில் சில மராட்டியர் உதிர்ந்தார்கள். ஆனால் அவர்கள் இவ்விதச் சண்டைகளில் நிறையத் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் குதிரைகளும் மிகவும் பழக்கப்பட்டவை. சில நிமிடம் நடந்த சண்டையில் பாளையக்காரர்கள் வளைக்கப்பட்டார்கள்.

அத்தனை பேரும் இழைத்துக் கொண்டு அடிமைகள் போல் நின்றார்கள்.

வர்மனை இருவர் பிடித்திருந்தார்கள். அவன் பார்வை கவலையோடு பல்லக்குகளை நோக்கியது.

மராட்டியர் உக்கிரமாக மீசைகளை உறுவினார்கள்.

"பல்லக்கை இறக்கு!" என்க, அவை மெதுவாகப் பூமி நோக்கித் தாழ்ந்தன.

திரைச் சீலைகள் மெதுவாக அசைந்தன. ஆகா! திருப்பதிப் பணம் கடைசியில் யாரிடம் போய்ச் சேரப் போகிறது! வடபிரதேசக் கொள்ளைக்காரர்களிடமா?

வர்மன் வெகுண்டான். நாலா பக்கமும் பார்த்துப் புழுங்கினான்.

அப்போது திடீரென்று எழும்பிய புழுதி அவனைத் திகைக்க வைத்தது. பத்து பதினைந்து குதிரைகள் வடபுறத்தில் உற்பத்தியாயின.

மந்திரத்தில் கட்டுண்டது போல் மிக ஒழுங்காக வந்தன. மராட்டியர் திகைத்தார்கள். வர்மன் ஆச்சரியமுடன் பார்த்தான்.

வந்த கும்பல் இங்கிலீஷ்காரர்களாக இருந்தது. இரு திறத்தாரும் அவர்களைப் பார்த்தார்கள். இங்கிலீஷ் குதிரைக்காரர்கள் அவர்களை நெருங்கினார்கள். அங்குள்ள காட்சியை வெறித்துப் பார்த்தார்கள். அவர்களுக்குப் புரிந்து விட்டது.

இங்கிலீஷ் தலைவன், மராட்டியத் தலைவனைப் பார்த்தான். "நான் நூறு எண்ணுவதற்குள் நீங்கள் இங்கிருந்து அகல வேண்டும்" என்று எண்ணத் தொடங்கினான்.

ஐம்பது எண்ணுவதற்குள் மராட்டியர் அந்த இங்கிலீஷ்காரர் மீது பாய்ந்தார்கள். திரும்பியும் பூசல் எழ, வர்மனின் ஆட்கள் மீண்டும் பூசலில் இறங்கினார்கள்.



வர்மன் முதன் முறையாக இங்கிலீஷ்காரர்கள் செய்யும் யுத்தத்தைப் பார்த்தான்.

சண்டையில் கூட எதுகை மோனை இருப்பது புரிந்தது. ஒரு கட்டுப்பாடு! ஒழுங்கு! ஒரு நேர்த்தி! ஒரு கம்பீரம்!

நாலே நிமிடங்களில் மராட்டியர் சிதறினார்கள். இறந்தது போக மிஞ்சியவர் பறந்து ஓடினார்கள்.

பிறகு இங்கிலீஷ் தலைவன் உத்தரவிட, அவனது ஆட்கள் நூல் பிடித்தாற்போல் அணி வகுத்து நின்றார்கள். அதுவே பார்ப்பதற்கு ரம்யமாக இருந்தது!

"நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார் இங்கிலீஷ் தளபதி.

"பொம்மராஜு" பாளையம் ஜமீன் யாத்திரை கோஷ்டி இது. கடலம் பக்கத்திலுள்ள திருமாமங்கைக்குப் போகிறார்கள்."

"ஓ! யாத்திரீகர்களா? ஜாக்கிரதையாகப் போங்கள்! இந்த நாட்டில் கொள்ளையும், கொலையும் அதிகமாகப் போய்விட்டது! ஜனங்கள் பாழாகப் போகிறார்களே!" என்று சொல்லிவிட்டு, தன் கோஷ்டிக்கு உத்தரவிட்டுப் புறப்பட்டான்.

வர்மன் ஓடிப் போய் நன்றிக்காக ஒரு முத்து மாலையை அவனிடம் கொடுக்க, புன்னகையோடு அதை விலக்கிவிட்டு அவன் மேலே போனான்.

பிறகு அத்தனை பேரும் களைத்து உட்கார்ந்து நடந்ததை எல்லாம் அசை போட வர்மன் மட்டும் யோசனையில் மூழ்கினான்.

அந்த இங்கிலீஷ் தளபதி அவன் மனத்தில் வெகுவாகப் பதிந்திருந்தான்.

பேசாமல் போக வேண்டியவன், அவன். இந்த நாட்டுக்காரர்கள் தம்மிடையே செய்துக் கொள்ளும் பூசல் இது. இதைக் கண்டு கொள்ளாமல் அவன் போக வேண்டியதுதானே! இங்கிலீஷ் கும்பலின் முன் பின்னால் போகும் பொதி மாடுகளைப் பார்த்தால் அந்த இங்கிலீஷ்காரன் ஒரு வியாபாரியாக இருக்க வேண்டும்.

சொந்த பாதுகாப்புக்கு அந்தக் காவலாளிகளை வைத்துக் கொண்டிருப்பான். வர்மன் கோஷ்டிக்கு அவன் துணை புரிய வந்தது ஆச்சரியம்தானே!

"வீரரே!" என்று குரல் கேட்டது.

பல்லக்கிலிருந்து சிந்துவின் தலை எட்டிப் பார்த்தது. விழிகளின் காந்தக் கிரணம் மனத்தை அள்ளியது. சிறு நகை மட்டும் அதர நுனியில் ஒட்ட, சந்திர ஒளி போல் முகச் சாயலை அவனை நோக்கிக் காட்டினாள்.

வர்மன் அவளருகே சென்றான்.

"வீரரே! களைத்து விட்டீரா?" என்றாள் அவள்.

அந்தரங்கமாகக் குரல் வந்தது. உடம்பில் சில்லிடும் குளிர்ச்சியை அவனுக்குத் தந்தது.

"கடைசி வரை போய்ச் சேருவது கடினம் போல இருக்கிறதே!" என்றாள் சிந்து.

"ஆமாம்! தேவி! நமக்கு ஆட்கள் போதாது போல இருக்கிறதே!" என்றான் வர்மன்.

"கவலைப்படாதீர்கள். மாமண்டூருக்குக் கிழக்கே அங்கங்கே நமது ஆட்கள் துணையாக வருவார்கள்" என்றாள் சிந்து.

"ஏற்பாடு ஆகியிருக்கிறதா?"

"ஆமாம்!" என்றாள் அவள்.

"பொக்கிஷம் பத்திரமாகப் புதுச்சேரி போய்ச் சேருமா?" என்றான் வர்மன்.

"வேங்கடவன் சொத்து. அவரே அதைப் பாதுகாத்துக் கொள்வார்" என்றாள் சிந்து.

"நம்பிக்கை வைக்கிறேன். யாரிடமும் அதைச் சேர்ப்பிக்க விருப்பப்படுகிறாரோ, அவரிடமே சேர்ப்பிப்பார்."

"நம் கனவுகள் பூக்கத் தொடங்கி விட்டன" என்றாள் சிந்து.

பூக்கள் ஆயிரம் தொடுத்தாற் போல முகம் மினுக்கியது.

அந்தக் கணத்தில் வர்மன் மனத்தில் ஆயிரம் சிந்தனைகள் உதித்தன. செஞ்சுகா எழுதிய வரி கூட நினைவுக்கு வந்தது. எல்லாவற்றையும் துறந்து ஒரு குடும்ப



வாழ்வில் இறங்கி விடலாமென்று எண்ணம் குமிழ்ந்தது. "செல்லமணி" என்று தாயார் அழைப்பது கேட்டது! கிராமத்தில் அத்தனை உறவுக்காரர்களின் அழைப்பும் கேட்டன. மனத்தில் ஒரு தாபமே எழுந்தது. எல்லோரையும் விட்டு எங்கேயோ வந்து எது எதிலோ ஆழ்ந்து இப்படி ஆகிவிட்டோமே என்று நினைத்தான். சிந்து மட்டும் இசைவு தந்தால்...

ஆமாம். அவள் மட்டும் இசைவு தந்தால் போதும். அவளையும் அழைத்துக் கொண்டு ஊருக்குப் போய் விடலாம். தாயார் அக மகிழ்ந்து போவாள். "ராசாத்தி மாதிரி ஒருத்தியை எங்ஙனேயிருந்து கொண்டாந்தே!" என்று கேட்பாள். "ராசாத்திதான்" என்று வர்மன் கூறுவான்.

வர்மன் தன் மனக் காட்சிகளில் லயித்திருக்கும்போது, "ம்...ம்... ஆகட்டும்" என்று குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான். வேன்ஸான் அங்கே திடீரென்று முளைத்து எல்லோருக்கும் உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த வேன்ஸான் உண்மையில் யார்? வர்மனுக்கு சிநேகிதனா? பகையாளியா?

கோஷ்டி புறப்பட, வேன்ஸான் தமது மீசையோடு புன்னகை பூத்து அவனை நோக்கி வந்தார்.

* * *

ஆர்க்காட்டுக் கோட்டை மீது கிளைவ் அந்தி வேளையில் சுற்றும் போது,, மனம் சற்று கலங்கியது.

வெளியே கோட்டையைச் சுற்றி ஆயிரக்கணக்கான நவாப் படையைப் பார்த்ததனால் அல்ல.

அவனது மதிப்பிற்கு அந்தப் படை இருபதினாயிரம் இருக்கும். அதற்கு முன் அவனது நானூற்று சொச்சம் படை கொசு மாதிரிதான்.

ஆனால் அதற்காக அவன் அஞ்சவில்லை.

அவன் அஞ்சியதெல்லாம் உணவுக்காக. ஆமாம்! படை நகர்வது வாகனத்தில் அல்ல. உணவில்தான்.

அத்தனை பேரும் வாடி வதங்குகிறார்கள்.

முற்றுகை ஆரம்பித்து முப்பத்தெட்டு நாட்கள் ஆகின்றன. இன்னும் அவன் கேட்ட பணம் வந்த பாடில்லை.

பணம் வராவிட்டால் எந்தக் காரியமும் நிறைவேறாது.

அதுவும் அவன் மாட்டியிருக்கும் இடமோ ஆர்க்காட்டுக் கோட்டைக்குள். வெளியே சூழ்ந்திருப்பதுவோ, சமுத்திரம் போல் பெரிய படை!

இதனிடையே வியூகம் பண்ணி வெளியே போய் விட முடியுமா?

முடியாது. சாதாரண நிலையில் இருந்தால் உத்தரவு போட்டு அனைவரையும் வெளியே சாகசங்கள் செய்து கொண்டு போய் விடலாம்.

ஆனால் எல்லோரும் பட்டினி. கால் பட்டினி, அரைப் பட்டினி. இவர்களைக் கொண்டு எப்படி சாகசம் புரிவது?

கிளைவ் தனது தொலைதூருக் கருவியை எடுத்துப் பார்த்தான்.

யாருமே ஆர்க்காடு பக்கம் வருவதாகத் தெரியவில்லை. கம்பெனி கவர்னர் உறங்குகிறாரா?

## 37. பார்லிமெண்ட் தெரியுமா, தம்பீ!

வேன்ஸானை அங்கே பார்த்தது ஆச்சரியமாக இருந்தது வர்மனுக்கு. பார்க்கும் இடமெல்லாம் வந்து விடுகிறாரே! இவர் எப்படிப்பட்டவர்! இவர் நோக்கம் என்ன?

வர்மன் அவரை நோக்கி நடந்தான். அவர் குதிரையை விட்டுக் கீழிறங்கி முகத்தைத் துடைத்திருந்தார்.



வர்மனை நோக்கி மெல்லிய புன்னகை காட்டினார். இருப்பினும், முகமும் விழியும் கனத்திருப்பது நன்கு தெரிந்தது.

"வாருங்கள் போகலாம்! இங்கே ரொம்ப தாமதமாகிவிட்டது. சம்பவம் ஒன்று நிகழ்ந்தது" என்றான் வர்மன்.

"எல்லாவற்றையுமே நான் பார்த்தேன்" என்றார் வேன்ஸான்.

"எப்போது பார்த்தீர்கள்?" என்றான் வர்மன்.

"சற்று முன்னால்தான்! இங்கே நான் ஒளிந்திருந்தேன். ஏற்கெனவே மராட்டியரைப் பார்த்துவிட்டேன். உனக்கு எச்சரிக்கை கொடுப்பதற்காக காத்திருந்தேன்!" என்றார் வேன்ஸான்.

வர்மன் ஆச்சரியமுடன் அவரைப் பார்த்தான்.

"எனக்கும் திருப்பதிப் பொருள் மீது அக்கறை இல்லையா?" என்றார் வேன்ஸான்.

"போகலாமா?" என்றான் வர்மன் குதிரையைத் திருப்பி.

"நல்லவரிடத்தில் திருப்பதிப் பொருள் போக வேண்டும் என்று எனக்கும் ஆசை தான்."

வேன்ஸானும் குதிரை ஏறினார்.

"திருப்பதிப் பொருளைப் பற்றித்தான் இருக்கிறது, தம்பி!, இந்நாட்டின் எதிர்காலம்!"

வேன்ஸான் குதிரையைச் செலுத்தினார். பல்லக்குகள் மெள்ள எழுந்தன. சிரமப் பரிகாரம் செய்து கொண்ட ஆட்கள் சிலும்பி எழுந்தார்கள்.

"ஓகோ! திருப்பதிப் பொருள் அவ்வளவு முக்கியமா?" என்றான் வர்மன்.

அவனுக்குச் சிறிதாக வேன்ஸான் மீது சந்தேகம் வந்திருந்தது.

இவர் ஏன் எல்லா இடங்களிலும் தலையைக் காட்டுகிறார்?

குறிப்பாக அவன் போகும் இடங்களில் எல்லாம் வந்து விடுகிறாரே!

ஏதாவது குறிக்கோள் இருக்குமோ?

மனம் சற்றே குழம்ப, உடனே சிந்துவே அவரை முதன் முதலில் அறிமுகப்படுத்தியது நினைவு வந்தது. சிந்து அப்படித் தவறான மனிதரைச் சிநேகப்படுத்தி விட மாட்டாளே!

"ஆமாம், தம்பீ! திருப்பதிப் பொருளைத் தான் சார்ந்திருக்கிறது இந்நாட்டின் எதிர்காலம்!" என்றார் மீண்டும் வேன்ஸான்.

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? அரசாங்கங்களிடம் பொருள் இல்லையா?"

"எல்லாவற்றையும் செலவழித்து விடுகிறார்கள்! எத்தனை யுத்தத்திற்குத்தான் பணம் பற்றும்! இப்போது எல்லோரும் அன்றாடம் காய்ச்சிகள்!"

"நவாபுகள் கூடவா?"

"ஏன்? அவர்களுக்கு என்ன விதி விலக்கு! இவர்கள் யுத்தம் நடத்திக் கொண்டே இருந்தால் வரிப் பணம் கிடைத்துக் கொண்டே இருக்குமா? இப்போது இரண்டு நவாபுகள் பதவிக்குச் சண்டை போடுகிறார்களே! இரண்டு பேரும் படைச் சிப்பாய்களுக்கே சம்பளம் பாக்கி! எனக்கும் பணம் பாக்கி! இவர்களுக்கு ஏன் யுத்தம்?"

"சரி துரை! வெள்ளைக்காரர்கள் எப்படி?"

"அவர்களும் அன்றாடம் காய்ச்சிகள்தான். வியாபாரம் மட்டும் செய்து வந்தால் அவர்களிட்ம் பொருள் இருக்கும். இப்படிச் சண்டை போட ஆரம்பித்தால்..."

"இங்கிலீஷ்காரர்கள் எப்படி?"

"அங்கே திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் தலை கொடுத்திருக்கும் போது இங்கே . ஆர்க்காட்டிலும் கொடுத்திருக்கிறார்கள். இரண்டிலும் திண்டாடுகிறார்கள்! சண்டை செய்யப் பணம் கிடையாது. தாய் நாட்டைக் (இங்கிலாந்து) கேட்டால் உதைப்பார்கள்."

"பிரெஞ்சுக்காரர்கள் எப்படி?"

"அவர்கள் இங்கிலீஷ்காரர்களை விட மோசம்! இந்த நாட்டின் மண் மீது ஆசை கொண்டு, கிடைக்கும் இடத்தில் எல்லாம் கைவைக்கிறான். அவனுக்கும் பணம் கிடையாது."



"அப்போது எல்லோருமே தவிக்கிறார்கள், சொல்லுங்கள்!"

"ஆமாம், அதனால்தான் சொன்னேன்! திருப்பதிப் பொருளுக்கு இப்போது பெரும் மகத்துவம். இது கிடைக்கிற வகையில் வெற்றி சரிந்து விடும்."

"ஓ! அதனால் தான் இந்தப் போட்டி!"

"ஆமாம்!"

"இப்போது பிரெஞ்சுக்காரருக்குப் பொருள் கொண்டு போகிறோமே! அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

வேன்ஸான் சிறிது கண்ணை மூடினார்.

"உடன்படிக்கைக் குழு விவாதித்த போது நானும் உடன் இருந்தவன்தான். ஆனால் இது எனக்குப் பிடிக்கவில்லை!"

"பிடிக்கவில்லையா! நீங்கள் ஒரு பிரெஞ்சுக்காரர் ஆயிற்றே?"

"நான் இந்நாட்டவன் தான். ஆனால் நடைமுறையில் பிரெஞ்சுக்காரர் ஆனவன். பிரெஞ்சுக்காரியை மணந்திருக்கிறேன்."

"அப்போது ஏன் நீங்கள்...?" என்று சொல்லி நிறுத்தினான்.

"தம்பி! சற்று முன் இங்கே ஒரு சம்பவம் நடந்ததே!!

"ஆமாம். சண்டை நடந்தது."

"அதில் இங்கிலீஷ்காரன் பங்கு கொண்டான் பார்த்தாயா?"

"ஆமாம்! அவர்கள் இல்லாவிட்டால் நாங்கள் அதோ கதிதான்."

"இங்கிலீஷ்காரன் சண்டை போட்டான். மராட்டியரை விரட்டினான். போகும் போது என்ன சொன்னான் பார்த்தாயா? இந்த நாட்டில் இப்படி கொள்ளை களவு மலிந்து விட்டதே' என்றான்! நினைவு இருக்கிறதா?"

"ஆமாம் துரை!"

"அவன் ஏன் அப்படிச் சொன்னான் தெரியுமா! அவன் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பவன்!"

"அப்படியா?"

"ஆமாம்! ஒழுங்கு முறையைத் தவறுவதற்குப் பயப்படுபவன். இங்கே அவன் தவறினால், சமயத்தில் அந்தச் செய்தி அவனது தலை நகரம் லண்டன் வரை போய்விடும்."

"என்ன பெயர் சொன்னீர்கள்?"

"லண்டன்! பிரெஞ்சுக்காரர் அதை 'லாந்த்ர' என்பார்கள்"

"சரி, அங்கே செய்தி போனால் இவனைக் கண்டிப்பார்களா?"

"ஆமாம்! பார்லெமான் (பார்லிமெண்ட்) இருக்கிறது. ஜனங்களின் பிரதிநிதிகள் அங்கே இருப்பார்கள். அவர்கள் இந்த வெள்ளைக்காரனைப் பார்த்துக் கேட்பார்கள். 'நீ இப்படி இந்தியா போன வேளையில், ஒரு இந்திய கோஷ்டியை கொள்ளை அடிக்க முயன்ற மராட்டியர்களை விரட்டிவிட்டு, பிறகு நீயே கொள்ளை அடித்தாயா?' என்று."

வர்மனின் விழிகள் "பளீர்" என்று விரிந்தன.

"துரை! என்ன சொல்கிறீர்கள். ஜனங்களின் பிரதிநிதிகள் கூட இந்த வெள்ளைக்காரனைக் கண்டிப்பார்களா?"

"கண்டிப்பது மட்டுமில்லை. சிறையில் கூடத் தள்ளுவார்கள்!"

"ராஜா இருக்காரா இல்லையா! அவர் ஒன்றும் சொல்ல மாட்டாரா?"

சிரித்தார் வேன்ஸான்.

"தம்பி! பரம்பரை அறுந்து போகாத ராஜா அங்கே இருக்கிறார். ஆனால் விஷயம் தெரியுமா? அவர் நினைத்தால் ஒருவரைத் தூக்கில் போட முடியாது"

அதிர்ச்சி அடைந்தான் வர்மன். குதிரையை இழுத்து நிறுத்தினான். "என்ன சொல்கிறீர்கள் துரை! அவர்கள் ராஜா நினைத்தால் ஒருவரைச் சிரச்சேதம் செய்ய முடியாது?"

"முடியாது"

"நிச்சயமா?"

"நிச்சயமா! சிறையில் கூடப் போட முடியாது"

வர்மன் பிரமித்து நின்றான். அவனால் நினைத்து பார்க்கக் கூடமுடியவில்லை.



ஒரு ராஜாவால் ஒருத்தனைத் தூக்கில் போட முடியாது. சிரச்சேதம் பண்ண முடியாது. சிறையில் போட முடியாது.

நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே!

இந்தத் தண்டனைகளை ஒரு ராஜா கொடுக்க முடியும் என்பதால்தானே ஜனங்கள் அவரிடம் ரொம்பப் பயப்படுகிறார்கள்.

விசாரணை கூடச் செய்ய வேண்டாமே. அவர் சொன்னால் சொன்னபடி தானே.

ராஜாவுக்கு இந்த அதிகாரம் இல்லாத நாடு ஒன்று உலகில் இருக்கிறது. ஆச்சரியமாக இருக்கிறதே!

வர்மன் உடல் முழுதும் மயிர்க் கூச்சம் ஓடியது. முகத்தில் ஒரு மகிழ்ச்சி கட்டு அவிழ்ந்து வந்தது.

"ஐயா, என்னால் நம்ப முடியவில்லையே!" என்றான் பரவசமாக.

"நம்பு! அதிகாரம் இல்லாத ராஜா இருக்கிறார். பார்லெமான் மட்டும் அதிகாரம் செலுத்துகிறது."

"அதாவது ஜனங்களின் பிரதிநிதிகள்"

"ஆமாம்! அவர்கள் தான் நிர்வாகத்தை எல்லாம் கண்காணிக்கிறார்கள். இங்கே ஒரு வெள்ளைத் தளபதி ஏதாவது முறைகேடாக நடந்தால், அந்தச் செய்தி லண்டன் போகுமானால் நிச்சயம் பார்லெமான் அது பற்றி பேசி விவாதித்து அவனுக்குத் தண்டனை அளிக்கக் கூடும். ஜனங்களை ஜனங்கள் வழிப்பறி செய்தோ, ஏமாற்றியோ, வஞ்சம் செய்தோ சாப்பிட அவர்கள் விட மாட்டார்கள். சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பவர்கள் அவர்கள். அந்த இங்கிலீஷ்காரன் என்ன சொல்லிவிட்டுப் போனான். பார்த்தாயா? "நாட்டில் கொள்ளை களவு மலிந்துவிட்டது! கேள்வி கேட்பார் இல்லையே!" என்று..."

வர்மன் இன்னும் பரவசத்திலேயே இருந்தான். அரசு அதிகாரம் யாவும் ஜனப் பிரதிநிதிகளிடம் வந்த ஒரு நாடு உலகத்தில் இருக்கும் என்று அவனால் நம்பவே முடியவில்லை. அது மட்டுமல்ல. அதைப் போல் ஒரு அரசியல் நடைமுறையை கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. நாடு என்றால், ராஜா, மந்திரி, படைகள்

என்பதைத் தவிர வேறு எதையும் நினைத்துப் பார்த்ததே இல்லை. மக்கள் பிரதிநிதிகளே அதிகாரம் வைத்து இருந்தார்கள் என்பது பெரும் அதிசயமாக இருந்தது.

அந்த நினைப்பு திடீரென்று அவன் கையிலேயே ராஜாங்கப் பொறுப்பு வந்து விட்டது போல் பெருமிதம் கொள்ளச் செய்தது.

"ஐயா!" என்றான் இடைமறித்து. "இந்தக் கிளைவ் துரை பற்றி எல்லோரும் புகழ்கிறார்களே! இவர் நினைத்தால் கூட எதுவும் செய்ய முடியாதா?"

"சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் செய்யலாம். திடீரென்று நினைத்து நாலைந்து இந்தியரைத் தூக்கில் ஏற்றி விட முடியாது. அப்படி ஏற்றினால் உங்கள் நாட்டு அரசர்கள் வேண்டுமானால் கேட்கத் துப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால் நிச்சயம் அவர்கள் பார்லெமான் அதைக் கண்டித்துக் கேட்கும்."

"கேட்குமா?"

"நிச்சயம் கேட்கும்."

வர்மனுக்கு நிலை கொள்ளவில்லை. சொந்த நினைவில் கூட இதுவரை ஏதோ விலங்கு இருந்தது. அது இப்போது பட்டென்று தெறித்து ஓடியது போல் இருந்தது.

மனம் எல்லையில்லாமல் எங்கேயோ மிதப்பது போல் இருந்தது. அந்தக் கணத்தில் பூமியில் விழுந்து புரள வேண்டும் என்று நினைத்தான். நாட்டின் நடப்பு முறைகளை நேரில் பார்த்த அவனுக்கு அது எங்கேயோ சரியில்லை, குறையோடு இருக்கிறது என்று நினைத்திருக்கிறான். அது சீர் பெற வேண்டும் என்று நினைத்திருக்கிறானே தவிர, அது எப்படி சீர் பெறும் என்ற நினைப்பே இல்லை. இதனால் ராஜாங்கம், ராஜரீகம் என்பதெல்லாம் மனத்தில் அழுத்தும் ஏதோ தவிர்க்க முடியாத சுமைகளாகத் தோன்றி வந்திருக்கின்றன.

இப்போது அவன் நினைவுப்படி சீர் பெற்ற ஒரு நாடு இருக்கிறது என்று தெரிந்தும், இது நாள் வரை ஊமை அழுத்தமாக அழுத்தி வந்த அந்தச் சுமை படீரென்று விலகிப் போய் விட்டதை உணர்ந்தான்.



"துரை! துரை!" என்று வேன்ஸானின் கைகளைப் போய்ப் பற்றினான்.

"துரை! துரை! இது நாள் வரை இது பற்றிச் சொல்லவில்லையே! எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!" என்று அரற்றினான் அவன்.

சிரித்தார் வேன்ஸான்.

"தம்பி! இங்கிலீஷ்காரர்கள் அரசாளும் முறை சிறிது தெரிய வேண்டும் என்றாலும் சென்னைப்பட்டணம் போய்ப் பார்க்க வேண்டும். நீதி எப்படி வழங்குகிறார்கள், நேர்மையை எப்படிக் கடைப்பிடிக்கிறார்கள், என்று!"

சட்டென்று திரும்பிய வர்மன் கேட்டான்.

"ஐயா! இந்த பிரெஞ்சுக்காரர்கள் எப்படி?"

"ஹூம்... இன்னும் அவர்களுக்கு முழுமையாக பிரதிநிதி ஆட்சி வரவில்லை. தான் தோன்றித்தனம் நிறைய இருக்கிறது. அவர்கள் அரசரிடம் இன்னும் அதிகாரம் நிறைய இருக்கிறது."

"அப்போது இங்கிலீஷ்காரர்கள்தான் மேலானவர்களா?"

"நிச்சயமாக அவர்களது அரசாங்க முறையைத்தான் ஐரோப்பிய தேசம் பூராவும் பின்பற்ற விரும்புகிறது."

"அப்படியானால்" என்றான் வர்மன். "இங்கே ஏன் நம் தேசத்தில் புகுந்து இங்கிலீஷ்காரர்கள் அனாவசிய தொல்லை தருகி, ர்கள்."

"அவர்கள் தரவில்லை. வெறும் வியாபாரம் செய்ய வந்தவர்கள் அவர்கள். அதை விட்டு வேறு காரியத்தில் இறங்க அவர்களுக்கு விருப்பமில்லைதான். ஆனால் நாம் தான் அவர்களை அனாவசியமாக நமது ராஜாங்க காரியத்துள் இழுக்கிறோம். அவர்களும் நிறைய எச்சரிக்கையோடு தான் நம் இழுதலுக்கு இழுபடுகிறார்கள். தம்பி, உன் கண் முன்னாலேயே பார்த்தாயே, கொள்ளையடிக்க வந்த ஒரு கோஷ்டியை விரட்டி விட்டு, 'நாட்டில் கொள்ளை மலிந்து விட்டது' என்று நமக்காக இரக்கப்பட்டு விட்டுப் போகிறான் பார்த்தாயா! எங்கும் ஒழுங்குமுறை இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன்

அவன். போகும் இடமெல்லால் தனது சட்ட திட்டங்களையும் எடுத்துப் போகிறவன் அவன்."

வாயைப் பிளந்து கொண்டு வர்மன் கேட்டான். ஒரு பெரிய அமைதி அவன் மனத்தில் நிறைந்தது.

மௌனமாகவே இருந்தான். குதிரை அவன் மனோநிலை தெரிந்தது போல் மெள்ளமாக நடந்து சென்றது. வேன்ஸான் குறுநகையோடு தன் குதிரையையும் நடத்தினார்.

பின்னால் சலசலப்பு ஏற்பட இருவரும் திரும்பினார்கள்.

## 38. சிந்து விம்மினாள்!

ஆர்க்காட்டு முற்றுகை நாற்தினத்தை எட்டியிருந்தது. அன்று. ராபர்ட் கிளைவ் மதில் மேலிருந்து கீழே நோக்கினார். வெளிப்புறத்தில் இருந்த ராஜா கான் படையினர் இடையே பெரிய இயக்கம் இருந்தது. கிளைவ் தமது டெலஸ்கோப்பைப் பொருத்திப் பார்த்தார்.நூற்றுக் கணக்கில் ஏணிகளும், கயிற்றுப் பொச்சங்களும்,கடப்பாறை மண்வெட்டிகளும் இதர தளவாடங்களும் வந்து கொண்டிருந்தன. ஜன சமுத்திரமாகப் படை திறந்த வெளியில் எள்ளுச் சிதறியது போல் கிடந்தார்கள்.

பரிசத்தின் மேல் இருந்த இந்திய ஹவில்தார் கிளைவ்வை கலக்கத்தோடு பார்த்தான்.

அவன் கண்களில் தாபம் இருப்பதைப் பார்த்து, கிளைவ் அவனை நோக்கிப் போனான்.

ஸல்யூட் அடித்து விறைப்பாக நிற்க முயன்றார் ஹவில்தார்.

"என்ன விஷயம் பயப்படுகிறாயா?" என்றான் கிளைவ் புன்னகையோடு.



"துரை!" என்றார் ஹவில்தார். "தங்கள் சமூகத்திற்கு வந்த பிறகு பயம் என்ற வார்த்தை மறந்து போயிற்று. எனக்கு ஏற்பட்டிருப்பது அதைவிடக் கொடியது." என்றார்.

"என்ன அது?"

"பசி!"

சொன்னவன் அரை நொடி கூட நிற்கவில்லை. விர்ரென்று பாய்ந்து கோட்டைக்கு வெளியே குதித்தான்.

கிளைவ் நெஞ்சம் ஒரு கணம் பதறியது. கோட்டைக் கீழே தரையில் அவன் சின்னா பின்னம் ஆகி இருப்பான் என்று தெரியும். இருந்தும் கோபம் வந்தது. தன் படையின் கட்டுப்பாட்டைச் சீர்குலைத்து விட்டானே! கிளைவ் உட்பட அவர் படையினர் அரைப் பட்டினி முக்கால் பட்டினிகளில் இருந்தார்கள். அதை வெளி காட்டிக் கொள்ளாமல், முகத்தில் அரைப் புன்னகையாவது காட்டி வந்தார்கள். எனினும் இது எத்தனை நாள் கொண்டு செல்லும் என்று கவலைப்பட்டிருந்தார். குறிப்பாக அவருக்கு இந்தியச் சிப்பாய்களிடம் பயம். அவர்கள் இதுவரை ஒழுங்கை அறியாதவர்கள். மேல் நாட்டு ஒழுங்கை இப்போது தான் அனுசரிக்க வந்திருக்கிறார்கள். அதன் கஷ்டங்கள் என்ன என்று அவருக்குத் தெரியும். எனவே தான் கவலைக் கொண்டிருந்தார். அதற்கு இணங்க, முதல் தற்கொலை நடந்து விட்டது. இதைப் பின்பற்றி மற்றவர்களும் தற்கொலை செய்தால்...

கீழே எதிரி சைனியத்தார் அந்தப் பட்டினிச் சாவைக் கண்டு கூக்குரல் இடுவது கேட்டது. கிளைவ் உள்ளே இறங்கி உடனே தமது தளபதிமார்களை வரவழைத்தான். இந்தியர்களின் ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் அவர்கள் மேலும் தியாகம் செய்ய வேண்டும். முக்கால் பட்டினியை ஏற்றுக் கொள்ள வேண்டும். கால் பங்கீட்டைத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றான்.

தளபதிகள், உபதளபதிகள் எல்லோரும் கப்சிப் என்று இருந்தார்கள்.

வில்லியம்ஸன் என்பவன் மட்டும் எழுந்து, "மிஸ்டர் கிளைவ்! இதன் முடிவு என்ன?" என்றான்.

"அநேகமாக இறக்க நேரிடலாம். ஆங்கிலேய இனத்திற்காக, நமது தேசத்திற்காக இதைச் செய்யலாம்."

திரும்பவும் இறுக்கமான அமைதி.

நீல்சன் என்பவன் எழுந்தான். "அதை ஏற்கெனவே உணர்ந்திருக்கிறோம். அதற்காக ஏதும் செய்யாமல் இருக்கப் போகிறோமா?" என்றான்.

"நான் தயார்! வெளியில் போய்ச் சண்டை போட்டு விடுதலை அடைய! நீங்கள் தயாரா?" கிளைவ் திரும்பக் கேட்டான்.

திரும்பவும் நிசப்தம்!

கிளைவ் தொடர்ந்தான். "அதே நேரம் நான் பொறுப்பற்றவனாகவும் இருக்க விரும்பவில்லை. அதையும் சொல்லி விடுகிறேன்."

"நல்லது. நாம் வெளியே போய் சண்டையிட்டு விடுதலை பெறுவது கடினம். எல்லோரும் பட்டினியாக இருக்கிறோம். நமது வலு போதாது" என்றான் ஒரு உப தளபதி.

"ஒரு மாதம் ஓடி இரண்டாவது மாதம் நடக்கிறதே! இதுவரை உதவி வரவில்லையே!" என்றான் இன்னொருவன்.

"எல்லோருக்கும் செய்தி அனுப்பி விட்டேன். உங்களுக்குத் தெரியும்" என்றான் கிளைவ்.

"நமது சகாக்கள் நம்மைக் கைவிட்டு விட்டார்களா?" என்றான் ஒரு தலைவன்.

"நிச்சயம் செய்ய மாட்டார்கள். ஆனால் எது செய்வதற்கும் இயலாதவர்களாக் இருப்பார்கள்" என்றான் கிளைவ்.

வெகுண்டு எழுந்தான் ஒருவன். "ஏன் அப்படி இருக்கிறார்கள்! நாம் பட்டினியால் இறப்பதை அவர்கள் அறியவில்லையா?"

"அறிந்திருப்பார்கள்!"

"அறிந்து சும்மா இருக்கிறார்களா துரோகிகள்"

கிளைவ் இடைமறித்தான். "பதற்றப்படாதே! அவர்கள் தான் நமக்குப் பொருளுக்கு வழி செய்தார்களே!"



"என்ன பொருள்?"

"திருப்பதிப் பணம்!"

"அதுதான் வரவில்லையே!"

"அதுதான் கஷ்டம்! அந்தப் பணம் வர வேண்டும் என்று ஒரு பணயத்தைப் பறித்து வந்தோம். அதுவும் நம் கைவசம் கிடைக்கவில்லை! தப்பித்து பிரெஞ்சுக்காரர் கைக்குப் போய்விட்டது."

"பணமும் வராது. படையும் வராது! என்ன செய்யப் போகிறோம்?"

கிளைவ் உக்கிரமாக எழுந்தான்.

"இந்த நிலையில் இந்தக் கோட்டைக்குள்இருந்து இதைப் பாதுகாக்கிறோமே, இது பெரிய சாகசம் இல்லையா? வீரம் இல்லையா? சகிப்பு இல்லையா? பெரிய ராஜ தந்திரம் இல்லையா?" கேள்விகளை மெள்ள மெள்ள உச்சமாக்கி நரம்பு தெறிக்கும்படி கடைசிக் கேள்வியைக் கேட்டான் கிளைவ்.

இரண்டு பேர் கையைத் தட்டினார்கள். தயங்கி இருந்தவர்கள் உடனே சேர, ஒரு பெரிய கரகோஷம் அங்கே எழுந்தது.

"என் தோழர்களே! இங்கே தியாகத்தோடு உள்ளே விடாப்பிடியாக அமர்ந்திருக்கிறோமே, அதுவே பெரிய சாகசம்! நாம் இங்கே ஒவ்வொரு கணமும் பட்டினி கிடக்கும் பிடிவாதம் இருக்கிறதே. இது தான் இங்கிலீஷ்காரர்களின் தளராத நெஞ்சத்துக்கு ஒரு சிறந்த உதாரணம்! சகோதரர்களே! நீங்கள் வேண்டுமானாலும் பாருங்கள்! இங்கே சில நூறு பேர் இருந்து கொண்டு செய்யும் இந்த விடாப்பிடி செயல், நமது நாட்டின் பெருமையையும், புகழையும் உயர்த்தப் போகிறது! இது உறுதி!"

கரகோஷம் வலுத்தது!

அன்று மாலையில் மீண்டும் ராஜாசாகிப்பிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. 'உடனே கிளைவ் பணிய வேண்டும். இல்லாவிடில் கோட்டையை உடைத்து உள்ளே இருக்கும் அத்தனை பேரையும் கொன்று விடுவோம்."

"தூ! நாங்கள் சாகத் தயார்! போய்ச் சொல்லுங்கள்" என்று வந்த தூதுவரிடம் கோபமாகச் சொல்லி அனுப்பித்தான் கிளைவ்.

* * *

வர்மன் அழைத்துப் போன 'மோகினித் திருக்கோல' யாத்திரிகர்களுக்கு மீண்டும் ஒரு சோதனை வந்தது. திரும்பவும் மராட்டிய சுயேச்சைகள் பாதையில் பதுங்கி இருப்பதாகச் செய்தி வந்தது.

வர்மனும், இதரர்களும் யோசித்தார்கள். வேன்ஸானும் கலந்து கொண்டார். அன்றைய இரவுப் பொழுதை அங்கேயே கழிக்கத் திட்டமிட்டார்கள்.

ஒரு சத்திரத்தை அடுத்து தண்டு இறங்கினார்கள்.

பெண்களும், பல்லக்குகளும், சத்திரத்துத் தோட்டத்துக்குள் புகல் கொண்டன.

வர்மன் வேன்ஸானை விட்டுப் போகவில்லை. அவரிடம் இங்கிலாந்து தேசத்து ஆளும் முறையைப் பற்றி மேலும் மேலும் கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்த முறை மீது அவனுக்கு அடங்காத ஆர்வம் ஏற்பட்டது. வேன்ஸான் அந்த முறையைப் பற்றி விவரிக்க, விவரிக்க, இதுவரை கண்டறியாத பொக்கிஷங்கள் அவன் கண்களில் படுவது போல் இருந்தது.

அவன், கேட்க, கேட்க, வேன்ஸான் வர்ணித்தவாறு போனார்.

இங்கிலாந்தில் நடப்பது உலகத்துக்கே ஒரு பரிசோதனை என்றார். பழங்கால அரசு மரபை ஒரு அலங்காரத்துக்கு வைத்துள்ளார்கள். அரசர் பேரில் பார்லெமான் தான் பெரும்பான்மை அதிகாரத்தைச் செலுத்துகிறது. அரசரிடம் இப்போது சில அதிகாரங்கள்தான் இருக்கின்றன. அவையும் சீக்கிரம் அந்த ஜனப் பிரதிநிதி கும்பலுக்கு வந்து விடும் என்று வேன்ஸான் உறுதி கூறினார்.

மறுநாள் காலை மராத்தியர் திடீரென்று வந்து தாக்கினார்கள். வர்மன் பக்கத்தில் ஐந்து பேர் இறந்தார்கள்.



எழுந்து முறையான சண்டைக்கு அவர்களை அழைக்குமுன் மராத்தியர் ஓடிவிட்டார்கள். நல்லவேளை, பொருள் ஏதும் பறிபோகவில்லை. இறந்தவர்கள் ஊழியம் வந்த வேலைக்காரர்கள்.

ஆனால் நடந்த அந்தச் சில நிமிட சண்டையில் வர்மன் கலந்ததில் அவனுக்கு உடம்பில் பல காயங்கள் ஏற்பட்டன. சத்திரத்து அறையில் படுத்து விட்டான்.

மீண்டும் தங்கள் குழுவை வலுப்படுத்திய பிறகே, புறப்பட வேண்டும் என்று திட்டமிட்டார்கள். சம்பளத்திற்கு வேலை செய்யும் வீரர்களைத் தேடி, குழுவில் பெரியவர் பலர் சுற்று வட்டாரத்திற்குள் சென்றார்கள்.

பாயில் கிடக்கும் வர்மனை அன்று மாலை நேரத்தில் சிந்து அணுகினாள்.

வர்மன் அவளைப் பார்த்த போது ஆச்சரியப்பட்டான்.

"நீங்கள் அரசகுமாரி என்று எல்லோருக்கும் நம்பிக்கை கொடுத்திருக்கிறோம். இங்கே வரலாமா?" என்றான் அவன்.

சிந்து உடனே பேசவில்லை. தனது கரு விழிகளை விரித்து ஆழ்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் முகத்தில் சோகம் ஓடியிருந்தது.

"வீரரே!" என்றாள் அவள். குரலில் தடுமாற்றம் ஏற்பட்டது.

"காலையிலிருந்து பார்க்கிறேன். தாங்கள் தண்ணீர் கூட அருந்தவில்லையே?" என்றாள்.

கையில் இருந்த பாத்திரத்தை அவனிடம் நீட்டினாள். அதில் சூடாகப் பால் நுரைத்து இருந்தது.

அவன் அதைப் பருகினான்.

மீண்டும் அவனைப் பார்த்துச் சோகமாக ஒரு மூச்சு விட்டு, "வீரரே! உங்களுக்கு நான் அநீதி இழைத்து விட்டேன் இல்லையா?" என்றாள்.

"ஏன், என்ன அநீதி?" என்றான் அவன்.

"நீங்கள் ஏதோ காரியத்திற்கு வந்தீர்கள்! உங்களை நான் அனாவசியமாக எங்கள் ராஜரீகங்களில் இழுத்து, வீணான தொல்லைகளுக்கு ஆளாக்கி விட்டோம்!" என்றாள் அவள்.

"அதற்காக வருந்துகிறேன்! வேதனைப்படுகிறேன். உங்கள் தாயிடமிருந்து உங்களை நெடுநாள் பிரித்ததற்கு மிகவும் சோகப்படுகிறேன்" என்று அவள் தொடர்ந்து கூற,

அவள் கண்களிலிருந்து கண்ணீர் கலகல என்று பெயர்ந்து வந்தது.

அதைக் கண்ட வர்மன் திடுக்கிட்டு, "ஏன் இளவரசி! ஏன் இப்படி கண்ணீர் விடுகிறீர்கள்?" என்று பதறிப் போய்க் கேட்டான்.

சிந்து விம்மிக் கொண்டிருந்தாள். முகத்தை தலைப்பால் மூடி, விசிக்க ஆரம்பித்தாள்.

வர்மன் செய்வதறியாது திகைத்தான்.

## 39. ~~திருமாமங்கைத் திருவிழா~~

வர்மனின் பக்கத்தில் சிந்து அமர்ந்து பணிவிடை செய்ய, வர்மன் அவளை இரக்கமாகப் பார்த்தான். எங்கேயோ இருக்க வேண்டியவள். மறைந்து போன நாயக்கர் வமிசத்து மீனாட்சி தேவியின் உறவினள்! இளவரசியாக வாழ வேண்டியவள், மதுரை சிங்காதனம் திரும்பி நாயக்கருக்கேப் போக வேண்டும் என்ற எண்ணத்தில் பாடுபடுகிறாள்.

இவளுக்குத் துணையாக 56 பாளைய அதிபதிகளும் கங்கணம் கட்டி உதவி புரிய வந்திருக்கிறார்கள். மதுரையில் நாயக்கர் வந்தால் தங்களுக்கும் மேல் ஆதிக்கம் காட்டாத அரசு முறை கிடைக்கும் என்று நம்பினார்கள்.

நாயக்கர்களும், பாளையக்காரர்களும் இதற்காக உடன்படிக்கைக் குழு ஒன்று ஏற்படுத்தி இருந்தார்கள்.



அதில் சிந்து சரியான பொறுப்பு வகித்து காரியங்களை நிர்வகித்து வந்தாள்.

அப்படிப்பட்ட சிந்து,

வர்மனின் வாழ்க்கையை எங்கேயோ இழுத்து விட்டதாகப் புலம்பின போது, வர்மன், அதை மறுத்தான்.

உண்மையில் அப்படி அவள் இழுத்து விட்டதனால் தான் அவன் உலகத்தையே அறிகிறான். இதற்குமுன் அவனுக்கு எதுவும் தெரியாது. ராஜ்யம் என்றால் என்ன? அவற்றை யார் யார் நடத்துகிறார்கள்? வெவ்வேறு ராஜ்யங்கள் என்ன, அவை எங்கெங்கே இருக்கின்றன, இவை எல்லாம் தெரிய வந்தன. அது மட்டுமல்ல! கடல் கடந்த ராஜ்யங்கள் கூட அவன் கவனத்திற்கு வந்தன.

எல்லாவற்றுக்கும் தலையானது அவனுக்கு வேன்ஸான் உறவு கிடைத்ததுதான்! 'அடேயப்பா! அது ஒன்றைத்தான் அவன் பொக்கிஷமாகக் கருதினான். அதைக் கேட்ட மாத்திரத்தில் இந்த உலகத்தில் உள்ளோர் துயரம் எல்லாமே போனதுபோல் தோன்றியது.

வர்மன் அத்தனையையும் சிந்துவிடம் கூறினான். அவனை அவள் திருப்பியதற்கு மிகவும் கடமைப்பட்டிருப்பதாகவும் கூறினான்.

அவள் மூலமாகத் தான் உலகில் அதிகாரம் இல்லாத அரசரைப் பற்றி அறிந்ததையும் கூறி இங்கிலீஷ்கார ராஜ்யத்தில் அரசாங்கம் எந்த முறையில் நடக்கிறது என்பதையும் கூறினான்.

அதுவரை 'உம்' கொட்டிக் கொண்டு வந்த சிந்து அந்த இங்கிலீஷ்காரன் அரசாங்க முறையைப் பற்றிக் கேள்விப் பட்டதும் ஆச்சரியமாகக் கண்களை உயர்த்தினாள்.

விளக்கம் கேட்டுப் பல கேள்விகள் கேட்டாள்.

தனக்குத் தெரிந்தவரை பதில் சொன்னான் வர்மன்.

எல்லாம் கேட்ட பிறகு அவள் நீண்ட நேரம் மௌனமாகிவிட்டாள். மனத்துள் சிந்தித்துக் குமைவது தெரிந்தது.

கடைசியில் ஆச்சரியமாய் ஒரு வார்த்தை சொன்னாள்.

"என்ன இது! இங்கிலீஷ்காரனை மிலேச்சன் என்று சொல்கிறோமே! அவனிடம் ஓர் உன்னத அரசாங்க முறையிருக்கிறதே! ஜனங்களே அரசாங்கத்தை நடத்துகிறார்களே! கேட்பதற்கே மனம் ஏதோ விடுதலை அடைந்த மாதிரி இருக்கிறதே! பூமியில் இருக்கும் ஜனங்கள் எல்லாரும் சந்தோஷமாக இருக்கக் காலம் வரும் போல இருக்கிறதே!" என்றாள் தாபத்துடன்.

அந்த 'பார்லெமாண்' பற்றி வர்மன் சொல்ல, அவளும் அதைப் பற்றியே வெகு நேரம் பேசினாள்.

இத்தனை நாள் குருடாய்க் கிடந்தவர்களுக்குத் திடீர் என்று பார்வை கிடைத்தது போல் இருந்தது.

'என்ன ஆச்சரியம்!' என்று திரும்பத் திரும்பக் கூறினாள் சிந்து. "ராஜா தம் இஷ்டப்படி வரி போட முடியாது. தண்டனை கொடுக்க முடியாது. சிரச்சேதம் பண்ண முடியாது. சண்டைக்குப் போக முடியாது. ஆகா! அந்த நாட்டு மக்கள் என்ன சுபிட்சமாக இருப்பார்கள்!" என்றாள்.

"ஏன்? இங்கே வந்துள்ள இங்கிலீஷ்காரனைப் பார்த்தே அது தோன்றவில்லையா? என்ன புஷ்டியாக இருக்கிறார்கள்! எத்தனை நூதனப் பொருள்களை வைத்திருக்கிறார்கள்? என்ன திறமையான படையை வைத்திருக்கிறார்கள்! கப்பல்களை ஓட்டுகிறார்கள்!"

சொல்லச் சொல்ல அவளுக்கே சிலிர்ப்பு ஏற்பட்டது.

"ஏன் வீரரே! நமது நாட்டுக்கும் அது போல் ஒரு ராஜாங்க முறை வருமா?" என்றாள் பரபரப்புடன்.

"ஏன்! இங்கிலீஷ்காரனோடு பழகினால் வருகிறது!"

"வருமா?"

"வரும்."

"எனக்கு இப்போதே அவர்கள் நாட்டைப் போய்ப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது."

சிரித்தான் வர்மன்.

"எனக்கும் தோன்றுகிறது. அவசரத்துக்குப் பார்க்க வேண்டுமானால் அவர்களது ஸேன் ஜார்ஜ் கோட்டைக்குள் (சென்னை) போய்ப் பார்! எல்லாமே ஒழுங்கு முறையில் நடக்கும் என்று வேன்ஸான் சொன்னார். சாலையில் கூட



போகிற குதிரைகளும் வாகனங்களும் இடது பக்கமாகப் போகுமாம். வருகிற குதிரைகள் வாகனங்கள் வலது பக்கமாக வருமாம். என்ன அழகாக இருக்கும் அது!

"இங்கேயே இப்படி இருந்தால் அவர்கள் நாட்டில் எப்படி இருக்கும். நிச்சயம் போய் பார்க்க வேண்டும்."

"போகலாம். நீயும் நானும் நிச்சிந்தையாய் கப்பல் ஏறி விடுவோம். நமது தேசத்து சண்டை பூசல் எல்லாவற்றையும் மறந்து விடுவோம்."

மெய்மறந்து அவர்கள் பேசினார்கள்.

உண்மையில் இப்போது சிந்துவுக்கு இந்த நாட்டு ராஜாங்க முறைகளும் அவைகளின் விவகாரங்களும் வெறுத்திருந்தன.

எவ்வளவு உழைத்தாலும் பாடுபட்டாலும் இவை மாறுமா, ஜனங்கள் பயன் அடைவார்களா என்று சந்தேகமே இருந்து வந்தது.

அது இப்போது சற்று வெளிப்படையாக வந்தது.

"வீரரே! வெறும் பகல் கனவை நம்பி உழைக்கிறோமோ" என்று ஆதங்கத்தோடு கேட்டாள் சிந்து.

அவள் மனம் அதிகம் நொந்துவிடாதபடி சமாதானம் செய்தான் வர்மன்.

* * *

அடுத்த நாள் மீண்டும் புறப்பட்டார்கள். வழியில் பல தடங்கல்களையும், ஆபத்துகளையும் மீறிக் கடிவம் ஓரத்தில் குடி கொண்டிருந்த அந்தத் திருமாமங்கை ஸ்தலத்தை அடைய எட்டு நாள் ஆகிவிட்டது.

திருமாமங்கை இன்னும் பல காதம் இருக்கும் போது, அங்குள்ள வன நெருக்கத்தில் தண்டு இறங்கி, உளவுக்காரர்களை மட்டும் அனுப்பி உளவு பார்த்து வரச் சொன்னார்கள்.

ஏற்கெனவே தம் இச்சையாகத் திரியும் மராத்தியக் கும்பலின் தொல்லை அதிகமாக இருந்தது.

இதனால் திருமாமங்கைக்கு வேண்டிய முழுக் கூட்டமும் இன்னும் வந்தபாடில்லை.

சமீப காலங்களில் திருவகீந்திரபுர விழாவிலும், திருவண்ணாமலை தீப விழாவிலும் மராட்டியர் திடீரென்று பக்தர்கள் மீது பாய்ந்து அவர்கள் பொருளையெல்லாம் சூறையாடியதை யாரும் மறக்கவில்லை.

தவிர, கிராமங்களில் பாதுகாப்பு இல்லாமல் வாழ்வதை விட்டு ஜனங்கள் தேவி பட்டணத்திலும் (கடலூர் அருகே உள்ள இங்கிலீஷ்காரன் கோட்டை) பிரெஞ்சு புதுச்சேரியிலும் சரண் புகுந்தார்கள். கோட்டைக்குள் வாழ்வதையே பாதுகாப்பு என்று எண்ணினார்கள்.

மராட்டியர் தொல்லை ஒரு புறம் இருக்க, நாட்டில் நடக்கும் சிங்காதனச் சண்டையில் எங்கும் அமைதி இல்லாமல் கலவரப்பான்மைதான் இருந்து வந்தது.

ஜனங்கள் தம் தம் இடங்களை விட்டு வெளியே போக, அச்சப்பட்டார்கள்.

விழாக்களோ, பண்டிகைகளோ, குறைந்த கும்பல்களோடு நடந்தன.

இவ்வளவுச் சேதிகளைச் சேகரித்த உளவுக்காரர்களுக்கு, திருமாமங்கையில் கூடியிருந்த கூட்டம் ஆச்சரியமாக இருந்தது.

நல்ல கூட்டம் ஒன்று கூடியிருந்தது. அவர்களில் பெரும்பாலோர் பாளையக்காரர்கள் என்று உளவுக்காரர்கள் அனுமானித்தார்கள். எனவே கவலைப்பட வேண்டியதில்லை.

தவிர, அந்த விழாவுக்கே சிறப்பான அம்சம் போல் நிறைய ஆண்கள் மோகினி வேடம் தரித்து வந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்தால் தான் உளவுக்காரர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

சாதாரண பக்திமான் வேடத்தில் வந்திருந்த பாளையக்காரர்களை நிச்சயம் அவர்கள் முகவிலாசத்திலிருந்து யார் இன்னார் என்று கண்டுபிடிக்க முடிந்திருந்தது.

ஆனால் மோகினி வேஷம் போட்டு வந்த வரை யார் என்று ஊகிக்க முடியவில்லை. இந்த மோகினிகள்



நூற்றுக்கணக்கில் வந்திருப்பதைப் பார்த்ததிலிருந்து தான் உளவுக்காரர்களுக்குச் சந்தேகமே வந்திருந்தது.

இவர்கள் மராட்டியர்களாக இருப்பார்களோ!

இவ்வளவு விஷயங்களையும் வேவுகாரர்கள் சொல்லக் கேட்டதும் அந்த 'மோகினி திருக்கோல'க் குழுவினர் கலந்து ஆலோசித்தார்கள்.

அவர்கள் செய்த ஏற்பாட்டின் படி பிரெஞ்சுப் படை ஒன்றும் 'பக்தர்கள்' வேடத்தில் விழாவுக்கு வர வேண்டும். அவர்கள் செஞ்சுகாவை அழைத்து வர வேண்டும். திருமாமங்கையில் தங்களது பல்லக்குகளை மட்டும் மாற்றிக் கொண்டால் போதும். செஞ்சுகா இவர்கள் பக்கம் வந்து விடுவாள். திருப்பதிப் பொருளோ பிரெஞ்சுப் பக்கம் போய்விடும். நவாப், இங்கிலீஷ்காரர், மராட்டியர் ஆகிய மற்றவர்கள் கண்ணில் படாமல் பரிவர்த்தனை செய்வதற்குத்தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம்.

குறிப்பாக, வர்மனும், இதரப் பெரியவர்களும் "பிரெஞ்சுக்காரர் பல்லக்குக் கோஷ்டி வந்ததா இல்லையா?" என்று கேட்டார்கள்.

"இதுவரை பார்க்கவில்லை!" என்றார்கள் அவர்கள்.

"எல்லா இடமும் சுற்றிப் பார்த்து விட்டீர்களா?" என்றான் வர்மன்.

"பார்த்து விட்டோம். அவர்கள் வந்ததாகத் தெரியவில்லையே."

ஒரு வேளை அவர்களும் வேறு எங்கேயாவது தண்டு இறங்கி விட்டார்களோ!

பெரியவர்கள் சிறிது கலக்கமானார்கள்.

கடைசியில் வர்மன் எழுந்து தீர்மானமாகச் சொன்னான். "பெரியவர்களே, கவலைப்பட வேண்டாம். திருப்பதிப் பொருள் யார் கையிலே போக வேண்டுமோ அவர்கள் கையில் தான் போகும். நான் நினைத்தாலும் நீங்கள் நினைத்தாலும் ஒருவரிடம் போகப் போவதில்லை. பெருமாளே அதைப் பார்த்துக் கொள்வார். இன்று இரவு நானும் ஒரு முறை திருமாமங்கை போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறினான்.

இரவில் வர்மன் திருமாமங்கையை அணுகினான்.

அந்த நதி ஓரக் கிராமத்தில் எங்கும் தீவர்த்தி ஒலிகள் ஜொலித்தன.

எங்கும் பகவான் நாமம் பஜனையாகக் கேட்டது.

சில இடங்களில் ஆடிப் பாடியே பஜனை செய்தார்கள்.

"கிருஷ்ணா, ராமா, ஹரே முகுந்தா" என்று கோஷங்கள் மாறி மாறிச் செவியில் விழுந்து அவ்வனையே வெறி கொள்ளச் செய்தது.

கோபுரத்தைப் பார்த்தான். மெய் மறந்து கண் மூட, "வீரரே!" என்று குரல் கேட்டது.

பழகிய குரல்.

தூரத்திலிருந்து வருகிறதா?

திடுக்கிட்டு விழித்துப் பார்த்தான்.

அவன் கண் முன் செஞ்சுகாவின் தோற்றம் மின்னல் ஜொலிப்பு போல் தெரிந்தது.

தவித்து நின்றான் அவன்.

## 40. மராட்டியரிடம் சிக்கிய வர்மன்

திருமாமங்கை கோவில் திமுதிமு என்று நெரிந்து கொண்டிருந்தது. உள்ளே பக்த ஜனங்கள் வழிந்தார்கள். பிராகாரங்கள் முழுதும் தலைகளாகத் தெரிந்தன.

இதில் மோகினி நோன்பு எடுத்தவர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். பெண் நோன்புக்காரிகள் நீலத்தில் உடை தரித்து, நெற்றியில் மஞ்சளும் குங்குமமும் இட்டிருந்தார்கள். கையில் வெள்ளிச் செம்பில் பால் வைத்திருந்தார்கள்.



ஆண் நோன்புக்காரர்கள் நிறைய பேர் மோகினித் திருக்கோலம் பூண்டிருந்தார்கள். பலருக்கு அது தத்ரூபமாக இருந்தது. அருகில் போய்ப் பார்த்தால் தான் ஆண் என்று புலனாயிற்று.

வர்மன் செஞ்சுகாவைத் தேடி விட்டான்.

தூப்ளே மதாமின் ஆட்கள் எங்கு தங்கியிருக்கிறார்களெனத் தெரியவில்லை. மதாமின் இந்த நடவடிக்கையில் தூப்ளே பங்கு பெற்றிருக்கிறாரா, தெரியவில்லை.

கணவனுக்குத் தெரியாமல் மனைவி நிறைய விவகாரங்களில் ஈடுபட்டிருந்தாள். வியாபார அக்கறையும் உண்டு. ஏராளமாகச் சொத்தும் சேர்த்து விட்டாள் என்று கேள்வி.

ஊரைச் சுற்றி உள்ள தோப்பு வட்டாரங்களில் தேடிவிட்டுக் கோவிலுக்கு வந்தான் வர்மன்.

எங்கும் பெண்ணும், பெண் வாடையும் நிரம்பியிருந்தன.

படிக்கட்டுகள் ஏறியவுடன் அது ஒரு மாயையான உணர்ச்சி என்று சொல்ல வேண்டும். எங்கு பார்த்தாலும் செஞ்சுகாவாகத் தோன்றினாள்.

நெருக்கி அடித்து உள்ளே போகச் சாம்பிராணி, ஊதுபத்தி, பூ, சந்தனம், புனுகு, அத்தர் மணங்கள் காம்ப நெடியாக வந்தன. மூக்கில் ஒரு சுவர்க்க லோகம் ஏறிற்று.

கூட்டத்தை நெம்பிக் கொண்டு உள்ளே போக ஆரம்பித்தான். (நாராயணா, நாராயணா' என்ற ஒலங்கள் மெய்சிலிர்ப்பாக எழுந்தன. காற்றில் பக்தி துடித்தது.

உள்ளே போகப் போக ஒரு தெய்வீகம் போர்வையாக அவன் மீது படிந்தது.

மணி மாமண்டபத்தை அடைந்த போது முற்றிலும் அவன் மாறியிருந்தான்.

வேறு உலகத்திற்கு வந்திருப்பதாகத் தோன்றியது! போரும், பூசலும், ராஜரீகமும் இல்லாத புது உலகம். இதுதானே இயல்பான உலகம்! அவனுக்குச் சொந்தமான உலகம். இந்த உலகத்தில் சௌகரியமாக வாழத் தானே, அந்த மற்ற உலகில் சேவகம் செய்ய வேண்டி வந்தது.

மேடை வரைப் போனான்.

தோழிக் கின்ண வாகனத்தில் மங்கை மார்பன் பெருமாளை அசல் மோகினியாக வேஷம் இட்டிருந்தார்கள்.

பட்டுத் துகிலும், தலை டோபாவும் வளையும் தண்டையும், நெற்றிக் குங்குமமும் அணிவித்துத் தத்ரூபப் பெண்ணாக்கி இருந்தார்கள்.

மூக்கில் ஒரு தளுக்கு 'டால்' அடித்தது. விக்கிரகத்தின் உதட்டில் வசிகரப் புன்னகை நிரந்தரமாக உட்கார்ந்திருந்தது.

உடல் முழுதும் நவரத்ன அங்கியும் அணிகளும் தகத்தக என்று தீப்பிழம்புகள் போல் மின்னி, திருமாலின் அந்த மோகினி அவதாரம் மனோரம்யமாக இருந்தது.

மோகினியின் கையில் ஒரு தங்கக் குடம் புது மெருகில் மினுக்கியது.

வர்மன் போன நாழிகைக்குக் கற்பூர ஆரத்தி எடுக்க,

ஆகாய நட்சத்திரங்கள் அனைத்தும் ஓர் இடத்தில் குவிந்தாற்போல,

அத்தனை லட்ச தீபங்கள் சுடர்களாகத் தெறித்தன.

கூட்டம் அசையும் அலை இயக்கத்தில் வர்மன் பக்கத்திலிருந்து பெண்ணின் காலை மிதித்துவிட அந்தப் பெண் உடனே முகம் சுளித்து, 'தல்லு நீ' என்று சொல்ல, அந்தத் தமிழின் ஒலியும், வினோதமும் வர்மன் கவனத்தை இழுத்தன.

'இவள் மராட்டியளா!' என்று நினைத்தான். நினைக்கும்போதே அடுத்த எண்ணம் தொடர்பாக வந்தது. ஓ! மராட்டியனோ?

திடுக்கிட்டுப் பெண்கள் இருந்த திசையெல்லாம் பார்க்க, ஆங்காங்கே மராட்டியப் பெண் வேடதாரிகள் நிறைய இருந்தார்கள்.

அவன் தலையில் வீச் என்று ஒரு மின்னல் ஓடியது.

ஓகோ, திருவண்ணாமலை, திருவேந்திபுரங்களில் நடந்தது இங்கும் நடக்கப் போகிறதோ என்று நினைத்தான்.

பரபரத்துக் கண்களைச் சுழலவிட்டான். தர்மகர்த்தா அவன் கண்களில் விழுந்தார். ஒவ்வொருத்தரிடமும் ஒவ்வொரு கட்டளை அவர் வழங்கிக் கொண்டிருந்தார். வர்மன் நெருக்கி அடித்து அவரை நெருங்கினான். "சுவாமீ! சுவாமீ!" என்று அவரை அழைத்தான். அவர் திரும்பியதும் அருகில் போய் விஷயத்தைக் கசமுசத்தான்.



தர்மகர்த்தாவுக்கு அறுபது வயது இருக்கும். உடம்பு தூலமாக இருந்தாலும், வஜ்ஜிரமாக இருந்தது. எதேச்சையாகப் பார்ப்பவர் போல் சுற்றி வரக் கண்ணோட்டம் இட்டார் நிலைமை புரிந்து விட்டது.

மோகினிப் பெருமாளைப் பார்த்தார். பெருமாள் மேனியில் ஏராளமான நகை! அத்தனை அணிகளும் மோகினித் திருக்கோலம் அன்றைக்குப் பெருமாள் மீது அணிவிக்கப்படும். அவைகளின் மதிப்பு எக்கச்சக்கமானது. அத்தனையும் இந்த மராட்டியக் கும்பலுக்கு இழப்பதா! 'பெருமாளே வழிகாட்டும்' என்று மானசிகமாகப் பிரார்த்தித்தார்.

பிறகு அவசரமாக அவர் தம் சகாப் பெரியவர்களிடம் தனித்தனியாகக் கூறினார்.

சிறிது நேரத்தில் ஒரு தண்டோராக்காரர் மணி மண்டபத்துள் நுழைந்தார். டம டம டம என்று டமாரத்தை ஓங்கி அடிக்க எங்கும் நிசப்தம் எழுந்தது.

"ஐயாமார்களே, அம்மாமார்களே! கூட்டம் ஏராளமாக இருக்கையாலே, நோன்பு வைபவம் பிராகாரத்திலே வச்சிக்கறோம். நோன்புத் தாய்மாருங்க எல்லாரும் இப்பவே பிராகாரத்திலே போய் இடம் பிடிச்சுக்கிடலாம்" என்று ஒரு உச்சத் தொண்டையில் கூவினார்.

அதைத் தொடர்ந்து தண்டோரா டமடமத்தது.

இரண்டு முறை இதை போலக் கூவியதும் தான் பெண் கூட்டம் சிறிது அடங்கியது.

ஒவ்வொருவராக வெளியே போக ஆரம்பித்தார்கள். கோவில் சிப்பந்திகள் ஒவ்வொரு மூலையிலும் நின்று, 'போங்கள், போங்கள்' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசிப் பெண் போவதற்குள் நேரம் இழுத்துவிட்டது.

உடனே மண்டபத்தின் பிரம்மாண்டக் கதவுகள் படீரென்று சாத்தப்பட்டுத் தாழிடப்பட்டன.

வாத்தியக்காரர்களையும், டமாரக்காரர்களையும் தர்மகர்த்தா ஜாடை காட்ட, பெரும் ஓசை ஒன்று பிலுபிலுத்து எழுந்தது.

உள்ளே அவசர ஆலோசனை நடந்தது. வர்மன் அதில் நாயகமாக விளங்கினான். பரபர என்று எல்லோரும் இயங்கினார்கள். அர்ச்சகர்கள் அந்த மோகினிப் பெருமாளின் சாத்துப் பொடியைக் கலைக்க ஆரம்பித்தார்கள்.

அங்கிருந்த முக்கிய பெரியவர்கள் ஒவ்வொருவரிடமும் நகைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

சங்கிலிகளும், தாழ்வாடங்களும் கிடைத்தவர்கள் அவற்றைத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டு உத்தரியத்தால் உடலைப் போர்த்திக் கொண்டார்கள்.

இதர அணிகள் கிடைத்தவர்கள் அவற்றைத் தமது இடுப்பு உத்தரியத்தில் வைத்துச் சுற்றிக் கொண்டார்கள்.

வெகு சீக்கிரத்தில் இந்த வேலை அனைத்தும் நடந்து விட்டது.

பெருமாள் தனது ஆபரணாதிகள் இழந்து, சுயமான திருமேனியில் ஒற்றைப் பரிவட்டம் மட்டும் சாத்தியிருந்தார். அவரையும், நாச்சியாரையும் சுற்றி ஒரு பெரும் திரை மூடப்பட்டது.

'எச்சரிக்கை' என்று ஏகமாகப் பலர் குரல் எழுப்ப, பெருமாளின் வாகனம் மெள்ள எழுந்தது.

வாயிற்கதவு திறந்தது. நாயனங்களும், தாரை தப்பட்டிகளும் முழங்க வாகனம் மெதுவாக வெளி வந்தது.

அதை வியாஜமாக வைத்துக் கொண்டு வெளியில் வந்த பெரியவர்கள் கூட்டத்தில் கரைந்து மறைந்து போனார்கள்.

பிராகாரத்தில் கூடியிருந்தோர் தீவர்த்தி ஒளியில் பெருமாள் திரை போட்டு வருவதைப் பார்த்தார்கள்.

அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.



பிராகாரத்தில் சிறிது தூரம் வந்ததும், "திரையை எடுங்கள், திரையை எடுங்கள்" என்று கூச்சல்கள் ஒலித்தன.

வாகனம் தாங்கியவர்கள் திடீரென்று வாகனத்தைக் கீழே வைத்துவிட்டு ஓடலானார்கள்.

வர்மன் இதற்குள் கூட்டத்தில் புகுந்து, "ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்று குரல் கொடுக்க, சீக்கிரம் அந்தப் பெரும் கூட்டத்தில் அமளித் துமளி ஏற்பட்டது. ஓலங்களும், ஆரவாரமும் எங்கும் எழுந்தன. ஜனங்கள் சின்னாபின்னமாக ஓட ஆரம்பித்தார்கள்.

கண்ணைத் திறப்பதற்குள் அது நடந்து விட்டது. வர்மனை நாலு பேர் ஒரு கட்டாகக் கட்டி அலாக்காகத் தூக்கி விட்டார்கள்.

மராட்டியரைத் தவிர வேறு யாரால் அப்படிச் செய்ய முடியும்?

எல்லையில் இருந்த அந்தச் சத்திரத்தில் கொணர்ந்து பளீரெனக் கூடத்தில் தள்ளினார்கள்.

வர்மன் விழித்துப் பார்த்தபோது அங்கே பெரிய சபையே கூடியிருப்பது தெரிந்தது.

மராட்டியரின் ஒரு கோஷ்டித் தலைமை அங்கே கொலு வீற்றிருந்தது.

"யார் நீ?" என்றார் தலைவர் மிடுக்காக.

வர்மன் அவரை அலட்சியமாகப் பார்த்தான். ஒரு எக்காள மூச்சுடன், "நான் சொல்வதற்கு இல்லை" என்றான்.

"சொல்கிறாயா, மாட்டாயா?"

"மாட்டேன்."

தலைவர் கண்ணை அசைக்க, இரு திடசாலிகள் வந்தார்கள். முதலில் வர்மனின் மீதுள்ள கயிறுகளை எல்லாம் எடுத்து அவன் மேனியை விடுதலை ஆக்கினார்கள். அவர்களது சாட்டைகள் அவனது சருமத்தில் நேராகப் பட வேண்டும் என்பதற்கே அதைச் செய்தார்கள்.

இருவரும் விலக படீர் என்று ஒரு சத்தம்.

ஒரு சாட்டையின் உக்கிர அடி அவன் முதுகில் தீயாக விழுந்தது. ஒரே ஒரு கணம் தடுமாற, "ஐயோ, வேண்டாம், வேண்டாம்" என்று பெண் குரல் எழுந்தது.

குரல் வந்த பக்கம் வர்மன் மெள்ளத் திரும்பினான்.

"செஞ்சுகா!" அவன் வாயை மீறிக் குரல் வந்தது.

செஞ்சுகா, அங்கே ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். அவள் முகம் சோபை இழந்திருந்தது. கண்களில் நீர் தங்கியிருந்தது. அவள் நெஞ்சு படபடப்பதும், ஆசனத்தில் நிலை கொள்ளாமல் அவள் தடுமாறுவதும் தெரிந்தது.

இவள் எப்படி இங்கே வந்தாள்?

வர்மன் சிறிது யோசித்தான்.

நிச்சயம் செஞ்சுகா பிரெஞ்சு கோஷ்டியுடன் தான் வந்திருக்க வேண்டும். ஆனால் மராத்தியக் கோஷ்டி அவர்களைத் துரத்தி அடித்துச் செஞ்சுகாவை அபகரித்திருக்கும். அதன் காரணம் மராத்தியருக்கு இந்தப் பணய விவகாரம் முழுவதும் தெரிந்திருக்க வேண்டும். பணயப் பணம் வருகிறது என்பதும் தெரிந்து அந்தப் பணத்தை அபகரிப்பதற்காகச் செஞ்சுகாவைக் கைப்பற்றியிருப்பார்கள். பிரெஞ்சு கோஷ்டியை விரட்டியிருப்பார்கள்.

வர்மனின் இந்த ஊகம் சரிதான் என்பது பின்னர் தான் அவனுக்குத் தெரியப் போகிறது.

"இந்தா; சொல் நீ யார்?" என்று தலைவர் மீண்டும் அதட்டினார்.

வர்மன் பதில் சொல்லவில்லை! மாட்டேன் என்பதற்கு இசையத் தலை ஆட்டினான்.

சாட்டை ஓங்கியது.

"ஐயா! அடிக்காதீர்கள். அடிக்காதீர்கள்" என்று பதறிக் கொண்டு இரைந்தாள் செஞ்சுகா.

பிறகு அவனை நோக்கி, "வீரரே!" என்றாள். வர்மன் திரும்பிப் பார்த்தான். "தயவு செய்து எனக்காக நீங்கள் யார் என்று சொல்லுங்கள்" என்றாள்.



வர்மனுக்குச் சோகமான புன்னகை வந்தது. பதில் சொல்லவில்லை.

"சொல்லு" மராட்டியக் குரல் ஓங்கி எழுந்தது. சாட்டை ஓங்கியது. "நிறுத்துங்கள்" என்று செஞ்சுகா கூறுமுன் வர்மன் மீது விழுந்தது.

"ஆ!" என்று வீறிட்டுச் செஞ்சுகா எழுந்தாள். அவள் பக்கத்தில் பெண் வேடம் பூண்டிருந்த மராட்டிய வீரன் அவளை இழுத்து உட்கார்த்தினான். பெண் வேடத்திலிருந்த மராட்டியன், செஞ்சுகா, வர்மன் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சொல்லு!"

"மாட்டேன்"

திரும்பிச் சாட்டை ஓங்க,

"ஐயா! நிறுத்துங்கள்! அவர், சொல்லாவிட்டால் நானே சொல்கிறேன். அவர் பொம்மராஜு பாளையத்து வீரர். பணயப் பணத்தை அவர்தான் கொண்டு வந்திருக்கிறார்" என்று படபடவென்று மொழிந்தாள் செஞ்சுகா.

வர்மன் திடுக்கிட்டான்.

ஐயோ! உண்மையைச் சொல்லிவிட்டாளே, திருப்பதிப் பணம் இந்த மராட்டியர் கையில் போவதா?

## 41. வர்மன் தீர்க்கதரிசி!

வர்மனைப் பற்றிய உண்மைகளை செஞ்சுகா கூறுவதைக் கண்டு அவன் பதைத்து, "இளவரசி! இளவரசி. நிறுத்துங்கள்!" என்றான்.

அந்த இளம் பெண் நிறுத்துவதாக இல்லை. நறுக்கென்று தெறித்த கண்ணீர் முத்து துளிகள்

கடகடவென்று அவனைப் பற்றிய அத்தனை செய்திகளையும் ஒப்பித்தன.

கோபமுடன் வர்மன் அவளைப் பார்க்க, "வீரரே! நமது சொந்தப் பாதுகாப்பை அளியாத அந்தத் திருப்பதிப் பணம் யாரிடம் போனால் என்ன? இனியும் அதை பற்றி மனச் சங்கடம் பட வேண்டாம். பணம் சரியான இடத்திற்குப் போக வேண்டுமென்றால் பெருமாளே, அதைப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று துடுக்காகப் பேசினாள்.

ஆச்சரியமாக இருந்தது வர்மனுக்கு. செஞ்சுகா விரக்தியில் அப்படிப் பேசுகிறாள்! வேங்கடப் பெருமாள் மீது ஏக நம்பிக்கை காத்தவளுக்கு ஏன் இந்த மாறுதல்?

மாறுதல் ஏன் இராது?

சொந்தத் தந்தை நினைவு இல்லாமல் படுக்கையில் கிடக்கும் போது, அவரைப் போய்ப் பார்க்க முடியாத நிலையில் பணயக் கைதியாக இங்கே இவள் இருக்கலாமா?

மராட்டியத் தலைவர் சங்கர்ராவ் இறங்கி நடந்து வந்தார்.

மராட்டியத் தலைமைப் படையிலிருந்து தம் இஷ்டப்படியே நடந்து கொண்ட பல மராட்டியப் பிரிவுகளின் ஒன்றின் தலைவர். ஆங்காங்கு சூறையாடி கொள்ளையிட்டு சுதந்திரமாகத் திரிகிறது அவர் குழு.

"சொல்லு! அந்தத் திருப்பதிப் பணம் எங்கே இருக்கிறது?" அவர் குரல் கடுமையாகத் தொனித்தது.

வர்மன் ஒரு கணம் திகைத்தான். பிறகு "அது பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தம்" என்றான்.

"அவர்களை நாங்கள் புதுச்சேரிக் கோட்டைக்குள் விரட்டியாகிவிட்டது. இனி இங்கே வரமாட்டார்கள்" என்றார் தலைவர்.

"அது பணயப் பணம்" என்றான் வர்மன்.

"பணயமே இங்கேதான் இருக்கிறது" என்றார் தலைவர்.

ஒவ்வொன்றுக்கும் பதில் மொழி சடக்கென்று வந்தது. வர்மன் யோசித்தான்.



இந்த உடன்படிக்கைக் குழுக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? நிறைய பேர் வேடம் போட்டு வந்திருப்பதை அவனே பார்த்துவிட்டானே! ஒரு அவசரத்தில் அவர்களது உதவியையும் நாடலாம் என்று சொன்னார்களே! இப்போது எங்கே இருக்கிறீர்கள்?"

"சொல்லு?"

"அவசியம் தெரிய வேண்டுமா?"

"ஆமாம். பணத்தைக் கொடு. பணயத்தை எடுத்துப் போ."

"அப்படியானால் வாருங்கள்."

சங்கரராவ் தலை அசைக்க ஒரு குழு அவனுடன் வெளியே புறப்பட்டது.

வர்மனுக்கு ஒரு குதிரை கொடுத்து மற்றவர்களும் குதிரை மேல் ஏறினார்கள்.

வர்மன் ஒரே சிந்தனையில் இருந்தான். இப்போது என்ன செய்வது?

வேண்டுமென்றே கோவிலை நோக்கிச் சென்றான். மாடவீதியை அடைந்ததும் அவனுக்கு அந்த இரு வரிசையிலும் நின்றிருந்த மோகினி நோன்பு வேடதாரிகள் புலப்பட்டார்கள். அவனால் நிச்சயம் அந்த பாளையக்கார வீரர்களை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது.

எல்லோரும் உடன்படிக்கை வீரர்கள். ஆங்காங்கே வரிசை கட்டி நின்றார்கள் அவர்கள் .

கண்களால் அவர்களை வெட்டிக் கொண்டு போனான் அவன். தீவர்த்தி ஒளிகளில் நூற்றுக்கணக்கான பேர்களை அவனால் பார்க்க முடிந்தது.

சன்னதி வீதியில் திரும்பினான். அவனுக்கு உற்சாகம் வந்துவிட்டது. நிறைய பேர் வந்திருக்கிறார்கள்

"வீரவேல்!" என்றான் ஆவேசத்துடன் திடீர் என்று.

அந்தத் தொனி அந்த வீதியையே நடுங்க வைத்தது.

"வெற்றிவேல்" என்று மறு முழக்கம் கேட்டது.

வீச்சென்று குதிரை மேல் விழ வேண்டிய சாட்டையை, தன்னுடன் வரும் மராட்டியர் மீது சாடினான் அவன்.

குதிரை எகிறி வெகுண்டது.

பல மராட்டியர் கீழே உதிர்ந்தார்கள்.

பளீர் என்று தாவி மராட்டியரை விட்டு விலகி, "வீரவேல்" "வீரவேல்" என்று வர்மன் முழங்கினான்.

அத்தனை மோகினிகளும் கையில் வில்லும் வாளும் எடுத்தார்கள். குதிரைகள் சடசட என்று வந்தன. எக்காளம் பல பயங்கரமான சத்தத்தைக் கிண்டின.

ஒரு பெரிய அணை உடைந்த ஓசை! எங்கும் பிரளயமாக சப்தங்கள் பொங்கின. உடன்படிக்கைக் குழு வீரர்கள் அந்தப் புண்ணியத் தலத்தின் வீதிகளில் களம் புகுந்தார்கள்.

வீர வேல் கோஷங்கள்? 'விரட்டு, அடி, கொல்லு' என்று கர்ஜனைகள்.

வர்மன் இதரத் தளபதிகளோடு கலந்து கொண்டான்.

அடுத்த முகூர்த்தம் பூராவும் ஒரே திமிலோகப்பட்டது கூச்சல்களும், முழக்கங்களும்... ஆயுத வீச்சுக்களும் எங்கும் நிரம்பின.

இரண்டு முகூர்த்தம் வரை உடன்படிக்கைக் குழு பிரமாதமாகச் சண்டையிட்டது. "வேல்" முழக்கம் செய்து அழகாகப் போரிட்டார்கள்.

ஆனால் மராட்டியரின் தந்திரப் பயிற்சிகளின் முன் அவர்களது திறமைகள் கவிழலாயின.

மராட்டியர்கள் நேர் சண்டை போடவில்லை. ஆங்காங்கே தாக்கி விட்டு ஓடினார்கள். திடீர் திடீர் என்று புதுப் புது இடங்களில் தோன்றினார்கள். பாளையக்காரர்களைச் செதுக்கிவிட்டு ஓடினார்கள்.

அந்தத் திடீர்த் தாக்குதல்களின் முன் பாளையக்காரர்கள் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்களது திறமை விழுந்துவிட்டது.

நடுநிசி ஆன போது, தலையை தொங்கப் போட்ட வர்மன், குதிரை மீதேறிக் கடில நதிக்கரையோரம் ஓடினான்.

திருப்பதிப் பணத்தை எப்படியாவது காப்பாற்றி ஆக வேண்டும், முடியுமா?



நிச்சயம் இரவில் மராட்டியர் வருவார்கள். அல்லது காலையிலாவது வருவார்கள்.

தனது கோஷ்டியை அடைந்தான். எல்லோரும் அவசரமாக யோசித்தார்கள் கடிலத்தின் மறுகரைக்குப் போய்விடுவது என்று தீர்மானித்தார்கள்

விடியும் ஜாமத்திற்கு முன் இடம் பெயர்ந்தார்கள். கடிலத்தைத் தாண்டி மறுகரைக்குப் போனார்கள்.

தூக்கம் கொள்ளாமல் அவர்கள் சர்ச்சை செய்தார்கள். சூடாக விவாதித்தார்கள்.

"தளபதி தோழர்களே!" என்று நிமிர்ந்து பேசினான் வர்மன். "திருப்பதிப் பணம் பிரெஞ்சுக்காரர்களுக்கும் அல்ல, மராட்டியர்களுக்கும் அல்ல. இங்கிலீஷ்காரர்களுக்கு" என்றான்.

பலரும் திடுக்கிட்டு 'ஆ' என்றார்கள்.

"அந்த வெள்ளைக்காரனைவிட இந்த வெள்ளைக்காரன் தேவலை" என்று சொன்னான் வர்மன். வேன்ஸான் மூலம் கேட்ட இங்கிலீஷ் ஆட்சி முறையை எல்லாம் ஆச்சர்யமாக விளக்கினான்.

கேட்கக் கேட்க எல்லோரது வாய்களும் மூடின. கோபமாக எதிர்க்க நினைத்தவர்கள் தாமாக இறுக்கம் தளர்ந்தார்கள். எல்லோர் கண்களும் வியப்பிலும் திகைப்பிலும் பெரிதாகின.

அவன் நிறுத்தியும் ஒருவரும் சிறு சப்தம்கூடச் செய்யவில்லை. "அண்ணன் தம்பிமார்களே! நம் குழு வீரர்களை எவ்வளவு வீரம் செறிந்தவர்களாக நினைத்தோம். நம் கண் முன்னால் எப்படி விழுந்து போனார்கள் அவர்கள். மராட்டியரின் குயுக்தி தாக்குதல்களை அவர்களால் தாங்க முடியவில்லை. நம்மிடம் ஒத்துழைப்பு போதாது. பயிற்சி போதாது. ஒழுக்கம் போதாது. இந்த மராட்டியரை மட்டுமல்ல, நவாபு படைகளையும் 'புல்லு' போல் போரிட்டு ஜெயிக்கக் கூடியவர்கள் இங்கிலீஷ் காரர்கள்தான்! இவர்கள் வெற்றி பெற்று இவர்களது ஆட்சி முறையை நாம் பெறுவோமானால்...

பக்கத்துத் தேவனாம்பட்டிணத்திற்கு இங்கிலீஷ்காரர்களைத் தேடி ஒரு குழு உடனே ஓடியது.

அப்போது அங்கே லாரன்ஸ் இருந்தார். பொம்மராகப் பாளையத்திலிருந்து திருப்பதிப் பணம் வந்திருப்பதை ஆச்சரியமுடன் கேட்டார். நடந்த சம்பவங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டார்.

அந்த இங்கிலீஷ்காரர் முன் பல்லக்குகள் வரிசையாக நிறுத்தப்பட்டன. அவற்றின் அடிபாகங்கள் திறக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் நாணயங்களும், தங்க, வைர வெள்ளிகளும் உதிர்வதைக் கண்டு லாரென்ஸ் கண்கள் ஆகாயமளவுக்கு விரிந்தன.

"ஆகா! திருப்பதிப் பெருமாள்! அவர் உங்கள் கடவுள் மட்டுமல்ல! எங்கள் கடவுளும் கூட!" என்று கையை மேலே தூக்கிக் குதித்தார்.

வர்மனை அப்படியே தழுவி முத்தமிட்டார்.

காலை இரண்டாம் நாழிகையில் கடிலக் கரையில் வர்மனும் இதரர்களும் மீண்டும் கூடி நின்றார்கள். பல்லக்குகளும் நின்றன. பணம் எடுக்கப்பட்ட வெறும் பல்லக்குகள்.

எதிர்க்கரையில் மராட்டிய படை, சித்த நிலையில் இருக்க, வர்மன் வெள்ளைக் கொடி காட்டினான்.

இரு தரப்பாரும் நடுவில் உள்ள மணல் மேட்டில் சந்தித்து ஒப்பந்தம் பேசினார்கள்.

செஞ்சுகாவைத் தர வேண்டும். பணத்துடன் பல்லக்குகள் ஒப்படைக்கப்படும்.

தீர்மானம் இசைவாயிற்று. இங்கிலீஷ்காரர் சொன்ன யுக்தியின் பேரில் சில மூட்டைகளில் நாணயங்களை கட்டி, மீதி அனைத்திலும் கற்கள் கட்டப்பட்டிருந்தன.

பல்லக்குகள் மறுகரை போயின.

செஞ்சுகா, அவளது உடமை, பரிவாரம் தாங்கிய பல்லக்குகள் இக்கரைக்கு வந்தன.

வர்மனுக்கு உணர்ச்சி தாளவில்லை. எதிர்கரையில் மராட்டியர் ஏமாற்றம் அடைந்து, போர் தொடுக்க வருமுன்



எல்லோரும் தேவனாம்பட்டணம் கோட்டைக்குள் போய்விட நினைத்தார்கள்.

செஞ்சுகாவின் கோஷ்டியோடு அவசர அவசரமாகத் தேவனாம்பட்டணத்தை அடைந்தார்கள்.

கோட்டை வீதியில் பல்லக்குகள் நிற்க, அவற்றில் எந்தச் சலனமும் இல்லாதது கண்டு, "தேவி" என்றான், ராஜ பல்லக்கின் திரை நோக்கி, பதில் இல்லை.

"தேவி! வர்மன் வந்திருக்கிறேன்" என்றான் பதில் இல்லை.

பிறகு திரையை சந்தேகத்தோடு விலக்க, செஞ்சுகா அங்கே உட்கார்ந்திருந்தாள். அவனை வெறிக்கப் பார்த்திருந்தாள். அது என்ன அப்படிப் பார்வை என்று நினைக்கும் போது சுளிர் என்று அடிவயிற்றில் அந்த உணர்வு குத்தியது.

திடுக்கிட்டு "செஞ்சுகா!" என்று அலற அந்த இளம்பெண்ணின் நெஞ்சின் மீது பாய்ச்சியிருந்த கத்தி அவன் கண்ணில் கொடுமையோடு விழுந்தது.

வர்மனால் நிற்க முடியவில்லை. கீழே சாய்ந்து விட்டான்.

மற்ற பல்லக்குகளில் செஞ்சுகாவின் தாதிகள் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள்.

* * *

துக்கத்திலிருந்து எழ வர்மனுக்கு இரண்டு நாட்கள் ஆயின.

சிந்து அவனை வெகுவாகச் சமாதானப்படுத்தினாள்.

லாரன்சும் இதமான மொழிகளைக் கூறினார்.

இந்திய சரித்திரத்திலேயே வர்மன் ஒரு மகத்தான தீர்மானத்தைச் செய்தான் என்று அவர் கூறினார்.

மூன்றாம் நாள், ஒரு இங்கிலீஷ் சிறு படையோடு திருப்பதிப் பணம் ஆர்க்காட்டிற்குப் புறப்பட்டது.

வர்மனும், சிந்துவும் இதரர்களும் அதனோடு சென்றார்கள். அந்த இங்கிலீஷ் படை சின்னதுதான். ஆனால் பலம் வாய்ந்தது என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஆர்க்காட்டில் ராபர்ட் கிளைவ் ஐம்பத்தோராம் நாள் முற்றுகையில் இருந்தார். அவரது சகாக்கள் பலர் பட்டினியால் நோய் கண்டு இறந்து விட்டார்கள். இருந்தும் தனது பலவீனத்தை வெளியில் காட்டாமல் கிளைவ் பல்லைக் கடித்து சும்மா இருந்தார்.

இன்னும் ஒரு வாரம் தான். அதற்குள் உதவி வரவில்லையென்றால் அவர் படை சரணாகதிதான்.

அவர் விரும்பாவிட்டாலும் தளபதிகள் சென்று விடுவார்கள்.

அன்று இரவு அரைத் தூக்கத்திலிருந்து கிளைவ் எழுப்பப்பட்டான்.

ஏராள திருப்பதிப் பணத்தோடு, உதவி வந்திருப்பதாகத் தகவல் சொன்னார்கள். லஞ்ச உதவி மூலம் பொருள்களும், ஆட்களும் கோட்டைக்குள் வந்துவிட்டார்கள்.

கிளைவ் போய்ப் பார்த்தான். இரண்டு லட்சம் ரூபாய் நாணயங்கள், குலுங்கிக் கிடந்தன. மற்றும் ஏராள நகை, அணிமணி, எல்லாம் குவிந்து கிடந்தன. எல்லாம் திருப்பதிப் பெருமாளுக்கு வந்த காணிக்கைகள்.

துள்ளிக் குதித்தான் கிளைவ், வர்மனைத் தழுவித் தழுவி முத்தமிட்டான்.

"இதோ பார். நீ ஒரு இந்தியன். நான் வியாபாரம் செய்ய இங்கே வந்தவன். நிச்சயம் லாபம் தான் என் நோக்கம். ஆனால் உங்கள் நாட்டில் மக்கள் படும் பாட்டைக் கண்டு மனம் நொந்து விட்டேன். அரசாங்கமே இங்கே இல்லை. தடி எடுத்தவன் எல்லோரும் ராஜாக்கள், அநியாயம், அநியாயம். இதற்கு உங்கள் கடவுளே கண் திறந்திருக்கிறார். தமது பொருளை எங்களுக்கு அனுப்பியிருக்கிறார். நாங்கள் அதை சிரம் தாழ்த்தி ஏற்போம். எங்கள் நன்மைக்கு மட்டுமல்ல, உங்கள் நன்மைக்காகவும் அதைப் பயன்படுத்துவோம்." என்றான்.

மறுநாள் காலையில் மராட்டியத் தலைமைப் படை தளபதி முராரிராவுக்குக் கடிதம் எழுதினான். தனக்கு உதவி வேண்டும். அதைச் செய்தால் முராரிராவுக்கு ஏராளப் பணம் கொடுக்கப்படும்.



முராரிராவ் உண்மையான மராட்டிய தலைமைப் படையின் தளபதி. பிரிந்து போன உதிரிப் படைகளைச் சேர்ந்தவர் அல்ல. பிரிந்து போனவர்கள்தான் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

53-ஆம் நாள் முராரியிடமிருந்து செய்தி வந்தது. 'உதவத் தயார்' சீக்கிரம் புறப்பட்டு வருகிறேன்.

இந்தச் செய்திகள் உளவு மூலம் ராஜா சாகிப்புக்குக் கிடைத்தது.

மராட்டியப் படை தன் படையைச் சூழ்ந்து கொண்டால்...

நிச்சயம் அந்தப் படைகளை அவரால் எதிர்க்க முடியாது.

அதற்குத் தேவையான பலம் போதாது.

ராஜா சாகிப் குழம்பும் போது, திடீரென்று ஆர்க்காட்டுக் கோட்டை வாயில் திறந்தது.

ராபர்ட் கிளைவ் தனது படைகளோடு வீர முழக்கம் செய்து வெளியே வந்துவிட்டார்.

ராஜாசாகிப் இதை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. ஆயிரக்கணக்கில் படைகள் தான். ஆனால் தயார் நிலையில் இல்லாமல் இருக்கிறார்களே!

கிளைவும் அவரது ஆட்களும் தீவிரமாகச் சண்டையிட்டார்கள்.

விடுதலை அடையும் வெறி அவர்களிடம் வெகுவாக ஓங்கிவிட்டது.

ஆக்ரோஷத்தோடு போரிட்டு, எதிரியின் பெரும் சைன்னியத்தில் ஒரு பிளவு உண்டாக்கினார்கள்.

கிளைவின் அனைத்து சாமர்த்தியங்களும் சாகசங்களும் அந்தப் படையின் முன்னணியோடு ஓடியது.

இருபக்கமும் நவாப் வீரர்கள் துவண்டு வீழ்ந்தார்கள்.

ஒரு ஒருமித்த எதிர்ப்பை உடைக்க முடியவில்லை.

வெளி விளிம்புகளுக்கு கிளைவ் வந்த போது, 'மராட்டி மராட்டி' என்று பீதிக் குரல் திடீர் என்று கேட்க, ராஜா

சாகிப்பின் பெரும் படை அத்தனையும் கலைந்து ஓட ஆரம்பித்தது.

கிளைவ் இதை எதிர்பார்க்கவில்லை. முழு விடுதலைக்கு இன்னும் சிறிது நேரம் போரிட வேண்டியிருக்கும் என்று நினைத்தான். ஆனால் அதற்குள் வெற்றி அவனது காலடியில் வந்து வீழ்ந்துவிட்டது. திருப்பதிப் பணத்தின் மகிமை என்று நினைத்தான். அந்தப் பணத்தினால் தான் உள்ளே மூன்று நாட்கள் அவனும் அவன் படைகளும் வயிறாரச் சாப்பிட்டார்கள். ஆயுதங்களை தீட்டிக் கொண்டார்கள். லஞ்சம் கொடுத்து வேண்டிய ஆயுதங்களையும் தருவித்துக் கொண்டார்கள்.

54 நாட்கள் ஆர்க்காட்டு முற்றுகைக்குள் கிடந்த பிறகு வெளி வந்த ராபர்ட் கிளைவின் சாகசம் இந்திய சரித்திரத்துள் சென்றது.

கோட்டைக்குள் திண்டாடித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் திருப்பதிப் பெருமாளின் பணம் வசதியாகக் கையில் கிடைத்தது பெரும் பாக்கியம்.

அது இல்லாவிட்டால், கோட்டைக்கு வெளியே இப்படி எளிதாகத் தப்பித்துப் போயிருக்க முடியாது.

ராஜா சாகிப்பின் முற்றுகையும், அதைத் தகர்த்து விட்ட ராபர்ட் கிளைவின் வீரமும் எங்கும் பேசப்பட்டன.

அதன் பிறகு தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களோடு நடந்த சண்டையில் கிளைவ் வரிசையாக வெற்றி பெற்றான்.

சீக்கிரம் திருச்சிராப்பள்ளிக் கோட்டையும் விடுவிக்கப்பட்டு, முகம்மதலி வெளியே வந்தார்.

அவரை எதிர்த்த சந்தாசாகிப் ஒரு இரைப் பிராணி போல் துரத்தப்பட்டு ஓடினார்.

சிறிது காலத்தில் அவர் (சந்தா சாகிப்) எதிரிகளிடம் அகப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்திற்கு முன் நிகழ்ந்த பல சண்டைகளில் கிளைவ் வெற்றி பெற்றான். பிரெஞ்சுக்காரர்கள் தோல்வி அடைந்தார்கள்.

இந்திய மண்ணில் ராஜ்யம் அமைக்க வேண்டும் என்று



எண்ணிய பிரெஞ்சுக்காரரின் ஆசை வலுவில் போய் இங்கிலீஷ்காரர் மடியில் விழுந்தது.

இங்கிலீஷ்காரர்களுடன் திருச்சி, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் நடந்த யுத்தங்களில் வர்மன் பங்கு கொண்டான்.

ஸ்ரீரங்கத்து வெற்றிக்குப் பிறகு, 'இனி எப்போதுமே இங்கிலீஷ்காரர்களுக்கு வெற்றி' என்று வர்மனுக்குத் தெரிந்துவிட்டது.

அவன் மனத்தின் ஒரு உள் விருப்பம் அதன் மூலம் நடைபெறுகிறது, என்று எண்ணினான்.

தனது சொந்த ஊரையும் தாயாரையும் அடைய விரும்பினான்.

கிளைவிடம் விடைபெற்றான்.

அதுவரை, அவனுடன் ஒட்டி வந்த சிந்து, "நானும் வருகிறேன். இனி வேறு வாழ்க்கை எனக்கு ஏது?" என்றாள்.

பாளையச் சீமைக்கு அந்த நாயக்க வமிசத்துப் பெண்ணை அழைத்துப் போவது யோசனையாக இருந்தது. தாயார் என்ன சொல்வாளோ!

"நான் உனக்கு ஆசீர்வாதம் செய்கிறேன். அவளை உன் மனைவியாக அழைத்துச் செல்" என்றார் வேன்ஸான்.

"தாங்களா? எந்த முறையில்?" என்றான் வர்மன்.

"ஏன்? தந்தை முறையில்!" என்றார் வேன்ஸான்.

வர்மன் வாயைப் பொத்திக் காட்டினான்.

வேன்ஸான் ஓடி வந்து வர்மனைத் தழுவினார். "வர்மா! நீ என் மகன்!" என்று தழுதழுத்தது.

அவர் கண்களில் நீர் பெருகி வந்தது. வர்மன் திடுக்கிட்டான். வேன்ஸான் என்ற அந்தப் பாளையக்காரத் தேவர் தமது வாழ்க்கையில் புதுச்சேரியில் நடந்த அநியாயத்தையும், அதன் பிறகு தப்பி, அவர் கப்பலில் ஏறி மேல்நாடு போனதையும், பணம் சம்பாதித்ததையும், பெரிய வர்த்தகராகத் திரும்பி வந்ததையும் விவரமாகக் கூற வர்மனின் கண்கள் இளகி நீர் சொரிந்தன.

"அப்பா! வா, ஊருக்கு!" என்றான் தாபத்துடன்.

"வேண்டாம் வர்மா. உன் தாய் வீரகுலத்தைச் சேர்ந்தவள். நான் மறுமணம் செய்து மாறி வந்திருப்பதை அவள் ஏற்றுக் கொள்ள மாட்டாள். சொல்லு அவளிடம், நான் காணாமலே போய்விட்டேன் என்று, அது அவளுக்கு ஒரு இதமான வலியையாவது தரும்."

அவர் கண்கள் உருகி வழிந்தன.

சிந்துவை ஏற்றுக் கொள்ளத் தந்தையின் ஆசி கிடைத்ததும், அவளை தனது சீமைக்கு அழைத்துப் போக வர்மன் சம்மதித்தான்.

வேன்ஸான் அவர்கள் புறப்படுவதைப் பார்க்கக் காத்திருக்கவில்லை. அது அவர் மனத்தில் பெரும் துயரை ஏற்படுத்தும் என்று நினைத்து குதிரை மீதேறி ஒரு சோகமான பிரெஞ்சுப் பாடலைப் பாடியவாறு பறந்து போனார்.

குதிரைகளில் வர்மனும், சிந்துவும் ஏறிப் போவதற்கு விடை கொடுத்தவர், ராபர்ட் கிளைவ்தான். தனது வரிசையான போர் ஆயத்தங்களுக்கிடையே, ஒரு நன் நினைப்புக்காரனை நிச்சயம் வழி அனுப்ப வேண்டும் என்று நினைத்து ஊர் வெளி வரை வந்து வழி அனுப்பினார்.

ஆனால் இங்கிலீஷ்காரரால் இந்த பூமிக்கு வரும் என்று வர்மன் கனவு கண்ட ஆட்சி முறை சிறுகச் சிறுக வந்து சேருவதற்கு 200 ஆண்டுகள் ஆயின.

இங்கிலீஷ்காரர்தான் அந்த ஆட்சி முறையை இந்நாட்டுக்கு அளிக்க முடியும் என்று நினைத்த வர்மன் நிச்சயம் ஒரு தீர்க்க தரிசியாகத்தான் இருந்தான்.

முற்றும்.

அலுவலகம் 21 2004
Page 304 21/2/04